1. திரித்துவம் என்றால் என்ன?

2. இயேசுகிறிஸ்து தெய்வமானால் தெய்வம் மரிக்கலாமா?

3. ஒருவருடைய பாவத்துக்கு இன்னொருவரை சிட்சிக்கலாமா?

4. திரித்துவம் என்னும் வார்த்தை வேதத்திலுண்டா?

5. இயேசு தன்னை தெய்வம் என்று சொன்னரா?

6. தெய்வம் தெய்வத்தை பார்த்து ஜெபித்தாரா?

7. தெய்வத்திற்கு பிள்ளை குட்டிகளா?

இவ்விதமான அநேக கேள்விகளுக்கும் ஒரு தெய்வமா மூன்று தெய்வமா என்னும் கேள்விகளுக்கும் தெளிவான பதிலை இந்த புத்தகத்தில் நீங்கள் பார்க்கலாம்.

WORD OF CHRIST
# 100/3, Nirmala Apartments
Medavakkam Tank Road
Kellys, Chennai - 600 010 India

போதகர் பி.வி. பவுலி

தேவன் ஒருவரா மூவரா?

# தேவன் ஒருவரா மூவரா?

## (இஸ்லாமியர்களுக்கான பதில்)



போதகர் பி.வி. பவுலி

# தேவன்
# ஒருவரா மூவரா?

(இஸ்லாமியர்களுக்கான பதில்)

# தேவன்
# ஒருவரா மூவரா?

## (இஸ்லாமியர்களுக்கான பதில்)

**போதகர் பி.வி. பவுலி**

கிறிஸ்துவின் வார்த்தை நூல் நிலையம்
சென்னை, இந்தியா

**தேவன் ஒருவரா மூவரா? இஸ்லாமியர்களுக்கான பதில்**

Is God the Lord one or three? (Answers for Islam)

Copyright © 2012 **P.V. Pauly**

Pastor P.V. Pauly
I. P. C. Jerusalem
2/143, Elambakkam, Kannur Post
Thiruvallur (Dt), Sri Perambattur Via
Tamilnadu 602 108
Mobile: 94448 10025

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording, or otherwise without the prior written permission of the publisher.

First Edition - 2012

Published by:
WORD OF CHRIST MINISTRIES
No. 100/3, Nirmala Apartments
Medavakkam Tank Road, Kellys
Chennai 600 010 Tamil Nadu, India
Phone: 044 - 2661 3242/ 4264 0111
E-mail ID: christianliterature@gmail.com
Website: www.wocindia.com / www.wordofchrist.com
Printed at Chennai, India.

Price: Rs



# அணிந்துரை

முதல் நூற்றாண்டில் உருவான ஆரம்பகால கிறிஸ்தவ சபையில் திரித்துவ தேவனைக் குறித்த தெளிவான தரிசனம், வெளிப்பாடு இருந்தது. அப்போஸ்தலர்களுடைய காலங்களில் இறையியல் பாடங்களில் திரித்துவத்தை குறித்தே முக்கியத்துவப்படுத்தி வந்தார்கள். பரிசுத்த வேதாகமத்திலும் திரித்துவ தேவனைக்குறித்து மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டும், உபதேசிக்கப்பட்டும் உள்ளதை காணலாம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளை என்று சொல்லப்படும் மிக முக்கியமான கட்டளையில் ''பிதா, குமாரன், பரிசுத்தஆவியின் நாமத்தில்'' என்னும் சொல்லை கவனிக்க வேண்டும் (மத்.28:18–20) உண்மை இப்படியிருந்தாலும், பிற மதத்தினர், திரித்துவ தேவனைக்குறித்த உண்மை நிலையை மறைத்து போலியான விவாதங்களாக மாற்றுகின்ற சான்றுகளும் வரலாற்றில் உண்டு. ஆனால் மேற்படி நேரங்களிளெல்லாம் கிறிஸ்தவ விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறவர்கள் மிக தெளிவாக திரித்துவம் உண்மையானது என்று சான்றுகளுடன் நிரூபித்திருக்கிறார்கள்.

பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையிலுள்ள விசுவாசம் தேவன் ஒருவரே என்பதாகும் (உபா.6:4, 5:6,7). ஒரே ஒரு தேவன்தான் உண்டு. அந்த ஒரே தேவனுக்குள் மூன்று ஆள்தத்துவம் உள்ளவராக தேவன் இருக்கிறார். அதைத்தான் திரித்துவம் என்கிறோம். திரியேகதேவன், திரித்துவம் என்கிற வார்த்தைகள் இறையியலில் வந்தாலும், பரிசுத்த வேதாகமத்தில் நேரடியாக பயன்படுத்தப்படவில்லை. ஆனாலும் இந்தக் கருத்தை புரிந்துக் கொள்வதற்கான அநேக வசனங்கள் பரிசுத்த வேதாகமத்தில் உள்ளன. அந்தியோகியாவில் தெயோபிலுவும், தெர்த்துவும், அகஸ்டினும் திரித்துவ தரிசனம் விளக்கியுள்ளார்கள்.

பரிசுத்த வேதாகமத்திலுள்ள திரித்துவ வெளிப்பாட்டை இஸ்லாமியர்களின் நூல்களில் குறை சொல்லியும், மாற்றியும், மறைத்தும் எழுதப்பட்டுள்ளதை வாசித்திருக்கிறேன். மலையாள மொழியில் இஸ்லாமியர் இப்படிப்பட்ட அநேக புத்தங்களை வெளியிட்டுள்ளார்கள். இதற்கெல்லாம் கிறிஸ்தவ இறையியல் வல்லுனர்கள் ஏற்ற வேளைகளில் சரியான பதிலும்

கொடுத்துள்ளார்கள். இஸ்லாமியர்கள் கேட்ட கேள்விகளில் பதில் சொல்ல முடியாத ஒரு கேள்வியும் இதுநாள் வரை இருந்ததில்லை.

போதகர் பி.வி. பவுலி தேவன் ஒருவரா? மூவரா? என்னும் இந்த நூல் திரித்துவத்தைக் குறித்து மிகத்தெளிவாக, வசன ஆதாரத்துடன் புரிந்து கொள்ளும் வகையில் வரைபடங்களுடனும் விரிவாக கூறப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க அம்சமாகும். திரித்துவம், இரட்சிப்பு போன்ற அநேக விஷயங்களைக் குறித்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுமல்லாமல் இஸ்லாமியர்கள் எழுப்பின அநேக கேள்விகளுக்கு பகுத்தறிவுடன் தெளிவான, வலுவான பதிலும் கொடுக்கப்பட்டுள்ளது. பரிசுத்த வேதாகம சத்தியங்களுக்கு உட்பட்டு நிற்கும் வேறுசில எழுத்தாளர்களும் இப்படிப்பட்ட கருத்துக்களை தெரிவித்திருக்கின்றனர்.

திரித்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று குறிப்பிடும் போதெல்லாம் இதே மூன்று ஆள் தத்துவங்கள் ஒருவரிலிருந்து ஒருவரை பிரிக்க முடியாததும், சமத்துவம் உள்ளதாக இருப்பதையும் காணமுடியும். இந்த இறையியல் உண்மையை விளக்கும்போது போதகர் பவுலி பிதா என்று குறிப்பிடும்போது அங்கு குமாரனும், பரிசுத்த ஆவியும் இணைந்தே இருக்கிறார்கள் என்று நிரூபித்திருக்கிறார். இதைப்போலவே குமாரன் என்று குறிப்பிடும்போதுஅதில் பிதாவும், பரிசுத்த ஆவியும் உண்டு என்றும், பரிசுத்த ஆவி என்று குறிப்பிடும்போது அதில் பிதா, குமாரன் உண்டு என்று நிரூபிக்கிறார். இந்த கருத்து தவறென்று சொல்ல முடியாது. மத்.28:18–20 வசனங்களில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூன்று நாமங்கள் சொல்லப்பட்டாலும், சேர்ந்து வருவதினால் அது ஒரே நாமம்தான்.

போதகர் பவுலி கவனமும், அர்ப்பணிப்பும் உள்ள வாசகனும் இறையியல் மாணவனாகவும் உள்ளார். அவருடைய இந்த புத்தகம் சத்தியத்தை தேடுகிறவர்களுக்கும், கிறிஸ்தவ சபை மக்களுக்கும் நிச்சயம் உபயோகமாக இருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இவருடைய கிறிஸ்தவ இலக்கிய முயற்சிக்கு என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

**இப்படிக்கு**

**J. C. தேவ்**



# என்னுரை

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இப்படி ஒரு நூல் எழுதுவதற்கு நான் எவ்வளவேனும் தகுதியோ திறமையோ உள்ளவனல்ல. ஆகிலும் சர்வ வல்லமையுள்ள கர்த்தர் தன்னுடைய உன்னத பணிக்காக என்னை அழைத்ததுமல்லாமல் இப்படி ஒரு நூல் எழுதவும் கிருபையளித்தார். அவருக்கே எல்லா புகழும், கனமும், மகிமையும் உண்டாவதாக.

இந்த நூல் எழுதுவதற்குத் தூண்டுதலாக இருந்த சம்பவம் என்னவென்றால் என்னுடைய நண்பனாகிய Dr. ஷாஜஹான் அவர்கள் ஒரு நாள் என்னிடம் நீங்கள் சொல்லும் திருத்துவம் என்பது என்ன. கடவுள் ஒருவர்தானே பிறகு ஏன் பிதா, குமாரன், பரிசுத்தாவி என்றும், மூன்று தெய்வம் என்று சொல்லுகிறீர் என்று கேட்டார். அதற்கு நான் மூன்று தெய்வம் இல்லை. ஒரு தெய்வத்தில் மூன்று ஆள் தத்துவம் உண்டு அதைத் தான் திருத்துவம் என்று சொல்லுகிறோம் என்கிறோம். அப்படியானால் அதை கொஞ்சம் விளக்கமுடியுமா என்றார். அதற்கு சரி என்று சொன்னால் எங்களுடைய இமாம் ஒருவர் வருவார் அவர் இருக்கும்போது சொல்ல வேண்டும் என்றார். யார் இருந்தாலும் பரவாயில்லை எனக்கு தெரிந்தது நான் சொல்கிறேன் என்பதற்கு அவரும் ஒத்துக்கொண்டு ஒருநாள் குறித்தார். ஆனால் அந்நாளில் நான் அங்குப்போனால் என்னிடம் ஒரு புத்தகம் கொடுத்து முதலில் இதற்கு பதில் கொடுங்கள் அப்புறம் நேரடியாக பேசுகிறோம் என்று சொல்லிக்கொண்டார். நானும் சம்மதித்து அந்த புத்தகத்தை வாங்கி வந்தேன். இறைவனுக்கு மகனா? என்னும் அந்த நூல் ஜைன்னூல் ஆபிதின் என்பவர் எழுதி நபீல பதிக்கம் 1995ல் வெளியிட்ட தாகும். கவனமாக அந்த புத்தகத்தை படித்தேன் நிச்சயமாக இதற்கு பதில் எழுதவேண்டும் என்று முடிவெடுத்தேன். ஆகிலும் தமிழில் எழுதவேண்டுமே என்று கொஞ்சம் நாள் தள்ளிவிட்டேன். ஆனால் கர்த்தர் என்னை விட வில்லை. நீ அதற்கு பதில் எழுது என்று கர்த்தர் ஏவினார். என்னுடைய துணைவியாரும் அதற்காக உற்சாகப்படுத்திக்கொண்டே வந்தார். இறைவனுக்கு மகனா என்னும் கேள்வி எழுப்பின. ஜைன்னூல் ஆபிதின்

என்பவர் அத்துடன் நின்று விடாமல் இயேசு விபசாரம் செய்தார், அவர் கோபக்காரனாக இருந்தார். மதுபானம் தயாரித்து வழங்கினார். அவர் ஒரு மோசமான பரம்பரையில் பிறந்தவர். இன்னும் அநேக குற்றச்சாற்றுகள் இயேசுவின் பேரில் எழுதியுள்ளதை பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். ஏனென்றால் அவர் எழுதியுள்ள பெரும்பான்மையான கருத்துக்களும் பொய்யாணதும், ஆதாரமில்லாதவைகளும் ஆகும். இயேசுவுக்கு பசியுண்டா யிற்று. அவர் தாகமடைந்தார். அவர் தூங்கினார் ஆகிய சில காரியங்களே யல்லாமல் மற்ற அநேக காரியங்களை பரிசுத்த வேதாகமத்திலுள்ள வசனங்களுக்கு அவராகவே தவறான வியாக்கியாணம் கொடுத்ததே ஆகும். இந்த ஜைன்னூல் ஆபீதின் என்பவர் இறைவேதம் என்று சொல்லும் குர்ஆனில் தெளிவாக சொல்லப்பட்டுள்ள காரியம் மற்றவர்கள் தெய்வமாக வணங்குபவர்களை ஏசாதீர்கள் என்று குர் ஆன் 6:108ல் உள்ளதை இங்கு எழுதுகிறேன். அல்லாஹ்வையன்றி யாரிடம் அவர்கள் பிரார்த்திக் கிறார்களோ அவர்களை ஏசாதீர்கள்... ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உலகெங்கும் பெரும்பான்மையான மக்கள் தொழுதுக்கொள்ளும் ஒரே மெய்யான தேவனாகும். இது உலகமெங்கும் அதிகமான மக்கள் தங்களுடைய அனுபவம்மூலம் அறிந்துகொண்ட உண்மையாகும். அப்படி யிருந்தும் ஜைன்னூல் ஆபீதின் என்பவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏசுவதும் பலவிதமான இழிவான வார்த்தைகள் கொண்டு பரிகசிப்பதும் அவருடைய புத்தகத்தில் பார்க்கமுடியும்.

“கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையை குறித்து உங்களிடத்தில் விசாரித்து கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்” (1 பேது.3:15) என்று கர்த்தர் சொல்லியிருப்பதால் இறைவனுக்கு மகனா என்னும் புத்தகத்திற்கு பதில் எழுத முர்ப்பட்டேன். ஆனால் எனக்கு மிகப்பெரிய சவால் ஒன்று சந்திக்க வேண்டியதாயிற்று அது என்ன வென்றால் P. ஜைன்னூல் ஆபீதின் எழுதினதான இன்னும் அநேக புத்தகங்கள் கிறிஸ்துவத்தையம், இயேசு கிறிஸ்துவையும், பைபிளையும் மிக மோசமாக சித்தரிப்பதாக இருந்தது. இதுமட்டுமல்லாமல் அபுஆஸிய, அமுருதீன், பளனிபாபா, ஆந்திராவில் இம்ரான், மும்பையில் ஜாகீர்நாயக், கேரளாவில் அக்பர் இவ்விதமாக அநேகர் எழுதினதான நூற்றுக்கணக்காக புத்தகங்கள் கிடைக்கப்பெற்றது. பைபிளைக்குறித்தும், இயேசு கிறிஸ்துவைக்குறித்தும், கிறிஸ்தவத்தைக் குறித்தும் எவ்வளவு மோசமாக எழுதலாமோ அவ்விதமெல்லாம் எழுதப்



பட்டுள்ளதைப் பார்த்தேன். ஆதலால் இயேசுகிறிஸ்துவைக் குறித்து கேட்டுள்ள சில கேள்விகளுக்கு சுருக்கமாக இதில் பதில் எழுதியுள்ளேன்.

கிறிஸ்தவர்கள் தங்களை இஸ்லாத்தில் இணைத்துக்கொள்வதே யல்லாமல் அவர்களுக்கு வேறுவழி இல்லை என்றும் எல்லோரும் வந்து இஸ்லாத்தில் சேர்த்துக்கொள்ளுங்கள் என்றும் ஜைன்னூல் ஆபிதின், ஜாகீர்நாயக் முதலியவர்கள் அறைகூவல் கொடுத்துள்ளதால் இஸ்லாத்தை குறித்து கற்றுக்கொள்ள வேண்டும் என்று குர்ஆன், ஹதீஸ் ஆகியவை ஆராய்ந்து பார்த்தேன். கூட இஸ்லாமியர்களுடைய வரலாற்று நூல்களும், சில தப்சீர்களும் படிக்க நேர்ந்தது, இவையெல்லாம் படித்தபிறகு இஸ்லாம் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொண்டேன். இஸ்லாம் மனிதனுக்கு எந்த ஒரு நம்பிக்கையும் தருவதில்லை என்றும், அவர்களுக்குள் இருக்கும் பிரிவினைகளும் மற்றும் பலவிஷயங்களும், அறிந்துகொண்டேன். நான் அறிந்துகொண்ட உண்மைகள் சுருக்கமாக இந்த நூலில் எழுதியுள்ளேன். எந்த ஒரு குர்–ஆன் வசனத்திற்கும், எந்த ஒரு ஹதீஸ்கும் நான் எந்த விளக்கமும் எழுதவில்லை. உள்ளது உள்ளபடி எழுதியிருக்கிறேன், மூன்று வருடங்கள் குர்–ஆன், ஹதீஸ், மற்றும் புத்தகங்கள் படிப்பதற்காக சிலவழித்தேன், எழுதியுள்ள அத்தனை காரியங்களுக்கு என்னிடம் ஆதாரமுண்டு, எங்கு வேண்டுமானாலும் அவைகளை நிருபிப்பேன். இப்னுஈஷா. எழுதிய சீறா என்னும் வரலாற்று நூலிலிருந்து பல தகவல்கள் எனக்கு கிடைத்தது. அந்த புத்தகம் என்னிடம் இல்லை என்பதால் அந்த தகவல்கள் இதில் சேர்க்கவில்லை. அதிகமான விளக்கம் தேவைப்படுவோர் அந்த புத்தகத்தையும் அல் தபாரி எழுதியுள்ள புத்தகங்களையும் படிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்தியா முழுவதும் எனக்கு நெருக்கமான இஸ்லாமிய நண்பர்கள் இருக்கிறார்கள் எவரையும் குறைசொல்வது என் நோக்கமல்ல மாறாக சத்தியத்தை அறித்துக்கொள்ள வேண்டும். எல்லோரும் விடுதலை அடையவேண்டும் என்பதற்காகவே எழுதியுள்ளேன். ஹதீஸ்களுக்கு வேறு வேறு மொழியில் எண் மாறுபடுவதால் எல்லா ஹதீஸுக்கும் எண் போடவில்லை. ஆகிலும் இப்படியும் முகம்மது அவர்கள் சொல்லியிருப்பாரா என்று சந்தேகப்படக்கூடியவைகளுக்கு எண் போட்டுள்ளேன்.

இந்த புத்தகம் எழுத எனக்கு மிக உதவியாக இருந்து என்னை எப்பொழுதும் அதற்காக உற்சாகப்படுத்திவந்த என் துணைவியாருக்கும், எனக்காக ஜெபித்து உற்சாகப்படுத்திவந்த சபை மக்களுக்கும், ஊழியர் களுக்கும், நான் எழுதினது பிழைதிருத்தி சொந்தக் கைபடையில் எழுதிக்

கொடுத்த போதகர். C.J.ஆபிரகாம் நேசக்குமார் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். Pr. C.J. ஆபிரகாம் நேசகுமார் அவர்கள் மிக அதிகமாக பிரயாசப்பட்டு அந்த வேலையை செய்தார். ஆண்டவர்தாமே அவருக்கு பிரதிபலன் தருவாராக, இதற்கு ஒரு அணிந்துரை எழுதி தர வேண்டும் என்று மதிப்பிற்குரிய J.C.தேவ் அவர்களை அணுகியபோது அவருக்கு பல வேதாகம கல்லூரிகளிலும் முக்கியமான பொறுப்புகள் இருந்தாலும் அதன் மத்தியிலும் அழகான அணிந்துரை எழுதிக்கொடுத்த J.C. தேவ் அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த புத்தகம் அச்சிட்டு வெளியிடவேண்டும் என்று இயேசுவின் வார்த்தை நிறுவனத்தை அனுகினபோது அதைப் பொறுப்பெடுத்து சிறப்பாக செய்த ராஜேந்திரன் ஐய்யா அவர்களுக்கும் அந்த நிறுவனத்தாருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சில புகை படங்கள் கொடுத்து உதவினதான Dr. தயாலன் அவர்களுக்கு என்னுடைய நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நிச்சயமாக இறையியல் மாணவர்களுக்கும், சத்தியத்தை தேடுகிற யாவருக்கும் இது பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறேன். திருத்துவத்தை குறித்து என்னுடைய 17 வருட ஆராய்ச்சியின் முடிவு சுருக்கமாக இதில் நீங்கள் பார்க்கலாம். நூற்றுக்கணக்கான புத்தகங்கள் இதற்காக ஆராய நேர்ந்தது அவையெல்லாம் எழுதுவது எளிதல்ல. அதிகமாக பரிசுத்த வேதாகமத்தையும், குர்–ஆன், ஹதீஸ் ஆகிய புஸ்தகங்களை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது. சிலராகிலும் சத்தியத்தை அறிந்து விடுதலைப் பெற்றுக்கொண்டால் என்னுடைய முயற்சி வெற்றிப் பெற்றது என்று சொல்லலாம். ஏதேனும் பகுதிக்கு விளக்கம் தேவைப்பட்டால் அவர்கள் என்னை தொடர்பு கொள்ளலாம். இதுவரைக்கும் உதவி செய்த கர்த்தருக்கு எல்லா புகழும், துதியும், கனமும், மகிமையும், நன்றியும் சொல்லி முடிக்கிறேன்.

கிறிஸ்து இயேசுவின் பணியில்

**Pr. P.V.** பவுலி



**அதிகாரம் 1**

# ஏத்தனை கடவுள் உண்டு?

### A. ஒரே ஒரு தேவன் (கடவுள்) தான் உண்டு.

**ஆதாரங்கள்:**

1. இஸ்ரவேலே கேள்; நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். (உபா.6:4).
2. நான் முந்தினவரும் நான் பிந்தினவருந்தானே; என்னைத் தவிர தேவன் இல்லையென்று இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தரும், சேனைகளின் கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார் (ஏசா.44:6).
3. நானே கர்த்தர் வேறொருவர் இல்லை, என்னைத்தவிர தேவன் இல்லை (ஏசா.45:5).
4. ... தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது; நானே கர்த்தர் வேறொருவர் இல்லை (ஏசா.45:18).
5. ...நானே எல்லாவற்றையும் செய்கிற கர்த்தர்; நான் ஒருவராய் வானங்களை விரித்து நானே பூமியைப் பரப்பினவர் (ஏசா.44:24).
6. கர்த்தரே தேவன், அவரையல்லாமல் வேறொருவரும் இல்லை... (உபா.4:35).
7. ஆகையால் உயர வானத்திலும் தாழ பூமியிலும் கர்த்தரே தேவன் அவரைத் தவிர ஒருவரும் இல்லை (உபா.4:39).
8. ...நீர் ஒருவரே தேவன் (சங்.86:10).
9. நான் நானே அவர், என்னோடே வேறே தேவன் இல்லை என்பதை இப்பொழுது பாருங்கள்... (உபா.32:39).
10. ...என்னைத்தவிர தேவன் உண்டோ... (ஏசா.44:8).
11. ... எனக்கு முன் ஏற்பட்ட தேவன் இல்லை எனக்குப்பின் இருப்பதும் இல்லை (ஏசா.43:10).

12. கர்த்தர் ஒருவரே அவனை வழி நடத்தினார்; அந்நிய தேவன் அவனோடு இருந்ததில்லை (உபா.32:12).

13. ... ஒரே தேவன் நம்மை சிருஷ்டித்ததில்லையோ?... (மல்.2:10).

14. ... ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்று அறிந்திருக்கிறோம் (1 கொரி.8:4).

15. பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு... (1 கொரி.8:6).

16. தேவன் ஒருவரே... (1 தீமோ.2:5).

17. ... தேவனோ ஒருவர் (கலா.3:20).

18. ... தேவன் ஒருவரே (ரோம.3:30).

19. எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு... (எபே.4:6).

20. ... இஸ்ரவேலே கேள் நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் (மாற்.12:29).

21. ஒன்றான மெய்தேவனாகிய உம்மையும் ( யோவா.17:3).

இத்தனை வசனங்களும், இன்னும் பல வசனங்களும் ஒரே ஒரு தேவன்தான் உண்டு என்பதை ஆணித்தரமாகச் சொல்லப்பட்டுள்ளது. இப்படியிருக்கையில் இயேசுவையும், பரிசுத்த ஆவியையும், கடவுள் அல்லது தேவன் என்று எப்படிச் சொல்லலாம். இது எல்லாருக்குள்ளும் நியாயமாக எழக்கூடியக் கேள்விதான். இதற்கு வேதாகமத்திலிருந்து கிடைக்கும் பதில் என்ன என்பதையும் பார்ப்போம்.

## B. வேதாகமத்தில் யாரையெல்லாம் தேவன் என்று சொல்லப்பட்டுள்ளது

1. வயிறு அவர்களுடைய தேவன் என்று (பிலி.3:19)ல் பார்க்கமுடியும். வயிறு தேவனாக இருக்கமுடியுமா? இங்கு உண்மையான சத்தியங்களை மறைத்து வைத்து ஜனங்களை வஞ்சித்து வயிற்றுப் பிழைப்பு நடத்துகிறவர்களுக்கு, அவர்களுடைய தேவன் வயிறு என்று சொல்லப்பட்டுள்ளது. மற்றபடி மெய்யான தேவன் வயிறு என்று சொல்லப்படவில்லை.

2. “...நீ அவனுக்கு தேவனாக இருப்பாய்” (யாத்.4:16). இங்கு ஆரோனக்கு மோசே தேவனாக இருப்பான் என்று பார்க்கிறோம். அடுத்ததாக “பார் உன்னை நான் பார்வோனுக்கு தேவனாக்கினேன்”



(யாத்.7:1). இங்கு மோசேயை பார்வோனுக்கு தேவனாக்கினேன் என்று பார்க்கிறோம். இந்த இரண்டு இடங்களிலும் மெய்யான தேவன், மோசேயைக் குறிப்பிட்ட ஒரு வேலைக்காக நியமிக்கிறதும், அந்த வேலையோடுள்ள உறவில் ஆரோனுக்கும், பார்வோனுக்கும் மோசே தேவனாக செயல்படும் அதிகாரம் மோசேக்கு ஆண்டவர் கொடுப்பதும் பார்க்க முடியும். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு சிலர் மேல் அந்த அதிகாரம் அவர்கள்மேல் பயன்படுத்தலாம் என்பதேயல்லாமல் மோசே தேவனல்ல என்பதை அந்த வேதப்பகுதி படிக்கும் பகுத்தறிவுள்ள யாரும் புரிந்துகொள்ளக்கூடிய காரியம் தான். ஆதலால் மோசே தேவனல்ல என்பதற்கு வேறு விளக்கம் தேவையில்லை.

3. அநேக தேவர்கள் உண்டு என்று (1 கொரி.8:5)ல் பார்க்கலாம். இங்கு சொல்லப்பட்டுள்ள காரியம் உலகமெங்கும் பல பெயர்களில் அநேக தெய்வங்களை மனிதர்கள் வணங்கி வந்தாலும், அவைகளெல்லாம் தேவனல்ல என்பதையும் ஒரே மெய் தேவன் மட்டும்தான் உண்டு என்பதையும் தான் சொல்லப்பட்டுள்ளது. மாறாக அநேக தேவர்கள் உண்டு என்று வேதம் சொல்லவில்லை.

4. மனிதர்களை தேவர்கள் என்று சங்.82:6ல் பார்க்கலாம். இங்கு மோசேயினுடைய காரியத்தில் நாம் பார்த்ததுபோல நீங்கள் தேவர்கள் என்று நான் சொல்லியிருந்தேன் என்று பார்க்க முடியும். அவர்கள் தானாக தேவர்கள் அல்ல. தேவனுக்குரிய சுபாவங்கள் தங்களில் வெளிப்படுத்துவதன் மூலம், தேவனுக்குரிய வல்லமையும், ஆற்றலும் அவர்களுக்கு இல்லாவிட்டாலும் அப்படிப்பட்ட ஒரு மேன்மையை தேவனே அவர்களுக்கு அளிக்கிறார். ஆதலால் மனிதர்கள் மெய்யான தேவனுக்கு ஒப்பானவர்களல்ல என்பதையும் நாம் புரிந்துகொள்ளலாம்.

5. இப்பிரபஞ்சத்தின் தேவனானவர் என்று 2 கொரி.4:4ல் பார்க்கலாம் இங்கு தெளிவாக இவரை தேவன் என்று அழைப்பதை பார்க்கமுடிகிறது. ஆனால் மெய்யான தேவன் என்றல்ல. இப்பிரபஞ்சத்தின் தேவன் என்றுதான் உள்ளது. ஆதலால் இது யார் என்பதை முதலாவது நாம் அறிந்துகொள்ள வேண்டும் 1 யோவா.5:19ல் “உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும்” தெளிவாக எழுதப்பட்டுள்ளது. அப்படியானால் இந்த பொல்லாங்கன்தான் இப்பிரபஞ்சத்தின் அதிபதி என்பதை புரிந்துகொள்ள முடியும். ஆதலால் இந்த பொல்லாங்கன் யார், முழு உலகமும் என்னுடையது என்று சொன்னவன் யார், என்பதை புரிந்துகொண்டால் இதற்கான பதில்

கிடைத்துவிடும். இதற்காக லூக்.4:5ல் பார்ப்போம். பின்பு பிசாசு அவரை உயர்ந்த மலையில் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்ஜியங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து இவைகள் எல்லாவற்றின் மேலுமுள்ள அதிகாரத்தையும், இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன். **இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது;** எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன், நாம் படித்த மூன்று வசனங்களையும் ஒப்பிட்டு பார்க்கும்போது இப்பிரபஞ்சத்தின் அதிபதி என்று சொல்லப்பட்டுள்ளது. சாத்தானைத்தான் என்பதை அறிந்துகொள்ளலாம். அப்படியானால் இப்பிரபஞ்சத்திற்கு தேவனாயிருக்கும்படி அவனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதுதான். அவனுக்கு அந்த அதிகாரம் இல்லை என்பதையும் அறியலாம்.

ஆதி.1:28ல் ஆதி மனிதனாகிய ஆதாமுக்கும் அவன் மனைவியாகிய ஏவாளுக்கும் இப்பிரபஞ்சத்தின்மேல் அதிகாரம் கொடுத்ததை பார்க்கிறோம். ஆனால் கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாததினால் முதல் மனிதனுக்குக் கிடைத்த அதிகாரத்தை சாத்தானிடத்தில் பறிகொடுத்து சாத்தானுக்கு அடிமையான சம்பவம் ஆதியாகமத்தில் காணலாம். ஆதலால் சாத்தான் தேவனல்ல என்பதையும், இப்பிரபஞ்சத்தின் தேவனாகும் அதிகாரத்தை தந்திரமாக மனிதனிடமிருந்து தட்டிப்பறித்தான் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

6. பரிசுத்த ஆவி தெய்வம் என்று பார்க்கிறோம் (அப்.5:3,4). இங்கு மூன்றாம் வசனத்தில் பரிசுத்த ஆவிக்கெதிராக பொய் சொன்னேன் என்று வாசிக்கலாம். ஆனால் 4ம் வசனத்தில் பரிசுத்த ஆவிக்கெதிராக செய்த பாவமானது தேவனுக்கு எதிராக செய்த பாவம் என்று சொல்லப்பட்டுள்ளதால் பரிசுத்தாவியும் தேவனும் ஒன்று என்பதையும், வேதாகமத்தில் பரிசுத்தாவியை தேவன் என்று மற்றும் பல இடங்களில் சொல்வதையும் காணமுடியும்.

### பரிசுத்தஆவி தேவன்தான் என்பதற்கான ஆதாரங்கள்:

i. நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? (1 கொரி.3:16). உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும் 1 கொரி.6:19ல் வாசிக்கிறோம். இதில் தேவன் என்பதையும், பரிசுத்தஆவி என்பதையும் ஒரே அர்த்தத்தில்தான் சொல்லப்பட்டுள்ளது.



ii. யாத்.17:7ல் கர்த்தரை பரீட்சை பார்த்ததின் நிமித்தம் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அதே சம்பவம் எபி.3:7–9 வரை பார்க்கும் போது பரிசுத்தஆவியை பரீட்சை பார்த்தார்கள் என்று பார்க்கிறோம். இதிலிருந்து கர்த்தர் என்றும் பரிசுத்தஆவி என்றும் சொல்லுவது ஒரே தேவனைத்தான் என்பதை அறிந்துகொள்ளலாம்.

iii. கர்த்தரே ஆவியானவர் கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கு விடுதலையுண்டு (2 கொரி.3:17). இங்கு ஆவியானவர்தான் கர்த்தர் என்று பார்க்கிறோம்.

iv. வெளிப்படுத்தின விசேஷத்தில் சபைகளுக்கு எழுதும்போது இயேசு சொல்வதாக ஆரம்பத்திலும், ஆவியானவர் சொல்வது என்று முடிவிலும் சொல்வதை 2,3 அதிகாரங்களில் பார்க்க முடியும். இதிலிருந்து இருவரும் ஒன்றுதான் என்பதை அறியலாம்.

v. எரே.17:13ல் கர்த்தர் ஜீவ ஊற்று என்றும் அதே வார்த்தை பயன்படுத்தி ஆவியானவர் ஜீவஊற்று என்று யோவா.7:37,38 வசனங்களில் பார்க்கலாம்.

vi. 1 கொரி.12:4–11 வரையிலான வசனங்கள் பார்க்கும்போது ஆவியானவர், கர்த்தர், தேவன் என்று மூன்றுவிதமாக வருவதைப் பார்க்கலாம். ஆனால் 6ம் வசனத்தில் இவையெல்லாம் செய்வது ஒரே தேவன்தான் என்றும் 11ம் வசனத்தில் இவையெல்லாம் செய்வது ஆவியாவர் தான் என்று சொல்வதையும் பார்க்கமுடியும். இதிலிருந்து பரிசுத்தஆவியும், தேவனும் ஒன்று என்பதை எந்த சந்தேகத்தற்கும் இடமின்றி அறியலாம்.

### 2. பரிசுத்தஆவியின் தெய்வீக கிரியைகள்:

i. தேவன் எல்லாம் சிருஷ்டித்தார் என்று வாசிக்கிறதுபோல பரிசுத்த ஆவியும் எல்லாம் சிருஷ்டித்தார் என்றும் சொல்லப்பட்டுள்ளது (சங்.33:6, 104:29,30; யோபு 33:4).

ii. பரிசுத்தஆவி உயிப்பிக்கிற ஆவி என்று சொல்லப்பட்டுள்ளது ரோம.8:11.

iii. தேவன் எல்லா இடத்திலும் ஒரே நேரத்தில் இருப்பதுபோல பரிசுத்த ஆவியும் ஒரே நேரத்தில் எல்லா இடத்திலும் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது (சங்.139:7–10).

iv. பரிசுத்தாவியை ஜீவ ஆவி என்று சொல்லப்பட்டுள்ளது (ரோம.8:2)

v. தேவன் நித்திய நித்தியமாக இருப்பதுபோல பரிசுத்தஆவியையும் நித்திய ஆவி என்று சொல்லப்பட்டுள்ளது (எபி.9:14).

vi. தேவன் ஜீவன் கொடுப்பதுபோல பரிசுத்தஆவியும் ஜீவன் கொடுக்கமுடியும் என்று எசே.37:1–10 வரையிலான வசனத்தில் பார்க்கலாம்.

### 3. பரிசுத்தஆவிக்கு சொல்லப்பட்ட நாமங்கள் பரிசுத்தஆவி தேவன் தான் என்பதை நிரூபிக்கின்றன.

அநேக வசனங்கள் ஆதாரமாக இருந்தாலும் ஒரு சில வசனங்களை மட்டும் இங்கு எடுத்துரைக்கின்றேன்.

a. 1 கொரி.3:16ல் தேவனுடைய ஆவி என்று பார்க்கிறோம்

b. கர்த்தருடைய ஆவி என்று ஏசா.11:2ல் உள்ளது

c. கர்த்தராகிய தேவனுடைய ஆவி என்று ஏசா.61:1ல் உள்ளது

d. ஜீவனுள்ள தேவனுடைய ஆவி என்று 2 கொரி.3:3ல் உள்ளது

e. பரிசுத்தஆவி என்று லூக்.11:13ல் உள்ளது

f. சத்திய ஆவி என்று யோவா.14:17ல் உள்ளது

g. கிறிஸ்துவின் ஆவி என்று ரோம.8:9ல் உள்ளது

h. இயேசு கிறிஸ்துவின் ஆவி என்று பிலி.1:19ல் உள்ளது

i. மகிமையுள்ள ஆவியானவர் என்று தேவனுக்கு ஒப்பான வார்த்தையைக் கொண்டு பரிசுத்தஆவியைக் குறிப்பிடப்பட்டுள்ளது 1 பேது.4:14ல் உள்ளது

j. நித்திய ஆவி என்று ஆரம்பமும் முடிவும் இல்லாத அவருடைய நிலையை எபி.9:14ல் உள்ளது.

இந்த வசனங்கள் எல்லாம் பரிசுத்தஆவி தேவன் என்பதை நிரூபிக்கின்றன.

### 4. பரிசுத்தஆவியின் தெய்வீகத் தன்மைகள்:

i. உயிர்ப்பிக்கும் ஆவி (யோவா.6:63; ரோம.8:2)

ii. சர்வ வல்லவர் என்று பரிசுத்தஆவியை சொல்வதைப் பார்க்கிறோம் (சக.4:6; யோபு 33:4).



iii. ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் இருக்கக் கூடியவர் (சங்.139:7–10).

iv. நித்திய ஆவி (எபி.9:14).

v. தேவன் பரிசுத்தராய் இருப்பதுபோல இவரும் பரிசுத்தர் என்று மத்.12:32ல் பார்க்கலாம்.

vi. தேவன் சத்தியமாக இருப்பதுபோல இவரும் சத்தியமாக உள்ளார் (யோவா.14:17).

### 5. தேவன் ஆள் தன்மை உள்ளவராக இருப்பதுபோல் பரிசுத்தாவியும் ஒரு நபராக இருக்கிறார் என்பதற்கு ஆதாரங்கள்:

i. பரிசுத்தாவியை ஒரு நபராக அழைப்பதுபோல அநேக இடங்களில் அழைக்கப்பட்டுள்ளது.

a. அவர் என்று பார்க்கிறோம் (யோவா.15:26, 16:13,14)

b. அவரை என்று யோவான் 16:7,8,13,14 ஆகிய வசனங்களில் பார்க்கிறோம்

c. தாம் என்று யோவான் 16:13ல் பார்க்கலாம்.

ii. ஒரு நபருக்கு இருக்கக்கூடிய செயல் திறன்கள் பரிசுத்தாவிக்கு உள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது.

a. அறிகிறவர் (1 கொரி.2:10)

b. அவருக்கு என்று சித்தம் உள்ளதாக (1 கொரி.12:11)ல் பார்க்கலாம்

c. அறிவுள்ளவர் என்று (நெகே.9:20)ல் காணலாம்.

d. அவரை துக்கப்படுத்த முடியும் (எபே.4:30)

iii. ஒரு நபர் செய்யக்கூடிய கிரியைகள் பரிசுத்த ஆவி செய்வதாகச் சொல்லப்பட்டுள்ளது.

a. தேவனுடைய ஆழங்கள், ஆராய்கிறார் (1 கொரி.2:10)

b. சபையோடு பேசுகிறார் (வெளி.2:7)

c. மனுஷருக்காக பரிந்து பேசுகிறார் (ரோம.8:26)

d. சாட்சி கொடுக்கிறார் (யோவா.15:26)

e. போதிக்கிறார் (யோவா.14:26)

f. பகிர்ந்து கொடுக்கிறார் (1 கொரி.12:11)

g. ஒரு மனிதனை எடுத்துக்கொண்டு போகிறார் (அப்.8:39)

h. தடை செய்கிறார் (அப்.16:6,7)

i. நடத்துகிறார் (ரோம.8:14)

j. நியமனம் செய்கிறார் (அப்.20:28)

k. அனுப்புகிறார் (அப்.13:1,2)

l. கண்டித்து உணர்த்துகிறார் (யோவா.16:8)

m. இயேசுவினுடையதை எடுத்து அறிவிக்கிறார் (யோவா.16:14)

n. கூடவே வாசம் பண்ணுகிறவர் (யோவா.14:17)

o. நினைப்பூட்டுகிறார் (யோவா.14:26)

iv. ஒரு மனிதனுக்கு நாம் செய்யும் காரியம் அவர் பகுத்தறிவதுபோல பரிசுத்தஆவியும் அறிகிறார்.

a. பரிசுத்தஆவியை விசனப்படுத்தினார்கள் (ஏசா.63:10)

b. ஆவியானவரை துக்கப்படுத்த முடியும் (எபே.4:30)

c. பரிசுத்தஆவியை பரிகசிக்கவும் நிந்திக்கவும் முடியும் (எபி.10:29)

d. பரிசுத்தஆவியினிடத்தில் பொய் சொன்னார்கள் (அப்.5:3,4)

e. பரிசுத்தஆவியை தூஷனமான வார்த்தைகளால் பேசமுடியும் (மத்.12:31,32)

f. பரிசுத்தஆவியோடு எதிர்த்து நிற்கமுடியும் (அப்.7:51)

V. பரிசுத்தஆவியின் நாமம் பிதாவோடும் குமாரனோடும் சேர்ந்து ஏக நாமமாக சொல்லப்பட்டுள்ளது

a. மத்.28:19ல் பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்று மூன்றாக இருந்தாலும் பண்மையில் சொல்லாமல் ஒருமையில் நாமத்தில் என்று சொல்லப் பட்டுள்ளது.



b. 2 கொரி.13:14ல் கர்த்தராகிய இயேசு பிதாவாகிய தேவன் என்பவர்களோடு இணைத்து பரிசுத்தஆவியையும் சொல்வதை பார்க்கலாம்.

இங்கு நாம் பார்த்தவேத வசனங்கள் எல்லாம் பரிசுத்தஆவி மெய் தேவன் என்பதற்கு தெளிவான ஆதாரங்களாகும்.

## 7. இயேசுவை தேவன் என்று சொல்வதைப் பார்க்கிறோம் (ரோம.9:5)

இயேசு கிறிஸ்து தேவன் என்பதற்கு வேதத்தில் கூறப்பட்டுள்ள தெளிவான வேத வசன ஆதாரங்கள்.

i. வல்லமையுள்ள தேவன் என்று இயேசுவை அழைப்பது ஏசா.9:6ல்

ii. வார்த்யையான தேவன் என்று யோவான்.1:1லும் இந்த வார்த்தைதான் மாமிசத்தில் வெளிப்பட்டது என்று யோவா.1:14லும் பார்க்கலாம்.

iii. இயேசுவின் சீடனாயிருந்த தோமா இயேசவை தெளிவாக தேவனே என்று அழைக்கிறார் யோவா.20:28.

iv. சர்வத்திற்கும் மேலான தேவன் என்று ரோம.9:5ல் பார்க்கலாம்.

v. மகாதேவன் என்று தீத்து 2:12,13ல் பார்க்கலாம்.

vi. பிதாவாகிய தேவன் இயேசுவை தேவனென்று அழைக்கிறார் எபி.1:8

vii. மெய்யான தேவன் என்று 1 யோவா.5:20ல் பார்க்கலாம்

viii. சர்வவல்லமையுள்ள தேவன் என்று வெளி.19:6ல் பார்க்கலாம்.

ix. மகிமையின் தேவன் என்று 1 கொரி.2:8லும்

x. தேவன் என்று அப்.20:28லும் பார்க்கலாம்.

xi. சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் என்று வெளி.21:22ல் பார்க்கலாம்.

மேலே பார்த்த வசனங்களில் எல்லாம் யாராவது ஏதேனும் காரியத்திற்காக இயேசுவை தேவனாக்கினார் என்றில்லை. அவர் மெய்யான தேவன்தான் என்று தெளிவாக சொல்லப்பட்டுள்ளதை பார்க்க முடியும்.

## 2. தேவனுக்கு இருக்கக்கூடிய தன்மைகள் இயேசுவில் பார்க்கலாம்.

i. தன்னில் தானே ஜீவன் உள்ளவர் (யோவா.1:14, 14:6)

ii. யாருடைய உதவியும் இல்லாமல் வாழக்கூடியவர் என்பதை முழு வேதாகமத்திலும் காணமுடியும்.

iii. மாறாதவர் என்று (எபி.13:8)

iv. சத்தியமானவர் என்று (யோவா.14:6)

v. பரிசுத்தர் என்று, (லூக்.1:35)

vi. ஆரம்பம் இல்லாதவர் என்று (யோவா.1:1; எபி.7:3)

vii. சர்வ வல்லவர் என்று (வெளி.19:6)

viii. எல்லாம் அறிகிறவர் என்று (யோவா.21:17, 16:30; கொலே.2:3)

ix. எல்லா இடத்திலும் இருப்பவர் (மத்.18:20; யோவா.1:18, 3:13)

x. இயேசுவுக்குள் தான் சகல பரிபூர்ணமும் என்று (கொலே.1:19, 2:9)

xi. இயேசு நித்தியர் என்று அதாவது என்றும் இருக்கிறவர் என்று (1 யோவா.1:2)ல் சொல்லப்பட்டுள்ளது.

## 3. தேவன் மட்டும் செய்யக்கூடிய காரியங்களை இயேசு செய்திருக்கிறார்:

i. இயேசு சிருஷ்டி கர்த்தர் (யோவா.1:3; கொலே.1:15,16)

ii. தேவன் எல்லாம் காத்துக்கொள்வதுபோல இயேசுவும் காத்துக் கொள்கிறார் (எபி.1:3).

iii. பாவங்களை மன்னிக்கிறார் (மாற்.2:5–10)

iv. மரித்தவர்களை உயிர்ப்பிக்கிறார் (யோவா.6:39–44) (இது லாசருவையும் மற்றவர்களையும் உயிர்ப்பித்த காரியம் அல்ல)

v. மனிதனை உருமாற்றம் அடையச் செய்கிறார் (பிலி.3:21)

vi. நித்திய ஜீவனளிக்கிறார் (யோவா.10:28, 17:2)

vii. நியாயத் தீர்ப்பளிக்கிறார் (யோவா.5:22–27)



viii. மனுஷனை இரட்சிக்கிறவர் அவர் (மத்.1:21; 1 தீமோ.1:15; வெளி.7:10)

ix. இயற்கையை கட்டுப்படுத்துகிறார் (லூக்.8:24; மாற்.4:39; மத்.14:25,26)

## 4. தேவனை ஆராதிப்பதுபோல இயேசுவையும் ஆராதிக்கிறார்கள்

i. சீடர்கள் பணிந்துகொண்டார்கள் (மத்.18:9,17, 14:33)

ii. சாஸ்திரிகள் பணிந்துகொண்டார்கள் (மத்.2:11)

iii. குஷ்டரோகிகள் பணிந்துகொண்டார்கள் (மத்.8:12)

iv. அசுத்த ஆவிகளும் பணிந்துகொண்டன (மாற்.5:6,7) (இங்கு பணிந்து என்பதை ஆராதனை என்றுதான் சரியாக மொழிபெயர்க்கவேண்டும்).

v. சர்வ சிருஷ்டிகளும் இயேசுவை ஆராதிப்பது வெளி.5:8–14ல் பார்க்கலாம்

vi. முதல் நூற்றாண்டில் இயேசுவின் நாமத்தை எங்கும் தொழுது கொண்டார்கள் (அப்.9:10–14; 1 கொரி.1:2).

vii. ஸ்தேவான் இயேசுவை தொழுதுகொண்டான் (அப்.7:59)

viii. தேவ தூதர்கள் இயேசுவை தொழுதுகொண்டான் (எபி.1:6)

ix. ஏசாயா பார்த்த தரிசனத்தில் சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று சொல்லி சேராபீன்கள் ஆராதனை செய்தது இயேசுவைத்தான் என்பதை யோவா.12:41ல் வாசிக்கிறோம்.

x. 1 பேது.4:11ல் மகிமை என்றைக்கும் தேவனுக்கு என்று சொல்லும் பேதுரு 2 பேது.3:18ல் மகிமை இயேசுவுக்கு என்று சொல்வதால் அப்போஸ்தலனாகிய பேதுரு இயேசுவை தேவனாக ஆராதித்தார் என்பதை புரிந்துகொள்ளலாம்.

xi. எல்லா முழங்காலும் அவருக்கு முன் முடங்கும் (பிலி.2:10)

xii. என்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் (ரோம.9:5)

## 5. பிதாவாகிய தேவனைக்குறித்துச் சொல்லப்பட்ட காரியங்கள் இயேசுவைக் குறித்தும் சொல்லப்பட்டுள்ளது.

i. இராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும் (1 தீமோ.6:15; வெளி.17:14)

ii. அல்பாவும் ஒமேகாவும் வெளி.1:8ல் பிதாவாகிய தேவனையும் 11ம் வசனத்தில் இயேசுவையும் சொல்லப்பட்டுள்ளது.

iii. பிதாவாகிய தேவனை கர்த்தர் என்று சொல்லியிருப்பதுபோல இயேசுவையும் கர்த்தர் என்று பல இடங்களிலும் சொல்லப்பட்டுள்ளது 1 தீமோ.1:1,2, 12–14 மற்றும் பல இடங்களிலும் பிதாவை கர்த்தர் என்று சொல்வதை பார்க்கலாம். ஆனால் 1 கொரி.8:6ல் ஒரே கர்த்தர் இயேசுதான் என்று பார்க்கிறோம் 1 தெச.1:6, 2:1, 14:16 மற்றும் பல இடங்களிலும் இயேசுவை கர்த்தர் என்று தெளிவாக எழுதப்பட்டுள்ளதை நாம் பார்க்கமுடியும்.

### 6. பிதாவாகிய தேவனுக்கு இயேசு சமமாக இருக்கிறார்:

i. தேவனுக்கு சமம் என்று (பிலி.2:6)லும்

ii. தேவனுடைய மகிமையின் பிரகாசம் என்று எபி.1:3லும்

iii. பிதாவாகிய தேவனுடைய தன்மையின் சொரூபம் என்று எபி.1:3லும்

iv. தேவனுடைய எல்லா பரிபூர்ணமும் இயேசுவில் என்று கொலே.1:19, 2:9 வசனங்களிலும்

v. தேவனும் இரட்சகரும் என்று 2 பேது.1:1லும் பார்க்கலாம்.

### 7. பிதாவாகிய தேவன் இயேசுவை தேவன் என்றும் கர்த்தர் என்றும் அழைப்பதை வேதத்தில் தெளிவாக பார்க்கமுடியும்.

i. (சங்.110:1; எபி.1:8) கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி என்றும்

ii. சகரி.3:2ல் கர்த்தர் உன்னை கடிந்துகொள்வாராக என்றும்

iii. ஓசியா 1:7ல் அவர்களுடைய தேவனாகிய கர்த்தராலே என்று பிதாவாகிய தேவன் சொல்வதைப் பார்க்கலாம்.

iv. (சகரி.10:12) நான் அவர்களைக் கர்த்தருக்குள் பலப்படுத்துவேன் அவர்கள் அவருடைய நாமத்தில் நடந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வசனத்தில் பிதாவாகிய தேவன் இயேசுவை கர்த்தர் என்று சொல்வதைப் பார்க்கலாம்.

v. எல்லா நாவும் இயேசுவை கர்த்தர் என்று அறிக்கை செய்யும்படி பிதாவாகிய தேவன் அவரை உயர்த்தினார் (பிலி.2:11).

மேலே நாம் வாசித்த வசனங்கள் இயேசு மெய்யான தேவன் என்பதற்குத் தெளிவான ஆதாரங்களாக இருக்கின்றன.



### 8. பிதாவாகிய தேவன் என்று 1 கொரி.8:6ல் பார்க்கிறோம்.

1. பிதாவாகிய தேவன் என்று சொல்லப்பட்டுள்ளது.

   i. பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு (1 கொரி.8:6)

   ii. நம்முடைய பிதாவாகிய தேவன் (ரோம.1:3)

   iii. பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக (பிலி.2:11)

2. பிதா என்று பலரும் அழைத்திருக்கிறார்கள்:

   i. இயேசு கிறிஸ்து அவரை பிதா என்று அழைத்திருக்கிறார் யோவா.17:11

   ii. விசுவாசிகள் அவரை பிதா என்ற அழைக்கலாம் (மத்.6:9; கலா.4:1)

   iii. இஸ்ரவேல் ஜனத்திற்கு அவர் பிதா (ஏசா.63:15)

   iv. இரக்கங்களின் பிதா என்று அவரை அழைக்கிறார் (2 கொரி.1:3)

   v. ஜோதிகளின் பிதா என்று யாக்.1:17லும்

   vi. ஆவிகளின் பிதா என்று எபி.12:9லும்

   vii. மகிமையின் பிதா என்று எபே.1:17லும் பார்க்கலாம்

3. பிதாவாகிய தேவனும் ஆள்தன்மையுடையவராக இருக்கிறார்

   i. ஒரு நபர் நடந்து வருவதுபோல் நடந்து வருகிறார் (ஆதி.3:8)

   ii. முகர்ந்து அறிகிறார் (ஆதி.8:21)

   iii. ஆராய்கிறவரும் அறிகிறவருமாக இருக்கிறார் (1 நாளா.28:9; சங்.139:1–6)

   iv. ஆலோசனை செய்கிறவர், அல்லது திட்டங்கள் தீட்டுகிறவராக இருக்கிறார் (ஏசா.46:10; ஆதி.1:26)

   v. சீர்தூக்கிப் பார்க்கிறார் (நீதி.5:21)

4. பிதாவாகிய தேவனின் செயல்பாடுகள்:

   i. சிருஷ்டிக்கிறார் (ஆதி.1:1)

   ii. ஏற்கனவே சிருஷ்டித்த பொருளிலிருந்து வேறு ஒன்று சிருஷ்டிக்கிறார் (ஆதி.2:19).

   iii. பாதுகாக்கிறார் (சங்.66:9; நீதி.2:8)

   iv. பராமரிக்கிறார் (யோபு 12:10; சங்.147:9)

v. ஆளுகை செய்கிறார் (சங்.103:19)

vi. இரட்சிக்கிறார் (1 தீமோ.1:1; 2 சாமு.22:2)

vii. நியாயத்தீர்ப்பளிக்கிறார் (ஆதி.18:25).

5. பிதா குமாரன் பரிசுத்தஆவி மூன்றும் தனித்தனியே ஆள்தன்மை உடையவர்கள்தான்.

i. (மத்.3:16,17)ல் பிதா, குமாரன், பரிசுத்தஆவி, தனித்தனியாகப் பார்க்கிறோம்

ii. (மத்.17:5)ல் பிதா குமாரன் தனித்தனியாகப் பார்க்கலாம்

iii. குமாரனும் பிதாவும் (யோவா.11:41)

iv. குமாரனும் பிதாவும் (மத்.11:25)

v. நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியால் என்று (யோவா.14:12)ல் பார்ப்பதில் தனிநபர்கள் என்று புரிந்துகொள்ளலாம்.

vi. நான் பிதாவை வேண்டிக்கொள்வேன் (யோவா.14:16)

vii. பிதா குமாரன் பரிசுத்தஆவி (யோவா.14:26)

viii. குமாரன் பிதா (லூக்.23:34).

இன்னும் அநேக காரியங்களை எடுத்துக்காட்ட முடியும். ஆகிலும் இறையியல் ஒரு பெரிய காரியம். அதில் எல்லா பிரிவுகளையும் இங்கு விளக்கிக்கூற முடியாது. இது ஒரு கேள்விக்கான பதிலாக எழுதுவதால் மிகமுக்கியமான சில குறிப்புகள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவரை நாம் பார்த்த வேத வாக்கியங்களிலிருந்து வயிறு, மோசே, அநேக தேவர்கள், மனிதர்கள். மரித்தவர்களுடைய ஆவி என்று சொல்லும் அசுத்தாவிகள், இப்பிரபஞ்சத்தின் பிரபு முதலியவைகள் மெய்யான தேவன் என்று சொல்லப்படவில்லை என்றும் ஆனால் பிதாவையும், குமாரனையும், பரிசுத்தஆவியையும் மெய் தேவன் என்று தெளிவாக வேதம் சொல்கிறது என்பதையும் பார்த்தோம்.

இப்போது நமக்குள் எழக்கூடிய மிக முக்கியமான கேள்வி, மூன்று தேவனா அல்லது ஒரே தேவனா, வேதம் முரண்பாடான காரியங்களை போதிக்கின்றதா. கீழ்வரும் பகுதிகளை பொருமையுடன் படிக்கும்போது இதற்கான பதில் கிடைக்கும். தொடர்ந்து படிக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



## அதிகாரம் 2

# வேதம் கூறும் திரியேக தேவன்

### 1. வேதம் கூறும் திரியேக தேவன்:

நாம் மேலே பார்த்த வேதவாக்கியங்களின் அடிப்படையில் பிதா குமாரன் பரிசுத்தஆவி ஆகிய மூவரையும் தேவன் என்று சொல்லப்பட்டாலும் மூன்று தேவர்கள் இல்லை என்பதையும் ஒன்றாகிய திரியேக தேவனைக் குறித்துதான் வேதம் கூறுகிறது என்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும். ஏனென்றால் (மத்.28:19)ல் பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்று சொல்லப் பட்டாலும் இவர்களுடைய நாமங்கள் என்று சொல்லி முடிக்காமல், நாமத்தில் என்று ஒருமையில் சொல்லப்பட்டடுள்ளதால் இந்த மூன்று ஆள் தன்மை இருந்தாலும் ஒரு தேவன்தான் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

இரண்டாவதாக ஆதி.1:26ல் தேவன்; தன்னை நாம் என்று அழைக்கிறார். ஆனால் நாம் என்கிற பண்மை சொல் சொன்னாலும் நம்முடைய சாயலாக, ரூபமாக என்கிற ஒருமைச்சொல் தொடர்ந்து வருவதால், நாம் என்று சொல்லக்கூடிய மூன்று ஆள் தன்மை இருந்தாலும் ஒரே ஒரு தேவன்தான் என்பதால் சாயல்கள் என்றும், ரூபங்கள் என்றும் சொல்லாமல் ஒருமைச் சொல்லில் முடிக்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்ளலாம்.

மூன்றவதாக ஆதி.3:22ல் நம்மில் ஒருவரைப்போல என்று பார்க்கிறோம். நம்மில் என்றும், ஒருவரைப்போல் என்றும் சொல்வதாலும் ஒருவரிலும் அதிகமான ஆள்தன்மையுடைய தேவன் ஆனாலும் ஒரே தேவன்தான் உண்டு என்பதையும் அறிந்துகொள்ளலாம்.

இன்னும் 1 யோவா.5:7ல் பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றா யிருக்கிறார்கள்; என்று பார்க்கிறோம். ஆதலால் வேதாகமம் கூறும் தேவன் ஒருவர் மட்டும்தான் என்பதையும், ஆனால் மூன்று ஆள் தத்துவம் உடையவர் என்பதையும் சரியாக புரிந்துகொள்ள முடியும். ஆனால் திரியேக தேவனை உலகிற்கு அறிவித்தவர்கள் அதை தவறாக விளங்கி அறிவித்திருப்பதினால் சிலர் இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள மறுத்ததும் அல்லாமல் பலவிதமான பிரிவினைகளுக்கும் அது காரணமாகிவிட்டது.

ஆரம்பத்திலிருந்து திரியேக தேவனைக்குறித்த விளக்கம் கொடுக்கப் பட்டபோது தவறாக விளக்கினது நிமித்தம் அன்றிலிருந்து இந்தநாள் வரைக்கும் அந்த தவறையே பின்பற்றி வருவதால் அந்த தவறை திருத்தும் படியான விளக்கத்தைத்தொடர்ந்து கொடுக்கிறேன்.

முன் விதி இல்லாமல் கீழ்வரும் காரியங்கள் படிக்கும் யாவரும் வேதாகமம் கூறும் திரியேக தேவன் என்கின்ற உண்மையை புரிந்துக்கொண்டு சத்திய தேவனை ஆவியிலும் உண்மையிலும் ஆராதித்து நித்திய ஜீவன் பெற்றுக் கொள்ளும்படி இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கு ஏதுவாகும்.

தொடர்ந்து நாம் படிக்கப்போகும் காரியங்கள் ஒரு புதுமையான காரியம் போல தோன்றும். ஆனால் அது புதுமையானதல்ல மிகவும் பழமையானதும், வேதாகமம் கூறும் உண்மை என்பதையும் நாம் அறிந்து கொள்ளமுடியும். எந்த முன் விதிகளும் இல்லாமல் உண்மையை அறிய வேண்டும் என்கிற வாஞ்சையோடு இந்த புத்தகத்தையும், பரிசுத்த வேதாகமத்தையும் படிக்கும் யாவருக்கும் பரிசுத்தாவியானவர் உண்மையை விளக்கி சகல சத்தியத்திலும் வழி நடத்துவார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

வேதாகமம் கூறும் பிதா குமாரன் பரிசுத்தஆவி என்கிற வார்த்தைகள் நாம் படிக்கும்போது மனிதராகிய நமக்கு உடனே நினைவில் வரும் காரியம் நமக்கு உலகில் இருக்கும் தாய், தகப்பன், பிள்ளை முறைகள்தான். ஆனால் உண்மை என்னவென்றால், ஆதியில் பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்கிற பேரில் தேவன் அறியப்படவில்லை. மனிதனுக்குப் புரிந்துகொள்ளும்படியாக தேவன் இந்த வார்த்தைகளை பயன்படுத்தியிருக்கிறார் என்பதே உண்மை.

குமாரன் என்றும், இயேசு என்றும் அறியப்படுவதற்கு முன்னமே அவர் வார்த்தை என்றுதான் அறியப்பட்டிருந்தார். வார்த்தை என்கிற பெயரில் அறியப்பட்டவர்தான் மாம்சத்தில் நமக்குள்ளே வாசம் பண்ணினார் என்று யோவா.1:14ல் வாசிக்கிறோம். ஆதலால் வார்த்தையாக அறியப்பட்டவர் எப்போதிலிருந்து குமாரன் என்றும், இயேசு என்றும் அழைக்கப்பட்டார் என்பதை நாம் ஆராய்ந்து அறியவேண்டும். யோவா.1:1ல் ‘‘ஆதியில் வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது’’ என்று வாசிக்கிறோம். இங்கு ஆதியில் என்கிற வார்த்தை எதைக்குறிக்கிறது?

ஆதி.1:1ல் ஆதியில் என்று சொல்லும்போது தேவன் சிருஷ்டிக்க ஆரம்பித்ததான அந்த சமயத்தைக்குறிக்கும். ஆனால் யோவா.1:1ல் ஆதியில் என்று சொல்லும்போது எத்தனையோ கோடிக்கணக்கான வருடங்களுக்கு முன்னே தேவன் எதையும் சிருஷ்டிக்காத அந்த நாட்களைக் குறிக்கிறது. இங்கு ஆதியில் என்று சொல்வதால் ஒரு குறிப்பிட்ட காலத்தைக் குறிக்கின்றன. ஆனால் இங்கு சொல்லப்பட்ட வார்த்தை அல்லது இயேசு, அதற்கு முன்னமே அதாவது முன்கால நித்தியத்தில் இருந்தவர் என்பதை நாம் அறியவேண்டும். இன்று நாம் காலத்தில் வசித்து வருகிறோம். ஆனால் காலம், நேரம் இல்லாதிருந்த முன்கால நித்தியத்தில் இயேசு இருந்தார். ஆனால் அப்போது அவருடைய பேர் இயேசு என்றில்லை. மத்.19:5ல் ஆதியில் என்று இயேசு சொல்லும்போது முதல் மனிதராகிய ஆதாம் ஏவாளை சிருஷ்டித்த சமயத்தைக் குறிக்கும். இப்போது நாம் நம் நேரத்திற்குள் வசித்து வருகிறோம். இனி நேரம் என்று ஒன்று இல்லாத காலம்வரும் அது நித்தியம் என்று சொல்லலாம். முன்கால நித்தியம், நேரம், பின்கால நித்தியம் இம்மூன்றும் மனதில்கொண்டு தொடர்ந்துவரும் காரியங்களை நாம் பார்க்கவேண்டும்.




உண்மையிலே பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று அழைக்காத ஒரு காலம் இருந்ததுண்டு (இந்த மூன்று பெயர்கள் இல்லாதிருந்த காலம்தான் உண்டு இந்த மூன்று நபர்கள் இல்லாதிருந்த காலம் அல்ல). ஆதலால் இந்த பெயர்கள் எப்போது உருவானது. தேவனுக்கு ஏன் குமாரன் இருக்க வேண்டும் என்கிற காரியங்கள் நாம் கீழ்வரும் பகுதிகளில் பார்க்கலாம்.

வேதாகமம் கூறும் ஏக சத்திய தேவன் மூன்று ஆள் தத்துவம் உடையவரும், மூன்று ஆள் தத்துவமும் தங்களில் தாங்கள் பரிபூரணமாகவும் இருக்கிறார். இந்த மூன்று ஆள் தத்துவமும் ஒன்றாகத்தான் முன்கால நித்தியத்திலும் காலத்திலும், வரும்கால நித்தியத்திலும் இருக்கிறார். என்பது வேதம் திட்டமாகவும் தெளிவாகவும் கூறுகின்ற உண்மையாகும். வரும் கால நித்தியத்தில் இந்த மூன்று பெயர்கள் இருக்காது என்றும். மூன்று ஆள் தன்மைக்கும் சேர்த்து ஒரே பெயர்தான் இருக்கும் என்று (சக.14:9)ல் படித்து புரிந்துகொள்ளலாம். மனிதனோடுள்ள உறவில் மனிதன் புரிந்து கொள்வதற்காக, பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்கிற மூன்று பெயர்களில் இந்த மூன்று ஆள்தத்துவங்களை பெயரிட்டு அழைக்கப்பட்டாலும் இந்த பெயர்கள் நித்தியத்தில் இருக்காது குமாரன், இயேசு என்கின்ற பெயரில் அவர் அறியப்படுவதற்கு முன்னமே அவருக்கு வார்த்தை என்கிற பெயர் இருந்தது என்று யோவா.1:1ல் வாசிக்கலாம். வார்த்தை என்கிற பெயரில் கடைசி நாட்களில் இயேசு வெளிப்படுவதும், மற்றும் யாருக்கும் தெரியாத வேறு ஒரு பெயர் அவருக்குண்டு என்பதையும் (வெளி.19:12,13) வசனங்களில்

பார்க்கலாம். மூன்று ஆள்தத்துவம் உடையவராக இருந்தாலும் ஒரே ஒரு தேவன்தான் உண்டு என்பதை கீழ்வரும் வரைபடங்கள்மூலம் நான் விளக்கும்படி முயற்சிக்கின்றேன்.

**வரைபடம் – 1**




இப்படி மூன்று ஆள் தத்துவம் உடைய ஏக சத்திய தேவன் எப்பொழுது பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்கிற பெயர்களில் அழைக்கப்பட்டார்? ஏன் அப்படி அழைக்கப்பட வேண்டும் என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

ஒன்று, இரண்டு, மூன்று என்று முதலாம் ஆள், இரண்டாம் ஆள், மூன்றாம் ஆள் என்று எண்கள் சூட்டப்பட்டாலும், முதலாம் ஆளுக்குக் கீழ் இரண்டாம் ஆள், இரண்டாம் ஆளுக்குக் கீழ் மூன்றாம் ஆள் என்று அர்த்தம் கிடையாது. இதே எண் மூன்று போட்டிருக்கும் இடத்தில் ஒன்றும், இரண்டுபோட்டிருக்கும் இடத்தில் மூன்றும், மூன்று போட்டிருக்கும் இடத்தில் இரண்டுமாக எப்படி வேண்டுமானாலும் மாற்றிப் போடலாம். காரணம் என்னவென்றால் இந்த மூன்று ஆள் தத்துவமும் பூரணமும், எந்த ஏற்ற தாழ்வும் இல்லாததும் என்பதை வரைபடத்தின்மூலமாக முன்பே பார்த்தோம்.

பரிசுத்த வேதாகமத்தில் இந்த மூன்று ஆள் தத்துவமும் மாறி மாறி முதலிடத்தில் வருவதை நாம் பார்க்கமுடியும்.



**i.** (மத்.28:19) பிதா, குமாரன், பரிசுத்த ஆவி

**ii.** (1 கொரி.12:4–6) பரிசுத்த ஆவி, குமாரன், பிதா.

**iii.** (2 கொரி.13:14) குமாரன், பிதா, பரிசுத்த ஆவி

**vi.** (எபே.4:4–6) பரிசுத்தஆவி, குமாரன், பிதா.

**v.** (வெளி.1:4–6) பிதா, பரிசுத்தஆவி, குமாரன்.

இன்னும் பல இடங்களிலும் இது மாறி வருவதைப் பார்க்கமுடியும். இப்போது நாம் கேட்க வேண்டிய முதல் கேள்வி, காரியம் இப்படியிருக்க ஏன் பிதா குமாரன் பரிசுத்தஆவி என்று அழைக்கவேண்டும்?

**பதில்:**

வேதாகமம் எப்போதுமே மனிதனுக்கு காரியங்கள் புரிந்து கொள்வதற்காக மனிதனுடைய மொழியில் பேசுவதால் இப்படிப்பட்ட பெயர்கள் குறிப்பிட்டு பேசியிருப்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

இப்போது இரண்டாவது கேள்வி, மனிதனக்கு புரிந்துகொள்ளும்படியாக பேசினாலும் பிதா என்று சொல்லும்போதும், குமாரன் என்று சொல்லும்போதும் மனிதர்களுக்கிடையில் இருப்பதுபோல குழந்தை பிறப்பு தேவனுக்கும் உண்டு என்று அர்த்தமா?

**பதில்:**

மனிதனுக்கு இருப்பதுபோல தேவனுக்கு குழந்தை பிறப்புக்கிடையாது யாக்.1:17ல் அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.

ஆதலால் எந்தவிதமான ஏற்றத்தாழ்வும் இல்லாத ஏக சத்தியதேவன் மூன்று ஆள் தன்மையுடையவர் என்பதை நாம் பார்த்தோம். காலம் அல்லது நேரம் இல்லாத நித்தியத்தில் இருக்கிறவர் எப்போது ஏதேனும் ஒன்று சிருஷ்டிக்கவேண்டும் என்று தன் மனதில் தீர்மானம் செய்தாரோ அந்த நிமிடம்தான் காலம் ஆரம்பமாயின ஏசா.43:13ல் நாள் உண்டாவதற்கு முன்னமே அவர் இருக்கிறார் என்று பார்க்கிறோம். ஏதேனும் ஒன்று சிருஷ்டிப்பதற்கு முன்னமே தேவனுடைய மனதில் அது உருவாகி பின் அது உண்டாக்கப்பட்டது என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். பரிசுத்த வேதாகமத்தை நாம் ஆராய்ந்து படிக்கும்போது முதலாவது தேவ தூதர்களை சிருஷ்டித்தார் என்பதை அறிந்துகொள்ளலாம். எடுத்துக்காட்டாக இந்த

பூமியை அவர் சிருஷ்டிக்கும்போது தேவதூதர்கள் இருந்தார்கள் என்று யோபு 38:4–7 வரை பார்க்கிறோம். அதற்கடுத்தபடியாகதான் மனிதனை சிருஷ்டித்திருக்கிறார். இதற்கெல்லாம் பரிசுத்த வேதாகமம் சரியான விளக்கங்களை தருவதுண்டு ஆகிலும் அவைகளெல்லாம் இங்கு விளக்கமாக எழுத முற்படவில்லை.

இந்த உண்மையான தேவன் ஆரம்பத்தில் முடிவறிகிறவர் என்று ஏசா.46:10ல் பார்க்கமுடியும். உலகத் தோற்றம் முதல் தான் செய்யப்போகும் காரியங்கள் என்னவெல்லாம் என்று அவருக்குத் தெரியும். (அப்.15:18) ஆதலால் உலகில் ஏதாகிலும் ஒன்று சிருஷ்டிப்பதற்கு முன்னமே பிறகு என்ன சம்பவிக்கும் என்பதும் அவருக்குத் தெரியும்.

தூதர்களை சிருஷ்டிக்க வேண்டும் என்கிற முடிவு அவர் எடுத்த அதே நேரத்தில்தானே தூதர்களில் ஒரு கூட்டம் தேவனோடு எதிர்த்து தேவ சமுகத்தைவிட்டுத் தள்ளப்பட்டுப்போகும் என்பதும் அவருக்குத் தெரியும். ஆனால் இப்படியாக ஒரு கூட்டம் தூதர்கள் தனக்கெதிராய் செயல்படுமே என்று அவர்தாம் எடுத்த முடிவை மாற்றவில்லை. தாம் சிருஷ்டிக்கத் தீர்மானித்த தூதர்களை சிருஷ்டியாமலிருந்ததுமில்லை. ஆனால் இப்படியாக சிருஷ்டிக்கப்பட்ட தூதர்களுக்கு மீட்புமணி எதுவும் செய்யாததினால் முதன்முதலாக சிருஷ்டிக்கப்பட்டு பாவம் செய்த தூதர்களுக்கு மன்னிப்போ, மீட்போ கிடைக்கவில்லை. ஆதலால் அவர்கள் நித்திய அக்கினியில் தள்ளப்படுவார்கள் என்று மத்.25:41ல் பார்க்கலாம். ஆனால் முதலாவது தேவனோடு கூட இருந்து தேவனுக்கு ஆராதனை செலுத்தும்படி சிருஷ்டிக்கப் பட்ட தேவ தூதர்களில் ஒரு கூட்டம் இப்படி கர்த்தரைவிட்டு விலகுவதால் அடுத்தபடியாக சிருஷ்டிக்கப்படும் மனிதனுக்கு ஒரு மீட்பின் வழி உலக தோற்றத்திற்கு முன்னமே தேவன் ஆயத்தப்படுத்துகிறார். அதுதான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமான மீட்பு (அ) இரட்சிப்பு ஆகும்.

முதன் முதலாக தேவசமுகத்திலிருந்து தள்ளப்பட்ட தூதர்கள் தவிர மற்ற எல்லாவற்றிற்கும் மீட்பு உண்டு என்பதை ரோம.8:19–21 வரையிலான வசனங்களை படிக்கும்போது பார்க்கமுடியும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாக கிடைக்கும் இரட்சிப்பு திடீரென்று இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே தோன்றின ஒன்றல்ல என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.



**காரணங்கள்:**

1. 1 பேது.1:20ல் உலகத்தோற்றத்திற்கு முன்னமே இயேசுகிறிஸ்து முன் குறிக்கப்பட்டவர் என்று எழுதியுள்ளதை நாம் கவனிக்கவேண்டும்.

2. வெளி.13:8ல் இயேசு உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்டவர் என்றுள்ளது.

3. 1 கொரி.2:7,8ல் வசனங்களில் உலகத்தோற்றத்திற்கு முன்னமே நம்முடைய மகிமைக்காக இயேசுவை முன்குறித்தார் என்றுள்ளது.

4. எபே.1:4, 3:9ல் கிறிஸ்து இயேசுவில் கொண்டிருந்த அனாதி தீர்மானம் என்றுள்ளது.

5. 2 தீமோ.1:9,10 ஆதிகாலம் முதல் கிறிஸ்து இயேசுவில் நமக்கு அருளப்பட்டக் கிருபை என்றுள்ளது.

இத்தனை வசனங்களும் ஆனித்தரமாக சொல்லும் காரியம், உலகத்தோற்றத்திற்கு முன்னமே ஏதாகிலும் ஒன்று சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னமே தேவன் மனிதனுடைய மீட்புக்காக வழி ஆயத்தப்படுத்தினார் என்பதேயாகும். யோவா.1:29; 1 கொரி.5:7; வெளி.13:8. இந்த வசனங்களிலெல்லாம் சேர்த்துபடிக்கும்போது ஆண்டவர் இயேசு கிறிஸ்து உலகத்தோற்றத்திற்கு முன்னமே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என்பதை புரிந்துகொள்ளலாம்.

உலகத்தோற்றத்திற்கு முன்னமே தேவன் ஏற்படுத்திய பாவ பரிகாரத்திற்கான ஒரே வழி இயேசு கிறிஸ்து இதை விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு உலகம் உண்டான ஆரம்பத்திலே ஒரு இடம் ஆயத்தப்படுத்தியிருக்கிறார். நம்முடை கண்களுக்குத் தெரியும் இந்த உலகம் சிருஷ்டிப்பதற்கு முன்னமே மற்றும் பல சம்பவங்களும் நடந்துள்ளதை பரிசுத்த வேதாகமத்தில் காணமுடியும்.

அடுத்ததாக தேவனுக்கு எப்போது குமாரன் உண்டாயிற்று இயேசு எப்படி தேவகுமாரன் என்பதையும் பார்க்கலாம். சாத்தான் ஆக்கினைத்தீர்ப்புக்கு பாத்திரவானாவதற்கு காரணம் அவனுடைய இருமாப்புதான் என்று (1 தீமோ.3:6)ல் வாசிக்கலாம். ஏசா.14:9–15 வரையிலான வசனங்களில் பாபேல் அரசனைக்குறித்து சொல்லும் வசனங்களிலும் (எசே.28:1–19, வரையிலான வசனங்கள் தீரு அரசனைக்குறித்துச் சொல்லும் போதும் இந்த உலகத்தில் வாழ்ந்த ஒரு ராஜாவிற்குச் சொல்லக்கூடிய காரியங்களே

அல்லாமல் மற்றும்பல வார்த்தைகளைக் கொண்டு அவர்களுடைய பாவங்களை சொல்வதும், பாபேல் ராஜாவைப் பார்த்து அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே என்றும், நீ வானத்திலிருந்து விழுந்தாய் என்றும், மற்றும் பல வார்த்தைகள் சொல்வதை அந்த ராஜாவுக்கு பொருந்தவில்லை. ஆதலால் இருமாப்படைந்த அந்த ராஜாவுக்குள் கிரியை செய்த சாத்தானைத் தான் அந்த வார்த்தைகள் குறிக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

எசேக்கியேல் சொல்லும்போது நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப் என்று 14ஆம் வசனத்திலும், கீழே படிக்கும்போது திரும்பவும் காப்பாற்றுகிற கேரூபாயிருந்த உன்னை என்று பார்ப்பதினால் இந்த வார்த்தை தீரு ராஜாவைக் குறித்தல்ல என்பதை நாம் உணர்ந்து கொள்ளமுடியும். இப்போது நாம் பார்த்த மூன்று புஸ்தகங்களிலிருந்து தன்னுடைய பாவம் நிமித்தமாக தள்ளப்பட்ட தூதன் எப்படிப்பட்டவன் அவன் செய்த பாவம் என்ன, அவனுக்கு வரும் முடிவு என்ன என்பதை அறிந்து கொண்டோம். தூதர்களுடைய தலைவனாக இருந்த லூசிபரையும் அவனுக்குத் துணையாயிருந்த மற்ற தூதர்களையும் நித்திய அக்கினியில் பங்கடைவார்கள் என்று வேதம் தெளிவாக சொல்கிறதை நாம் வெளி.19:19,20,21, 20:7–10) வசனங்களில் காணலாம்.

அதுவரையில் இந்த பூமியிலும் வானமண்டலத்திலும், பரலோகத்திலும் சுற்றித்திரிய அவனுக்கு அனுமதியுண்டு. அது தேவனுடைய நீதி வெளிப் படுத்தும் காரியம். முதல் சிருஷ்டியாகிய தூதர்கள் பாவம் செய்ததால் அவர்களுக்கு மீட்பு இல்லை என்பதையும் அதற்கு பிறகு சிருஷ்டிக்கப்பட்ட எல்லாவற்றிற்கும் மீட்பு உண்டு என்பதையும் நாம் பார்த்தோம். பாவம் செய்த தூதர்களுக்கு மீட்பு இல்லை. ஆனால் மனிதனுடைய பாவத்திற்குப் பரிகாரம் வேண்டும். அது எப்படி சாத்தியமாகும். மனிதன் இதற்கு பெலனற்றவன் என்று ரோம.5:6 சொல்கிறது. ஆதலால் அன்புள்ள தேவன் அன்பாகவே இருக்கிறவர் மனிதனுடைய பாவத்திற்கு உலகத்தோற்றத்திற்கு முன்னமே பரிகாரம் உண்டாக்கினதுதான் நாம் இயேசுவில் பார்ப்பது.

## 2. பாவத்தைக் குறித்து வேதம் சொல்வது என்ன?

**i.** யார் பாவிகள்?

**a.** எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி (ரோம.3:23).

**b.** ஒரு பாவமும் செய்யாமல் நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை (பிர.7:20).



**c.** எல்லோரும் வழி விலகி ஏகமாய் கெட்டுப்போனார்கள். நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை (சங்.14:3, 53:3).

**d.** நமக்கு பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர் களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது (1 யோவா.1:8).

**e.** அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை (ரோம.3:10).

மேலே நாம் பார்த்த வசனங்கள் எல்லாம் எல்லோரும் பாவிகள் என்கின்ற உண்மையை உறுதியாகச் சொல்வதைப் பார்க்கலாம்.

**இரண்டாவது காரியம்:**

**i.** எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக தேவன் எல்லோரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப்போட்டார் (ரோம.11:32).

“அப்படியிராதபடியால், இயேசு கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய் பாவத்தின் கீழ் அடைத்துப்போட்டது” (கலா.3:22).

இங்கு தேவனே எல்லாரையும் பாவத்தின்கீழ் அடைத்தார் என்று பார்க்கிறோம். அதினால் எல்லோரும் பாவத்தின்கீழ்தான் என்பதைப்புரிந்து கொள்ளவேண்டும். தேவன் ஏன் அப்படி செய்தார் என்பதற்கு விளக்கம் பின்னாலே எழுதுகிறேன். ஆதலால் தேவனுக்கு முன்பாக எல்லோரும் பாவிகள்தான் என்பதை முதலாவது புரிந்துகொள்க. நான் எந்த குற்றமும் இல்லாதவன் என்று யாரும் தேவனுக்கு முன்பாக நிற்கமுடியாது.

ii. பாவம் செய்த மனிதனக்குத் தண்டனை என்ன, அல்லது பாவம் செய்த மனிதனுடைய முடிவு என்ன?

**a.** பாவத்தின் சம்பளம் மரணம் (ரோம.6:28).

**b.** பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் (எசே.18:4,20)

**c.** மனிதன் மேலிருந்த தேவ மகிமை நஷ்டமாயிற்று (ரோம.3:23).

**d.** மனிதன் மெய் தேவனைவிட்டு தூரமானான் (எபே.2:13; கொலே.1:21)

**e.** மனிதன் நித்திய காலமாய் இரண்டாம் மரணமாகிய அக்கியும் கந்தகமும் எரிகிற நரகத்தில் தள்ளப்படுவான் (வெளி.20:11–15).

**iii.** பாவத்திற்கு பரிகாரம் என்ன?

இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது (எபி.9:22). மனிதன் பாவம் செய்ததின் மூலமாக அவனுக்கு மரணம் உண்டாயிற்று. இதிலிருந்து அவனை விடுவிக்க இயேசு நமக்காக ரத்தம் சிந்தி மரித்தார் லேவி.17:11ல் பார்க்கும்போது இரத்தத்தில் ஜீவன் இருப்பதால் இரத்தம் பாவ பரிதகாரமாகும் என்றுள்ளது. ஆனால் பாவகறை படிந்த மனிதனுடைய ரத்தம் பரிகாரம் செய்யக்கூடியது அல்ல. ஆதலால் பரிசுத்தமுள்ள தேவன் மனிதனாக வந்து நம்முடைய பாவத்திற்குப் பரிகாரம் செய்தார் (எபி.2:14,15, 10:10) இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே அந்த சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். மற்றும் கீழுள்ள வசனங்களும் படித்து பாருங்கள் (1 யோவா.1:7; எபி.10:7–12, 19–20, எபே.1:3, 5:2; 1 பேது.1:18,19, 3:18, 2:24;) இன்னும் அநேக வசனங்கள் பார்க்கமுடியும். உலகத்தோற்றத்திற்கு முன்னமே நமக்காக முன்குறிக்கப்பட்ட இயேசுவில் விசுவாசித்த மனிதர்கள் முன்காலங்களில் மிருகபலி இட்டுவந்தார்கள். ஆனால் இனிமேல் அப்படிப்பட்ட பலிகள் தேவையில்லை. முன்காலங்களில் மனிதன் செலுத்திய பலிகள் இயேசு கிறிஸ்துவின் பலிக்கு நிழலாயிருந்தது.

மாற்.10:45; 2 கொரி.5:18,19; ரோம.3:25, 5:8–10,18,19

இப்படியாக எல்லோரும் பாவம் செய்தார்கள் என்றும் எல்லோரையும் மீட்கும்படி தேவன் எல்லோரையும் பாவத்தின்கீழ் அடைந்தார் என்பதையும் நாம் பார்த்தோம். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்பைதயும் புரிந்துகொண்டோம். ஆட்டு ரத்தமோ, மாட்டு இரத்தமோ அல்லது வேறு ஏதேனும் உயிரினங்களின் இரத்தமோ மனிதனுடைய பாவ பரிகாரத்திற்கு உதவாது. இந்த காரியங்கள் மனதில்கொண்டு நாம் தொடர்ந்து படிக்கவேண்டும்.

### 3. பாவ பரிகாரத்திற்காக தேவன் என்ன செய்தார்?

ஏக சத்திய தேவனாக எல்லாம் செய்யவல்லவராக இருந்த திரியேக தேவன் மனிதனுடைய பாவ பரிகாரத்திற்கு உலக தோற்றத்திற்கு முன்னமே வழி செய்கிறார் என்பதை நாம் வேதத்திலிருந்து புரிந்துகொள்ளலாம். நியாய பிரமாணம் செய்யக் கூடாததை தேவன் செய்யும்படிக்கு என்று ரோம.8:3ல் சொல்லியிருப்பதின் அர்த்தம் நாம் புரிந்துகொள்ளவேண்டும். மனிதனால் முடியாத காரியம் தேவன் செய்யும்படி முன் வருகிறார். ரோம.5:6ல் நாம் பெலனற்றவர்களாயிருந்தபோது குறித்தக் காலத்தில் கிறிஸ்து அக்கிரமக் காரருக்காக மரித்தார் என்று பார்க்கிறோம். மனிதனுக்கு இருந்த பலவீனம் என்ன? அவனுக்கு கைபெலம் இல்லையா, கால்பெலம் இல்லையா, அல்லது



ஆள்பலம் இல்லையா, பணபலம் இல்லையா, எதற்கு மனிதனுக்கு பெலம் இல்லை? தன்னுடைய பாவத்திற்கு பரிகாரம் செய்ய பெலம் இல்லை. பாவம் செய்த தூதன் லூசிபர் மூலம் மனிதன் வஞ்சிக்கப்படுவான் என்பதையும் அவனுடைய பாவத்திற்கு அவனாலே பரிகாரம் உண்டாக்க முடியாது என்பதையும் முன்கால நித்தியத்தில் உலகத்தோற்றத்திற்கு முன்னமே தேவனுக்குத் தெரியும். ஆதலால் மனிதனால் முடியாத அந்த காரியம் செய்து நிறைவேற்றி எல்லோரையும் மீட்பதற்காக இயேசு கிறிஸ்துவை முன் குறிக்கிறார். இந்த பொறுப்பு இயேசு ஏற்றுக்கொள்வதற்கு முன்னமே எந்த ஏற்றதாழ்வும் இல்லாமல் தேவனுக்கு சமமாக அவர் இருந்தார். இது பிலி.2:6ல் பார்க்கமுடியும். ஏக சத்திய தேவனில் ஒரு ஆள் தத்துவமாக இருந்த இயேசுவின் மகிமையை குறித்துதான் யோவா.17:5ல் ''உலகத்தோற்றத்திற்கு முன்னமே உம்மிடத்தில் உண்டாயிருந்த மகிமை'' என்று வாசிக்கிறோம்.

நம் மத்தியில் நடக்கக்கூடிய ஒரு சம்பவம் மூலம் இந்த காரியங்களை விளக்கும்படி முயற்சிக்கிறேன். இங்கு மூன்று நபர்கள் சேர்ந்து ஒரு தொழிற்சாலையை நடத்தி வருகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். திடீரென்று அதில் ஒரு வேலை அந்த தொழிலாளர்களுக்குத் தெரியவில்லை. அந்த வேலை சரியான நேரத்தில் செய்யாவிட்டால் அந்த தொழிற்சாலை மூடவேண்டிய சூழ்நிலை ஏற்படும். இந்த நேரத்தில் அந்த தொழிற்சாலையின் உரிமையாளர்கள் மூன்று பேருக்கும் அந்த வேலை தெரியும். இப்போது அந்த வேலையாட்களை வெளியேற்றிவிட்டு, வேறு ஆட்களை வேலையில் அமர்த்தலாம் என்று நினைத்தாலும் வேறு யாருக்கும் அந்த வேலை செய்யத் தெரியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த உரிமையாளர்களில் ஒருவர் நான் போய் அந்த வேலையைச் செய்து முடிக்கிறேன் என்று சொல்வாரே யானால், அங்கு என்ன நடக்கும் அந்த தொழிற்சாலைக்கு அவர் உரிமையாளராக இருந்தாலும் இப்போது அவர் ஒரு தொழிலாளியினுடைய வேஷத்தை எடுத்துக்கொள்ள வேண்டிவரும். இப்படி அவர் செய்வதினால் மற்றவர்களைப் பார்க்கிலும் அவர் சற்றாகிலும் கனத்தில் குறைவுள்ளவராவ தில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தன்னுடைய பதவி பெரிதாக நினைக்காமல் கீழ் இறங்கி வந்து உதவினதினால் எல்லோருக்கும் முன்பாக அவருடைய மதிப்பு அதிகரிக்கத்தான் செய்யும். ஆனால் இவர் உரிமையாளர் என்பதை அறியாத மற்ற வேலையாட்கள் அவரை தரக்குறைவாக நடத்தக்கூடும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யார் என்பதை புரிந்து கொண்ட பேதுரு இயேசுவிடம் சொல்லும் வார்த்தை மத்.16:21,22ல் பார்க்க முடிகிறது. ''அப்பொழுது பேதுரு அவரை தனியே அழைத்துக் கொண்டு

போய். ஆண்டவரே இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்கு சம்பவிப்பதில்லை யென்று கடிந்துகொள்ளத் தொடங்கினான்.'' இந்த சம்பவம் எப்போது நடந்தது என்று கேட்டால் இயேசு தன் சிலுவை மரணத்தைக் குறித்து சீடர்களிடத்தில் சொன்னபோது, அதே நேரத்தில் இயேசு யார் என்பதைப்புரிந்து கொள்ளாதவர்கள் இயேசுவை சிலுவையில் அறையும் என்று கூக்குரலிட்டார்கள் என்று நாம் வேதத்தில் பார்க்கமுடியும் (மாற்.15:13; லூக்.23:23;) 1 கொரி.2:8ல் வாசிக்கும்போது தெளிவாகச் சொல்லப்பட்டுள்ள காரியம், ''அறிந்திருந்தார்களேயானால் மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே'' இயேசு மெய்யான தேவன் என்பதை அறிந்திருந்தால் அவர்கள் சிலுவையில் அறைந்திருக்க மாட்டார்கள். அதினால்தான் தன்னை தேவன் என்று காட்டிக்கொள்ளாமல், மனித குமாரன் என்று தன்னை அறிமுகப்படுத்தினார். பிலி.2:6–8 ''அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளை யாடின பொருளாக எண்ணாமல் தம்மை தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு மரண பரியந்தம் அதாவது சிலுவையின் மரணப்பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்.'' இப்படியாக இயேசு, பாவம் நிமித்தமாக நித்திய நரகத்திற்குப்போக வேண்டிய மனிதருக்கு மீட்பு உண்டாக்கினதி னால் அவருடைய மதிப்பு கொஞ்சமும் குறையவில்லை.

இப்படியாக மனித குலத்தின் பாவமன்னிப்புக்காக ஒரே மெய்யான தேவன் இறங்கி வந்ததினால் பூமியிலே வந்தவரை தேவகுமாரன் என்று நாம் புரிந்துகொள்ளும்படியாக எழுதப்பட்டுள்ளது. மற்றபடி மனிதர்களிடையில் திருமணம் செய்தோ அல்லாமலோ குழந்தை பிறப்பதுபோல தேவனுக்குப் பிள்ளை பிறந்தது என்று அர்த்தம் இல்லை. மனுகுலத்தின் மீட்புக்காக திரியேக சத்தியதேவன் பூமியில் வரும்போது அதில் ஒரு ஆள் தத்துவம் மட்டும் பிரித்து வரவில்லை. பரலோகத்தில் தேவன் எப்படி இருக்கிறாரோ அவரேதான் பரத்தில் மாற்றமில்லாதவராக இருக்கும் அதே நேரத்தில் இன்னொருவராக பூமியில் வந்தார். இதினால் இரண்டு தேவர்கள் என்று அர்த்தம் இல்லை. பரலோகத்தில் அவர் சர்வ வல்லமையுள்ள தேவனாக மாற்றமில்லாதவராய் இருக்கும் அதே நோத்தில் அவராலே உலகில் எங்கு வேண்டுமானாலும் எந்த சாயலிலும் பிரதியட்சமாய் எந்த காரியமும் செய்யமுடியும். காரணம் அவர் சர்வவல்லமையுள்ள தேவன். அவராலே செய்யமுடியாத எந்த காரியமும் இல்லை. ஆனால் பூமியில் அவர் வெளிப்படும் போது, பிதா, குமாரன், பரிசுத்தஆவி ஆகிய மூன்று ஆள் தத்துவமும்



வெளிப்படவில்லை. ஒரே ஒரு ஆள் தத்துவம் மட்டும் வெளிப்படுத்துகிறார். இது குறித்து பின்னாலே விளக்கமாக எழுதுவேன்.

எப்போது தேவனுடைய மனதில் மனுகுலத்தின் மீட்புக்காக தேவன் தானே இறங்கி வரவேண்டும் என்று தீர்மானம் எடுத்தாரோ, அந்த நேரத்தில் அவர் சொன்ன வார்த்தைதான் ''நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜனிப்பித்தேன்'' (சங்.2:7). இப்படியாக திரியேக தேவன் பரத்தில் எந்த மாற்றமும் இல்லாதவராக வீற்றிருக்கும், உலகத்தோற்றத்திற்கு முன்புள்ள அந்த நேரத்தில் மெய்யான தேவன் மனுகுலத்தின் பாவ மன்னிப்புக்காக புறப்பட்டதினால் அவரை ஒரே பேரான குமாரன் என்று சொல்வதை யோவா.3:16ல் பார்க்கலாம். இங்கு சொல்லப்பட்ட அர்த்தத்தில் இயேசு தேவகுமாரனாக இருப்பதுபோல வேறு யாரும் தேவனுடைய புத்திரர் அல்லர் என்பதையும் அறியலாம். மற்றும் எந்த ஒரு சிருஷ்டிப்பும் தேவன் நடத்துவதற்கு முன்னமே மெய்யான தேவனே குமாரனாக புறப்பட்டபடியால் அவரை முதற்பேரானவர் என்று எபி.1:6ல் சொல்வதும், தேவதூதர்களைக் கூட உருவாக்கும் முன்னமே இந்த சம்பவம் நடந்ததினால் கொலோ.1:15ல் சர்வ சிருஷ்டிக்கும் முந்தினபேரும் என்று, வெளி.3:14ல் தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

தேவன் தன் உள்ளத்தில் எந்த ஒரு காரியம் தீர்மானம் செய்தாரோ அது அந்த நேரத்தில் அவருக்கு நிறைவேறினது போலத்தான், இப்படியாக மனுகுலத்தின் மீட்பு பணிக்காக தேவன் புறப்படும்போது அந்த நேரத்தில் பரலோகத்தில் வீற்றிருப்பவர் பிதா என்றும், அவரேதான் அதே மூவொருவராகிய தேவன்தான் மனிதனுக்காக பாவபரிகாரபலியாக தன்னை ஒப்புக்கொடுத்தவரை குமாரன் என்றும் சகல சத்தியத்திலும் மனிதனை வழிநடத்தப் புறப்பட்டவரை பரிசுத்தாவி என்றும் நம்முடைய புத்திக்கு புரிந்துகொள்ளவும், நாம் அழைக்கவும் அந்த பெயர்களை தேவன் வேதாகமத்தில் பயன்படுத்தியுள்ளார். மனிதருக்குள் இருக்கும் உறவு முறையில் மக்கள் இந்த காரியங்களை புரிந்துகொள்வதற்காக பிதா, குமாரன், பரிசுத்தாவி என்கிற பெயர்களில் தன்னை மனுகுலத்திற்கு வெளிப்படுத்தினார். ஆனால் இந்த மூன்று பேரும் பூரணமும், எந்த ஏற்றத் தாழ்வும் இல்லாதவர்களும் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். இதில் எந்த பெயர் சொல்லிதேவன் என்று அழைத்தாலும் மூன்று பேரையும் குறிக்கும். எந்த பெயர் சொல்லி ஆராதனை செய்தாலும் மூன்று பேரையும் குறிக்கும். யாரும் தனித்தனியல்ல என்பதை அறியலாம். இந்த காரியத்தை பின்வரும் படங்கள்மூலம் விளக்குகிறேன். இனியாராவது பரிசுத்தாவியின் நாமத்தில்

ஞானஸ்நானம் கொடுத்தாலும் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தாலும் இந்த திரியேக தேவனைத்தான் குறிக்கும். ஆதலால் இயேசுவின் பெயர் மட்டும் சொல்லி ஞானஸ்நானம் கொடுத்தாலும், பிதாவின் பெயர் சொல்லியோ ஞானஸ்நானம் கொடுத்தாலும் திரியேக தேவனைத்தான் குறிக்கும். ஆகிலும் புதிதாக இரட்சிக்கப்படுகிறவர் களுக்கு, பிதா, குமாரன், பரிசுத்தாவி என்கிற நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்று வேதம் வலியுறுத்த காரணம், தேவன் மூவொருவராக இருக்கிறார் என்கிற சத்தியத்தை எல்லோரும் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகத்தான். எனவே பிதா, குமாரன், பரிசுத்தாவி என்கிற நாமத்தில் ஞானஸ்நானம் கொடுங்கள் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தெளிவாக கட்டளையிட்டிருப்பதால் பிதா, குமாரன், பரிசுத்தாவி என்னும் நாமத்தில் மட்டும் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும். மனுகுலத்தின் மீட்புபணிக்காக குமாரனாகிய தேவன் பூமியில் வரும்போது மூவொருவராகிய தேவனில் ஒரு ஆள் தத்துவம் மட்டும் வரவில்லை. மூன்று ஆள் தத்துவமுடைய தேவன் நித்தியத்தில் எப்படி இருந்தாரோ அவ்வண்ணமாகவே அவர் பூமியில் வந்தார். பூமியில் வரும்போது மனுகுலத்தின் பாவபரிகாரத்துக்காக மனிதனாக வந்தார். ஆனால் ஒரு காலமும் மூன்று ஆள் தத்துவமும் தனித்தனியாக பிரிவதில்லை என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும் எபி.1:6ல் குமாரனை பூமிக்கு பிரவேசிக்க பண்ணும்போது என்றும் யோவா.14:26ல் பிதா அனுப்பப்போகிற பரிசுத்தாவி என்றும் பார்க்கிறோம். இந்த வசனங்களும் மற்றும் பல வசனங்களும் படிக்கும்போது மூன்று ஆள் தத்துவமுடைய தேவன் மூன்று நபர்களாக தனித்தனியே செயல்படுவதுபோல நமக்குத் தோன்றும். ஆனால் மூன்று ஆள் தத்துவமும் தனித்தனியே அல்ல என்பதைப் பின்வரும் பகுதியில் ஆதாரத்துடன் விளக்குகிறேன்.


திரியேக தேவன் எப்படி ஒன்றாக இருக்கிறார் என்பதை முன்பே வரைபடம் மூலம் காட்டினேன். ஆனால் அது அப்படிதானா, உங்களுக்கு எப்படித் தெரியும் என்று கேட்கக்கூடும். நம்முடைய புத்திக்கு நாம் புரிந்துகொள்ளும்படியாக இந்த வரைபடம் மூலம் விளக்குகிறேன் என்பதேயல்லாமல் ஆண்டவர் எப்படி இருக்கிறார் என்று என்னை அழைத்துக்கொண்டுபோய் காண்பிக்கவில்லை.

பொதுவாக வேதபண்டிதர்கள் தேவஇயல் கற்றுக்கொடுக்கும்போது மூவொருவராகிய தேவனை திரிகோணம் மூலம் எடுத்துக்காட்டுவதுண்டு.



பிதா குமாரன் பரிசுத்தஆவி முக்கோணப்படம்

**வரைபடம் – 2**




ஆனால் இந்த வரைபடம் மூவொருவராகிய தேவனைக் குறிப்பதற்கு போதுமானதல்ல. இதில் மூன்று கோடுகள் தனித்தனியே பூர்ணமானதல்ல. இதில் பரிசுத்த வேதாகமம் கூறும்மூன்று ஆள் தத்துவங்களும் தங்களில் தங்கள் பூர்ணமானதால் வரைபடம் ஒன்றில் மூன்று வட்டங்கள் எப்படி ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டிருக்கிறது என்பதை பார்த்தோம். மனுகுலத்தின் மீட்புக்காக, குமாரனையும், பரிசுத்தாவியையும் பூமிக்கு அனுப்பும்போது மூன்று ஆள் தத்துவமும் தனித்தனியே பிரிந்ததில்லை என்று நான் முன்பே சொன்னது நினைவிலிருக்கும். அதற்கான விளக்கங்கள் தொடர்ந்து பார்ப்போம்.

**வரைபடம் – 3**




**இந்த வரைப்படத்தில் உள்ளதுபோல் மூன்று பேரும் தனித்தனியாக ஒருகாலமும் பிரிந்ததில்லை.**

குமாரனாகிய தேவன் என்று அழைக்கப்படும் மெய்தேவன் பூமியில் இருக்கும்போது பிதாவும், பரிசுத்தாவியும் அவருக்குள் இருந்திருக்கிறார்.

அதற்கு ஆதாரமாக வேத வசனங்களை பின்னாலேத் தருகிறேன். வரைபடம் மூன்றில் உள்ளதுபோல ஒருபோதும் மூவொருவராகிய தேவன் தனித் தனியே மூன்று ஆள் தத்துவங்கள் பிரிந்து செயல்படுவதுபோல செய்ல பட்டதில்லை என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். ஆனால் பொதுவாக இந்நாள் வரைக்கும் கிறிஸ்தவ உலகம் அப்படித்தான் புரிந்துகொண்டு மக்களுக்கும் கற்றுக்கொடுத்து வருகிறார்கள். ஆதலால் பிதாவும், குமாரனும், பரிசுத்தாவியும் மெய்தெய்வம்தான் என்று சொல்லும்போது மூன்று கடவுள் இருக்கின்றது போன்ற தோற்றம் அளிக்கிறது. ஆனால் மூன்று தெய்வம் கிடையாது. ஒரே ஒரு தெய்வம் மட்டும்தான் உண்டு.


இயேசு கிறிஸ்து 100% தேவனாகவும் 100% மனிதனாகவும் இருந்தார் ஏன் அப்படி இருக்கவேண்டும். இயேசு அப்படி இருந்தாரா? எபி.10:5ல் பிதாவாகிய தேவன் இயேசுவுக்கு ஒரு சரீரத்தை ஆயத்தம் பண்ணினார் என்றும் அந்த சரீரத்தை பரிசுத்தாவியானவர் கன்னிகையாகயிருந்த மரியாளின் வயிற்றில் வைத்தார் என்பது லூக்.1:35லும் பார்க்கலாம்.

1 தீமோ.3:16. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார். அவர் தேவனாக இருக்கும்போதே மனுகுலத்தின் மீட்புக்காக மனிதனாகவும் வெளிப்பட்டார் எபி.2:14ஆம் வசனம், ''ஆதலால் பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும உடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்.'' அதே நேரத்தில் இயேசு பிதாவாகிய தேவனின் தன்மையின் சுரூபம் என்று எபி.1:3ல் பார்க்கலாம். தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்து என்று 2 கொரி.4:4லும் அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம் என்று கொலோ.1:15லும் பார்க்கமுடியும்.

வரைபடம் மூன்றில் பார்ப்பதுபோல அவர் புறப்பட்டு வரவில்லை என்று சொன்னேன். அப்படியானால் அவர் எப்படி புறப்பட்டு வந்தார் என்பதை விளக்க வேண்டுமல்லவா. அதற்காக சில வரைபடங்களை கீழே வரைந்து அதன் மூலமாக இந்த காரியங்களை விளக்குகிறேன். வரைபடம் ஒன்றில் நாம் பார்த்து நினைவில் இருக்கும். ஆகிலும் அந்த படத்தை மறுபடியும் இங்கு வரைகிறேன்.



**வரைபடம் – 4**





வரைபடம் நாலில் நித்தியத்தில் தேவன் எப்படி இருந்தார் என்பதை பார்க்கலாம். இப்போதும் எந்த மாற்றமும் இல்லாமல் அவர் அப்படியேதான் இருக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். காரணம் அவர் மாற்றமில்லாதவர் மல்கி.3:6 மற்றும் யாக்.1:17.

இவர் இப்படி பரலோகத்தில் இருக்கும்போதே பூமியில் அவர் மனிதனாக வந்து மனுகுலத்தின் பாவங்களுக்கு பரிகாரம் செய்தார். இது எப்படி சாத்தியமாகும் என்று கேட்கலாம். தேவனாலே எல்லாம் கூடும் (லூக்.2:37; ஆதி.18:14; எரே.32:27; மத்.19:26).

மனிதராகிய நாம் ஓரிடத்தில் இருந்துகொண்டே வேறொரு இடத்தில் போய் ஒரு காரியத்தை செய்து வரமுடியாது. நாம் வேறொரு இடத்திற்குப்போக வேண்டுமானால் இரண்டு இடத்திலும் ஒரே நேரத்தில் நம்மால் இருக்கமுடியாது. ஆனால் தேவனானவர் மனிதனுக்கு இருக்கின்ற இந்த பலவீனம் உள்ளவர் அல்ல. ஆதலால் அவர் பரலோகத்தில் இருக்கும்போதே மனுகுலத்திற்காக மனிதனாக பூமியில் வந்து மீட்பை உண்டாக்கினார்.


**வரைபடம் – 5**




வரைபடம் ஐந்தில் பார்க்கும்போது மூன்று ஆள் தத்துவம் இருந்தாலும் அதில் ஒரு ஆள் தத்துவம் மட்டும் வெளிப்படுவதைக் காட்டுவதற்காக இரண்டு ஆள் தத்துவங்கள் நிழல் போட்டிருப்பதைக் காணலாம். இது எதைக்குறிக்கிறது என்று கேட்டால் குமாரன் பூமியில் வரும்போது மூன்று ஆள் தத்துவமுடைய தேவனாக வந்தாலும் இரண்டு ஆள் தத்துவங்கள் பிரத்தியட்சமாக வெளிப்படவில்லை. பூமிக்கு வந்தவரே குமாரன் என்று நாம் முன்பே பார்த்தோம். **பூமிக்கு வந்தவரில் முன்னமே வார்த்தையாக இருந்த ஆள் தத்துவம் வெளியரங்கமாயிற்று என்பதினால் பூமிக்கு வந்த திரியேக தேவனை குமாரன் என்றழைக்கும் அதே நேரத்தில் முன்னமே வார்த்தையாக இருந்த ஆள் தத்துவமும் குமாரன் என்று அழைக்கப்படுகிறார் என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும்.**



**வரைபடம் – 6**




இங்கு வரைபடம் ஆறில் மூன்று ஆள் தத்துவம் இருந்தாலும் பரிசுத்தாவி மட்டும் வெளிப்படுவதை காண்பிக்கும்படியாக இரண்டு ஆள்தத்துவங்கள் நிழல் போட்ட வண்ணம் மறைக்கப்பட்டுள்ளது. மனிதனை சகல சத்தியத்திலும் வழிநடத்துவதும் பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு ஆகியவைகளை உணர்த்துவதும், மறுபடியும் பிறக்கவைப்பதும் பரிசுத்தாவியானவர் (யோவா.16:13, 16:8, 3:5,6). திரியேக தேவன் குமாரனாக வெளிப்பட்ட அதே நேரத்தில் பரிசுத்தாவி என்கிற பேரிலும் வெளிப்பட்டார். ஆதலால் மூன்று ஆள் தத்துவங்களில் ஒருவரை பரிசுத்தாவி என்றும் அழைக்கப்படுவதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

இவ்விதமாக பிதா, குமாரன், பரிசுத்தாவி என்கிற பெயர்கள் எப்படி வந்தது என்பதை நாம் புரிந்துகொண்டோம். மனுகுலத்தின் பாவத்திற்காக பூமியில் வந்த மெய் தெய்வம் தன்னை தேவன் என்று காட்டிக்கொள்ளாமல் மனிதனாக வெளிப்படுத்தினார். ஆனால் தன்னுடைய தெய்வீகத்தன்மை எல்லோரும் புரிந்துகொள்ளும்படியாக அவருடைய செயல்கள் அநேகம் இருந்தது உண்டு. மனித குலத்திற்காக தன்னைத்தானே பலியாக ஒப்புக்கொடுக்கும்படி அவர் வந்ததினால் அதிக நேரங்களிலும் ஒரு சாதாரண மனிதனுக்குரிய, பசியும், தாகமும், சோர்வும், உள்ளவராக காணப்பட்டார். காரணம் மனிதனுடைய பாடுகளும் துக்கங்களும், வேதனைகளும், எல்லா பாவங்களும், அக்கிரமங்களும் அவர் சுமந்து தீர்க்க வேண்டியதாக இருந்தது.

“மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார்,.....நம்முடைய மீறுதலின் நிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு அநேகருடைய பாவத்தை தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதின் நிமித்தம்....” (ஏசா.53:4,5,12).

“நாம் பாவங்களுக்கு செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு அவர்தாமே தமது சரீரத்தில் நம்முடைய பாவங்களை சிலுவையில் சுமந்தார்” (1 பேது.2:24).

“நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்” (2 கொரி.5:21).

“குற்றமில்லாத ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்களென்று அறிந்திருக்கிறீர்களே. அவர் உலகத் தோற்றத்திற்குமுன்னே குறிக்கப்பட்டவராயிருந்து தமது மூலமாய் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்த கடைசி காலங்களில் வெளிப்பட்டார்” (1 பேது.1:19,20).

இந்த இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து முதல் உயிர்த்தெழுந்தவராக பரலோகத்தில் இப்பொழுதும் மனித குலத்திற்காக பரிந்துபேசிக் கொண்டிருக்கிறார். இப்பொழுது நாம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். காலம் இல்லாத நித்திய வாழ்வு இனிவரும் . அப்பொழுது இயேசு மனித சரீரத்தில் வந்ததுபோல் இல்லாமல் மனிதனுடைய இரட்சிப்பிற்காக வருவதற்கு முன்னமே இருந்தபடியாக இருப்பார் என்று விசுவாசிப்பதற்கு சில வசனங்களை ஆதாரமாக இருப்பதைக் காண்பிக்கிறேன் (யோவா.17:5; எபி.1:3,4; 10:12; எபே.1:21; கொலோ.2:10)–இந்த வசனங்களில் எல்லாம் பிதாவின் வலது பாரிசத்தில் குமாரன் இருக்கிறார் என்றும் (வெளி.22:1)ல் வாசிக்கும்போது ஒரே சிம்மாசனத்தில் இருக்கிறார் என்றும் பார்க்கிறோம்.

**3. பிதா, குமாரன், பரிசுத்தஆவி மூன்று ஆள் தத்துவமும் தனித்தனியாக பிரிவதில்லை என்பதற்கான ஆதாரங்கள்:**

1. சிருஷ்டிப்பில் மூன்று ஆள் தத்துவமுடைய ஒரே தேவனாக இருந்தார்.



| பிதா | குமாரன் | பரிசுத்தஆவி |
|---|---|---|
| ஆதி.1:1–31 | யோவா.1:1–3 | யோபு 33:6 |
| 1 கொரி.8:6 | கொலோ.1:16 | ஆதி.1:2 |
| | 1 கொரி.8:6 | யோபு 26:11 |
| | யோவா.1:10 | சங்.33:6 |
| | எபி.1:2 | சங்.104:30 |
| | வெளி.4:11 | |

சிருஷ்டிப்பைக் குறித்துச் சொல்லும்போது இங்கு மூன்று பேரும் சிருஷ்த்தார் என்று பார்க்கிறோம். மனிதனை சிருஷ்டித்தார் என்று சொல்லும்போது தலை பிதாவும், உடல் குமாரனும், கால் பரிசுத்தஆவியும் சிருஷ்டித்தார் என்று அர்த்தமல்ல. திரியேக தேவன் மூவொருவராக இருப்பவர்தான் எல்லாம் சிருஷ்டித்தார் அவர் மூவொருராக இருப்பதால் இதில் யாராவது ஒருவருடைய பேர் சொல்லி அவர்தான் சிருஷ்டிப்பு நடத்தியவர் என்று சொல்வதில் தப்பில்லை. சிலர் சொல்வதுபோல் பிதாவின் யோசனையை குமாரன் கட்டளையிட்டார் பரிசுத்தாவி நிறைவேற்றினார் என்று அல்ல. அப்படி சொல்வோமானால் இந்த மூவரும் ஏற்றத்தாழ்வு உள்ளவர்களாவார்கள். ஆனால் அந்த கருத்து வேதாகமத்திலுள்ள அடிப்படை சத்தியத்திற்கு புறம்பானதாகும். மூன்று ஆள்தத்துவம் உள்ள ஏக சத்தியதேவன் சிருஷ்டிப்பு நடத்தினதினால்தான் பிதா சிருஷ்டித்தார் என்றும், குமாரன் சிருஷ்டித்தார் என்றும் பரிசுத்தாவி சிருஷ்டித்தார் என்றும் சொல்லப்பட்டுள்ளது. ஆனாலும் ஒரே மெய்தேவன்தான் உண்டு என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

**2. மனிதனுடைய இரட்சிப்பில்**

| பிதா | குமாரன் | பரிசுத்தஆவி |
|---|---|---|
| 1 தீமோ.1:1 | மத்.1:21 | தீத்து 3:5 |
| லூக்.1:47 | 1 தீமோ.1:15 | லூக்.1:35 |
| தீத்து 2:9, 3:4, 1:4 | 1 யோவா.4:14 | |
| யூதா 25 | லூக்.2:11 | |
| 1 தீமோ.2:3 | யோவா.3:17, 4:12 | |
| 2 தீமோ.1:9 | தீத்து 2:3 | |
| 1 தீமோ.4:10 | | |

இந்த மூன்று பேரும் இரட்சித்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆப்ரிக்கா கண்டத்தில் உள்ளவர்களை பிதா இரட்சித்தார் என்றும் ஐரோப்பிய கண்டத்தில் உள்ளவர்களை குமாரன் இரட்சித்தார் என்றும் மற்ற கண்டங்களில் உள்ளவர்களை பரிசுத்தஆவியானவர் இரட்சித்தார் என்றும் அர்த்தமல்ல. மூவொருவராகிய தேவன் அவர் ஒருவரே இதை செய்தார் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். சிலர் சொல்வதுபோல பிதா திட்டம் போட்டார். குமாரன் அதை நிறைவேற்றினார். பரிசுத்தாவி அதற்குத் துணையாக இருந்தார் என்பது சரியல்ல. திரியேக தேவன் அதைச் செய்தார். ஆதலால் இதில் யாருடைய பெயரையும் சொல்லி அவர்தான் இரட்சித்தார் என்று சொல்வதில் தப்பில்லை.

**3. இயேசுவினுடைய உயிர்த்தெழுதலில்:**

| **பிதா** | **குமாரன்** | **பரிசுத்தாவி** |
|---|---|---|
| அப்.2:24,32 | யோவா.10:17, 6:39,44,54 | |
| ரோம.4:24, 6:4 | ரோம.1:5 | ரோம.8:11 |
| 2 கொரி.4:14 | 1 கொரி.15:45 | 2 கொரி.3:6 |
| கலா.1:1 | ரோம.8:34,14:9; | 1 கொரி.15:45 |
| 1 தெச.1:10 | | யோவா.6:63 |
| எபி.13:20 | | |
| 1 பேது.1:21 | | |
| **மனிதர்களை உயிர்த்தெழ செய்வதில்** | | |
| யோவா.5:21 | யோவா.5:21, 6:40 | யோவா.6:63 |

அடிப்படையில் மூன்று ஆள் தத்துவமுடைய திரியேக தேவன்தான் இந்த வசனங்களில் உயிர்ப்பிக்கிறார் என்பதை பார்க்கமுடியும். ஒருவர் சரீரத்தை சரி செய்தார் என்றும் ஒருவர் ஜீவனைக் கொடுத்தார் என்றும் அர்த்தமல்ல. திரியேக தேவனே இதைச் செய்கிறார் என்பதை அறிந்துகொள்ளமுடியும்.



**4. விசுவாசிகளுக்குள் வாசம் பண்ணுகிறார் என்பதைக் குறித்து:**

| **பிதா** | **குமாரன்** | **பரிசுத்தாவி** |
|---|---|---|
| 2 கொரி.6:16 | எபே.3:17 | 1 கொரி.6:19 |
| 1 கொரி.3:16 | கொலோ.1:27 | யோவா.14:16 |
| எபே.2:22, 4:6 | | |

இந்த வசனங்களில் எல்லாம் மூன்று பேரும் விசுவாசிகளுக்குள் வசிக்கிறார் என்று பார்க்கலாம். மூன்று பேரும் மூன்று மூலையில் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று அர்த்தமல்ல. திரியேக தேவன் உண்மையான விசுவாசிக்குள் வாசம் பண்ணுகிறார். ஆதலால் இதில் யாருடைய பெயர் குறிப்பிட்டு அவர் வாசம் பண்ணுகிறார் என்று கூறினாலும் தவறில்லை.

திரியேக தேவன் என்று சொல்வதின் விளக்கம் முன்பே பார்த்தோம். இந்த மூன்று நபரும் ஒருவரில் வசிக்கிறார் என்று சொல்லும்போது ஒருவர் வந்து போனபிறகு இன்னொருவர் வருகிறார் தங்குகிறார் என்றா? அப்படியல்ல ஒரு காலமும் திரியேக தேவன் தனித்தனியாக பிரிவதில்லை என்பதற்கு ஆதாரமாக இந்த வசனங்களை ஆராய்ந்து வருகிறோம்.

**5. நியாயத்தீர்ப்பில்:**

| **பிதா** | **குமாரன்** | **பரிசுத்தாவி** |
|---|---|---|
| பிர.12:14, 3:17 | யோவா.5:22,27 | ஏசா.4:3 |
| ரோம.2:16<br>சங்.50:6, 98:9 | 2 கொரி.5:10<br>அப்.10:42, 17:31<br>ரோம.2:16;<br>2 தீமோ.4:1 | யோவா.16:8ல் உள்ள எலன் ஹெயின் என்கிற கிரேக்க வார்த்தையானது குற்றப் படுத்துபவர் அல்லது குற்றம் விதிப்பவர் என்று அர்த்தம் கொண்டதாகும்.<br><br>ஏசா.28:5,6 வசனங்களை வாசிக்கும் போது கர்த்தர் நியாயம் விசாரிக்கிற ஆவி என்று வாசிக்கிறதினால் பரிசுத்தஆவி நியாயத்தீர்ப்பு அளிக்கிறார் என்பதை அறியலாம். |

மூன்றுபேரும் நியாயத்தீர்ப்பளிப்பதாக சொல்லப்பட்டுள்ளதால் ஒருவர் மாவட்ட நீதிமன்றத்திலும் ஒருவர் உயர்நீதி மன்றத்திலும், ஒருவர் உச்சநீதி மன்றத்திலும் நியாயத்தீர்ப்பளிக்கிறார் என்று அர்த்தம் கிடையாது. திரியேக தேவன் நியாயத்தீர்ப்பளிப்பதினால்தான் மூன்று பேரும் நியாயத்தீர்ப்பளிப்பதாக சொல்லப்பட்டுள்ளது.

**6. மனிதனை பலப்படுத்துவதில்:**

| பிதா | குமாரன் | பரிசுத்தாவி |
|---|---|---|
| சங்.68:35 | பிலி.4:13 | அப்.1:8<br>மீகா 3:8 |

ஒருவர் கைக்கும், ஒருவர் கால்களுக்கும் ஒருவர் மற்ற உறுப்புகளுக்கும் பெலன் கொடுக்கிறார் என்றில்லை. திரியேக தேவனே மனிதனை பெலப் படுத்துகிறார். ஆனால் எழுதும்போது மூன்று பெயர்களில் ஒன்று மட்டும் பயன்படுத்துகிறது.

**7. மனிதனுக்கு இளைப்பாறுதல் தருவதில்:**

| பிதா | குமாரன் | பரிசுத்தாவி |
|---|---|---|
| எபி.4:5 | மத்.11:28 | ஏசா.63:14 |

தேவன் மனிதனுக்கு இளைப்பாறுதல் அளிக்கிறார் என்று சொல்லும் போது இளைப்பாறும்படியாக மூன்றுபேரும் மூன்று இடங்களை ஆயத்தப் படுத்தி வைத்திருக்கிறார்களா? இல்லை. இதுவரைக்கும் நாம் பார்த்த வசனங்கள் எல்லாம் தெளிவாக சொல்லும் காரியம் மூன்றுபேரும் தனித் தனியாக ஒன்றும் செய்வதில்லை திரியேக தேவன்தான் எல்லாம் செய்கிறார். தேவன் திரியேக தேவனாகவே ஒரே சமயத்தில் எத்தனை கோடி மக்களாக இருந்தாலும் அவர்களுக்குள்ளே வாசம்பண்ண அவரால் முடியும். அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்பதை நாம் அறிந்துகொள்ளமுடியும். இன்னும் பல காரியங்களும் மூன்று பேரும் செய்ததாக வேதத்தில் பார்க்கமுடியும். நமக்குப் புரிந்து கொள்வதற்குத் தேவையான காரியங்கள் சுருக்கமாக எழுத வேண்டியுள்ளதால் இந்த காரியம் இங்கு முடிக்கிறேன்.

எல்லாம் செய்ய வல்லவராகிய தேவன், தான் செய்த எல்லா காரியத்திலும் பிதா, குமாரன், பரிசுத்தஆவி செய்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. ஏழு காரியங்கள் எடுத்துக்காட்டாக குறிப்பிட்டுள்ளேன். முதலாவது சொன்ன காரியம் சிருஷ்டிப்பு சிருஷ்டிப்பில் பிதா சிருஷ்டித்தார் என்றும் குமாரன்



சிருஷ்டித்தார் என்றும் பரிசுத்தஆவி சிருஷ்டித்தார் என்றும் பார்க்கிறோம். இந்த மூன்று ஆள் தத்துவமும் பரிபூரண தெய்வம்தான் என்பதையும், இதில் குமாரன் என்றழைக்கக்கூடிய இரண்டாம் ஆள் மட்டும் 100% தேவனாகவும் 100% மனிதனாகவும் உள்ளார் என்பதையும் பார்த்தோம். இறைவனுக்கு ஏன் மகன் என்பதற்கும் காரணங்களை பார்த்தோம். குமாரன் மனிதனல்லாமல் 100% தெய்வமாக மட்டும் இருந்த முன்கால நித்தியத்தைக்குறித்து பார்த்தோம். இந்த காரியங்கள் எல்லாம் மனதில் வைத்துக்கொண்டு இனிவரும் காரியங்களை படிக்கவேண்டும்.

பிதா சிருஷ்டித்தார் என்று 1 கொரி.8:6ல் பார்க்கலாம். ஆனால் அதே வசனத்தில் குமாரனாகிய கர்த்தர் சிருஷ்டித்தார் என்றும் பார்க்கலாம் சங்.33:6, 104:30 ஆகிய வசனங்களில் பரிசுத்தாவி சிருஷ்டித்தார் என்று பார்க்கலாம். இவைகள் எல்லாம் படிக்கும்போது ஏதோ முரண்பாடுகள் உள்ளதாக தோன்றும். ஆனால் முன்பே சொன்னதுபோலவே பிதா, குமாரன், பரிசுத்தாவி ஒருபோதும் தனித்தனியாக பிரிவதில்லை என்பதைப் புரிந்து கொண்டால், திரியேக தேவன் இந்த காரியங்கள் செய்தார் என்று எந்த சந்தேகத்திற்கும் இடமின்றி அறிந்துகொள்ளலாம். காரணம் பிதா என்று சொன்னாலும் குமாரன் என்று சொன்னாலும் பரிசுத்தாவி என்று சொன்னாலும் ஒருபோதும் ஒருவரை மட்டும் குறிப்பதில்லை, திரியேக தெய்வத்தைதான் குறிக்கும். காரணம் ஒருபோதும் இந்த மூன்றுபேரும் தனித்தனியே செயல்படுவதில்லை. தனித்தனியே செயல்படுவதாக பல இடங்களில் சொல்லப்பட்டாலும், ஒருவர் வெளிப்படும்போது மற்ற இரண்டுபேரும் வெளிப்படுகிறவரில் மறைந்திருப்பதை பார்க்கமுடியும். இதற்கான ஆதாரங்கள் நாம் முன்பே பார்த்தது உங்களுக்கு நினைவிருக்கும். இயேசு சொல்வதை கவனியுங்கள்.

“என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார். பிதாவுக்கு பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியினால் அவர் என்னை தனியேயிருக்கவிடவில்லை” (யோவா.8:16,29). நானும் பிதாவும் ஒன்றா யிருக்கிறோம் என்றார். (யோவா.10:30,38). “நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா” (யோவா.14:10,11, 16:32, 10:30). “நான் தேவனுடைய ஆவியினால் பிசாசுகளை துரத்துகிற படியினால் தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே” (யோவா.12:28). இங்கு பரிசுத்தாவி இயேசுவினிடத்தில் இருந்தார் என்பதை அறியலாம்.

இவ்விதமான அநேக வசனங்களை மென்மேலும் எடுத்துக்காட்டமுடியும். இதுவரைக்கும் நாம் பார்த்த வசனங்களின் அடிப்படையில் திரியேக தேவன் தான் எல்லாம் செய்தார் என்பதையும், இப்போதும் செய்துகொண்டிருப்பது அவர்தான் என்பதையும் இனிமேல் செய்யப்போகிறார் என்பதையும் நாம் அறிந்தோம்.

இயேசு கிறிஸ்து இப்போதும் பாவிகளாகிய மனிதர்களுக்காக பரத்திலிருந்து பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். எப்படியெனில், மரித்தோரி லிருந்து மகிமையின் சரீரத்தோடுகூட உயிர்த்தெழுந்த முதல் மனிதனாக மனுகுலத்திற்காக பரிந்துபேசுகிறார். அவர் பூமியில் இருந்தபோது மாமிச சரீரத்தில் 100% மனிதனாகவும் 100% தெய்வமாகவும் இருந்தார். இப்பொழுது பரலோகத்தில் மகிமையின் சரீரம் பெற்றுக்கொண்ட மனிதனாகவும் 100% தெய்வமாகவும் தன்னுடைய பணியை செய்துவருகிறார். அவர் பாவமில்லாத மனிதனாகவும், பாவத்திற்கு பரிகாரம் உண்டாக்கின மனிதனாகவும், பாவ மன்னிப்பு பெற்றுக் கொண்ட எந்த மனிதனுக்கும், உயிர்த்தெழுதல் உண்டு என்பதற்கும், பரலோகத்தில் இடம் உண்டு என்பதற்கு ஆதாரமாகவும், நமக்கு முன்னமே பரலோகத்தில் பிரவேசித்திருக்கிறார். "நமக்கு முன்னோடியான வராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்த திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்" (எபி.6:20). பாவியான மனிதன் தன் சுய முயற்சியினால் பாவத்திற்கு பரிகாரம் செய்ய அவனாலே முடியாது என்பதையும், மனிதன் தோற்றுப்போன இடத்தில் அவனுக்காக மெய்யான தேவன் இறங்கி வந்து பாவபரிகாரம் உண்டாக்கினார் என்பதையும் விசுவாசித்து அறிக்கையிட்டு அவர் வழிகளில் நடக்கிறவர் களுக்கு நித்திய ஜீவனுண்டு என்பதை மனிதன் அறிந்துகொள்வதற்கான அறிவும், அதைக் கடைப்பிடித்து வாழ்வதற்கான பெலனும். கர்த்தர் மனிதர்களுக்கு கொடுத்திருக்கிறார். ஆனால் மனிதனுக்கு இப்பொழுதுள்ள பிரச்சனை என்னவென்றால் எதுவரைக்கும் அறிந்துகொள்ள தேவன் அனுமதி கொடுத்திருக்கிறாரோ அதுவரை அறிந்து புரிந்து செயல்பட அவனுக்கு மனம் இல்லை. என்னென்ன காரியங்கள் மறைக்கப்பட்டுள்ளதோ அதையெல்லாம் அறிந்து கொண்டால்தான் விசுவாசிப்பேன் என்கிறான். மனிதன் மென்மேலும் எவ்வளவுதான் வளர்ந்தாலும், விஞ்ஞானம் எவ்வளவு தான் வளர்ந்தாலும், தெய்வத்தைக் குறித்து இயேசுகிறிஸ்து வெளிப் படுத்தினதிலும் அதிகமாக ஒன்றும் மனிதனால் புரிந்துகொள்ள முடியாது.



காரணம், "தேவனை ஒருவனும் ஒருகாலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலி ருக்கிற ஒரேபேரான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" (யோவா.1:18).

அல்லாமலும் "நியாயப் பிரமாணத்தினாலே செய்யமுடியாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும் பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி மாம்சத்திலே பாவத்தை அக்கினிக்குள்ளாகத் தீர்த்தார்." இங்கு பாவ மாமிசத்தின் சாயல் என்று சொல்வது என்ன? ஆதாம், ஏவாள் சிருஷ்டிக்கப்பட்டபோது அவர்களில் தேவ மகிமை இருந்தது. ஆனால் பாவம் செய்த அந்த நேரத்தில் தேவமகிமையை இழந்துபோனார்கள். அவர்களுடைய பின் தலைமுறைகளும் தேவமகிமையை இழக்க அது ஏதுவாயிற்று வேதத்தில் அவர்கள் மட்டும் அல்ல. "எல்லோரும் பாவம்செய்து தேவமகிமை அற்றவர்களாகி என்று ரோம.3:23ல் பார்க்கலாம். இப்படியாக தேவமகிமை அற்றவர்களான பிறகு மனித சரீரம் எப்படி இருந்து வந்ததோ அந்த சரீர சாயலில் தேவன் தன் குமாரனை பூமிக்கு அனுப்பினார். இரண்டாவதாக மனிதனுடைய முயற்சியினாலோ, நியாயப் பிரமாணத்தினாலோ செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு என்று பார்க்கிறோம். பாவத்திற்கு பரிகாரம் செய்தவர் இயேசு, அவரையே இங்கு தேவன் என்று சொல்லியிருக்கிறார். இப்படியாக தேவன்தாமே மனிதனுடைய பாவத்திற்கு பரிகாரம் செய்திருந்தாலும், மனிதர்கள் அதை ஏற்றுக்கொள்ளாமல் தான் செய்யும் புன்னிய கிரியைகள் மூலமாகத்தான் பரிகாரத்தை உண்டாக்குவேன் என்றும், அல்லது பாவத்திற்கான தண்டனை நான் அனுபவித்து பரிகாரம் செய்கிறேன் என்றும் சொல்லி தேவனுடைய நீதியை புறக்கணிக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைக்குறித்து ரோம.10:3ல் "அவர்கள் தேவ நீதியை அறியாமல் தங்கள் சுயநீதியை நிலைநிறுத்த தேடுகிறபடியால் தேவ நீதிக்கு கீழ்ப்படியாதிருக்கிறார்கள்" என்று தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. அல்லாமலும் ரோம.10:32ல் அவர்கள் விசுவாசத்தினாலே அதை தேடாமல்... கிரியைகளினாலே அதை தேடினபடியால் அதை அடையவில்லை என்று தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், நீதியையும் தேடுங்கள்" என்று இயேசு சொன்னதின் கருத்து நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். இங்கு இயேசு சொன்ன தேவநீதி அவர்மூலம் மனுஷனுக்கு கிடைக்கும் பாவமன்னிப்பு ஆகும். இன்றைக்கும் பெரும்பாலான மனிதர்களும் தேவனுடைய நீதியை புறக்கனித்துவிட்டு பாவபரிகாரத்திற்காக சுயமுயற்சி செய்கிறார்கள்.

உலகில் ஒவ்வொரு மதங்களும் பாவமன்னிப்புக்கென்று பலவித வழிகள் சொல்வதுண்டு. இஸ்லாத்தில் தானதர்மங்கள் செய்வதும், மற்றும் நற்கிரியைகள் செய்வதின்மூலம் பாவமன்னிப்பு கிடைக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஹஜ்ஜுக்கு போய் வருவதின்மூலம் பாவங்கள் மன்னிக்கப்படுகிறது என்று மாத்திரமல்ல ஹஜ்ஜுக்கு போய் வருவதன்மூலம் பரலோகத்தில் உயர்ந்த இடம் கிடைக்கும் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் ஹஜ்ஜிக்கு போகவேண்டுமானால் லட்சக்கணக்கான ரூபாய் வேண்டும். பணமில்லாத ஏழைகளின் நிலைமை என்ன? மற்றும் இந்து மதத்தில் ஒருசில குறிப்பிட்ட இடங்களுக்கு போய்வந்தால் பாவமன்னிப்பு கிடைக்கும் என்று சொல்வதுண்டு. அதுவுமல்லாமல் மனிதனுக்கு ஏழு பிறவி உண்டு. ஒவ்வொரு பிறவியிலும் இழிவான பிறவி எடுத்து கடைசியாக மோட்சம்போய் சேருவார்கள் என்று சொல்வதுண்டு. இவர்களைக் குறித்து பரிசுத்த வேதாகமம் சொல்வதை பாருங்கள். ‘‘தங்கள் சிந்தனைகளால் வீணரானார்கள்’’ என்றும் ‘‘உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது’’ என்றும் ரோம.1:21ல் வாசிக்கிறோம். நாம் கொடுக்கும் பொருட்களோ, பணமோ பாவபரிகாரமாகுமா? அப்படி நம்முடையது என்று கொடுப்பதற்கு நம்மிடத்தில் என்ன உண்டு? பாவசேற்றில் வீழ்ந்து கிடக்கும் மனிதனுடைய கிரியைகள் எப்படி பரிசுத்தமுள்ளதாகும்? இப்படிப்பட்ட மனிதனுடைய கிரியைகள் குறித்து ஏசாயாமூலம் ஆண்டவர் சொல்வதைப் பாருங்கள். மனிதனுடைய நீதிகிரியைகள் அழுக்கான கந்தையை போலிருக்கிறது என்று ஏசா.64:6ல் சொல்லப்பட்டுள்ளது. தனக்கு பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றை கொடுத்தவன் யார்? (ரோம.11:35) மற்றும் 1 கொரி.4:7ல் தேவனிடம் இலவசமாக பெற்றுக் கொண்டதையல்லாமல் உன்னுடையது என்று சொல்வதற்கு என்ன உண்டு என்கிற கேள்வி பவுல் எழுப்புகிறார்.

நம்முடைய பாவபரிகாரத்திற்காக தேவனுக்கு நாம் கொடுக்கத்தக்கதாக நம்மிடம் ஒன்றுமில்லை. இன்றைக்கு நம்முடைய ஜீவனை அவர் எடுத்துக்கொண்டால் பூமியில் நம் வாழ்க்கை முடிந்ததல்லவா? என் ஜீவன் எடுக்க அனுமதிக்கமாட்டேன் என்று யாராவது சொல்லமுடியுமா? இவ்வளவு பலவீனமான மனிதன் எவ்வளவு வம்பு பேசுகிறான்? பாவபரிகாரம் அவனால் செய்யமுடியுமா. ‘‘ஒருவனாவது தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொள்ளவும் அவன் நிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்கு கொடுக்கவும் கூடாதே’’ என்று சங்.49:7,8 வசனங்களில் சொல்லப்



பட்டுள்ளது. அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டீர்கள் என்று (1 1 பேது.1:17,18 வசனங்களில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

குர்ஆன் தெளிவாக படிக்கும்போது இரட்சகரைக் குறித்து சொல்லப் பட்டுள்ளதை பார்க்கமுடியும். மனிதன் தன்னுடைய சுயகிரியைகளினால் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ள முடியும் என்றால், இரட்சகன் தேவையில்லையே இரட்சகர் தேவை என்றால் யார் அந்த இரட்சகர். அல்லாஹ் தான் இரட்சகர் என்றால் மனிதனுடைய பாவபரிகாரத்திற்காக அவர் என்ன செய்தார் பதில் தரவேண்டும். நம்முடைய பாவங்களை அவர் ஏற்றுக்கொண்டாரா? நமக்கு வரவேண்டிய தண்டனையை நமக்குப் பதிலாக அவர் அனுபவித்தாரா?

மனிதன் அவனுடைய சுயமுயற்சியினால் தான் பரலோகம் செல்ல வேண்டுமென்றாலோ, அல்லது மனிதன் அவனுடைய பாவத்திற்குரிய தண்டனையை அனுபவித்து தீர்த்த பிறகுதான் பரலோகம் செல்ல வேண்டுமானால் மனிதன் எதற்காக கடவுளுக்கு நன்றி சொல்லவேண்டும். எதற்காக தேவனுக்கு கடன் பட்டிருக்கவேண்டும். அல்லாஹ் எப்படி இரட்சகர் ஆகமுடியும்? ஆனால் தேவன் கிறிஸ்து இயேசுமூலமாக நம்முடைய பாவங்களை மன்னிப்பதைக்குறித்துச் சொல்லும்போது ரோம.3:24ல் ‘‘இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பை கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்’’ என்றும் எபே.2:8ல் கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு, என்றும், 9ம் வசனத்தில் ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு கிரியைகளினால் உண்டானதல்ல என்றும் சொல்லப்பட்டுள்ளது. நற்கிரியை செய்ததினால் இரட்சிப்பு கிடைப்பதில்லை. ஆனால் இரட்சிக்கப்பட்டதினால் நற்கிரியை செய்ய வேண்டும் என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது என்பதை எபே.2:10ல் வாசிக்கலாம். ‘‘ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையா யிருக்கிறோம்.’’ ஏசா.53:4லிருந்து படிக்கும்போது மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகள் ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்கள் சுமந்தார் என்றும் ஐந்தாம் வசனம் நம்முடைய மீறுதல் நிமித்தம் அவர் நொறுக்கப் பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது என்றும், 2 கொரி.5:21ல் நாம்

அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார் என்றும், மாத்திரமல்ல இந்த இயேசுதான் நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே என்றும் நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார் என்பதை 1 யோவா.2:2ல் பார்க்கலாம். ஆதலால் தேவநீதியாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து பாவ மன்னிப்பை பெறுவதேயல்லாமல் மனிதனுக்கு வேறுவழி இல்லை என்பதை மறுபடியுமாக சொல்லுகிறேன்.



## அதிகாரம் 3

# இன்னும் சில கேள்விகளுக்கான பதில்கள்

**கேள்வி:1**

**பரிசுத்த வேதாகமத்தில் இயேசுவை மட்டும் இறைமகன் என்று சொல்லாமல் மற்றும் பலரையும் இறைமக்கள் (தேவபுத்திரர்) என்று சொல்லப்பட்டுள்ளதே. கிறிஸ்தவர்கள் ஏன் அவர்களிடத்தில் விண்ணப்பம் செய்யவில்லை?**

இந்த கேள்விக்கு பதில் கிடைப்பதற்கு பரிசுத்த வேதாகமத்தில் யார் யாரையெல்லாம் தேவபுத்திரர் என்று அழைக்கப்பட்டுள்ளது என்பதையும் எந்த சூழ்நிலையில் அப்படி அழைக்கப்பட்டார்கள் என்பதையும் கவனிக்கவேண்டும்.

1. இஸ்ரவேல் என்னுடைய குமாரன், யாத்.4:22;
2. தேவ தூதர்கள் யோபு 1:6;
3. ஒரு சில தனி நபர்கள் எரே.31:9; 1 நாளா:17:13;
4. இயேசுவின் சீஷர்கள் மத்.5:9,45;
5. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து 2 பேது.1:17

இவர்கள் எல்லாம் இறைமக்கள்தானா, இல்லாவிட்டால் பரிசுத்த வேதாகமம் ஏன் இவர்களையெல்லாம் இறைமக்கள் என்று சொல்ல வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரை பார்த்து நீ என் புத்திரன் என்றும் என்னுடைய சேஷ்ட புத்திரன் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இங்கு நாம் புரிந்துகொள்ள வேண்டிய ஒரு காரியம் கவனிப்போம். தேவன் சிருஷ்டி கர்த்தர் என்கிற முறையில் எல்லோரும் தேவனுடைய பிள்ளைகள்தான் (லூக்.3:38)ல் ஆதாம் தேவனால் உண்டானவன் என்பது, ஆங்கில வேதாகமத்தில் ஆதாம் தேவனுடைய மகன் என்றுள்ளது. ஆதலால் ஒரு விதத்தில் எல்லாரும் தேவனுடைய பிள்ளைகள்தான். இப்படியிருந்தாலும் பாவம் மூலமாக தேவனிடமிருந்து அகன்றுபோன மனிதர்கள் தங்களுக்கென்று தெய்வங்களை

செய்து, எல்லா இடத்திலும் விக்கிரக ஆராதனை (சிலை வணக்கம்) பரவியிருந்த காலத்தில் உண்மையுள்ள சத்திய தெய்வம் யார் என்பதை எல்லோருக்கும் விளங்கச் செய்யவேண்டும் என்று தேவன் தீர்மானித்தார். அதற்காக ஆபிராம் என்கிற மனிதனை கர்த்தர் தெரிந்தெடுத்தார். இந்த ஆபிராம் என்கிற மனிதன் தன் தகப்பனோடு சேர்ந்து சிலைகளை செய்து, அவைகளை தெய்வம் என்று சொல்லி விற்று பிழைப்பை நடத்தினவர். இந்த ஆபிராமை தேவன் பேர் மாற்றம் செய்து அவனுக்கு ஆபிரகாம் என்று பேர் கொடுத்து அவனுடைய சந்ததியில் வந்த யாக்கோபு என்கிற மனிதனுக்கு இஸ்ரவேல் என்று பெயர் வைத்து, அந்த யாக்கோபின் சந்ததிகளை தமக்கு ஒரு பரிசுத்த சந்ததியாக தேவன் ஏற்படுத்தினார். சிலை வழிபாடு நிறைந்திருந்த உலகில் தேவன் தமக்கென்று ஒரு சந்ததியை பிரித்தெடுக்கிறார். இதினிமித்தம் அவர்களை பார்த்து நீ என் புத்திரன் என்று சொல்லப் பட்டுள்ளது. உண்மைதான். ஆனால் இயேசுவைக் குறித்துச் சொல்லப்பட்ட அர்த்தத்தில் சொல்லப்படவில்லை. இதை வேதாகமத்தில் படித்தால் யாவரும் புரிந்துகொள்ளக்கூடிய காரியம்தான்.

இன்னும் சில இடங்களில் தனி நபர்களை எனக்கு குமாரனாக இருப்பீர்கள் என்று கர்த்தர் சொன்னதாக வாசிக்கமுடியும். எங்கு எல்லாம் அப்படிச்சொல்லப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் அதற்கான நிபந்தனைகளும் சொல்லப்பட்டுள்ளது. மனிதனாக உள்ள ஒருவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் அவனை என் குமாரனாக ஏற்றுக்கொள்வேன் என்றுதான் அங்கெல்லாம் சொல்லப்பட்டுள்ளது.

இன்னும் சில இடங்களில் இயேசுவின் சீஷர்களைக் குறித்து நீங்கள் தேவனுடைய புத்திரராயிருப்பீர்கள் என்று பார்க்கமுடியும். இவர்களைக் குறித்து சொல்லும் போதெல்லாம் தெய்வீக சுபாவம் அவர்கள் வெளிப் படுத்துவதின் மூலம் தேவனுடைய பிள்ளைகள் என்று எண்ணப்படும் என்றும், மாத்திரமல்லாமல் இயேசு கிறிஸ்துவில் உள்ள விசுவாசம் மூலம் தத்து புத்திரன் என்கிற ஸ்தானம் கொடுக்கப்படும் என்றும் (ரோம.8:4,15,23; எபே.1:5) மற்றும் பல வசனங்களில் சொல்லப்பட்டுள்ளது.

சில இடங்களில் தேவதூதர்களை தேவபுத்திரர் என்று சொல்லப் பட்டுள்ளதை பார்க்கமுடியும். தேவனுடைய சிருஷ்டி என்கிற முறையில் சொல்லப்பட்டுள்ளதேயல்லாமல் மற்றப்படியல்ல.

அடுத்ததாக இயேசுகிறிஸ்து தேவகுமாரன் என்று சொல்லப்பட்டுள்ளதை பார்க்கலாம். யோவா.3:16ல் தேவன் தம்முடைய ஒரேபேரான குமாரனை



விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். இங்கு இயேசுவைக் குறித்து தெளிவாக ஒரேபேரான குமாரன் என்று சொல்லப்பட்டுள்ளது. இப்படி சொல்ல காரணம் என்னவென்றால் இயேசு கிறிஸ்து ஒருவர் மட்டும்தான் உண்மையான தேவகுமாரன், மற்ற எல்லோரும் தேவபுத்திரர் என்கிற பதவிக்கு, அதிலும் தாழ்வான நிலைமை யிலிருந்து உயர்த்தப்பட்டவர்கள்தான். ஆனால் இயேசு கிறிஸ்து மட்டும் உன்னதமான தேவனுடைய குமாரன் என்கிற பதவியிலிருந்து மனு குலத்திற்காக, மனுஷகுமாரன் என்கிற பதவிக்கு தன்னைத்தான் தாழ்த்தி இந்த பூமிக்கு வந்தார். இதுகுறித்து முன்னமே விளக்கமாக எழுதியுள்ளேன்.

இதே இயேசுவை ரோம.8:29ல் தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேராயிருக்கும் பொருட்டு... என்று சொல்வதை பார்க்கலாம். ஒரே பேரானவர் எப்படியென்றால் 100% தெய்வமாக பூமியில் பிறந்தவரும், மெய்யாகவே தேவனுடைய குமாரனாக இருந்தவரும் அவர் ஒருவர் மட்டும்தான். அதே நேரத்தில் சிருஷ்டிப்பின் வரிசையில் மனுக் குலத்தை தேவன் சிருஷ்டிப்பதற்கு முன்னமே மனுகுலத்தின் பாவ பரிகாரத்திற்காக தேவகுமாரனாகிய அவரை மனுஷகுமாரனாக பிதாவாகிய தேவன் ஏற்படுத்தினார். அதினிமித்தமாக இயேசு முதற் பேரானவராகவும் இருக்கிறார் எபே.1:4ல் உலக தோற்றத்திற்கு முன்னமே கிறிஸ்துவில் நம்மை தெரிந்துகொண்டார் என்று பார்க்கலாம். இதில் நம்மை என்பது இரட்சிக்கப் பட்டவர்களை மட்டும் குறிக்காமல் முழுமனுகுலத்தையும் குறிக்கும். தெய்வத்திலிருந்து தெய்வமாகவும், மனிதனாகவும் வந்த ஒரே ஒருவர் இயேசுமட்டும்தான். ஆதலால் ஒரேபேறான குமாரன் என்றும், இயேசு கிறிஸ்துவிலுள்ள விசுவாசம்மூலம் தேவனுடைய பிள்ளைகளா கிறவர்களுக்கு எல்லாம் முதற்பேரானவருமாக இயேசுகிறிஸ்து இருக்கிறார்.

இயேசு கிறிஸ்து தேவகுமாரன் என்று சொல்லப்பட்டுள்ளதால் மட்டும் நாங்கள் அவரை தெய்வமாக உயர்த்தவில்லை. அவர் தெய்வமாக இருந்ததினால் தான் மனிதனுடைய பாவபரிகாரத்திற்காக தேவகுமார னாகவும், மனுஷ குமாரனாகவும் பூமியில் வெளிப்பட்டார். இந்த உண்மையை புரிந்துகொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ள மன மில்லாமல் கடின இருதயமுள்ளவர்களாகவும், அழிவுக்கு ஏதுவானவர்களாகவும் இருக்கிறார்கள். “நீங்கள் வேதவாக்கியங்களையும் தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணம் கொள்ளுகிறீர்கள்” என்று

மத்.22:29ல் வாசிப்பது இந்த உண்மையை அறியாதிருக்கிறவர்களை குறித்துதான்.

**கேள்வி:2**

**பரிசுத்த வேதாகமத்தில் இயேசுவை தேவகுமாரன் என்று சொல்வதை பார்க்கிலும் அதிகமாக மனுஷகுமாரன் என்று சொல்லப்பட்டுள்ளதே?**

இதைக்குறித்து அறிந்துகொள்ள வேதத்திலிருந்து சில வசனங்களை பார்ப்போம் எசே.22:30ல் ''நான் தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவும் ஒரு மனுஷனை தேடினேன் ஒருவனையும் காணேன்'' என்று பிதாவாகிய தேவன் சொல்வதைப் பார்க்கலாம். பாவம் செய்த மனிதனுக்கும், தேவனுக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்வதற்கு பாவமில்லாத ஒரு மனுஷன் வேண்டும். இரண்டு மனிதர்களுக்கிடையிலான விஷயமாக இருந்தால் அவர்களுக்கிடையில் ஒரு மனிதன் இருந்தால்போதும். ஆனால் இது தேவனுக்கும், மனிதனுக்கும் இடையிலான விஷயமாகும். இப்பொழுது ஒரே நேரத்தில் 100% மனிதனாகவும் 100% தேவனாகவும் ஒருவர் வேண்டும். இந்த காரணத்தினால்தான் ஒரே மெய்தேவன் மனிதனாக பூமிக்கு வந்தார். இப்படி மனிதனுடைய பாவபரிகாரத்திற்காக பூர்ண தெய்வமும், பூர்ண மனிதனுமாக இயேசு வெளிப்பட்டாலும் அவர் பூமியில் இருக்கும்போது தன்னை அதிகமாக மனிதகுமாரன் என்றுதான் அறிமுகம் செய்தார். ஆதலால் இயேசு தன்னைக்குறித்து சொல்லும்போது 37 முறை மனுஷகுமாரன் என்று சொல்லியிருக்கிறார். சில இடங்களில் அவருடைய வார்த்தைதான் தேவன் அல்ல என்று சொன்னதுபோல தோன்றினாலும் அவர் அப்படி பேசுவதற்குக் காரணம் அவர் தம்மை தாம் தாழ்த்தினதுதான். ''அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்.'' அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டு மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப் படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிலும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானவர்களுடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும். பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்'' (பிலி.2:6–11). இப்படியாக மனுகுலத்திற்காக மனிதனாக வந்த சத்திய தேவனாக அவர் இருந்தாலும் தான் தேவன்



என்பதை நிரூபிக்கும்படி எதுவும் செய்யவில்லை. காரணம் அவர் மெய் தேவனாக இருந்தார். போலியானதைத்தான் நல்லது என்று நிரூபிக்க வேண்டிய அவசியம் உண்டு. ஆனால் மெய்யானதை நிரூபிக்கவேண்டிய அவசியமில்லை. அப்படியிருந்தும் அவருடைய வல்லமையான செய்லகள் அவருடைய தெய்வத்துவத்திற்கு சான்றாக விளங்குகின்றன.

இப்போதும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தெய்வமாகவும், மனிதனாகவும் பரலோகில் நமக்காக மத்தியஸ்தம் வகிக்கிறார் (1 யோவா.1:1; எபி.1:23, 7:25; லூக்.22:69; 1 தீமோ.2:5,6).

மாத்திரமல்லாமல் இன்னும் அவர் மனுஷகுமாரனாகவேதான் வெளிப் படப்போகிறார் என்பதைக் கீழ்வரும் வசனங்கள் மூலம் அறியலாம்.

மனுஷகுமாரனும் பிதாவின் மகிமை பொருந்தினவராய் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது (மாற்.8:38).

அப்போது மனுஷகுமாரன் மிகுத் வல்லமையோடும், மகிமையோடும், மேகங்களில் வருகிறதைக் காண்பார்கள் (மாற்.13:26; மத்.24:30).

பிரதான ஆசாரியன் அவரை நோக்கி நீ ஸ்தோத்தரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? என்று கேட்டார். அதற்கு இயேசு நான் அவர் தான் மனுஷகுமாரன் சர்வ வல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார் (மாற்.14:61, 62). அறுபத்தோராம் வசனத்தில் தேவனுடைய குமாரன்தான் என்று ஆனித்தரமாக உறுதியாக இயேசு சொன்னாலும் அதே வார்த்தையில் தான் மனுஷகுமாரன் என்பதையும் உறுதியாகச் சொல்லுகிறார்.

தன்னை மனுஷகுமாரன் என்று இயேசு எத்தனை முறைசொல்லி யிருக்கிறாரோ அதிலும் அதிகமாக தேவனை தனக்கு பிதா என்று ஆனித்தரமாக சொல்லியிருக்கிறார். மாத்திரமல்ல இயேசுவை தேவகுமாரன் என்று நான்கு சுவிசேஷங்களில் 54 முறையும், அப்போஸ்தலர் புஸ்தகத்தில் 3 முறையும் நிருபங்களில் 42 முறையும், வெளிப்படுத்தின விசேஷத்தில் 1 முறையும் சொல்லப்பட்டுள்ளது. ஆதலால் தேவகுமாரன் என்கிற வார்த்தையைப் பார்க்கிலும் மனித குமாரன் என்கிற வார்த்தை இயேசு அதிகமாக பயன்படுத்தியதில் எந்த தப்பும் இல்லை.

''இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினால் நித்திய ஜீவனை அடையும் படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது'' (யோவா.20:31).

**கேள்வி –3**

## (யோவா.17:22) ‘‘நாம் ஒன்றாக இருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாக இருக்கும்படி’’ என்று பார்க்கிறோம். ‘‘நானும் பிதாவும் ஒன்றாக இருக்கிறோம்’’ (யோவா.10:30, 14:10) இதை வைத்து இயேசு கடவுள் என்று சொல்வதா?

பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்கிற பெயர்கள் எப்போது உருவானது என்பதையும், இந்த மூன்று நபர்கள் எப்படி ஒன்றாக இருக்கிறார்கள் என்பதையும் முன்னமே தெளிவாக எழுதியுள்ளேன். திரியேக தேவன் மனிதனுடைய பாவபரிகாரத்திற்காக பூமியில் வந்தாலும் அதே தேவன் பரலோகத்தில் திரியேக தெய்வமாகவே நிலைத்திருக்கிறார் என்பதை முன்பக்கங்களில் தெளிவாக விளக்கியுள்ளேன். ‘‘பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேரான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்’’ என்று யோவா.1:18ல் வாசிக்கலாம். இந்த வார்த்தை அவர் சொல்லும்போது இயேசு பூமியில் ஜனங்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கிறார். ஆனாலும் அவர் பரத்தில் திரியேக தேவனாக இருக்கிறார் என்பதை ‘‘பிதாவின் மடியிலிருக்கிற’’ என்கிற நிகழ்காலச் சொல் நமக்குத் தெளிவாக விளக்குகின்றன.

இப்போதும் பூமியில் திரியேக தேவனாகத்தான் இயேசு உள்ளார் என்பதையும் நாம் பார்த்தோம். இவர் இருவரும் எப்படி ஒன்றாக இருக்கிறார் என்று பார்த்தால், தெய்வம் ஜீவனுள்ள தேவனாக இருக்கிறார். பரலோகத்தில் இருக்கிறவரும், பூமியில் இருக்கிறவரும் இருவராக இங்கு நாம் பார்த்தாலும் தெய்வீக ஜீவன் மூலமாக ஒன்றாக இருக்கிறார். சில காலங்களுக்கு முன்னமே மனிதனுக்கு இது புரிந்துகொள்வது கடினமாக இருந்தது. ஆனால் இப்போது இது கடினமான காரியமல்ல, காரணம் ஒவ்வொரு காலத்திலும் மனிதன் வேதத்தைக்குறித்தும், தெய்வத்தைக் குறித்தும் கேட்கும் கேள்விகளுக்கு விஞ்ஞானம் மூலமாகவே தேவன் பதிலளிக்கிறார். வேதத்திலுள்ள ஆதியாகம புஸ்தகத்தைப் படித்தபிறகு மனிதனுடைய எலும்பிலிருந்து எப்படி ஒரு மனுஷீயை உண்டாக்க முடியும் என்று கேள்வி எழுப்பினான். தேவன் சர்வ வல்லமையுள்ளவன் என்கிற பதில் அதற்கு போதுமானதாக இருந்தாலும் ஒரு மனிதனுடைய ஒரே ஒரு ஜீன் (மரபணு) மட்டும் கிடைத்தால் போதும் அதிலிருந்து ஒரு மனிதனை உருவாக்கலாம் என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்ததும், ஆடு கோழி என்று பலதும் உருவாக்கினதும் நமக்குத் தெரியும் ஒரு மனிதனைக் கொண்டு இவ்விதமான காரியங்கள் செய்யமுடியுமானால் தேவனுக்கு இது



சாத்தியம்தான் என்று ஒத்துக்கொள்கிறார்கள். இன்றைக்கு அமெரிக்கா விலுள்ள ஒரு கம்பியூட்டரும், லண்டனிலுள்ள ஒரு கம்பியூட்டரும் இந்தியா விலுள்ள ஒரு கம்பியூட்டரும் ஒன்றாக இணைக்கப்படுகின்றன எப்படி? இணையதளம் மூலம். மூன்று கம்பியூட்டரும் ஒன்றாக நட்டு, போல்டு போட்டு முறுக்குகிறார்களா இல்லை. ஆனால் நம்முடைய கண்களுக்குத் தெரியாத கதிர்கள்மூலம் இணைக்கப்படுகின்றன. இதுபோலவே தேவன் பரத்திலும், பூமியிலும் தனித்தனியாக தென்பட்டாலும் தெய்வீக ஜீவன்மூலம் இணைக்கப்பட்டிருப்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். இதே ஜீவன் பெற்றுக்கொள்கிற மனிதர்களும் ஒன்றாக இருக்கிறார்கள். நம்முடைய கண்களுக்கு முன் தனித்தனியாக தெரிவது உண்மைதான். ஆனால் இன்று இதுபடிக்கும் பிரிய சகோதரனே. சகோதரியே, இயேசுவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டால் இந்த ஜீவன் உனக்குக் கிடைக்கும். அவருடைய சரீரமாகிய சபையிலும், அவரிலும் நீ இணைக்கப்பட்டு பலராயிருக்கிறவர்கள் ஒன்றாக மாறிவிடுவார்கள்.

**கேள்வி –4**

## ஆண்டவர் என்று சொல்லப்பட்டதால் கடவுளா?

இயேசு கிறிஸ்துவை மட்டும் அல்லாமல் வேதத்தில் மற்றும் சிலரையும் ஆண்டவர் என்று சொல்வதை நாம் பார்க்கமுடியும். இயேசு மெய்தேவன் என்பதற்கான ஆதாரங்கள் தெளிவாக முன்பே எழுதியுள்ளேன். மிகவும் சுருக்கமாக எழுத வேண்டும் என்பதால் எல்லா ஆதாரங்களும் எடுத்துரைக்க வில்லை. சில மனிதர்களை ஆண்டவர் என்று அழைப்பதைப் பார்க்கமுடியும். அங்கெல்லாம் யார் கூப்பிடுகிறார்களோ, அந்த கூப்பிடுகின்ற நபருக்கு மட்டும் ஆண்டவராக இருக்கிறார். ஆனால் இயேசு கிறிஸ்து ஏதேனும் ஒரு தனி நபருக்கு மட்டும் ஆண்டவர் என்றில்லாமல், சர்வலோகத்திற்கும், சர்வ சிருஷ்டிக்கும் ஆண்டவர் என்பதையும் அறிந்துகொள்ளலாம்.

**கேள்வி –5**

## தந்தை இல்லாமல் பிறந்ததால் கடவுளா?

இதற்கும் முன்பே பதில் எழுதியுள்ளேன். ஆனாலும் ஒரு சில காரியங்களை மீண்டும் காண்பிக்கிறேன்.

இயேசுவிற்கு தந்தை இல்லை என்று சொல்லும் போதெல்லாம் தெளிவாக ஒரு காரியம் புரிந்துகொள்ளவேண்டும். அது என்னவென்றால். அவர் மனிதனாக பூமியில் வந்தார். அந்த மனிதனுக்கு மனிதனான ஒரு தகப்பன்

கிடையாது காரணம் கடவுள் மனிதனை படைத்தபிறகு அவர்களுக்குக் கொடுத்த ஒரு ஆசீர்வாதம், நீங்கள் பலுகி பெருகி பூமியை நிரப்புங்கள் என்பதாகும். இவர்கள் இருவரும் பாலுறவு கொள்ளாதிருந்த காலத்தில் இவர்களுக்கு குழந்தை பிறக்கவில்லை. ஆனால் ஆதி.4:1ல் ‘‘ஆதாமும் அவன் மனைவியும் பாலுறவு கொண்டனர். அவள் கர்ப்பமுற்று காயீன் என்ற ஒரு மகனைப் பெற்றெடுத்து. நான் கர்த்தரின் உதவியால் ஒரு மனிதனைப் பெற்றுள்ளேன் என்றாள்’’ (காண்க. உலக வேதாகம மொழிபெயர்ப்பு மையம்) இங்கு ஆதாம் ஏவாளோடு சேர்ந்தபோது ஒரு ஆணினுடைய கருமுட்டையும், ஒரு பெண்ணினுடைய கருமுட்டையும் சேர்ந்து ஏவாள் கர்பவதியாகி குழந்தையை பெற்றெடுத்தாள். ஆனால் இயேசுவின் பிறப்பின் விபரம். ‘‘இயேசு கிறிஸ்துவின் ஜெனனத்தின் விவரமாவது அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில் அவர்கள் கூடிவரும் முன்னே அவள் பரிசுத்த ஆவியினால் கர்பவதியானாள் என்று காணப்பட்டது’’ (மத்.1:18). அடுத்ததாக லூக்கா சுவிசேஷத்தில் பார்ப்போம். ‘‘அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி, இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக்கு பிரதியுத்தரமாக, பரிசுத்தஆவி உன்மேல் வரும். உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும்’’ லூக்.1:34, 35; 37ம் வசனத்தில் தேவனால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை என்றான். இந்த வசனங்களிலிருந்து நாம் புரிந்துக்கொள்ளக்கூடிய காரியம் இயேசுவிற்கு மனிதருடைய முறையில் ஒரு தகப்பனில்லை, ‘‘அவர் உன்னதமானவருடைய குமாரன்’’ ஆனால் மனித முறையில் ஒருதாய் உண்டு. தேவன் என்கிற முறையில் அவருக்கு தாய் கிடையாது. இதற்கான காரணங்கள் திரியேக தேவன் என்கிற பகுதியில் எழுதியுள்ளேன். தந்தை இல்லாத காரணத்தினால் அவர் கடவுள் என்று நாங்கள் சொல்லவில்லை. மாறாக அவர் கடவுளாக இருப்பதினால் அவருக்கு மனித முறையில் தகப்பனில்லை என்றே கூறுகிறோம்.

இயேசு மனிதனாக வருவதற்கு ஒரு சரீரத்தை பிதாவாகிய தேவன் ஆயத்தம் பண்ணினார். (எபி.10:5). அந்த சரீரத்தை மரியாளின் கர்ப்பபையில் வைத்து வளர்வதற்கு ஏதுவான சூழ்நிலையை பரிசுத்த ஆவியானவர் உருவாக்கினார். (லூக்.1:35). இப்படியாக அவர் பிறந்ததால் அவர் பாவமற்றவராக இருந்தார். ஆனால் அவர் மனுகுலத்தின் பாவங்களுக்கு பரிகாரம் செய்ய வேண்டும் என்பதால் நம்முடைய பாவங்களை பிதாவாகிய தேவன் அவர்மேல் சுமத்தினார். ‘‘நாம் அவருக்குள் தேவனுடைய



நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்’’ (2 கொரி.5:21). ஆதலால் மனிதமுறையில் தந்தையில்லாததினால் அவர் கடவுள் இல்லை என்பதையும், அவர் கடவுளாக இருந்ததினால் அவருக்கு மனித முறையில் தகப்பன் இல்லை என்பதையும் மறுபடியுமாக சொல்லுகிறேன்.

அடுத்ததாக மெல்கிசேதேக்கின் முறைமையின்படி இவர் ஆரோனைப் பார்க்கிலும் பெரியவர் என்பதையும், இவருடைய ஆசாரியத்துவம் மாறிப்போவதில்லை என்பதற்காகவும், மெல்கிசேதேக்கின் வம்சவரலாறும் தாய் தந்தை பேர் வேதத்தில் இல்லை என்று பழைய ஏற்பாட்டை மேற்கோள் காட்டி சொல்லும் பகுதிதான் எபிரெய நிருபத்தில் படிக்கும் பகுதிகள். ‘‘இந்த மெல்கிசேதேக்கை பற்றி விரிவாக பேசலாம். நீங்கள் கேள்வியில் மந்தமுள்ளவர்களானபடியில் அதை விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கும்’’ (எபி.5:11). மெல்கிசேதேக்கைப்போல் இயேசு இருந்தார் என்று அங்கு சொல்லப்படவில்லை. மாறாக மெல்கிதேதேக்கு தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவராய் இருக்கிறார் என்று எபி.7:3ல் பார்க்கிறோம். மெல்கிசேதேக்கு ஒரே சமயம் அரசனாகவும், ஆசாரியனாகவும் இருந்தார் என்பதையும் அதுபோலவே இயேசுவும் ஒரே சமயத்தில் அரசராகவும் ஆசாரியராகவும் இருக்கிறார். மட்டுமல்லாமல் நியாயப்பிரமாணத்தின்படி லேவி கோத்திரத்தில் பிறந்தவர்கள் மட்டும்தான் ஆசாரிய பட்டம் பெறமுடியும். ஆனால் யூதா கோத்திரத்தில் பிறந்த இயேசு நியாயப்பிரமாணத்தின் முறைமையின்படி ஆசாரியராகாமல் தேவனுடைய அனாதி தீர்மானத்தின்படி ஆசாரியானார் என்பதை விளக்கும் பகுதியாகும். ஆதலால் மெல்கிசேதேக்கிற்கு ஆரம்பமும் முடிவும் இல்லை என்று தப்புக்கணக்குப் போடவேண்டாம்.

**கேள்வி –6**

**அற்புதங்கள் செய்ததால் கடவுளாக முடியுமா?**

இப்படியாக இன்னும் பல கேள்விகள் கேட்டுள்ளீர். நீங்கள் சொல்லும் காரணங்களினால் அவர் கடவுள் இல்லை என்பதை மறுபடியுமாக சொல்லுகிறேன். அவர் கடவுளாக இருந்ததினால்தான் நீங்கள் சொல்லும் காரியங்கள் அவர்மூலம் நடந்தது என்பதையும் புரிந்துகொள்ளுங்கள். காரியம் இப்படியாக இருந்தாலும் இயேசு அல்லாமல் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும், மற்றும் பலரும் அற்புதங்கள் செய்துள்ளதை வைத்து அவர்களையெல்லாம் ஏன் கடவுளாக வணங்கவில்லை என்கிற கேள்விக்கு மட்டும் சுருக்கமாக பதிளலிக்கிறேன். அற்புதம் செய்கிறவர்கள் எல்லாம் கடவுள் என்று எந்த கிறிஸ்தவனும் சொல்லமாட்டான். ஒரு வேளை பைபிள்

படிக்காத பைபிளில் உள்ள வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாத, அதிலுள்ள சத்தியத்தை புரிந்துகொள்ளாத யாராவது அப்படி உங்களுக்கு சொல்லி யிருந்தாலும், அற்புதம் செய்கிறவர்கள் கடவுள் என்று பரிசுத்த வேதம் கூறவில்லை, அனேக அற்புதங்கள் செய்தவராக இருந்தாலும் வேத வசனத்தின்படி வாழாதவன் அவருக்கு சீஷனாகக் கூட இருக்கமுடியாது. பரலோகத்திலும் அப்படிப்பட்டவர்களுக்கு இடம் இல்லை என்றுதான் வேதம் சொல்லியுள்ளது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் அல்லது இயேசு கிறிஸ்துவின் பிறப்பிற்கு முன்பு பலரும் அற்புதங்கள் செய்ததாக சொல்லப்பட்டுள்ளது. உண்மைதான். ஆனால் அவர்கள் எந்த வல்லமைக்கொண்டு அவைகளை செய்தார்கள் என்று பார்க்கும்போது, அவர்களுக்கு கிறிஸ்துவின் ஆவி இருந்தது என்றும் அந்த ஆவியின் பலத்தினால்தான் அப்படிப்பட்ட காரியங்கள் அவர்கள் செய்தார்கள் என்பதையும் வேதத்தில் 1 பேது.1:10,11 ஆகிய வசனங்களில் வாசித்து அறியலாம்.

யோசுவா சூரியனையும், சந்திரனையும் வானத்தில் நிற்கும்படிசெய்தார். ஆனால் யோசு.10:14ல் யோசுவாவின் வாக்குக்கு செவிசாய்த்து கர்த்தர் அந்த காரியத்தை செய்தார் என்று பார்க்கிறோம். மாத்திரமல்ல புதிய ஏற்பாட்டில் இயேசுவின் சீஷர்கள் அற்புதங்கள் செய்திருந்தார்கள். அதெப்படி "உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாக சொஸ்தமாய் நிற்கிறான் என்று உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கக் கடவது" (அப்.4:10). பிறவியிலேயே சப்பானியாயிருந்த ஒருவருக்கு அப்போஸ்தலர்கள்மூலம் சுகம், விடுதலை கிடைத்ததினால் எல்லோரும் ஆச்சரியப்பட்டு அவர்களை கேள்வி கேட்டபொழுது அவர்கள் சொன்ன பதில்தான் நாம் பார்த்தோம். மரித்துவிட்டார் என்று ஜனங்கள் எண்ணிக்கொண்டிருந்த இயேசு இன்றும் உயிரோடிருக்கிறார். அவருடைய பேரில்தான் நாங்கள் சொல்ல இந்த அற்புதம் நடந்தது அல்லாமல் எங்களுடைய சுயபலத்தினால் இது நடக்கவில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த சம்பவம் நடந்து இரண்டாயிரம் வருடங்கள் கழிந்துவிட்டது. ஆனாலும் இன்றும் இயேசுவின் நாமத்தினால் இப்படிப்பட்ட அற்புதங்களும், அதிசயங்களும் நடந்துகொண்டு தான் இருக்கிறது. இதிலிருந்து இயேசு சர்வவல்லமையுள்ள தேவன் என்பதையும், இயேசு இன்றும் உயிரோடிருக்கிறார் என்பதும் உண்மை உண்மை உண்மை.



**கேள்வி –7**

## மரித்தபின் உயிர்த்தெழுந்தால் கடவுளா?

மரித்தபின் உயிர்த்தெழுந்த பலரையும் முன் உதாரணம் காட்டி அவர்களுக்கும் இயேசுவிற்கும் என்ன வித்தியாசம் என்றும் கேட்டுள்ளீர். மட்டுமல்லாமல் கடவுளாக இருந்தால் மரணம் வரலாமா என்றும் கேட்டுள்ளீர். அவர் ஏன் மரித்தார் என்பதை முன்பே விளக்கியுள்ளதால் மீண்டும் இங்கு எழுதவிரும்பவில்லை. உயிர்த்தெழுந்த மற்றவர்களுக்கும் இயேசுவிற்கும் என்ன வித்தியாசம் என்பதை மட்டும் பார்ப்போம்.

பாவத்தின் சம்பளம் மரணம் என்பதால் இயேசுவும் அந்த மரணத்தை ருசி பார்க்க வேண்டியதாய் இருந்தது. அவர் பாவியாய் இருந்ததால் மரிக்க வில்லை 2 கொரி.5:21ன்படி அவரை நமக்காக பாவமாக்கினார். அதினால் தான் அவர் மரிக்க வேண்டியதாயிற்று. அவருடைய பாவமில்லாமைக்கு சில ஆதாரங்கள் காண்பிக்கிறேன்.

### 1. இயேசுவை சிலுவையில் அறையும்படி ஒப்புவித்த நியாதிபதியின் சாட்சி:

அப்பொழுது பிலாத்து பிரதான ஆசாரியர்களையும், ஜனங்களையும் நோக்கி இந்த மனுஷனிடத்தில் ஒரு குற்றத்தையும் காணவில்லை (லூக்.23:4).

மறுபடியும் யூதர்களிடத்தில் வெளியே வந்து "நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்" (யோவா.18:38).

பிலாத்து மறுபடியும் வெளியே வந்து நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு இதோ உங்களிடத்தில் வெளியே கொண்டு வருகிறேன் என்றான் (யோவா.19:4).

பிரதான ஆசாரியரும், சேவகரும் அவரை கண்டபோது சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்கு பிலாத்து நீங்களே இவரை கொண்டுபோய் சிலுவையில் அறையுங்கள். நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்றார் (லூக்.23:14,15; யோவா. 19:6) இந்த வசனங்களிலெல்லாம் இயேசுவை சிலுவையில் அறையும்படி தீர்ப்பு கூறின பிலாத்து திரும்ப திரும்ப அவரில் பாவம் இல்லை என்று சொல்வதைப் பார்க்கலாம்.

**2. இயேசுவை சிலுவையில் அறையும்படி ஒப்புவித்த நியாயாதிபதியின் மனைவிச் சாட்சி:**

அவன் நியாயசனத்தில் உட்கார்ந்திருக்கையில் அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆள் அனுப்பி நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம் (மத்.27:19).

**3. நியாய விசாரனை நடத்திய ஏரோது ராஜாவும் இயேசுவிடம் எந்த குற்றமும் காணவில்லை. வாசியுங்கள் (லூக்.23:15). உங்களை ஏரோதினிடத்திற்கும் அனுப்பினேன் அவனும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை.**

**4. இயேசுவை காட்டிக்கொடுத்த யூதாசின் சாட்சி:**

அப்பொழுது அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் அவர் மரணாக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டதைக் கண்டு மனஸ்தாபப்பட்டு அந்த முப்பது வெள்ளிக்காசை பிரதான ஆசாரியர்களிடத்திற்கும், மூப்பரிடத்திற்கும் திரும்ப கொண்டுவந்து குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவம் செய்தேன் என்றான் (மத்.27:3,4).

**5. தன்னோடு சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளியின் சாட்சி:**

**"நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். நாம் நடப்பித்தவை களுக்குத்தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனை கடிந்துக்கொண்டு...." (லூக்.23:41).**

**6. அவரை சிலுவையில் அறைந்த சேனாதிபதியின் சாட்சி:**

**நூற்றுக்கதிபதி சம்பவித்ததைக் கண்டு "மெய்யாகவே இந்த மனுஷன் நீதிமானாக இருந்தான் என்று சொல்லி தேவனை மகிமைப் படுத்தினான்" (லூக்.23:47).**

**7. இயேசுவை மறுதலித்தவனும் சீஷனுமான பேதுருவின் சாட்சி:**

**"அவர் பாவம் செய்யவில்லை அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை" (1 பேது.2:22; அப்.3:14).**



**8. இயேசுவின் சீஷனாகிய யோவானின் சாட்சி:**

**"அவர் நம்முடைய பாவங்கள் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள் அவரிடத்தில் பாவமில்லை" (1 யோவா.3:5).**

**9. முன்பு கிறிஸ்தவத்திற்கு எதிராக செயல்பட்டு, பின்பு கிறிஸ்த வனாக மாறின பவுலின் சாட்சி:**

**"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்" (2 கொரி.5:21).**

**10. பரிசுத்தாவியானவருடைய சாட்சி:**

**"நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தம்" (எபி.9:14).**

இன்னும் பல சாட்சிகளும் பார்க்கமுடியும். என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்? என்று சவாலான கேள்வியை இயேசுக் கேட்டதை (யோவா.8:46)ல் வாசிக்கலாம். ஆனால் யாரும் அவரில் குற்றம் கண்டுபிடிக்கவில்லை. இப்படி எந்த பாவமும் இல்லாத இயேசு மனிதர்களுடைய பாவங்களை ஏற்றுக்கொண்டதினால் தான் அவர் மரிக்க நேரிட்டது. அதினால் மனிதனுக்கு பாவமன்னிப்பும் கிடைத்தது.

இப்படியாக மரித்த அவர் உயிர்த்தெழுந்த முதல் மனிதனாகவும் இருக்கிறார். இது சொல்லும்போது அவருக்கு முன்பே பலரும் உயிர்த் தெழுந்ததாக வேதத்தில் சொல்லப்பட்டுள்ளதே என்று சிந்திக்கலாம். மாத்திரமல்ல அவர் உயிர்த்தெழுந்த பிறகும் புசித்திருக்கிறார். அவருக்கு மாமிசமும், சரீரமும் இருந்திருக்கிறதே என்பது இன்னொரு குற்றச்சாட்டு, அவர் உயிர்த்ததுக்கு மறுரூபசரீரம் அடையாளமாகும். இப்படி மறுரூப சரீரத்தில் அவருக்குமுன்பு யாரும் உயிர்த்தெழுந்ததில்லை. அதினால்தான் உயிர்த்தெழுந்த முதல் மனிதன் அவர் என்று சொல்ல காரணம். லாசரு உயிர்ப்பிக்கப்பட்ட பிறகும் அவருடைய சரீரம் சீலைகளினால் கட்டப் பட்டிருந்தது. காரணம் அவன் இயேசுவைப்போல மறுரூப சரீரத்தை அடைய வில்லை (யோவா.11:44). அதேநேரம் இயேசு உயிர்த்தெழுந்தபொழுது அவர் மகிமையின் சரீரத்தில் உயிர்த்தெழுந்ததினால் அவரை அடக்கம்செய்யும் போது கட்டியிருந்த சீலைகள் அப்படியே சுற்றியிருந்த வண்ணமாக அடக்கம் செய்த அதே இடத்தில் இருந்தது என்று பார்க்கலாம் (யோவா.20:6,7).

உயிர்த்தெழுந்த பிறகும் அவருக்கு சரீரம் இருந்தது. ஆனால் அது மகிமையின் சரீரம். அந்த சரீரத்தில் ரத்தமில்லை. நம்முடைய சரீரத்திற்கு ஒப்பான சரீரத்தில் அல்ல என்பதை புரிந்துகொள்ளலாம். (1கொரி.15:40) இயேசுவிற்கு முன்பும் பின்பும் இதுவரைக்கும் யாரும் மகிமையின் சரீரத்தில் உயிர்த்ததில்லை. மற்றபடி உயிர்த்தவர்களெல்லாம் மறுபடியும் மரித்துள்ளார்கள். இப்போதும் இயேசுவின் நாமத்தில் யாராவது மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டால் அவர்கள் மறுபடியும் மரிக்கநேரிடும் அல்லது இயேசுவின் வருகையில் அவருக்கென்று ஆயத்தமுள்ளவர்களாக இருந்தால் மறுரூபமாக்கப்படுவார்கள் (1 கொரி.15:51).

அடுத்தக் குற்றச்சாட்டு மரணம் காணாமல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஏனோக்கும், எலியாவும் இவரிலும் பெரியவர்களாக உள்ளார்களே. அவர்களை கடவுளாக வணங்க வேண்டியதுதானே என்று கேட்டுள்ளார். எந்த மனிதனையும் மரணமில்லாமல் எடுத்துக்கொள்ள சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு அதிகாரம் உண்டு. அது தேவனுடைய அதிகாரத்திற்குட்பட்ட காரியம், மரணமில்லாமல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஏனோக்கிற்கும், எலியாவிற்கும் இனிமேல் என்ன சம்பவிக்கும் என்று நமக்கு வெளிப் படுத்தப்படவில்லை. "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்" (உபா.29:29). ஆனால் ஏனோக்கைக் குறிதும் எலியாவைக்குறித்தும் பலரும் பலதும் சொல்லிக்கொண்டு வருவதுண்டு, அது அவர்களுடைய அறிவீனம், அல்லாமல் மற்றபடி ஒன்றுமில்லை. ஆண்டவர் இயேசுகிறிஸ்து, தான் மறுபடியும் வரும்போது பாவமன்னிப்புக்கென்று அவரை விசுவாசித்து அவருடைய கட்டளையாகிய ஞானஸ்நானம் பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தில் பெற்று, பரிசுத்தாவியின் நிறைவோடு பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து அவருடைய வருகைக்கு காத்திருந்து உயிரோடு இருப்பவர் எத்தனைபேர் இருந்தாலும், அத்தனைபேரும் சாகாமலே மறுரூபமாக்கப்பட்டு பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். "இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாம் எல்லாரும் நித்திரை அடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாம் எல்லாரும் மறுரூபமாக்கப் படுவோம். எக்காளம் தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவில்லாத வர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ள



தாகிய இது அழியாமையையும், சாவுக்கு ஏதுவாகிய இது சாவாமையும் தரித்துக்கொள்ளவேண்டும்" (1 கொரி.15:51–53). இந்த உண்மை புரிந்துகொள்ளாததினால்தான் இப்படிப்பட்ட மாறுபாடான கேள்விகள் வருவதற்கு காரணம். ஏனோக்கும் எலியாவும் மட்டுமல்லாமல் இயேசு கிறிஸ்து தன் சபையை சேர்க்க வரும்போது அவருடைய சபையில் ஆயிரம் கோடி மனிதர்கள் பரிசுத்தவான்களாக இருந்தாலும், அவர்கள் எல்லாம் மரணம் இல்லாமல் எடுத்துக்கொள்ளப் படுவார்கள். ஏனோக்கும், எலியாவும் மறுரூப சரீரத்தில் எடுத்துக்கொள்ளப் படவில்லை என்பதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். மட்டுமல்லாமல் இயேசுகிறிஸ்து உயிர்த் தெழுந்தார் என்கிற ஒரே காரணத்தினால் அவரை நாங்கள் தெய்வமாக வணங்கவில்லை. அவர் தெய்வமாக இருப்பதால்தான் வணங்குகிறோம்.

**கேள்வி –8**

**பரிசுத்தஆவியில் நிறைந்திருப்பதால் கடவுளாக முடியுமா?**

எப்படி அவர் திரியேக தேவனாக மனுகுலத்தின் மீட்பிற்காக மனிதனாக வந்தார் என்பதை துவக்கத்திலே எழுதியுள்ளேன். அவர் கடவுளாக இருந்தாலும் ஒரு பூரண மனிதனுக்கு இந்த பூமியில் எவையெல்லாம் தேவை என்பதை அவர் பரிசுத்தாவி பெற்றதினாலும் பரிசுத்தாவியில் நிறைந்திருந்த தினாலும் பூரணரல்லாத மனிதர்களாகிய நமக்கு புரிந்துகொள்ளும்படி அவருடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வுகளும் நடந்துள்ளது என்பதை அறியலாம்.

இயேசுவிற்கு முன்பும், இயேசுவிற்கு பின்பும், மற்றும் பலரும் பரிசுத்தாவியை பெற்றதாக வேதத்தில் பார்க்கமுடியும். அவர்கள் எல்லாம் தேவசித்தம் பூமியில் நிறைவேறும்படியாக அவர்களுடைய வாழ்க்கையில் அப்படி நடந்தது என்பதை அறியலாம். இதுபோலவே இயேசு கிறிஸ்து பூமியில் மனிதனாக இருந்த நாட்களில் நமக்கு ஒரு மாதிரியை வாழ்ந்து காட்டினார் என்பதையும், மனிதன் இந்த பூமியில் பரிசுத்தஆவியின் துணைக்கொண்டுதான் வெற்றிகரமான வாழ்க்கை வாழ முடியும் என்பதையும் நாம் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். ஆதலால் அவர் பரிசுத்தாவியை பெற்றுக் கொண்டதாக அந்த உண்மையை மறைக்காமல் வேதத்தில் எழுதப்பட்டுள்ளது.

**கேள்வி 9**

**கடவுள் பிசாசினால் சோதிக்கப்படலாமா?**

மனிதராக பூமியில் வந்தவர், மனிதர் பூமியில் சோதிக்கப்படும் எல்லா

விதத்திலும் சோதிக்கப்பட்டு குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க வேண்டியது அவசியமாயிருந்தது. வேதம் சொல்வதை கவனியுங்கள். “நம்முடைய பாவங்களைக்குறித்து பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லதாவரா யிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்” (எபி.4:15). பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும் வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார் (எபி.7:26). ஆதலால் பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார் (எபி.2:14). ஒரு மனிதன் இந்த பூமியில் பிறப்பதும், மரிப்பதும், உயிர்ப்பதும் மட்டுமல்லாமல் பரிசுத்தஆவியின் நிறைவோடு வாழ்வது எப்படி தேவனுடைய சித்தமாயிருந்ததோ அதைப்போல மனிதனுக்காக மனிதனாக வந்த இயேசு கிறிஸ்துவும் இருக்கவேண்டியது அவசியமாக இருந்தது. அதனால்தான் அவர் பரிசுத்தஆவியில் நிறைந்திருந்தும் பிசாசினால் சோதிக்கப்பட்டார். ஆதிமனிதன் ஆதாம் சோதனையில் தோற்றுப்போனான். இயேசு கிறிஸ்துவோ வெற்றிப்பெற்றார். ஆதலால் யாரெல்லாம் இந்த இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்களெல்லாம் சாத்தானை ஜெயிக்கமுடியும். காரணம் ஏற்கனவே சோதனையை ஜெயித்த இயேசு கூடஇருந்து உதவி செய்வார். “இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர்களா யிருக்கிறோம்” (ரோம.28:37). நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1 கொரி.2:14). இதெல்லாம் என்ன காண்பிக்கிறதென்றால் இயேசு மூலம்தான் நாம் வெற்றி வாழ்க்கை வாழமுடியும். இயேசு சோதிக்கப்பட்டது உண்மைதான். அந்த சோதனையில் அவர் ஜெயம் பெற்றதும் உண்மைதான். அதினால்தான் உண்மையாய் அவரை பின்பற்றுகிறவர்கள் இந்த பூமியில் வெற்றி வாழ்க்கை வாழ முடிகிறது. ஆனால் பிசாசினால் சோதிக்கப்பட்ட முகமது அவர்களின் நிலமை இப்பிடி இருக்கவில்லை.

முகம்மது அவர்களுக்கு ஒருவர் சூனியம் வைத்ததாகவும் அதினால் பாதிக்கப்பட்ட அவர் செய்யாத ஒன்று செய்ததாகவும், செய்தவைகள் செய்யவில்லை என்றும் சொல்லும் அளவிற்கு பாதிக்கப்பட்டார்கள் என்று ஆதாரப் பூர்வமான எல்லாரும் அங்கீகரித்த ஹதீசு புகாரியிலும், அஹமதிலும் பார்க்கலாம்.



அயிஷா, அறிவிக்கும் ஒரு செய்தி பாருங்கள் (புகாரி 3268)

நபி அவர்களுக்கு சூனியம் வைக்கப்பட்டது. எந்த அளவிற்கென்றால் அவர் ஒரு செயலைச் செய்யாமலிருக்க, அதை செய்தது போன்று அவர்களுக்குப் பிறமையூட்டப்பட்டது. ஒரு நாள் என்னை அழைத்தார்கள். “எனக்கு நிவாரணம் கிடைக்கும் வழியை இறைவன் காட்டிவிட்டான் என்பது உனக்குத் தெரியுமா?” என்று கேட்டார்கள். “இரண்டு மனிதர்கள் என்னிடம் வந்தனர். அவர்களில் ஒருவர் என்தலைப் பகுதியில் அமர்ந்து கொண்டார். மற்றொருவர் என் கால் பகுதியில் அமர்ந்து கொண்டார்.” “இந்த மனிதனுக்கு ஏற்பட்ட நோய் என்ன?” என்று ஒருவர் மற்றவரிடம் கேட்டார். இவருக்கு சூனியம் வைக்கப்பட்டுள்ளது. மற்றவர் விடையளித்தார் ‘இவருக்குச் சூனியம் செய்தவர் யார்?’ என்று முதலாமவர் கேட்டார். ‘லபீத் பின் அல்அஃஸம் என்பவன் சூனியம் வைத்துள்ளான்’ என்று இரண்டாமவர் கூறினார். எதில் சூனியம் வைக்கப்பட்டுள்ளது?’ என்று முதலாமவர் கேட்டார். அதற்கு இரண்டாமவர், ‘சீப்பிலும் உதிர்ந்த முடியிலும் பேரீச்சை மரத்தின் பாளையிலும் சூனியம் வைக்கப்பட்டுள்ளது’ என்று விடையளித்தார். எந்த இடத்தில் சூனியம் வைக்கப்பட்டுள்ளது? என்று முதலாமவர் கேட்டார். ‘தர்வான் என்ற கிணற்றில் வைக்கப்பட்டுள்ளது’ என்று இரண்டாமவர் கூறினார் என்று நபி அவர்கள் என்னிடம் கூறினார்கள். பின்னர் அந்தக் கிணற்றுக்குச் சென்றுவிட்டு திரும்பி வந்தார்கள். அங்குள்ள பேரீச்சை மரங்கள் ஷைத்தான்களின் தலைகளைப்போன்று இருந்தது என்று என்னிடம் கூறினார்கள். “அதை அப்புறப்படுத்தினீர்களா?” என்று நான் கேட்டேன். அதற்கு நபியவர்கள், “இல்லை! அல்லாஹ் எனக்கு நிவாரணம் அளித்து விட்டான். மக்கள் மத்தியில் தீமையை பரப்பக்கூடாது என்று நான் அஞ்சுகிறேன்” என்று கூறினார்கள். பின்னர் அந்தக் கிணறு மூடப்பட்டது. இது முகமதின் மனைவி ஆயிஷா அறிவிக்கும் செய்தியாகும். இதேகாரியம் புகாரி 3175, 5763லும் பார்க்கலாம். 5765ல் பார்க்கும்போது மனைவியிடம் சேராமலே சேர்ந்ததாக அவர் நினைப்பார்கள் என்றுள்ளது. அஹமத் அவர்கள் தொகுத்த ஹத்ஸீல் ஆறுமாதங்கள் நபி அவர்கள் இப்படி இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது. பார்க்க அஹமத் 23211.

சூனியம் செய்வது என்பது தங்களுக்குக் கீழ்ப்படியும் அசுத்தாவிகளைக் கொண்டு பிறமனிதர்களைக் கெடுப்பதற்கு துஷ்ட்ட மனிதர்கள் செய்யும் ஒரு செயலாகும்.

அப்படிப்பட்ட ஒரு செயலிலே நபி அவர்கள் தோற்றுப்போனதை நாம்

இங்குப் பார்க்கிறோம். ஆனால் சாத்தான் நேரடியாக வந்தும் ஆண்டவர் இயேசுகிறிஸ்து அந்த சாத்தானை ஜெயித்ததும் சாத்தானை விரட்டியதும் நாம் வேதத்தில் பார்க்கமுடியும் நபி அவர்களைப் பாதித்தவிதமான அசுத்தாவிகள் இயேசுவை கண்டபோது பயந்து நடுங்கி இயேசுவின் பாதத்தில் விழுந்தும், அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து மனிதர்களை விட்டு ஓடினதும் நாம் வேதத்தில் பார்க்கமுடியும்.

நபி அவர்கள் சாதாரண அசுத்தாவியிடம் தோற்றுபோனதும் ஆறுமாத காலம் அந்த ஆவியில் கட்டுப்பாட்டில் இருந்ததும் ஆதாரப்பூர்வமான ஹதிஸ்கள் அறிவிக்கின்றன. இந்த காலயளவில் வஹீ என்று தவறான காரியங்களும் நபி அறிவித்திருக்கலாம். அல்லவா என்று ஒரு இஸ்லாமிய அறிஞரிடம் கேட்டபோது மற்ற காரியங்களில் மட்டும்தான் தவறு நடந்தது என்று வஹீ அறிவிக்கும்போது அவர் தெளிவாகத்தான் அறிவித்தார் என்று சொல்லுகிறார்.

ஆனால் இன்னொருவர் சொன்னபதில் என்னவென்றால் நபி அவர்களுக்கு சூனியம் வைக்கப்பட்டது என்று சொல்லும் ஹதிஸிகளெல்லாம் தவறான ஹதீஸிகளாகும். ஏன் என்றால் அப்படி சூனியம் வைக்கப்பட்டு அதினால் நபி பாதிக்கப்பட்டிருந்தால் அந்தகாலத்து மனிதர்கள் எவரும் அதை பேசி இருப்பார்கள். ஆனால் அந்தகாலத்து மனிதர்கள் எவரும் அதைக் குறித்துச் சொல்லாததால் இந்த ஹதிஸிகள் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்றார்.

ஆதலால் குர்ஆன் வசனம் சொல்வதை கவனியுங்கள் (17:47). ‘‘சூனியம் செய்யப்பட்ட ஒரு மனிதரையே நீங்கள் பின்பற்றுகிறீர்கள்’’ என்று அநீதி இழைத்தோர் இரகசியமாகக் கூறியதையும் (முஹம்மதே) உம்மிடம் அவர்கள் செவியேற்றபோது எதைச் செவியேற்றார்களோ அதையும் நாம் நன்கு அறிவோம். இன்னும் பல வசனங்களில் குர்ஆனில் பார்க்க முடியும். நபியுடைய காலத்தில் அவர் சூனியத்தினால் பாதிக்கப்பட்டது பார்த்தவர்கள் அதைக் குறித்து பேசியிருக்கிறார்கள் என்றல்லவா மேலே நாம் பார்த்த வசனம் சொல்லுது. ஆதலால் அவர் மாத்திரீகத்தால் பாதிக்கப்பட்டார் என்னும் ஹதீஸிகள் உண்மைதான். ஆனால் இயேசுவை பாருங்கள் அவர் சாத்தானிடம் வெற்றிப்பெற்றவராக நிற்கிறார்.

இயேசு சாத்தானை ஜெயித்தார் மத்.4:10

இயேசு உலகத்தை ஜெயித்தார் யோவா.16:33



இயேசு மரணத்தை ஜெயித்தார் லூக்.24:5,6; வெளி.1:18

இயேசு பாதாளத்தை ஜெயித்தார் அப்.2:27, 31–32

இதுமட்டுமல்லாமல், இயேசுவை சாத்தான் எதையும் செய்யமுடியாது என்று முகம்மது சொன்னதாக நாம் ஹதீஸில் பார்க்கமுடியும். அதை பார்ப்போம். ‘‘தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் இயற்கையின் மார்க்கம்தான் பிறக்கிறான். அவனுடைய பெற்றோர்கள்தான் பின்னர் அவனை யூதனாகவோ கிறிஸ்தவனாகவோ அக்னி ஆராதனை யாளனாகவோ ஆக்கிவிடுகின்றனர். அவர்கள் இருவரும் முஸ்லீம்களா யிருந்தால், அவனும் முஸ்லீமாகிவிடுகிறான். தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு குழந்தையின் விலாப்புறத்திலும் ஷைத்தான் குத்துகிறான்; மர்யமையும் அவருடைய புதல்வர் (ஈசா) அவர்களையும் தவிர, அறிவிப்பவர் அபூஹீரைரா, நூல் முஸ்லீம், தமிழாக்கம், 5169.

இந்த ஹதிஸீல் முகம்மது தெளிவாக சொல்லும் காரியம் சாத்தான் இயேசுவை தொடமுடியாது. முஹம்மதுகூட ஷைத்தானால் குத்தப்பட்டவர் தான் என்பதை அவர் இங்கு ஒத்துக்கொள்கிறார்.’’

ஆனால் இயேசு தேவனாக இருந்தால் சாத்தானால் சோதிக்கப்படலாமா என்னும் கேள்வியில் எந்த கருத்தும் இல்லை. இயேசுவானவர் சாத்தானை ஜெயித்துவிட்டு இதுபோல் நீங்களும் சாத்தானை ஜெயிக்கவேண்டும் என்றும், அதற்குரிய அதிகரம் நான் உங்களுக்குத்தருகிறேன் என்றும் அவர் சொன்னதை லூக்.10:19ல் பார்க்கலாம். இந்தநாள் வரையில் கிறிஸ்தவனுக்கு எதிராக அநேகர் மாந்திரீக கிரியைகள் செய்துகொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவனுக்கு அவை ஒன்றும் பலிக்கவில்லை. ‘‘இவை எல்லாவற்றிலும் முற்றிலும் ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு ஸ்தோத்திரம்’’ ஆமென்.

**கேள்வி –10**

## இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்திருந்த அந்த மூன்று நாட்கள் உலகில் தெய்வம் இல்லாதிருந்ததா?

இந்த கேள்விக்கான பதில் கொஞ்சம் விளக்கமாகவே பார்க்கவேண்டும். இந்த கேள்விக்கான பதில் கிடைப்பதற்கு பரிசுத்த வேதாகமத்தில் மரணம் என்று சொல்வது என்ன என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

இந்த உலகில் அநேகர் நினைத்திருப்பது என்னவென்றால் மரணம் ஒரு மனிதனுக்கு நேரிடும்போது அவனுடைய வாழ்க்கை அத்தோடு முடிந்து விட்டது என்றுதான். ஆனால் உண்மை என்னவென்றால் இந்த உலகில் மனிதனுடைய வாழ்க்கை தற்காலிகமானதுதான். இந்த பூமியில் வாழ்க்கை முடிந்தபிறகுதான் மனிதன் நித்தியமாக வாழவேண்டிய இடத்தில் அவனுடைய வாழ்க்கை துவங்குகிறது. இதை பரிசுத்த வேதாகமம் தெளிவாக நமக்குக் காண்பிப்பதுண்டு, இந்த பூமியில் நாம் எல்லா இடங்களிலும் பார்க்கும் ஒன்று குழந்தை பிறப்பு, ஒரு குழந்தை தாயின் உற்பவிக்கும் நாள் துவங்கி, அந்த குழந்தை தாயின் கர்ப்பத்திலிருந்து வெளியில் வரும் நாள் வரைக்கும் அந்த குழந்தைக்கு இந்த பூமியைக் குறித்தும் தாயின் கருவிலிருந்து வெளியில் வந்தபிறகு ஒரு வாழ்க்கை உண்டு என்பதையும் தெரியாமலிருப்பதுபோலவே இந்த பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த பூமியில் வாழ்க்கை முடிந்தபிறகு மற்றுமொரு வாழ்க்கை உண்டு என்பதை அநேகர் அறிந்துகொள்ளாமலிருக்கிறார்கள். பரிசுத்த வேதாகமத்தில் பவுல் என்பவன் மூலமாக கர்த்தர் வெளிப்படுத்தும் ஒரு உண்மையை இங்கு பார்ப்போம் 1 கொரி.5:1,2 வரையிலான வசனங்களை நாம் படிக்கும்போது பூமிக்குரியக் கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும் தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்தியவீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் இந்த கூடாரத்திலே நாம் தவித்து நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாய் இருக்கிறோம்.

இங்கு நாம் படித்த வேதவாக்கியம் தெளிவாக சொல்லும் காரியம் என்னவென்றால் நாம் இங்கு வசித்துவரும் இந்த சரீரம் ஒரு வீடாகும். இந்த வீட்டைவிட்டு நாம் பிரிந்துசெல்லவேண்டும். இப்படி இந்த சரீரத்தைவிட்டுப் பிரிவதுதான் நாம் இங்கு மரணம் என்று சொல்லுகிறோம். ஆதலால் இயேசு கிறிஸ்துவின் மரணம் என்று சொல்லும்போது அவர் இல்லாதவராக மாறினார் என்ற நிலையில் இல்லை. இயேசு மனுகுலத்தின் பாவ பரிகாரத்திற்காக ஒரு மனிதனாக பூமியில் வந்தார். அந்த சரீரத்தில் நம்முடைய பாவத்திற்குரிய தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டு பாவபரிகார இரத்தத்தை சிந்தி பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை தழுவினார். இங்கு மூன்று காரியங்கள் அவர் செய்ததை பார்க்கமுடியும். 1. நம்முடைய பாவத்திற்கான தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார். 2. பாவபரிகாரத்திற்காக அவருடைய பரிசுத்த இரத்தத்தை அவர் சிந்தினார். 3. பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை அவர் அனுபவித்தார். ஆனால்



மரணம் என்று சொல்லும்போது எந்த மனிதனும் இந்த சரீரத்தைவிட்டுப் பிரிந்து செல்வதுபோலவே அவரும் தன் சரீரத்தைவிட்டுப் பிரிந்தார். அவர் இல்லாமல் போகவில்லை. இயேசுமட்டுமல்ல. எந்த மனிதனும் மரணம் மூலம் இல்லாமல் போவதில்லை. இந்த காரியம் இயேசு சொன்ன ஐசுவரியவானும், லாசருமாகிய இருவருடைய சம்பவத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது லூக்.16ம் அதிகாரத்தில் படிக்கும்போது, அங்கு இருவரும் மரித்தார்கள். இருவரும் இந்த பூமியிலிருந்து வேறொரு இடத்திற்கு மாற்றப்பட்டார்கள். ஒருவர் தண்டிக்கப்படும் இடத்திற்கும், ஒருவர் இளைப்பாறும் இடத்திற்கும் மாற்றப்பட்டதைப் பார்க்கலாம். இது போலவே இயேசுவும் மரணம்மூலம் தன் சரீரத்தைவிட்டு வெளியேறினார். ஆனால் இங்கு ஆவி, ஆத்துமா, சரீரம் மனிதனுக்கு இருப்பதுபோல ஆவி ஆத்துமா சரீரத்துடன் அல்லாமல், அவருடைய சரீரத்தை இங்குவிட்டுச் சென்றார். இதைக்குறித்து 1 பேது.3:19ல் அந்த ஆவியிலே அவர் போய் காவலிலுள்ள ஆவிகளுக்கு பிரசங்கித்தார் என்று பார்க்கலாம். இதைக்குறித்து எபே.4:8–10 வரையிலான வசனங்களிலும் பார்க்கலாம். இங்கு எல்லாம் இயேசுவின் சரீரமானது கல்லறையில் இருக்கும்போது அவர் செய்த காரியங்கள் சொல்லப் பட்டுள்ளதை நாம் பார்க்கலாம். ஆதலால் இயேசுவானவர் இல்லாதிருந்த ஒரு காலம் முன்பு இருந்ததில்லை. இனிமேலும் அவர் இல்லாத காலம் என்று ஒன்று இருப்பதுமில்லை. அவருக்கு இயேசு என்கிற பெயர் இல்லாதகாலம் இருக்கக்கூடும். இயேசுவானவர் பூமியில் இருந்த அந்த நாட்களில் அவர் பரலோகத்திலும் இருந்தார் என்பதை நாம் முன்பே பார்த்தோம் யோவா.1:18ல் நாம் வாசிக்கும்போது பிதாவின் **மடியிலிருந்த** ஒரேபேரான குமாரன் என்று சொல்லாமல், பிதாவின் **மடியிலிருக்கிற** ஒரேபேரான குமாரன் என்று சொல்லப்பட்டுள்ளது. இதே காரியம் யோவா.3:13ல் சொல்லும்போது பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான என்கிற வார்த்தையை கவனிக்கவேண்டும். மறுபடியுமாக சொல்லுகிறேன் இயேசு இங்கு இருந்தபோது அவர் பரலோகத்திலும் இருந்திருக்கிறார். இயேசு இங்க இருந்தபோது பரலோகில் பிதா, பரிசுத்தாவி இருந்தார். அதே பிதா பரிசுத்தாவி இயேசுவுடனும் இருந்தார். ஆதலால் உலகிற்கு தெய்வம் இல்லாத நாட்கள் ஒருபோதும் இருந்ததில்லை. ஆனால் ஒரே மெய்யான தேவன் இந்த பூமிக்கு மனிதனாக வந்தார் அவர் மனுகுலத்தின் பாவத்திற்குப் பரிகாரம் உண்டாக்கினார். இன்று அதை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் யாவருக்கும் பாவமன்னிப்பும், இரட்சிப்பும் உண்டு. மனிதன் இரட்சிக்கப் படுவதற்கு வேறே எந்த வழியும் இல்லை.

இங்கு புரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான மற்றுமொரு காரியம் என்னவென்றால், மனுகுலத்தின் பாவத்திற்காக இயேசு தண்டிக்கப்பட்டார் என்று சொல்லும்போதுஅவர் சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் ஆயத்தப்படுத்தப்பட்ட நித்திய நரகத்திற்கும் போனார் என்று அர்த்தமில்லை. ஏன் என்றால், சாத்தானுக்கும் அவன் தூதர்களுக்கும் ஆயத்தப்படுத்தப்பட்ட நித்திய நரகத்தில் தள்ளப்படுவது இரண்டாம் மரணமாகும். (வெளி.20:14,15) வசனங்களை வாசிக்கும்போது இதைப் பார்க்கலாம். இரண்டாம் மரணத்திற்கு யார் பாத்திரவான்கள் என்று கேட்டால் அதற்கு பரிசுத்த வேதாகமம் சொல்லும் பதில் இயேசு கிறிஸ்து மூலமாக மனிதனுக்காக தேவன் ஆயத்தம் பண்ணின இரட்சிப்பை யாரெல்லாம் புறக்கணிக்கிறார்களோ அவர்கள்தான் இரண்டாம் மரணமாகிய நித்திய நரகத்தில் தள்ளப்படுவார்கள்.

முதல் மனிதனாகிய ஆதாம் மூலம் வந்த மரணத்திற்குதான் இயேசு கிறிஸ்து பரிகாரம் செய்தார். அதற்காக மரித்த அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். தேவன் ஆயத்தம் செய்த இரட்சிப்பை ஏற்றுக்கொண்டு மரிக்கிறவர்கள் மட்டுமல்லாமல், இந்த இரட்சிப்பை ஏற்றுக் கொள்ளாதவர்களும் மரித்தபிறகு உயிர்த்தெழுவார்கள். இதைக்குறித்து நாம் யோவா.5:29ல் வாசிக்கிறோம். ‘‘அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். இங்கு இரண்டு பிரிவினரும் ஒரே நேரத்தில் எழுந்திருப்பதுபோல தோன்றும்.’’ ஆனால் அப்படியல்ல, உயிர்த்தெழுவது ஒவ்வொருவம் அவரவர் வரிசையில்தான் என்று 1 கொரி.15:22–24 வரையிலான வசனங்களில் பார்க்கலாம். 23ம் வசனம் இப்படி சொல்கிறது. ‘‘அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து. பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அதன்பின்பு முடிவு உண்டாகும். இந்த வசனங்களிலிருந்து நாம் புரிந்துகொண்ட காரியம், இயேசுவை தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டு இந்த பூமியில் மறைந்தவர்கள் நித்திய ஜீவன் அடைவதற்கும் இயேசு கிறிஸ்து மூலமாக தேவன் ஆயத்தம் செய்த இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளாதவர்கள் நித்திய தண்டனைக்காகவும் உயிர்த்தெழுவார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் மரிக்கிறவர்களுக்கு கிடைக்கும் இரண்டாம் மரணமாகிய நித்திய நரகத்திலிருந்து எவரும் ஒரு காலமும் வெளியே வரமுடியாது. தேவன் மனிதனுக்காக நரகத்தை உண்டாக்கவில்லை’’ மத்.25:41ல் வாசியுங்கள். ‘‘அப்பொழுது இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர், சபிக்கப்



பட்டவர்களே என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். இங்கு தெளிவாக சொல்லும் காரியம் மனிதனுக்காக தேவன் நரகத்தை உண்டாக்கவில்லை. ஆனால் மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படியாமலும், தேவன் ஏற்படுத்தின இயேசுகிறிஸ்துமூலம் கிடைக்கும் இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளாமலும் இருப்பதின்மூலமாக மனிதன் தேவனைவிட்டு யாரிடம் பற்றுதலாயிருந்தானோ அந்த சாத்தான் போகும் இடமாகிய நித்திய நரகத்தில் போக வேண்டியதும் அங்கு தன் நித்தியகாலம் கழிக்க வேண்டியதும் மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது.’’

இப்படியாக நித்திய நரகம் என்பது சாத்தானுக்கும் அவன் தூதர்களுக்கும் உள்ளதுதான். ஆதலால் அதிலிருந்து யாரையும் இரட்சிக்கமுடியாது. அதற்காக எந்த பரிகாரமும் கிடையாது. இயேசுகிறிஸ்துவை தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தும் அதை பயன்படுத்திக்கொள்ளாமல் தங்களுடைய சொந்த நீதியை தேடுகிறவர்களுக்குத்தான் நித்திய நரகம். சொந்த நீதி என்பது தாங்கள் செய்யும் தானதர்மங்களும், அல்லது தங்களுக்கு இறைவன் கொடுத்த பொருளோ பணமோ இறைவனுக்கு கொடுத்து அதன்மூலம் பாவமன்னிப்பு பெற்றுக் கொள்ளலாம என்று மேட்டிமையாயிருப்பதும். இதுவும் அல்லாமல் பாவத்திற்குரிய தண்டனை சுயமாக ஏற்றுக்கொண்டு அந்த தண்டனை அனுபவிக்கிறேன் என்று சொல்பவர்களும், இப்படிப்பட்ட பலகாரியங்களை செய்கிறவர்களெல்லாம் சுயநீதியை தேடுகிறவர்கள்தான். இப்படிப்பட்டக் கூட்டத்தில் இல்லாமல் இரட்சிக்கப்பட்டக் கூட்டத்தில் இந்தப் புத்தகம் வாசிக்கும் அனைவரும் காணும்படி வாஞ்சிக்கின்றேன் ஜெபிக்கின்றேன். கேட்கப்பட்ட கேள்விக்கு திரும்ப வருவோம். இயேசுகிறிஸ்து மரித்தபிறகு அவர் உயிர்த்த மூன்றாம் நாள் வரைக்கும் உலகில் தெய்வம் இல்லாமல் இருந்ததா என்பது கேள்வி. இயேசுகிறிஸ்து இல்லாமல் போகவில்லை என்பதை நாம் பார்த்தோம். அதுமட்டுமல்லாமல் திரியேக தேவன் அவர் மனுகுலத்தின் பாவத்திற்கு பரிகாரம் செய்ய இந்த பூமியில் வந்தபோது பரலோகில் அவர் இல்லாமல் இங்கு வரவில்லை என்பதை நாம் முன்னமே விளக்கமாக அறிந்துகொண்ட காரியம்தான். ஆதலால் அதைக்குறித்து மறுபடியுமாக இங்கு எழுத விரும்பவில்லை. உலகில் தேவன் இல்லாதிருந்த ஒரு நாளும் கிடையாது என்பதை புரிந்திருக்கும் என்று விசுவாசிக்கிறேன்.

**கேள்வி –11**

## இயேசு கடவுளாக இருந்தால் "என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று அழுதது ஏன்? மட்டுமல்லாமல் கெத்சமனே தோட்டத்தில் இந்த பாத்திரம் என்னைவிட்டு அகற்றும் என்று கேட்டுக்கொண்டது ஏன்?

இந்த இரண்டு கேள்விகளும் ஒன்றோடு ஒன்று இசைவு உள்ள கேள்வி என்பதால் இரண்டிற்கும் சேர்த்து பதில் எழுதுகிறேன்.

இயேசு இறைவனாக இருந்தால் ஏன் இறைவனிடம் பிரார்த்தனை செய்யவேண்டும். இயேசு கிறிஸ்து மெய்யான தேவன் என்பதற்கு நாம் முன்பே ஆதாரங்களைப் பார்த்துவிட்டோம். ஆதலால் ஏன் பிரார்த்தனை செய்யவேண்டும். மனுகுலத்தின் பாவபரிகாரத்திற்காக இயேசு செய்த காரியங்கள் அநேகம் இருந்தாலும் அதில் மிகவும் முக்கியமான மூன்று காரியங்கள் நாம் முன்பே பார்த்தோம். அவை என்னவென்றால் 1. நம்முடைய பாவ பரிகாரத்திற்கான தண்டனை அவர் ஏற்றுக்கொண்டார் 2. தேவனைவிட்டு அகன்று போயிருந்த மனுகுலத்தை மீட்கும் பொருளாக அவருடைய பரிசுத்த இரத்தத்தை சிந்தினார் 3. பாவத்தின் சம்பளமாகிய மரணம் அவர் ஏற்றுக்கொண்டார். இதில் நம்முடைய பாவத்திற்கான தண்டனை என்று சொல்லும்போது அநேகரும் என்ன நினைத்திருக் கிறார்கள் என்று கேட்டால், இயேசு சிலுவை சுமந்ததும், போர் சேவகர்களும் மற்றும் பலரும் அவரை அடித்ததும், பரிகாசம் பண்ணினதும்தான் அவருக்கு கிடைத்த தண்டனை என்று, ஆனால் உண்மை அப்படியல்ல. மேலே சொல்லப்பட்ட காரியங்களெல்லாம் வேதனையுள்ளதுதான். அதைவிட அதிகமான வேதனையுள்ள காரியம் என்னவென்றால் பிதாவாகிய தேவனால் கைவிடப்படுவதுதான். பாவம் மூலமாக கைவிடப்பட்ட மனுகுலத்தை மறுபடியுமாக தமக்கு சொந்தமாக்கிக்கொள்ளும்படி இப்போது அவருடைய ஒரே பேரான குமாரனை பிதாவானவர் விடுவதுதான் நாம் கல்வாரி சிலுவையில் பார்க்கும் காரியம். இயேசுவானவர் மெய்யான தேவனாக இருக்கும் அதே நேரத்தில் அவர் மனிதனாகவும் இருக்கிறார். முழுமனுகுலத்தின் பிரதிநிதியாகதான் இப்போது இயேசு சிலுவையில் தொங்குகிறார். தேவனால் கைவிடப்படுவது என்கிற தண்டனை இயேசு நமக்காக அனுபவிக்கிறார்.

தன் சீஷர்களால் கைவிடப்பட்டதும், தன் ஜனமாகிய இஸ்ரவேலரால் கைவிடப்பட்டதும், நீதி நடத்தவேண்டிய நியாயாதிபதியால் கைவிடப்பட்டதும்



தன்னிடமிருந்து அற்புத அதிசயங்களால் நன்மையைப் பெற்றுக் கொண்டவர்களால் கைவிடப்பட்டதும், நாம் வேதத்தில் பார்க்கமுடியும். அப்போதெல்லாம் அவர்கள் யாரையும் கூப்பிட்டு இந்த கேள்வியை அவர் கேட்கவில்லை. ஆனால் முழு மனுகுலத்தினுடைய பாவங்கள் சுமந்து கொண்டு அவர் சிலுவையில் தொங்கும்போது பிதா அவரை கைவிட்டார். பிதா அவரை கைவிடாமலிருந்தால் அவருக்கு மரணம் வராது அப்படி சம்பவித்திருந்தால் இரட்சண்ய வேலை பூர்ணமாகாமல் போயிருக்கும். ஆனால் இரட்சண்ய வேலையானது பூர்ணமாகும்படியாக பிதா அவரை கைவிட்டார். இந்த நேரத்தில் அவர் 100%தேவனாக மட்டும் இல்லாமல் 100% மனிதனாகவும் இருப்பதால் அவரிலுள்ள மனிதன் ஏன் என்னை கைவிட்டீர் என்று பிதாவை நோக்கிக் கூப்பிடுகிறார். இதைக்குறித்து (எபி.5:7)ல் சொல்லும்போது தன்னை மரணத்திலிருந்து இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி விண்ணப்பம் பண்ணினார் என்றும், அந்த விண்ணப்பம் கேட்கப்பட்டது என்றும் பார்க்கலாம். எப்படிதான் ஜெபம் கேட்கப்பட்டது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனுகுலத்தின் பாவபரிகாரத்திற்காக சிலுவையில் மரிக்கவேண்டும் எண்பது தேவசித்தம், ஆனால் கெத்சமனை தோட்டத்தில் அவர் ஜெபிக்கும்போது அவருடைய ரத்தம் வேர்வையாக சிந்தினது என்று பார்க்கிறோம் இந்த நிலையில் அவர் அங்கு மரித்துவிடும். சூழ்நிலையிலிருந்தது. ஆதலால் அங்கு அவர் மரிக்காதபடி மரணத்திலிருந்து தன்னை தப்புவிக்க வல்லவராகிய தேவனிடம் ஜெபித்தார். அதுவுமல்லாமல் மனுகுலத்தின் பாவம் நான் ஏற்றுகொள்வதே அல்லாமல் வேறு ஏதாகிலும் வழி இருந்தால் அதை செய்யவேண்டும் என்றும் ஜெபித்தார். மெய்யான தேவனாக இருந்த இயேசுகிறிஸ்து தன் சரீரத்திலிருந்து பிரிந்தபிறகு அதாவது மரணத்தை அவர் அனுபவித்த பிறகுதான் தேவனாக பரலோகம் போகவில்லை. மறுபடியுமாக மனித சரீரத்தில் மூன்றாம் நாளில் உயிர்த் தெழுந்து பலருக்கும் பல நாட்கள் தரிசனமாகி பிறகு பரத்திற்கு ஏறிப்போய் மனுகுலத்திற்காக பரிந்துபேசும் பிரதான ஆசாரியனுடைய ஊழியம் செய்யும்படி பிதா அனுமதி கொடுத்தார். இப்போதும் இயேசுகிறிஸ்து பரத்தில் குமாரனாகதான் வேலையை செய்துகொண்டிருக்கிறார். மனித சரீரத்தில் இருந்துகொண்டு அவர் செய்யவேண்டிய ஊழியம் இன்னமும் முடியவில்லை. அவர் பூமியில் இருந்தபோது நம் அனைவருக்கும் இருப்பதுபோல் சரீரம் உடையவராக இருந்தார். இப்போது பரலோகத்தில் மகிமையின் சரீரத்தில் அதாவது மறுரூபமாக்கப்பட்ட சரீரத்தில் இருக்கிறார். காரியம் இப்படி யிருப்பதினால் பூமியில் அவர் இருந்தபோது அவரிலுள்ள மனிதனுக்கு பசி,

சோர்வு, தாகம் எல்லாம் இருந்தது. ஆனால் அவர் 100% தேவனாகவும் இருந்தார். அந்த மெய் தேவனுக்கு சோர்வோ, பசியோ, தாகமோ இருந்ததில்லை. ஆதலால் அவரிலுள்ள மனிதன் தேவனை நோக்கி ஏன் என்னை கைவிட்டீர் என்று கேட்டாரேயல்லாமல் மெய் தேவனாகிய அவர் அப்படி கேட்கவில்லை.

இந்த காரியம் இன்னும் நன்றாக புரிந்துகொள்ளும்படி இயேசு பூமியில் இருந்தபோது நடந்த ஒரு சம்பவத்தை மாற்.4ஆம் அதிகாரத்திலிருந்து எழுதுகிறேன். அன்று சாயங்காலத்தில் அவர் அவர்களை நோக்கி, அக்கரைக்கு போவோம் வாருங்கள் என்றார். அவர்கள் ஜனங்களை அனுப்பிவிட்டு, அவர் படவிலிருந்தபடியே அவரைக் கொண்டு போனார்கள். வேறே படகுகளும் அவரோடே கூட இருந்தது. அப்பொழுது பலத்த சுழற் காற்று உண்டாகி, படகு நிரம்பத்தக்கதாக அலைகள் அதின்மேல் மோதிற்று. கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையா யிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி; போதகரே நாங்கள் மடிந்துபோகிறது உமக்கு கவலையில்லையா என்றார்கள். அவர் எழுந்து காற்றை அதட்டி கடலைப்பார்த்து இரையாதே அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. இந்த சம்பவம் மாற்.4:35–41 வரையிலான வசனங்களில் பார்க்கலாம். இங்கு ஆண்டவர் இயேசுகிறிஸ்து நித்திரையாயிருந்தார் என்று உள்ளது. இந்த சம்பவத்தில் பலத்த சுழற்காற்று உண்டாகி, படகு நிரம்பத்தக்கதாக அலைகள் அதின்மேல் மோதிற்று என்றும் பார்க்கலாம். இவ்வளவு பெரிய காற்று படகின்மேல் அடித்து படகு முழுகிப்போகும் நிலைமை ஏற்பட்டபோது சீடர்கள் வாய்மூடி பேசாமலிருந் திருப்பார்களா? நிச்சயமாக ஒவ்வொருவரும் சப்தம் போட்டு பிறரிடம் பேசியிருப்பார்கள். அதுமட்டுமல்லாமல் கடல் கொந்தளிக்கும்போது எவ்வளவு பெரிய சத்தம் உண்டாயிருக்கும் என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். அப்பொழுதெல்லாம் அவர் எழுந்திருக்கவில்லை. ஆனால் தன்னுடைய சீஷர்கள் அவரைக் கூப்பிட்ட அந்த நொடிப்பொழுதில் ஆண்டவர் எழுந்து காற்றையும் கடலையும் அதட்டினதும் பெரிய அமைதி உண்டானதையும் நாம் பார்க்கலாம். இதிலிருந்து நாம் புரிந்துகொள்வது என்னன அவர் மனிதனாக உறங்கிக்கொண்டிருந்தாலும் “இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை” சங்.121:4 என்கிற வசனத்தில் சொல்லப்பட்டுள்ளதுபோல சீஷர்களுடைய ஒரே ஒரு குரலில் அவர் எழுந்தார். காற்றையும் கடலையும் அதட்டினார். அமைதி உண்டாயிற்று. அவரிலுள்ள மனிதன் தூங்கினாலும் மெய்தேவன் தூங்கவில்லை. இதுதான் சிலுவையிலும் நடந்தது. அவரிலுள்ள மனிதன் ஏன்



என்னை கைவிட்டீர் என்று பிதாவை நோக்கிக் கூப்பிட்டது உண்மைதான். இதில் எந்த தப்பும் கிடையாது. காரணம் சிலுவையில் அவர் மனுகுலத்தின் பிரதிநிதி தான் . இதே காரணத்தினால்தான் கெத்சமனேத் தோட்டத்திலும் அவர் பிரார்த்தனை செய்தார்.

**கேள்வி –12**

## யார் யாரோ செய்த பாவங்களுக்கு இன்னொருவரை தண்டிப்பது தேவனுக்கு நீதியாயிருக்குமா?

இது நியாயமான கேள்விதான். தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவா.4:8) அதே நேரத்தில் அவர் நீதியுள்ளவருமாக இருக்கிறார். மனிதராகிய நம்மை நேசிக்கிற தேவன், நான் இவர்களை நேசிக்கிறேன். ஆதலால் இவர்களை தண்டிக்காமல் விடுகிறேன் என்று சொல்லமுடியாது. பாவத்திற்கு தண்டனை கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் தேவனுடைய நீதி விளங்கும். ஆனால் மனுகுலத்தின் பாவத்திற்கான தண்டனை தேவன் மனிதனுக்கு கொடுத்தால் அதை அவனால் தாங்கிக்கொள்ளமுடியாது. ஆனால் பாவத்திற்கு தண்டனை கொடுக்கவேண்டும். இப்பொழுது தேவனுடைய அன்பும் நீதியும் விளங்கும்படியாக தேவன் செய்த காரியம் என்ன என்பதை பார்ப்போம்.

மனிதர்கள் அனைவரும் பாவிகள் என்று தீர்ப்பளித்தார். எல்லோரும் வழிதப்பி ஏகமாய் கெட்டுப்போனார்கள். நன்மை செய்கிறவன் இல்லை. ஒருவனாகிலும் இல்லை (ரோம.3:18). இன்னும் எல்லாரும் பாவிகள் என்பதை கர்த்தர் சொல்லும் வசனங்களை முன்பே நாம் பார்த்திருக்கிறோம். இப்படியாக எல்லாரும் பாவிகள் என்று தீர்ப்பளித்த தேவன் அவர்களுக்கான தண்டனையையும் அறிவித்தார். இப்பொழுது இந்த தண்டனையை மனிதன் அனுபவிக்க சொன்னால் அவன் என்றைக்கும் தேவனோடு திரும்ப சேரமுடியாத நிலைமை வரும். ஆதலால் இந்த குற்றம் இன்னொருத்தர்மேல் சுமத்த வேண்டியதாக உள்ளது. இந்த தண்டனை தேவதூதர்கள் அனுபவிக்க சொன்னால் அது அநீதியாகும். ஏதேனும் விலங்குகளுக்கு இதற்குரிய தண்டனையை கொடுக்கலாம் என்று வைத்தாலும் மனிதனுடைய பாவத்திற்கு தூதர்களையோ, விலங்குகளையோ தண்டிப்பது நிச்சயமாக நியாயமாக இருக்காது. மனிதனுடைய பாவத்திற்கு மனிதனே தண்டிக்கப்படவேண்டும். மனிதருக்குள் யாராகிலும் ஒருவர் பாவமில்லாதவராய் இருந்தால் அவரை தண்டிக்கலாம் என்று பார்த்தால் பாவம் செய்யாத ஒருவரும் இல்லை.

இங்குதான் மகாபரிசுத்தராகிய தேவனுடைய அன்பு வெளிப்படுகிறது. என்றைக்கும் தன்கூட இருக்கவேண்டும் என்று தேவன் சிருஷ்டித்த மனிதன்

தன்னைவிட்டு என்றென்றைக்குமாக பிரிந்துவிடும் என்கிற சூழ்சிலை ஏற்பட்டபோது அன்புள்ளவரும் அதே நேரம் நீதியுள்ளவருமாகிய தேவன் செய்த காரியம் மனுகுலத்திற்கு கிடைக்கவேண்டிய தண்டனை அவரே ஏற்றுக்கொள்கிறார். அவர் நியாயாதிபதியாக இருந்தாலும் அந்த இடத்திலிருந்து அவர் கீழ் இறங்கி நம்மைப்போல ஒரு மனிதனாக வந்தார். அவர்தான் ஆண்டவராகிய இயேசு. அவர்தான் நம்முடைய பாவத்திற்கு பரிகாரம், நீதியுள்ள தேவன் ஒருவருடைய குற்றத்திற்கு மற்றொருவரை சிட்சிக்கவில்லை. நீதிமானாகிய தேவன் அவர் நம்மேல் வைத்த அன்பினிமித்தம் அவரே பாவத்திற்குரிய தண்டனையை ஏற்றுக்கொண்டார். இவ்விதமாக மனிதன் மீண்டும் பரலோகம் செல்லும்படி தேவனே புதுவழி திறந்தார். அதினால்தான் இயேசு பூமியில் இருந்தபோது ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரான்'' (யோவா.14:6). இன்னும் எபி.10:19ல் ஆகையால் சகோதரரே நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினபடியால், என்றும் பார்க்கலாம். இதிலிருந்து என்ன விளங்குகிறது என்றால் முழு உலகத்திலும் அநேக மதங்கள் இருந்தாலும் பரலேகாம் செல்வதற்கு மார்க்கம் ஒன்றுதான் உண்டு. அதுதான் கிறிஸ்தவம். கிறிஸ்தவம் என்பது ஒரு மதம் கிடையாது. கிறிஸ்தவம்தான் பரலோகம் செல்லக்கூடிய ஒரே ஒரு மார்க்கம். ஆனால் இன்று அநேகர் கிறிஸ்தவத்தை ஒரு மதமாக்கிவிட்டார்கள் என்பதும் உண்மைதான். அதை தேவன் பார்த்துக்கொள்வார். ஏன் கிறிஸ்தவம் மட்டும்தான் பரலோகத்திற்கு வழி என்று சொல்ல காரணம்? மதங்கள் எல்லாம் நீங்கள் ஏதாகிலும் ஒரு கிரியை செய்து நீங்களே பரலோகத்திற்கு வழியைப் பண்ணிக்கொள் என்று சொல்லும்போது கிறிஸ்தவம் மட்டும் உங்களுக்கு பரலோகம் செல்லவழி ஆயத்தமாகிவிட்டது. நீங்கள் விசுவாசித்து அதை ஏற்றுக்கொண்டால் போதும் என்று சொல்கிறது. ''கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு, ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல'' (எபே.2:8,9).

அன்பு சகோதரனே, சகோதரியே இங்கு கிரியைகளினால் இரட்சிக்கப் படுவதில்லை கர்த்தர் உனக்காக செய்ததை நீ விசுவாசித்து ஏற்றுக் கொண்டால் போதும். ஏற்கனவே அவர் மார்க்கத்தை உண்டுபண்ணி வைத்திருக்கிறார். நீ பேரீட்சம் பழம் கொடுத்தும், மலைஏறியும், மற்றும் வழியை உண்டாக்கவேண்டியதில்லை பரலோகம் செல்லும் வழியை உன்னால்



உண்டாக்க முடியாது என்பதை ஒத்துக்கொள் தேவன் ஆயத்தம் செய்த வழியை ஏற்றுக்கொள். ஆண்டவர் சொல்வதை கவனியுங்கள்.

''இதோ நான் பாவம் செய்யவில்லையென்று நீ சொல்லுகிறதினிமித்தம் நான் உன்னோடே வழக்காடுவேன்.'' உன் அக்கிரமத்தையும், என் சத்தத்திற்கு செவி கொடாமல் போனதையும் ஒத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே.2:35; மற்றும் 3:13). நீ ஒரு பாவி என்று ஒத்துக்கொள். எனக்கு மன்னிப்பு வேண்டும் என்று இயேசுவிடம் கேள். ''தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இறக்கம் பெறுவான்'' (நீதி.28:13). நமக்கு பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது (1 யோவா.1:8). என் இதயத்தை சுத்தமாக்கினேன். என் பாவமறத் துப்புரவானேன் என்று சொல்லத் தக்கவன் யார்? (நீதி.20:9). பாவமன்னிப்பு பெறும்படி இயேசுவிடம் உங்களை அற்பணியுங்கள். தேவன் நம்முடைய பாவங்களை இன்னொருத்தர்மேல் சுமத்தவில்லை. அவரே அதை எற்றுக்கொண்டார். அதற்காகவே அவர் மனிதனாக வந்தார். இந்த சத்தியத்தை மக்கள் அறிந்து விசுவாசித்து இரட்சிக்கப்படக்கூடாது என்பதற்காகதான் சாத்தான் பலகிரியைகளைச் செய்து வருகிறான். அதில் ஒன்றுதான் இயேசு தெய்வம் இல்லை என்று சொல்லி ஜனங்களை சத்தியத் திலிருந்து விலக்கும் உபதேசம். ஆதலால் இதைபடிக்கும் சகோதரரே, சகோதரியே சத்தியம் உங்களுக்கு சொல்லியாயிற்று. இனிமேல் நீங்கள் போக்கு சொல்லமுடியாது.

இயேசு மனிதனாக இருந்ததின் காரணங்கள் ஆரம்பத்திலே எழுதியுள்ளேன். இன்னும் Mr.ஜைன்னுள் ஆபிதின் கேட்டுள்ள சில கேள்விகள் தான் எப்படிப்பட்ட மனிதன் என்பதை விளங்கச் செய்யும்படி கேட்டுள்ளதால் அவருக்காகவும் அவருடைய அதே மனநிலை கொண்டவர்கள் அறியும்படியாகவும் சில பதில்கள் எழுதுகிறேன்.

இந்தப் பகுதியில் வரும் சில கேள்விகளும் அதற்கான பதில்களும்

**கேள்வி –13**

## இயேசுவிற்கு மனிதனை மதிப்பிடத் தெரியவில்லை:

பேதுரு சாத்தானுக்குரிய காரியங்கள் சிந்தித்தவனும் இயேசுவை மறுதலித்தவனுமாக உள்ளதே. அவனை ஏன் சீடர்களில் ஒருவனாகத் தெரிந்துக்கொண்டார்? அல்லது சீடர்களுக்கு தலைவனாக வைத்தது ஏன் என்று கேள்வி.

இயேசு இப்படி செய்ததினால் அவருக்கு மனதிர்களை பகுத்தறியும் திறமை இல்லை என்பது குற்றச்சாட்டு.

இயேசுவுக்குக் காரியங்கள் பகுத்தறிந்துகொள்ளக் கூடிய திறமை இல்லாததினால் அவர் அப்படிச் செய்யவில்லை, இதைக் குறித்து பரிசுத்த வேதம் என்ன சொல்வது என்பதைப் பார்ப்போம்.

பஸ்கா பண்டிகையில் அவர் எருசலேமில் இருக்கையில் அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு: அவருடைய நாமத்தில் விசவாசம் வைத்தார்கள். அப்படி இருந்தும் **இயேசு எல்லாரையும் அறிந்திருந்த படியால்,** அவர்களை நம்பி இணங்கவில்லை. மனுஷர் உள்ளத்தில் இருப்பதை **அவர் அறிந்திருந்தபடியால்** மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்கு சாட்சி கொடுக்க வேண்டியதாய் இருக்கவில்லை (யோவா.2:23–25)

இவன் தேவதூஷணம் சொல்லுகிறான் என்று தங்கள் உள்ளத்தில் சொல்லிக் கொண்டார்கள். இயேசு அவர்கள் நினைவுகள் அறிந்து நீங்கள் உங்கள் இருதயத்தில் பொல்லாதவைகள் சிந்திக்கிறதென்ன? மத்.9:3,4; மாற்.2:8).

இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி தனக்குத்தானே விரோதமாய் பிரிந்திருக்கிற ராஜ்யம் பாழாய்போம் (மத்.12:25).

அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் குற்றம் பிடிக்கும்படி ஓய்வுநாளில் சொஸ்தம் ஆக்குவாரா என்று அவர்மேல் நோக்கமாய் இருந்தார்கள். அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்து... (லூக்.6:7,8)

பின்பு தங்களில் எவன் பெரியவனாய் இருப்பான் என்கிற வாக்குவாதம் அவர்களுக்குள் உண்டாயிற்று இயேசு அவர்கள் இருதயத்தின் யோசனையை அறிந்து... (லூக்.9:46,47).

வேறு சிலர் அவரை சோதிக்கும்படி வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காட்ட வேண்டும்மென்று அவரிடத்தில் கேட்டார்கள். அவர்களுடைய சிந்தனைகள் அவர் அறிந்து... (லூக்.16:17).

கடலுக்குள் ஓடிக்கொண்டிருந்து மீனையும் மீனின் வயிற்றில் இருந்த பணத்தையும் தூரத்திலிருந்து பார்த்தவர் இயேசு என்பதை மத்.17:27ல் பார்க்கலாம்.

ஒரு கிராமத்திலிருந்து வேறொரு கிராமத்தில் கட்டியிருந்த கழுதையை அவர் கண்டார் (லூக்.19:22,23).



சமாரியாவில் ஒரு ஸ்திரியிடம் பேசுகையில் அவளுடைய வரலாறு எல்லாம் இயேசு அவளுக்குச் சொன்னார் என்று சாட்சிக் கொடுக்கிறாள் (யோவா.4:29).

இப்படியாக மனிதனுடைய நினைவுகளும் அல்லாமல் இயேசு இருந்த ஊரிலே காரியங்கள் அல்லாமல் மற்ற இடங்களில் என்ன நடக்கிறது என்பதையும் அவர் அறிந்தவராக இருந்தார். எடுத்துக்காட்டாக பெத்தானியாவில் லாசரு மரித்துப்போனது அவர் வேறொரு ஊரில் இருந்து சொல்வதை யோவா.11:14ல் பார்க்கலாம். மட்டுமல்லாமல் யூதாஸ் அவரைக் காட்டிக்கொடுக்கும் என்பதையும் பேதுரு அவரை மறுதலிக்கும் என்பதையும் அவர் முன்கூட்டியே சொல்லி இருந்தார். எல்லாம் அவர் அறிந்திருந்தாலும் அவர் பூமியில் வந்ததின் நோக்கம் அவருக்கு என்னவெல்லாம் தெரியும் என்பதை மக்களுக்கு சொல்வதற்காக அல்ல. மாறாக மனுகுலத்தின் பாவத்திற்கு பரிகாரம் செய்வதற்கு அவர் வந்தார். ஆதலால் பேதுருவை சீஷனாக தெரிந்தெடுத்ததில் எந்த தவரும் இல்லை. உலகத்தின் முடிவைக்குறித்து எந்த நாளில் எந்த நாழிகையில் அது நடக்கும் என்றுதான் சீஷர்கள் கேட்டார்கள். அதைச் சொல்வது அவருடைய வேலை அல்லாத தினால் அவர் அதைச் சொல்லவில்லை என்பதை அறிந்துகொள்.

**கேள்வி –14**

## கடவுள் தவறுகளுக்கு அப்பார்பட்டவர்!

இந்த தலைப்பில் Mr.ஜைன்னுல் ஆபிதின் என்பவர் இறைவனுக்கு மகனா? என்னும் புஸ்தகத்தில் எழுதி உள்ளதை அப்படியே இங்கு எடுத்து எழுதுகிறேன். விபசாரம் செய்வது தண்டனைக்குரிய குற்றம் என்கிறது பைபிள் (நீதி.6:29).

ஒரு பெண் விபசாரம் செய்தபோது விபசாரம் செய்யாதவன் எவனோ அவன் அவளைத் தண்டிக்கட்டும் என்று இயேசு கூறியதாகவும் பைபிள் கூறுகிறது (யோவா.8:3–11).

அந்த சமுதாயத்தில் எவருமே விபசாரம் செய்யாமல் இருக்கவில்லை. இயேசுவின் சீடர்களும் கூட செய்துள்ளனர். ஏன் இயேசுவும் கூட அதில் ஈடுபட்டதாக அந்த வசனம் மறைமுகமாக கூறுகிறது (நாம் அவ்வாறு நம்பவில்லை) இதுதான் கடவுளின் குமாரனுக்குரிய இலக்கணமா? இயேசு அந்த பாவத்தை செய்திருக்கவில்லையானால் கடவுளின் கட்டளைப்படி அவர் ஆவது தண்டனையை நிறைவேற்றி இருக்கவேண்டுமல்லவா? கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்ற பைபிளே அவரை இவ்வாறு அறிமுகம் செய்யும்போது அவரைக் கடவுள் என்று கூறுகிறார்கள்?

இந்தப் பகுதியானது P.ஜைன்னுல் ஆபிதின் எழுதி எண்316, அவனியா புரம் ரோடு மதுரை–12 என்கிற முகவரியில் உள்ள நபீலா பதிப்பகம் மூலம் 1:7:1995–ல் வெளியிட்ட இறைவனுக்கு மகனா என்கிற நூலில் பக்கம் – 75,76–ல் எழுதப்பட்டுள்ளதாகும். ஆண்டவரும் இரட்சகரும் ஆகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த வாழ்க்கையைக் குறித்து முழு உலகத்திற்கும் நன்குத் தெரியும். இருந்தாலும் இதற்கான பதில் எழுதவேண்டும். இப்பொழுது முஸ்லீம் சகோதர சகோதரிகள் என்னை தவறாக புரிந்துகொள்ளாமல் இருப்பதற்கும், உண்மை என்ன என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்கும் அவர் கேட்டக் கேள்வி அப்படியே எழுதியுள்ளேன்.

இந்தப்பகுதியில் இரண்டுமுறை ஜைன்னுல் ஆபிதின் என்பவர் இயேசு விபசாரம் செய்ததாகக் கூறியுள்ளார்.

(1) ஏன் இயேசுவும் கூட அதில் ஈடுபட்டதாக அந்த வசனம் மறைமுகமாக கூறியுள்ளது (2) இயேசு அந்த பாவத்தை செய்து இருக்கவில்லையானால்... இந்த இரண்டு இடத்தில் இயேசு விபசாரம் செய்தார் என்று அவர் கூறியுள்ளார். இதற்கு ஆதாரமாக அவர் எடுத்துக்காட்டிய வேதப்பகுதி (யோவா.18:3–11) வரையிலான வசனங்களாகும். அடுத்ததாக ஜைனுல் ஆபிதின் எடுத்துக்காட்டிய வேதப் பகுதி இங்கு எழுதுகிறேன் (யோவா.8:3–11). வரையிலான வசனங்கள் அப்பொழுது விபசாரத்திலே கண்டுப்பிடிக்கப் பட்ட ஒரு ஸ்திரியை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவளை நடுவே நிறுத்தி:

போதகரே, இந்த ஸ்திரி விபசாரத்தில் கையும் மெய்யுமாய் பிடிக்கப் பட்டாள். இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக் கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள். அவர்மேல் குற்றஞ் சுமத்துவதற்கான காரணம் உண்டாகும் பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படி சொன்னார்கள். இயேசுவோ குனிந்து, விரலினால் தரையிலே எழுதினார். அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி, அவர் மறுபடியும் குனிந்து, தரையிலே எழுதினார். அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டு, பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய் போய்விட்டார்கள். இயேசு தனித்திருந்தார். அந்த ஸ்திரீ நடுவே நின்றாள். இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத் தவிர வேறொருவரையுங் காணாமல்:



ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார். அதற்கு அவள்: இல்லை, ஆண்டவரே, என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ; இனிப் பாவஞ்செய்யாதே என்றார். இந்த வேதவசனங்கள் இந்திய வேதாகமச் சங்கம் வெளியிட்டுள்ள வேதாகமத்திலிருந்து எழுதியுள்ளேன். இந்த வேதபகுதிப்படிக்கும்போது இயேசு விபசாரம் செய்தவராக உள்ளதால்தான் அந்த ஸ்திரீயை தண்டிக்காமல் விட்டுவிட்டது என்பதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா? இல்லை என்பதை எந்த ஒரு சாதாரண மனிதனுக்கும், எவ்வளவு படிப்பு படித்தவருக்கும் படிக்காதவர்களுக்கும் புரிந்துகொள்ள முடியும். ஒருவேளை வேறொரு மொழிபெயர்ப்பில் இருந்து நான் எழுதினேன் என்று சொல்லக் கூடும் என்பதினால் வேறுசில மொழி பெயர்ப்புகளிலும் எப்படி எழுதப் பட்டுள்ளது என்பதைப் பார்ப்போம்.

எல்லா வசனங்களும் இங்கு எழுதத்தேவை இல்லாததினால் அவர் குறிப்பாக எடுத்துக்காட்டிய ஏழாவது வசனம் மட்டும் எடுத்து எழுதுகிறேன்.

ஆனால் அவர்கள் அவரைவிடாமல் கேட்டுக்கொண்டிருந்ததால், அவர் நிமிர்ந்துப்பார்த்து, உங்களுக்குள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல்லெறியட்டும் என்று அவர் கூறினார் (யோவா.8:7). இதை வெளியிட்ட வர்களுடைய முகவரி கீழே எழுதுகிறேன். **(Tamil Nadu Biblical, catechtical liturgical Centre Tindivanam, India -604002).**

யூத தலைவர்கள் அதே கேள்வியை இயேசுவிடம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தனர். ஆகையால் இயேசு எழுந்து நின்று, பாவமே செய்யாதவன் எவனாவது இங்கு இருக்கின்றானா? இருந்தால் பாவம் செய்யாத அந்த மனிதன் இவள் மீது முதல் கல்லெறியட்டும் என்றார் (யோவா.8:7). இது வெளியிட்டவர்கள் முகவரி **World Bible Translation centre Post Box No-8478,36 3 rd cross, Hutchins road, Thomas town, Bangalore Pin. 560084.**

**இன்னும் சில ஆங்கில மொழிபெயர்ப்புகள் பார்ப்போம்**

(King James version)

So where they continued asking him. he lifted up himself, and said unto them,He that is with out sin among You, let him first cast a stone at here.

(New International Version)

When they kept on questioning him, he straightened up and said tothem, If only one of you is with out sin. let him be the first to throw a stone at her.

(Today’s English version)

As they stood there asking hid questions, he straightened himself up and said to them. “Whichever one of you has committed no sin may throw the first stone at her.”

மேலே நாம் பார்த்த தமிழ்மொழி பெயர்ப்பகுளிலும் ஆங்கில மொழி பெயர்ப்புகளிலும் பாவம் என்றும் **sin** என்றும் உள்ள வார்த்தைகள் விபசாரத்தைக் குறிக்காது. பொதுவாக எல்லா பாவங்களுக்கும் சொல்லப் படும் வார்த்தை ஆகும். ஏன் இத்தனை மொழிபெயர்ப்புக்களில் இருந்தும் எடுத்து எழுதினேன் என்று கேட்டால் ஜைன்னுல் ஆபீதின் எப்படிப்பட்ட பொய்யை எழுதியுள்ளார் என்பதை எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். விபசாரம் செய்யாதவன் அவளைக் கல்லெறியட்டும் என்று இயேசு சொல்லவில்லை. அவளை தண்டிக்கவேண்டுமென்று இவ்வளவு உற்சாகம் காட்டுகிறீர்களே! நீங்கள் எந்த தவறும் செய்யாதவர்களா என்பதை அவர்களை உணர்த்தும்படியாக இயேசு அப்படிச் சொன்னார். மற்றவர்களுடைய குற்றங்கள் கண்டுபிடித்து அவர்களை தண்டிக்கவேண்டும் என்று அலைகிறவர்கள் தங்களுடைய தவறுகளை கண்டுணரவேண்டும் என்பதற்காகவும் இயேசு அப்படிச் சொன்னார். இதைக்குறித்து தன்னுடைய போதனையில் தன்னை பின்பற்றிவந்த ஜனங்களிடம் இயேசு சொன்ன காரியம் நீ உன் கண்ணில் இருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணில் இருக்கிற துரும்பை பார்க்கிறதென்ன (மத்.7:3). தாங்களே நரக அக்கினிக்கு பாத்திரராய் இருக்கும்போது அதிலிருந்து தப்பித்துக்கொள்ள வழிதேடாமல் மற்றவர்களை தண்டிப்பதில் உற்சாகம் காட்டின மக்களிடம் இயேசு இப்படிச் சொன்னார் இன்றைக்கும் அநேக மக்கள் அந்த மக்களைப் போலத்தான் இருக்கிறார்கள். மட்டுமல்லாமல் இயேசுவினுடைய மன்னிக்கும் குணத்தை வெளிப்படுத்தும்படியாக அந்த ஸ்திரீயைப் பார்த்து இனியும் பாவம் செய்யாதே என்று எச்சரித்து அனுப்பி விட்டார். யாராம் ஒருவர் மற்றொருவருடைய பாவத்தை மன்னித்தால் மன்னித்தவர் அந்த பாவம் செய்தார் என்று அர்த்தமா? அப்படி அர்த்தம் கொடுக்குமானால் உலகில் மற்றவர்களுடைய பாவங்கள் மன்னித்தவர்கள் எல்லாம் அந்த பாவங்கள் செய்தவர்கள் என்று சொல்ல வேண்டியதாக வருமே. ஆதலால் இயேசு அந்த ஸ்திரீயுடைய பாவத்தை மன்னித்ததில் எந்த தவறும் இல்லை. ஜைனுல் ஆபிதின் சொன்னதுபோல அவர் எடுத்துக் காட்டிய வேதப்பகுதியிலோ அல்லது முழு வேதாகமத்திலோ ஆண்டவர் இயேசு கிறிஸ்து விபசாரம் செய்ததாகவோ சொல்லப்படவில்லை: அவர் மற்றும் ஏதாகிலும் பாவம் செய்ததாகவோ அபாண்டமான பொய் எழுதி



எங்கள் மனம் புண்படுத்திய பிறகும் கிறிஸ்தவர்கள் உங்களை ஒன்றும் செய்யாமல் இத்தனை வருடங்களாக விட்டு வைத்ததிலிருந்து கிறிஸ்துவின் அன்பு எவ்வளவு பெரியது என்பதை நீங்களும், இப்படிப்பட்ட தவறு செய்த உங்களை உங்கள் மதத்தின் குருவாக வைத்துக்கொண்டிருக்கும் மற்ற இஸ்லாமி யர்களும் புரிந்துகொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து விபசாரம் செய்தார் என்று பரிசுத்த வேதாகமத்திலிருந்து நீங்கள் நிரூபித்துக் காட்டினால் நீங்கள் சொல்வதை அனுசரித்து நான் நடந்துகொள்கிறேன். ஆனால் அதை உங்களால் நிரூபிக்க முடியாதபட்சம் ஆண்டவர் இயேசுவிடமும் முழு கிறிஸ்தவர்களிடமும் நீங்கள் மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டும். நீங்கள் மன்னிப்பு கேட்டாலும் இல்லாவிட்டாலும் ஆண்டவர் இயேசு எங்களுக்குக் கற்றுக்கொடுத்த போதனையின்படியும் அவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை மாதிரியின்படியும் நாங்கள் உங்களை மன்னித்து விட்டோம். ஜைன்னுல் ஆபீதின் என்பவர் தன்னுடைய இந்தக் கூற்றுமூலமாக குர்ஆன் பொய் சொல்லுது என்று நிரூபித்துவிட்டார். காரணம் குர்ஆனில் பல இடங்களிலும் ஈஸாநபியை (இயேசுவை) குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அங்கெல்லாம் இயேசு ஏதேனும் பாவம் செய்ததாகவும் எந்த இடத்திலும் ஒரு வார்த்தைகூட காட்டமுடியாது. ஜைனுல் ஆபீதின் சொன்னக் கருத்து உண்மை என்று ஏற்றுக்கொண்டு சென்ற நாட்களெல்லாம் அவர் எழுதிய புஸ்தகத்தை வெளியிட்டு இந்த கருத்தை ஊரெல்லாம் பரப்பின இஸ்லாமியர்களும் குர்ஆன் பொய் என்று சொல்லிவிட்டார்கள். ஜைனுல் ஆபீதின் மட்டும் அல்லாமல் மற்றும் பலரும் குர்ஆன் பொய் என்று சொல்பவர்கள் உண்டு. அதில் ஒருவருடைய புஸ்தகத்தில் இருந்து ஒரு பகுதியை இங்கு எழுதுகிறேன். இவருடைய பெயர் கேப்டன் அமீருத்தின் இவர் எழுதி (சாஜிதா புக் சென்டர், 248 தம்புச்செட்டித்தெரு, சென்னை–1) வெளியிட்டுள்ள இயேசுநாதர் மறைக்கப்பட்ட உண்மைகள் என்கிற புஸ்தகத்தில் இருந்து எழுதுகிறேன். பக்கம் –12 வரிசை –11ல் இருந்து “இயேசு ஒன்றும் சாந்த சொரூபி அல்ல ஒரு கன்னத்தில் அரைந்தால் மறுகன்னத்தைக் காட்டவேண்டும்” என்பதெல்லாம் அவர் கொள்கை அல்ல. இப்போது இயேசுவைப்பற்றி சொல்லப்படும் கருத்துக்களுக்கு சாசன சுருள்களில் எந்த ஆதாரமும் இல்லை. இயேசு ரோமர்களை எதிர்க்க இரகசியமாக ஒரு படையை தயாரித்துக் கொண்டிருந்தார் என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன.” மேலே சொல்லப்பட்ட கருத்து அவர் பல ஆண்டுகள் ஆய்வு செய்துகண்டுபிடிக்கப்பட்ட உண்மை என்று அவரே எழுதியுள்ளார். மூன்றாண்டுகளாக இது உண்மை என்று முஸ்லீம்கள் இந்த புஸ்தகத்தை பிரசுரிப்பதின் மூலம் பறைசாற்றிக் கொண்டு வருகிறார்கள். இவர் சொன்னது உண்மையானால் குர்ஆன் சொன்னது பொய்தானே?

அடுத்ததாக குர்ஆனில் சில வசனங்களைப் பார்ப்போம். அநேக வசனங்கள் எழுதுவதற்கு இருந்தாலும் ஒருசிலது மட்டும் இங்கு எழுதுகிறேன்.

அத்தியாயம் 3 பெயர் அலு இம்மரான் வசனங்கள் 45,46 வானவர்கள் இவ்வாறு கூறியதை நினைவு கூறுங்கள் மரியாமே தின்னமாக அல்லாஹ் தனது கட்டளை பற்றி நற்செய்தி சொல்லுகிறான். அதன் பெயர் மரியாமின் குமாரன் ஈஸா– அல்மஸி என்பதாகும். அவர் இம்மையிலும், மறுமையிலும் கன்னியமிக்கவருமாகவும், அல்லாஹ்விடம் நெருங்கிய நண்பர்களில் ஒருவராகவும் திகழ்வார். மேலும் அவர் தொட்டில் பருவத்திலும் பக்குவமான வயதை அடைந்த பின்பும் மக்களிடம் பேசுவார். மேலும் நல்லொழுக்க முடையவர்களில் ஒருவராகவும் திகழ்வார். அத்தியாயம் 19 பெயர் மர்யாம் வசனங்கள் –18,19 அவரைக் கண்டதும் நிச்சயமாக நான் உங்களிடம் இருந்து என்னை பாதுகாக்க ரஹ்மானிடம் பிரார்த்திக்கிறேன். நீங்கள் பரிசுத்த மானவராக இருந்தால் இங்கிருந்து அப்புறப்பட்டுவிடுங்கள் என்றார். அதற்கு அவர் **பரிசுத்தமான ஒரு மகனை உங்களுக்கு அளிக்கப்படும்** என்பதை உங்களுக்கு அறிவிப்பதற்காக நான் உங்கள் இறைவனால் அனுப்பப்பட்ட மலக்காகிய ஒரு தூதன்தான் என்றார். இங்கு இயேசுவைக் குறித்து பரிசுத்தமானவர் என்றும் மேலே வசனத்தில் அவர் இம்மையிலும் மறுமையிலும் கன்னிய மிக்கவராகவும் அல்லாஹ்விடம் நெருங்கிய நல்லடியார்களில் ஒருவராகவும் என்றும் மேலும் நல்லொழுக்கமுடையவர் களில் ஒருவராகவும் திகழ்வார் என்றும் உள்ளது.

அத்தியாயம் 19 பெயர் மர்யாம் வசனங்கள் 32,33 நான் உயிரோடு இருக்கும் காலம்வரை என் தாயின் கடமையை நிறைவேற்றுபவனாயும் என்னை ஆக்கினான். மேலும் முரடனாகவும் துர்பாக்கியம் உடையவனாகவும் என்னை ஆக்கவில்லை. என்மீது சாந்தி உண்டாகும் நான் பிறந்தநாளிலும் இறக்கும் நாளிலும் உயிரோடு மீண்டும் எழுப்பப்படும் நாளிலும் **(I FT)**

குர்ஆனில் இருந்து இன்னும் அநேக சான்றுகள் பார்க்கமுடியும் எழுதிக்கொண்டே போகலாம். ஆனாலும் இன்னும் ஹக்தீஸ் என்ன சொல்வது என்று பார்ப்போம்.

திர்மிதி என்கிற நூலில் அபு ஹீரைரா என்பவர் அறிவித்த ஒரு செய்தியைப் பார்ப்போம்.

நபி அவர்களிடம் இறைச்சி கொண்டு வரப்பட்டது. அவர்களிடம் தொடைப்பகுதி எடுத்துக் கொடுக்கப்பட்டது. அது அவர்களுக்கு மிகவும் விருப்பமாக இருந்ததால் பற்களால் உண்டார்கள். பிறகு மறுமை நாளில் நான் மக்களுக்கெல்லாம் தலைவனாக இருப்பேன். இதை ஏன் என்று



அறிவீர்களா? அல்லாஹ் ஒரு சமயம் தரையில் முன்னோர்களையும் பின்னோர்களையும் ஒன்று கூட்டுவான். அழைப்பாளரின் குரலை அவர்கள் அனைவருக்கும் இறைவன் கேட்கச் செய்வான். பார்வை அவர்களைச் சூழ்ந்துகொள்ளும். சூரியன் அவர்களின் அருகில் வரும், மக்களுக்கு தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு கவலை ஏற்படும். அப்பொழுது மக்கள் சிலர் சிலரிடம் உங்களுக்கு ஏற்பட்ட நிலையை பார்த்தீர்களா? உங்கள் இறைவனிடம் உங்களுக்காக பரிந்துரை செய்ய யாராவது உண்டா என்பதை ஆராய வேண்டாமா? என்று கூறுவார்கள் ஆதாமிடம் செல்லுங்கள் என்று சிலர் கூறுவார்கள் அனைவரும் ஆதாமிடம் வந்து நீங்கள் மனிதர்களின் மூலப்பிதாவாக இருக்கிறீர்கள் அல்லாஹ் தன் கையால் உங்களைப் படைத்தான். அவனது உயிரை உங்களிடம் ஊதினான். வானவர்கள் ஸஜ்தா செய்யுமாறு கட்டளை இட்டான். அவர்கள் உங்களுக்கு ஸஜ்தா செய்தனர். நாங்கள் இருக்கும் நிலைமையை நீங்கள் பார்க்கவில்லையா? எங்களுக்காக எங்கள் இறைவனிடம் பரிந்துரை செய்யுங்கள் எனக்கூறுவார்கள். அவர்களிடம் ஆதாம் அவர்கள் என் இறைவன் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு கடும் கோபத்தில் இருக்கிறான். இதன் பின்னும் இந்த அளவுக்கு கோபம் கொள்ளமாட்டான். ஒரு மரத்தை இறைவன் எனக்கு தடை செய்திருந்தான். நான் அதை மீறிவிட்டேன் (இறைவா) என்னைக் காப்பாற்றும்! என்னைக் காப்பாற்றும் மற்றவர்களிடம் செல்லுங்கள் நூஹிடம் செல்லுங்கள் எனக் கூறுவார்கள். மக்கள் நூஹிடம் வருவார்கள் நூஹ் மண்ணுலகுக்கு அனுப்பப்பட்ட முதல் ரசூல் நீங்கள்தான்! நன்றியுள்ள அடியார் என்று அல்லாஹ் உங்களுக்கு பெயர் சூட்டி உள்ளான். நாங்கள் இருக்கும் நிலையை நீங்கள் பார்க்கவில்லையா? உங்கள் இறைவனிடம் எங்களுக்காக பரிந்துரை செய்யுங்கள்! எனக்கூறுவார்கள்.

இதற்கு முன்னும் இதற்கு பின்னரும் கோபப்பட்டிராத அளவுக்கு என் இறைவன் இன்று கோபத்தில் இருக்கிறான். அங்கீகரிக்கப்படும் ஒரு பிரார்த்தனை எனக்கு (வழங்கப்பட்டு) இருந்தது. என் சமுதாயத்திற்கு எதிராக அதை நான் பயன்படுத்தி விட்டேன் (இறைவா) என்னைக் காப்பாற்று! என்னைக் காப்பாற்று! (மக்களை) மற்றவர்களிடம் செல்லுங்கள். இப்ராஹிடம் செல்லுங்கள்! என்று நூஹ் கூறுவார்கள். மக்கள் இப்ராஹிடம் செல்வார்கள். இப்ராஹிமே! நீங்கள் அல்லாஹ்வின் நபியாகவும் இம்மண்ணுலகத்தாரில் அவனுக்கு உற்ற நண்பராகவும் இருந்தீர்கள். நாங்கள் இருக்கும் நிலையை நீங்கள் பார்க்கவில்லையா? எங்களுக்காக உங்கள் இறைவனிடம் பரிந்துரை செய்யுங்கள்! என்று கேட்பார்கள். அதற்கு இப்ராஹிம் என் இறைவன் இதற்கு முன்னரும், இதற்குப் பின்னரும் கோபப்படாத அளவுக்கென்று கடுமையான கோபத்தில் இருக்கிறான் நான் மூன்று பொய்கள் கூறி

விட்டேன் (இறைவா) என்னைக் காப்பாற்று! என்னைக்காப்பாற்று (மக்கள்) மன்றவர்களிடம் செல்லுங்கள் மூஸாவிடம் செல்லுங்கள்! எனக் கூறுவார்கள்.

மக்கள் மூஸாவிடம் செல்வார்கள். மூஸாவே! நீங்கள் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறீர்கள். தூதுதுவத்தின் மூலம், நேரடியாக உங்களிடம் உரையாடியதின் மூலமும் அல்லாஹ் உங்களை சிறப்பித்திருக்கிறான். நாங்கள் இருக்கும் நிலையை நீங்கள் பார்க்கவில்லையா? எங்களுக்காக உங்கள் இறைவனிடம் பரிந்துரை செய்யுங்கள்! எனக் கேட்பார்கள். இதற்கு மூஸா அவர்கள் ஏனைய நபிமார்கள் சொன்ன பதிலையும் மேலும் (கொல்ல) அனுமதிக்கப்படாத ஓர் உயிரை நான் கொன்று விட்டேன் (இறைவா) என்னைக் கார்பபாற்று! என்னைக் காப்பாற்று! (மக்களே) மற்றவர்களிடம் செல்லுங்கள் ஈஸாவிடம் செல்லுங்கள் எனக்கூறுவார்கள். மக்கள் ஈஸாவிடம் செல்வார்கள். ஈஸாவே! நீங்கள் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறீர்கள், மர்யமிடம் இறைவன் வழங்கிய அவனது வார்த்தையாகவும் இருக்கிறீர்கள். அவனால் வழங்கப்பட்ட உயிராகவும் இருக்கிறீர்கள். தொட்டில் பருவத்தில் மக்களிடம் பேசினீர்கள். நாங்கள் இருக்கும் நிலைமையை நீங்கள் பார்க்கவில்லையா? உங்கள் இறைவனிடம் எங்களுக்காக பரிந்துரை செய்யுங்கள் எனக்கேட்பார்கள்.

**அதற்கு ஈஸா அவர்கள் தாம் எந்தக் குற்றத்தையும் செய்ததாகக் கூறாமல் ஏனைய** நபிமார்கள் சொன்ன பதிலை சொல்லிவிட்டு, மற்றவர்களிடம் சொல்லுங்கள். முஹம்மத் அவர்களிடம் செல்லுங்கள்! எனக் கூறுவார்கள். மக்கள் முஹமத் அவர்களிடம் செல்வார்கள். முஹமத்தே நீங்கள் அல்லாஹ்வின் தூதனாக இருக்கிறீர்கள். முன்பின் பாவங்களை அல்லாஹ் உங்களுக்கு மன்னித்துவிட்டான். நாங்கள் இருக்கும் நிலையை நீங்கள் பார்க்கவில்லையா? எங்களுக்காக உங்கள் இறைவனிடம் பரிந்துரை செய்யுங்கள்! எனக்கேட்பார்கள். உடனே நான் புறப்பட்டு அர்ஷின் கீழ் வந்து என் இறைவனுக்காக ஸஜ்தாவில் விழுவேன். எனக்கு முன் யாருக்கும் கற்றுத் தராத இறைவனை முழுமையாகப் புகழ்ந்து போற்றும் வார்த்தைகளை எனக்கு இறைவன் கற்றுத் தருவான். (அவற்றைக்கூறி இறைவனை நான் புகழ்வேன்). பின்னர் முஹம்மதே! உம் தலையை உயர்த்துவீராக! கேளும்! கொடுக்கப்படுவீர்! பரிந்துரை செய்யும்! அது ஏற்கப்படும்! என்று கூறப்படும்.

மேலே பார்த்த ஹதீஸிலும் குர்ஆன் வசனங்களிலும் இயேசுவின் பாவமற்ற நிலையைத் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது பார்க்கமுடியும். மட்டுமல்லாமல் முஹமத் அவர்கள் அநேக பாவங்கள் செய்தால் அவருடைய முன்பின் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்னும் வசனத்திலிருந்து புரிந்து கொள்ளலாம். இந்த வசனங்கள் எழுதியதினால் குர்ஆனும், ஹதீஸீம் நான்



ஏற்றுக்கொண்டேன் என்று அர்த்தமில்லை. எதற்காக எழுதினேன் என்று கேட்டால் இயேசுகிறிஸ்துவை மறுதலித்து ஏற்கனவே கொடுக்கப்பட்ட இறைவேதத்தையும் புறக்கணித்த முஹம்மதும் தன் தோழர்களும் கூட இயேசுவிடம் ஏதேனும் ஒருபாவம் உள்ளதாகச் சொல்லவில்லை. மட்டுமல்லாமல் இயேசுவின் பாவமற்ற தன்மைக்கு அநேக ஆதாரங்களை வழங்கி யுள்ளார்கள். இன்னும் அநேக சான்றுகளை காட்டமுடியும் என்றாலும் சுயபுத்தியோடு சிந்திக்கும் மனிதனுக்கு இவைகளே போதுமானதாக இருக்கின்றன. பரிசுத்த வேதாகமத்திலிருந்து இயேசுகிறிஸ்துவின் பாவமற்ற தன்மைக்கு அநேக ஆதாரங்கள் முன்னமே எழுதியுள்ளேன். முஹம்மது அவர்கள் தான் ஒரு பாவி என்பதை அவர் ஒத்துக்கொள்ளும் வசனங்கள் குர்ஆனிலும் ஹதீஸிலும் ஏராளமாக பார்க்கலாம்.

எல்லா நபிமார்களும், முஹம்மதும் பாவிகள் என்று சொல்லப்பட்டுள்ளது தொடர்ந்து பார்ப்போம்.

எல்லா நபிமார்களும் முஹம்மதும் பாவிகள் என்று மேலே எழுதின ஹதீஸில் தெளிவாக பார்த்துவிட்டோம். இந்த ஹதீஸில் முஹம்மது அவர்களைப் பார்த்து முஹம்மதே... முன்பின் பாவங்களை அல்லாஹ் உங்களுக்கு மன்னித்துவிட்டான் என்று சொல்வதைப் பாருங்கள் அல்புகாரி என்கிற நூலில் முஹம்மது அல்லாஹ்விடம் என் பாவங்கள் பனியினால் கழுவவேண்டும் என்று பிரார்த்தனை செய்யததாக செய்தி அறிவிக்கப் பட்டுள்ளது.

ஒருநாள் முஹம்மது கெபியில் இருக்கும்போது ஜிபிரியேல் தூதன் உள்ளே வந்து அவருடைய மாறுபிளர்ந்து இதயம் வெளியே எடுத்து பனியில் சுத்தப்படுத்தினாராம். இந்த செய்தியை நபியுடைய நெருங்கின தோழர் இபுனு முஹம்மத் பின் இஸஹாகு என்பவர்கள் அறிவிக்கும் செய்தியாகும்.

முஹம்மதின் பாவங்களைக்குறித்து குர்ஆன் என்ன சொல்கிறது என்பதைப் பார்ப்போம்

**i.** முஹம்மது தன் பாவங்களுக்காக மன்னிப்பு கேட்க வேண்டுமென்று அல்லாஹ் சொல்கிறார்.

அத்தியாயம் முஹம்மது 47:19

(நபியே) நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய வேறொரு இறைவன் இல்லை என்பதை நீங்கள் உறுதியாக அறிந்துகொண்டு நீங்கள் உங்களுடைய தவறுகளை மன்னிக்க கோருவதுடன் நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும், பெண்களுக்கும் மன்னிப்பு கோருங்கள்...

அத்தியாயம் விசுவாசி: 40:55

(நபியே)... நீங்கள் உங்களுடைய தவறுகளுக்கு மன்னிப்பைக் கோரிக்கொண்டும், காலையிலும் மாலையிலும் உங்களது இறைவனைப் புகழ்ந்து துதி செய்துகொண்டும் இருப்பீராக.

அத்தியாயம் ஒளி.24:118

(நபியே) நீங்கள் கூறுங்கள் என் இறைவனே நீ என்னை/ மன்னித்து கிருபை செய்வாயாக...

**ii.** அல்லாஹ் முஹம்மதின் பாவங்கள் மன்னித்ததை அத்தியாயம் வெற்றி 48:2ல் பார்க்கலாம்.

அதற்காக நீங்கள் உங்களது இறைவனுக்கு நன்றி செலுத்துவீராக அதனால் உங்களது முன்பின்னுள்ள தவறுகள் அனைத்தையும் அல்லாஹ் மன்னித்துத் தனது அருட்கொடையையும் உங்கள் மீது முழுமைப்படுத்தி வைத்து உங்களை அவன் நேரான வழியிலும் நடத்துவான்.

இங்கு முஹம்மது இதுவரை செய்த பாவங்கள் மட்டும் மன்னிக்காமல் இனியும் செய்யப்போகிற பாவங்களுக்கும் முன்கூட்டியே மன்னித்து விட்டதால் முஹம்மத் இன்னும் பல பாவங்கள் செய்தார் என்பதை அதிலிருந்து அறிந்துகொள்ளலாம். தன்னுடைய பாவங்கள் மறைக்காமல் எழுதச் சொன்ன முஹம்மத், இயேசுவிடம் எந்த பாவமும் சுமத்தவில்லை என்பதை கவனியுங்கள்.

அடுத்ததாக மற்ற நபிமார்களைக் குறித்து குர்ஆனும் ஹதீஸிம் என்ன சொல்கிறது என்பதைப் பார்ப்போம்.

**1. ஆதாம் ஏவாள்**

1. அத்தியாயம் சிகரங்கள் 7:23

அதற்கு அவர்கள் இறைவனே எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம் நீ எங்களை மன்னித்து எங்களுக்கு அருள் புரியாவிட்டால் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம் என்று (பிரார்த்தித்துக்) கூறினார்.

2. நூஹ், அத்தியாயம் ஹீது 11:47

அதற்கு (நூஹ் நபி) ''என் இறைவனே நான் அறியாத விஷயங்களைப் பற்றி (இனி) உன்னிடம் கேட்காமல் என்னை பாதுகாக்குமாறு நான் உன்னிடம் பிரார்த்திக்கிறேன். நீ என்னை மன்னித்து எனக்கு நீ கிருபை



செய்யாவிடில் நிச்சயமாக நானும் நஷ்டமடைந்தவர்களில் ஆகிவிடுவேன்'' என்று கூறினார்.

3. இப்ராஹிம், அத்தியாயம் கவிஞர்கள் 26:82

கூவி கொடுக்கும் (மறுமை) நாளில் என்னுடைய குற்றங்கள் மன்னிக்க அவனையே நான் நம்பியிருக்கேன்.

4. மூஸா. அத்தியாயம் வரலாறு 28:16

அன்றி அவர் ''என் இறைவனே! நிச்சயமாக நான் எனக்கே தீங்கிழைத்துக் கொண்டேன். நீ என்னுடைய குற்றத்தை மன்னிப்பாயாக என்று பிரார்த்தித்தார்.''

5. தாவூத். அத்தியாயம் ஸாத் 38:24

.... தன் இறைவனிடம் தன் குற்றத்தை மன்னிக்கும்படி கோரி, சிரம் பணிந்து வணங்கி, தன் இறைவனை நோக்கி பிரார்த்தனை செய்தார்.

6. ஸீலைமான். அத்தியாயம் ஸாத் 38:35

ஆகவே அவர் ''என் இறைவனே என்னுடைய குற்றங்களை மன்னித்து விடு! ...

அநேக நபிமார்கள் செய்த பாவங்கள் சுட்டிக்காட்டியிருக்கும் குர்ஆன் இயேசுவிடம் எந்த பாவமும் இல்லை என்று பல இடங்களில் சொல்லப் பட்டுள்ளது. நாம் பார்க்கமுடியும். குர்ஆன் மேலோட்டமாக படித்தாலே 25 இடங்களில் ஈஸா என்கிற பெயர் வருவதை பார்க்கமுடியும். ஆனால் எந்த இடத்திலும் இயேசுவிடம் எந்த பாவமும் உள்ளதாக குற்றம் சாட்டப்பட வில்லை. காரணம் என்ன? இயேசு பாவமற்றவராக இருந்தார். அவருடைய விரோதிகள் கூட அவருடைய பரிசுத்த வாழ்க்கையைக் கண்டு வியப்படைந்து போனார்கள். ஆனால் ஜைனுல் ஆபிதன், ஆமீருத்தீன் போன்றவர்கள் இயேசுவைப் பற்றி குறைசொன்னால் பிரபலமாகி விடலாம் என்கிற எண்ணத்தோடே இப்படியெல்லாம் எழுதுகிறார்கள்! அல்லது அவர்களுடைய சுபாவம் வெளிப்படுத்தும் விதமான எழுத்துக்களா! என்பது தெரியவில்லை.

அடுத்ததாக இயேசு ஒன்றும் சாந்த சொரூபி இல்லை என்று தன்னுடைய ஆராட்சியில் கண்டுபிடித்த அமீரூத்தின் என்பவருடைய ஏமாற்று வேலையை பார்ப்போம். இவர் எழுதியுள்ள இயேசு நாதர் மறைக்கப்பட்ட உண்மைகள் என்கிற நூலில் உள்ளதை பாருங்கள். இந்த புத்தகத்தில் 45ம் பக்கம் 10ம் வரிசையிலிருந்து அதில் உள்ளபடி எடுத்து எழுதுகிறேன்.

‘‘மற்ற சீடர்கள் உதவியுடன் இயேசு இரகசியமாய் எதிரிகளிடமிருந்து தப்பித்துவேறு நாடுகளுக்கு குடிபெயர்ந்து சென்று அங்கு நீண்ட காலம் வாழ்ந்திருக்கக்கூடும் என்ற கருத்துக்கு இது உரம் சேர்க்கிறது அந்திய காலத்தில் ஜெருசலத்திற்கு திரும்பிவந்து தமது குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ்ந்து மறைந்திருக்கிறார் என்பதையும் இந்த தொல்பொருள் ஆராய்ச்சி யிலிருந்து நாம் அறியமுடிகிறது.’’ டாவின்சி கோட் என்ற திரைப்படத்தில் மேற்கண்ட கருத்துகள் இடம் பெற்ற காட்சிகள் இருந்ததால் கிறிஸ்தவ சமுதாயம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. ஆனால் அகழ் வராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட சாட்சியங்களையும், தடயங்களையும் நிராகரிக்க முடியுமா? மரபனு பரிசோதனை முடிவுகளை பொய்யென்று கூற முடியுமா? என்ற கேள்விகள் எழும்புகின்றன.

இந்த புத்தகத்தில் இவர் தெளிவாக சொல்லுகிற காரியம் என்ன வென்றால் இயேசு கிறிஸ்து தன் சீடர்கள் உதவியுடன் எதிரிகளிடமிருந்து தப்பித்துவிட்டு வேறே தேசத்தில் போய் வாழ்ந்தார். மரிக்கும் காலத்தில் எருசலேமிற்கு வந்து அங்கு மரித்தார். இதற்கு ஆதாரமாக எருசலேமில் நடைபெற்ற அகழ்வராய்ச்சி குறிப்புகளும் குர்ஆன் 4:157 ஆம் வசனமும் எழுதியுள்ளார். அகழ்வராய்ச்சி தான் நம்ப வேண்டும். அதுதான் உண்மை என்று சொல்லும் அமிருத்தீன் குர்ஆன் பொய் என்று சொல்லாமலே சொல்லியுள்ளதை கவனியுங்கள். அவர் எடுத்துக்காட்டிய வசனம் 4:157 லிருந்து இங்கு எழுதுகிறேன் கவனியுங்கள்.

அன்றி ‘‘அல்லாஹ்வுடைய தூதர் மரியாமுடைய மகன் ஈஸாமஸீஹை நிச்சயமாக நாம் (சிலுவையில் அறைந்து) கொலை செய்து விட்டோம்’’ என்று அவர்கள் கூறியுள்ளதாலும் அவர்களை சபித்தோம். அவரை அவர் கொலை செய்யவுமில்லை. அவரை அவர்கள் சிலுவையில் அறையவுமில்லை. எனினும் (ஈஸாவைப்போன்று) ஒருவன் அவர்(கள் கண்)களுக்கு ஒப்பாக்கப்பட்டான் ஈஸாவை தேடிச் சென்றவர்கள் ஈஸாவை போன்று ஒப்பாக்கப்பட்டவனையே ஈஸா என்று எண்ணி சிலுவையில் அறைந்துவிட்டனர்). ஆகவே எவர்கள் இதற்கு மாறான அபிப்ராயம் கொண்டிருக்கிறவர்களோ அவர்கள் நிச்சயமாக வீண் சந்தேகத்திலேயே ஆழ்ந்துவிட்டனர். வீண் சந்தேகத்தை பின்பற்றுவதன்றி அதில் அவர்களுக்கு உண்மையான ஞான (ஆதார)ம் எதுவும் கிடையாது. உறுதியாக அவர்கள் அவரை கெலை செய்யவே இல்லை 158. எனினும் அல்லாஹ் அவரைத் தன் அளவில் உயர்த்திக்கொண்டான்....

இங்கு ஈஸாவை அல்லாஹ் தன் பக்கம் உயர்த்திக்கொண்டான் என்றுள்ளது. அடுத்ததாக 3ம் அதிகாரம் 55ம் வசனம் பார்ப்போம் (ஈஸாவை



நோக்கி) அல்லாஹ் கூரியதை (அவர்களுக்கு) ஞாபகப்படுத்துங்கள். ‘‘ஈஸாவே நிச்சயமாக நான் உங்களுக்கு உங்களுடைய ஆயுளை முழுமைப் படுத்துவேன். உங்களை நம்மளவில் உயர்த்திக்கொள்வேன்... இங்கு நம்மளவில் உயர்த்திக்கொள்வேன் என்பதற்கு மூலத்தில் முதலஃப்பீக் என்கிற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு உண்மையான அர்த்தம் உயிரை திரும்ப பெறுதல் என்பதாகும். ஆனால் அப்படியில்லை என்று பலரும் சொல்லுகிறார்கள். அல்லாமலும் பெறுதல் என்கிற அர்த்தம் மட்டும் எடுத்தாலும் ஈஸாவை அல்லாஹ்விடம் திரும்ப அழைத்தார் என்று சொல்ல வேண்டும். ஆதலால் அமிருத்தீனின் கருத்தின்படி இயேசு தன் சீஷர்களோடு கூட வேறிடத்திற்கு ஓடிப்போய் திருமணம் செய்துபிள்ளை குட்டிகளோடு கூட வாழ்ந்தார் என்ற கூற்றின்படி குர்ஆனில் உள்ளது பொய் என்று அவரே சொல்லிவிட்டார். அவர் எழுதிய புத்தகத்திலே ஒன்றுக்கு ஒன்று முரண் பாடான கருத்துகள் நிறைந்திருபபதை அதை வாசிக்கும் அனைவரும் அறிந்துகொள்ளலாம். இத்தனை காரியங்களையும் ஏன் எழுதினேன் என்றால், உண்மையை மறைத்து ஜனங்கள் இரட்சிக்கப்படாதபடி எப்படி தடுக்குகிறார்கள் என்பதை இதை வாசிக்கும் அனைவரும் அறிந்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான்.’’

1980 ல் எருசலேமில் இயேசு கிறிஸ்துவின் எலும்புக்கூடு கண்டுபிடிக்கப் பட்டது என்று ஆரவாரம் முழக்கினார்கள். ஆனால் இந்தியாவில் இயேசுவின் கல்லரை கண்டுபிடிக்கப்பட்டது என்று 1839ல் பஞ்சாப் மாநிலம் குருதாஸ்பூர் மாவட்டம் குவிதியான் கிராமத்தில் பிறந்து 1908ல் மே மாதம் 26ந்தேதி லாஹோறில் மரணமடைந்த அஹமத் என்பவர்தான் இயேசுவின் கல்லறையை கண்டுபிடித்தேன் என்றும் இயேசுநாதர் சிலுவையில் மரிக்கவில்லை. அவருடைய சீடர்கள் அவருக்கு கல்லறையில் வைத்து மருத்துவம் பார்த்து அவர் சுகம் பெற்ற பிறகு அங்கிருந்து நடந்து வந்து இந்தியாவில் காஷ்மீர் வந்து 120 வயது வரைக்கும் உயிரோடிருந்து பின் மரித்து காஷ்மீரில் அடக்கம் செய்யப்பட்டார். அந்த கல்லறையை நான் கண்டுபிடித்தேன் என்று ஒப்பாரி வைக்க, அதையும் நம்பவும், ஏற்கவும் சிலர் இருந்தார்கள். அதினுடைய மிச்சம் மீதிதான் இப்போது இந்தியாவில் நாம் பார்க்கும் அஹமத்தியர் என்கிற பிரிவினர்.

தங்களை காப்பாற்றிக்கொள்வதற்காக அஹமதீயர் முஸ்லீமுகள் அல்ல என்று சொல்கிற முஸ்லீமுகளும் உண்டு. இப்படி ஒவ்வொரு வருடமும் புதுப்புது கதைகளை சொல்லி, இயேசுவின் கல்லறை இதோ இங்கே இருக்கிறது. அதோ அங்கே இருக்கிறது என்று பிதற்றுகிறவர்கள் இன்னும் அநேகர் எழும்பலாம். ஆனால் உண்மையை அறிந்தவர்கள், ஏற்றுக் கொண்டவர்கள் ஒருவர்கூட இவர்கள் வலையில் விழமாட்டார்கள், சிக்கமாட்டார்கள்.

இயேசுகிறிஸ்து விபச்சாரம் செய்தார். அவருக்கு நல்ல சுபாவம் கிடையாது என்று இன்னும் சில குற்றச்சாட்டுகளை கூறி ஏன் இப்படி திரிகிறார்கள் என்றால், சாதாரண மக்களை ஏமாற்றவும், இதன்மூலம் தங்களை பிரபலபடுத்திக்கொள்ளவும் மட்டுமே அல்லாமல் வேறல்ல. தங்களை குருமார்கள் என்று சொல்லிக்கொண்டு, அப்பாவி மக்களை வஞ்சித்து வருகின்ற அநேகருண்டு. அவர்களுடைய எல்லா பெயர்களும் இங்கு எழுத விரும்பவில்லை. மனுகுலத்தின் இரட்சிப்பிற்காக ஒரே வழி இயேசுமட்டும்தான் என்பதை புரிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து பாவத்தை வெறுத்து, பாவியை நேசிப்பவர் எப்பேர்ப்பட்ட பாவியையும் நேசிப்பார். ஆனால் பாவத்தை வெறுப்பவர். அந்த ஸ்திரீயை பார்த்து கர்த்தர் சொன்ன காரியம் "நீ போ இனி பாவம் செய்யாதே" இது மன்னிப்பதில் வள்ளலாக இருக்கும் அருமைநாதருடைய அருட்மொழி. எல்லோரும் பாவிகளை சிட்சிக்க வழி தேடிக் கொண்டிருக்கும் போது இதோ மனுகுலத்தின் பாவங்களுக்கு பரிகாரம் செய்யவந்தவர் பாவத்தை மன்னிக்கிறார். இதில் என்ன தப்பு?

இச்சையோடுகூட ஸ்திரீயைப் பார்க்கிறவன் தன் இருதயத்தில் விபச்சாரம் செய்துவிட்டான் (மத்.5:28) என்று உலகுக்கு நல்போதனை கொடுத்து, உபதேசித்தபடி தானும் வாழ்ந்து காட்டியவர் இயேசுகிறிஸ்து. அவர்மேல் பொறாமைக்கொண்டு அவரை சிலுவையில் அறையும்படி ஒப்புக்கொடுத்தவர்கள் கூட அவர்மேல் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை சொல்லவில்லை. இந்த நாள்வரை இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமுள்ள வாழ்க்கை, அவருடைய எதிரிகளுக்கும் சவாலாக இருப்பதால் அவர்மேல் எப்படியாவது குற்றம் கண்டுபிடிக்க முயற்சிக்கிறார்கள். ஆனால் இந்த இரண்டாயிரம் வருடங்களாக அநேகர் மீண்டும் மீண்டும் முயற்சித்தும் இதுவரை வெற்றிபெற்றதில்லை. காரணம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வெளியரங்கமாக எல்லாருடைய கண்களுக்கு முன்பாக எப்போதும் பரிசுத்தமுள்ள வாழ்க்கையாக இருந்தது. ஜனங்களை வஞ்சிக்கும் வஞ்சகன் மாருடைய வலையில் ஒருவரும் சிக்கிக்கொள்ள வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**கேள்வி –15**

## இயேசு முன்கோபியாக இருந்திருக்கிறார் என்று குற்றச்சாட்டு:

இதற்கு அவர் சொல்லும் வசனங்களெல்லாம் ஒரு சிலரை அவர்கள் உள்ள உண்மையான நிலைமையில் அழைத்தார் என்பதேயாகும். உள்ளதை சொன்னால் முன் கோபி என்று அர்த்தமா?



**கேள்வி 16**

## கடவுள் மோசமான பரம்பரையில் வந்தவர்:

இயேசுவின் பிறப்பிற்காக தெரிந்தெடுக்கப்பட்ட மரியாள் மற்றும் யோசேப்பு ஆகிய இருவரின் முன்னோர்களில் சிலர் பாவம் செய்தவர்கள் என்ற குற்றச்சாட்டு:

பாவம் என்று சொல்லும்போது அது இரண்டு விதமாக உள்ளது. ஜென்ம பாவம், கர்மபாவம், ஜென்மபாவம் என்பது எல்லோரும் பாவத்திற்குள்ளாக அடைக்கப்பட்டவர்கள். ஆதலால் எல்லோரும் பாவிகள்தான் என்பதை முன்னமே விளக்கியுள்ளேன். இப்படி பார்க்கும்போது இயேசுவிற்கு மனிதன் என்கிற முறையில் இருந்த முன்னோர்கள் யாவரும் பாவிகள்தான். கர்மபாவம் என்பது ஒவ்வொருவரும் பூமியில் பிறந்தபிறகு தாங்கள் செய்யும் பாவங்களாகும். இப்படி பார்க்கும்போதும் இயேசுவின் முன்னோர்கள் பலரும் பாவிகளாக இருந்துள்ளனர். ஆக மொத்தத்தில் இருவிதத்திலும் மனிதனாக பிறந்த இயேசுவின் முன்னோர்கள் பாவிகள்தான். இந்த உண்மை மறைக்காமல் பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளதிலிருந்து பரிசுத்த வேதம் எவ்வளவு உண்மையானது என்பதை புரிந்து கொள்ளுங்கள். அய்யா ஜைனூல் ஆபிதின், மோசமான பரம்பரையில் அவர் பிறந்ததின் காரணத்தை புரிந்துகொள்க. இயேசுவின் பிறப்பிற்குமுன் பூமியில் மோசமல்லாத ஒரு பரம்பரை இருந்ததில்லை என்பதை முதலாவது அறிந்துகொள்க. ஆதலால் இருப்பதில் எது நல்ல பரம்பரை என்று அவர் தேடி பார்த்துக்கொண்டிருக்க வில்லை. அப்படி தேடினாலும் நல்ல பரம்பரை ஒன்றும் அந்நாட்களில் இல்லை என்பது உண்மை. "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து..." (1 கொரி.15:3,4) என்று வாசிக்கிறோம். இங்கு நாம் வாசிக்கும் வேதவாக்கியங்களின்படி என்பதற்கு என்ன அர்த்தம், தெய்வீக தீர்மானத்தின்படி என்றுதானே. அவர் எதையும் அவருடைய சுய சித்தத்தின்படி செய்யவில்லை. தன்னை அனுப்பின பிதாவின் சித்தம் பூமியில் நிறைவேற்றதான் அவர் வந்தார். அப்படி இல்லையென்றால் அவர் கடவுளாக பரலோகத்தில் இருந்திருந்தால் போதுமே. எதற்கு அவர் பூமியில் வந்தார். நல்ல பரம்பரைகளை உருவாக்குவதற்காகவே வந்தார். "நீதிமான்களையல்ல பாவிகளை மனந்திரும்புதலுக்காக அழைக்க வந்தேன்" என்று அவர் சொன்னது வாசிக்கவில்லையா? எல்லோரும் பாவம் செய்து தேவமகிமை அற்றவர்களாயிற்று என்று தெளிவாக வேதத்தில் சொல்லப்பட்டுள்ளதே. இயேசு கிறிஸ்துவிலுள்ள விசுவாசம் மூலம் நம்மை தேவனுடைய பிள்ளைகளாக

மாற்றி நல்ல பரம்பரைகளை உருவாக்கவே அவர் வந்தார். “அவருடைய நாமத்தில் விசுவாசமுள்ளவர்களாகி அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்க்கும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்” (யோவா.1:12). சீர்கெட்ட பரம்பரையாகிய நம்மை தேடி பரிசுத்தமுள்ள தேவன் வந்தார். சீர்கெட்ட பரம்பரையில் வந்த அவருடைய அன்பு எவ்வளவு பெரியது என்று பாருங்கள்.

இயேசுவிற்கு மோசமான பரம்பரை என்று சொல்லுபவர்கள் அறிந்து கொள்ளவேண்டிய மிக முக்கியமான காரியம் என்னவென்றால், இயேசு மனிதனாக பூமியில் பிறந்த போதிலும் இயேசுவுக்குள் யோசேப்பினுடைய இரத்தமோ மரியாளுடைய இரத்தமோ ஓடவில்லை என்பதுதான். சில வசனங்களை கவனியுங்கள் (மத்.1:16) யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பே பெற்றான். அவளிடத்தில் கிறிஸ்து என்னப்படுகிற இயேசு பிறந்தார். இங்கு நாம் பார்க்கும்போது யாக்கோபு யோசேப்பை பெற்றான் என்றுள்ளது. ஆனால் யோசேப்பு இயேசுவைப் பெற்றான் என்று எழுத வில்லை ஏன்? இயேசுவானவர் யோசேப்புக்கு பிறக்கவில்லை. அடுத்ததாக (லூக்.3:23) அப்பொழுது இயேசு ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரானார். அவர் யோசேப்பின் குமாரனென்று எண்ணப்பட்டார். இங்கும் இயேசு யோசேப்பின்குமாரன் என்றில்லை மாறாக அப்படி எண்ணப்பட்டார் என்றுள்ளது. கர்த்தர் ஏன் இப்படி செய்தார். உலகத்தினுடைய பார்வையில் இயேசுவின் தகப்பன் யோசேப்பு, ஆனால் உண்மையில் யோசேப்பு இயேசுவின் தகப்பன் இல்லை. அடுத்ததாக கவனியுங்கள் மரியாளுக்கு தேவதூதன் செய்தியை அறிவிப்பதை லூக்.1:28–35 வரை வாசிக்கும்போது, மரியாள் கேள்வி கேட்கிறார். இது எப்படி ஆகும். நான் புருஷனை அறியேனே? இதற்கு தேவ தூதனுடைய பதிலை கவனியுங்கள். பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப் படும். மத்.1:20,21 வசனங்களில் தேவதூதன் யோசேப்பினிடத்தில் சொல்வதை கவனியுங்கள். அவன் இப்படி சிந்தித்துக் கொண்டிருக்கையில் கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்கு காணப்பட்டு; தாவீதின் குமாரனாகிய யோசேப்பே உன் மனைவியாகிய மரியாளை சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே, அவளிடத்தில் உற்பத்தியா யிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். மட்டுமல்லாமல்



எபி.10:5ல் நாம் பார்க்கும்போது இயேசுவின் சரீரம் பரலோகத்தில் உண்டாக்கப்பட்டது என்று பார்க்கலாம். ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர் என்றுள்ளது. இன்னும் ஏராளமான வசனங்களை ஆதாரமாக காட்டமுடியும். ஆனால் சத்தியம் அறியவேண்டும் என்பவர்களுக்கு இதுவே போதுமானது. இன்னும் இயேசுவின் வம்சாவழியில் வந்த ஸ்திரீகளைக்குறித்து பார்ப்போம். முதலாம் ஆள் தாமார், இரண்டாம் ஆள் ராகாப், மூன்றாம் ஆள் ரூத், நான்காம் ஆள் உரியாவின் மனைவி. பொதுவாக இஸ்ரவேலர்கள் வம்சாவழி எழுதும்போது ஸ்திரீகளின் பெயர்களை எழுதமாட்டார்கள். இங்கும் மத்தேயு தன் சொந்த இஷ்டப்படி எழுதியிருந்தால் இவர்களுடைய பெயர்களை எழுதியிருக்க மாட்டார். ஆனால் பரிசுத்தஆவியானவர் அவரைக்கொண்டு எழுதின படியினால்தான் இந்த ஸ்திரீகளின் பெயர்கள் வந்தது. காரணம் இயேசுவை இழிவுபடுத்த அல்ல. மாறாக கர்த்தருடைய கிருபை எவ்வளவு பெரியது என்பதை உணர்த்துவதற்காகத்தான். கவனியுங்கள் தாமார் தன் மாமனாரிடம் தவறான முறையில் நடந்தாள். காரணம் அன்னிய தெய்வத்தை வணங்குகிறவன் மூலம் தனக்கு சந்ததி உண்டாகக்கூடாது என்பதற்காக ராகாப் வேசியாயிருந்தாலும், இஸ்ரவேலர்கள் வணங்கும் தெய்வம்தான் உண்மையுள்ள தெய்வம் என்று ஏற்றுக்கொண்டு, தன்னுடைய பாவதொழிலை விட்டுவிட்டவள். அடுத்தவள் ரூத், மோவாபிய ஸ்திரீ, கர்த்தருடைய சமூகத்தில் வருவதற்கு எந்த தகுதியும் இல்லாதவள். ஆனால் அவருடைய மாமியாரைப் பார்த்து அவள் சொன்ன காரியம்...நான் உம்மை பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக்குறித்து என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன், நீர் தங்கும் இடத்தில் நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம். உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று ரூத் 1:16ல் வாசிக்கலாம். விசுவாசத்தால் மெய்யான தேவனை ஏற்றுக்கொண்டு தன் சொந்த ஜனத்தைவிட்டு புறப்பட்டு வந்தவள். இன்றைக்கு யாராக இருந்தாலும் விசுவாசத்தால் மெய்யான தேவன் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்களை ஏற்றுக் கொள்கிறவர் தான் கர்த்தர். அடுத்தது உரியாவின் மனைவி, தாவீதும் இவளும் தவறு செய்தவள்தான். ஆனால் நாத்தான் தீர்க்கதரிசி அவனுடைய பாவத்தை உணர்த்தியபோது, உள்ளம் உடைந்து மனம் கசந்து அழுது பாவத்தை அறிக்கைசெய்துவிட்டது மட்டுமல்லாமல் தன்னால் வாழ்விழந்த உரியாவின் மனைவிக்கு வாழ்க்கையும் கொடுத்தான். இதோ உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி என்று யோவானால்

பிரகடனப் படுத்தப்பட்ட இயேசுகிறிஸ்து, நீதிமான்களை அல்ல, பாவிகளையே மனந்திரும்புவதற்காக அழைக்க வந்தேன் என்றவர், தன்னுடைய பிறப்பு சம்பவத்திலேயே பாவிகளை நேசித்த அவருடைய அளவற்ற அன்பைதான் அவருடைய வம்சாவழி பட்டியலில் நாம் பார்ப்பது இவ்வளவு பெரிதான கிருபையை உலகில் வேறு எங்கும் பார்க்கமுடியாது. அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவர் கர்த்தர் ஒருவரே.

**கேள்வி –17**

## திகிலடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார் என்ற குற்றச்சாட்டு:-

ஆண்டவர் இயேசு கிறிஸ்து இந்த பூமியில் வந்ததின் நோக்கம் மனுகுலத்தின் பாவங்களை தான் ஏற்றுக்கொண்டு, அதற்கான மரண தண்டனையையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதாகும். ஆனால் அதற்கு முன்னமே அவரைக் கொன்று விடும்படி சாத்தான் பலமுறை பலரை ஏவினான். ஆனால் அந்த முயற்சிகள் எல்லாம் தோல்வியைத்தான் சந்தித்தது. நான்தான் அவர் என்று சொல்லி இயேசுவே தன்னை ஒப்புக் கொடுக்கும்வரை ஒருவரும் அவரை ஒன்றும் செய்யமுடியவில்லை. ஆண்டவர் இயேசு இந்த பூமிக்கு மனிதனாக வந்தது எதற்கு என்பதை அவர் நன்றாக அறிந்திருந்தார். யாரும் அவரை வற்புறுத்தியதால் அவர் வரவில்லை. மனிதர்மேல் அவர் வைத்த அளவற்ற அன்பினிமித்தமே அவராகவே இந்த பூமிக்கு வந்தார். அவர் ஒருபோதும் எங்கேயும் யாரைப் பார்த்தும் பயந்து ஓடினதில்லை. அவருடைய வேளை வரும்வரை ஒருவராலும் அவரை தீங்கிழைக்க முடியவில்லை. வேளை வந்தபோது அவராகவேத் தன்னை ஒப்புக்கொடுத்தார். எனவே திகிலடையவும், வியாகுலப்படவும் தொடங்கினார் என்பதின் சரியான காரணத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். அவர் செய்யவேண்டிய காரியம் சாதாரணமானதல்ல, முழுமனுகுலத்தின் பாவத்தை சுமந்து அவர் சிலுவையில் மரிக்கவேண்டும். இது அனாதி தீர்மானம். ஆனால் அவருடைய சரீரத்தில் ஏற்பட்ட பலவீனம் அதற்கு முன்பே மரணம் ஏற்பட்டுவிடுமோ என்ற நிலை ஏற்பட்டது. வேத வாக்கியத்தின்படி சிலுவை மரணமேயன்றி வேறுவிதமான மரணம சம்பவிக்கக் கூடாது. அதேநேரம் அவர் கெத்சமனே தோட்டத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தபோது முழு மனுகுலத்தின் பாவங்கள் நிறைந்த பாத்திரத்தை தேவன் அவருக்குக் காண்பித்தார் முழு மனுகுலத்தின் பாவத்திற்காக பரிகார பலியாக வந்த பரிசுத்த தேவன் அந்த பாத்திரத்தை



குடிப்பதேயல்லாமல் வேறு ஏதேனும் வழி இருந்தால், அதாவது கூடுமானால் இந்த பாத்திரத்தை அகற்றும் என்று அவர் ஜெபித்தது உண்மைதான். ஆனால் மனுகுலத்தின் பாவ பரிகாரத்திற்கு அவர் அதை ஏற்றுக் கொள்வதேயல்லாமல் வேறு எந்த வழியும் இல்லாததினால் அந்த நேரத்தில் ஜெபம் கேட்கப்படாவிட்டாலும், மரித்து மூன்றாம் நாள் அவர் உயிர்த்தெழச் செய்து மகிமையான பதில் அவர் பெற்றுக்கொள்ளும்படி செய்தார்.

**கேள்வி –18**

## கிறிஸ்தவர்கள் ஏன் சிலை வழிபாடு செய்கிறார்கள்?

இந்த பகுதியில் ஒரே ஒரு கடவுள்தான் உண்டு என்பதையும், மரியாளையும் புனிதவான்களையும், சிலுவையையும் ஏன் வணங்குகிறீர்கள் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளீர்; ஒரே ஒரு கடவுள்தான் உண்டு. மூன்று கடவுள் இல்லை என்பதை எந்த குழந்தையும் புரிந்துகொள்ளும் விதமாக ஏற்கனவே விளக்கியுள்ளேன். அடுத்த காரியம் மரியாள், பரிசுத்தவான்கள், சிலுவை முதலானவைகளை வணங்குவது. இப்படிப்பட்டவைகளை வணங்குவது வேதாகமத்திற்கு விரோதமான காரியமாகும். இப்படி செய்கிறவர்கள் யாராக இருந்தாலும் நித்திய நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்று (வெளி 21:8)ல் சொல்லப்பட்டுள்ளது. சிலைகளை வணங்குகிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை (1 கொரி.6:9,10). ‘‘தேவனிடத்தில் பட்சபாதமில்லை’’ (ரோம.2:11) எந்த சபை சார்ந்தவர்களாக இருந்தாலும். அது பெந்தெகொஸ்தே சபையினராக இருந்தாலும் சிலுவையையும், சிலைகளையும் வணங்குகிறவர்கள். அதை செய்ய மனிதனை தூண்டுகின்ற சாத்தான் போய் சேரும் நித்திய அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள். ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிடித்த வழியில் நடப்பதற்கு கர்த்தரோ, வேதாகமமோ பொறுப்பல்ல, இஸ்லாம் மதத்தில் சேர்ந்தவர்கள் அதிகமான பேரும் மரித்தவர்களை அடக்கம் பண்ணியிருக்கும் தர்காவில் போய் கடவுளால் மட்டுமே செய்து தரக்கூடிய காரியங்களை, அவர்கள் செய்து தரும்படி வேண்டுதல் செய்கிறார்கள். இதைக்குறித்து ஒரு இஸ்லாம் மதக் குருவிடம் கேட்டபோது அவர்கள் எல்லாம் இஸ்லாமியர் இல்லை என்றார்கள். அநேக இஸ்லாமியர் தங்கள் கடைகளிலும், அலுவலகங்களிலும், மக்கா கேட் ஒரு புனித பொருளாக வைத்துள்ளார்கள். இப்படியாக அநேக காரியங்கள் சொல்லிக்கொண்டே போகலாம்.

உண்மையில் சிலை வணக்கம் செய்பவர்கள் இஸ்லாமியர்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஏன் என்றால் ஹஜ் பயணம் போகும் ஒவ்வொருவரும்

கஃபா என்று சொல்லப்படும் மக்காவிலுள்ள கட்டிடத்தை ஏழுமுறைச் சுற்றி வருகிறார்கள். ஏதாவது ஒன்றைச் சுற்றுவது சிலை வணக்கமாகும் என்னும் செய்தி திர்மிதி என்னும் ஹதீஸ் நூலில் பார்க்கமுடியும். அதுமட்டுமல்லாமல் ஹஜ் போகும் அனைவரும் ஹஜருல் அஸ்லத் என்னும் கல் ஏழுமுறை முத்தமிடுகிறார்கள். இந்தியாவிலுள்ள ஹிந்து மக்களை பார்த்தால் அவர்கள் நவ கிரகங்களை ஏழுமுறை சுற்றிவருவதுண்டு இதுபோலத்தான் இஸ்லாமியர்கள் ஏழுமுறை கஃபா சுற்றிவருகிறார்கள். அந்த கஃஅபா முற்காலத்தில் இவர்களுடைய வணக்கஸ்தலமாக இருந்தது என்றும் சில ஹிந்துக்கள் வாதிடுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் அங்கிருக்கும் ஹஜருல் அஸ்லத் என்னும் கல் சிவலிங்கம்தான் என்று சொல்லும் ஹிந்துக்களும் உண்டு.

ஹஜருல் அஸ்லத் என்னும் கல் ஒரு விக்கிரகம் என்பதை வரலாற்றாசிரியர்கள் நிரூபிக்கின்றார்கள். எடுத்துக்காட்டாக, கேரளா பாஷா இன்ஸ்டிடியுட் வெளியிட்டுள்ள உலக வரலாறு என்னும் புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளதை கவனியுங்கள். பக்கம் 260, A.D 630ல் நபி பதினாயிரம் போர் சேவகரோடுகூட மக்காவிற்கு முன்னேறினார். மக்கா வாசிகள் அவருக்குக் கீழ்ப்படிந்துவிட்டார்கள். பிறகு அந்த பட்டணம் இஸ்லாம் மதத்தின் பரிசுத்த பட்டணமாக பிரகடனப்படுத்தினார். கஃபாவிலிருந்து கருங்கல் சிலை தவிர மற்றுமுள்ள எல்லா சிலைகளையும் அவர் உடைத்து விட்டார். உலக வரலாறு முதல்பாகம் 13வது பதிப்பு. 1995 வரைக்கும் இந்த புஸ்தகமானது 13. பதிப்பு வெளிவந்துள்ளது என்பது நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

இந்த ஹஜருல் அஸ்லத் என்னும் கல் வணக்கத்திற்குரிய ஒரு பொருள் என்பதற்கு இஸ்லாமியர்களுடைய வரலாற்றில் நடந்த ஒரு சம்பவம் சான்றாகும். இஸ்லாமியர்களில் ஒரு பிரிவினராகிய கராமிதாக்கள் என்ற பிரிவினர் ஹிஜ்ரி. 317ல் இந்த கல் கஃபாவிலிருந்து பெயர்த்துக் கொண்டு போய். அவர்கள் அதை வணங்க ஆரம்பித்தார்கள். 22, வருடங்களுக்கு பிறகு அவர்களிடமிருந்து அந்தக்கல் யுத்தத்தில் பிடித்து மறுபடியும். இப்போது இருக்கும் இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது என்பது உலக வரலாறாகும். அது வழிபாட்டு பொருள் இல்லை என்றால் ஏன் அதற்காக சண்டைபோட வேண்டும்? கழற்றி எடுக்கப்பட்ட அந்த கல் திரும்பவும் கஃபாவில் எல்லோரும் முத்தமிடுவதற்கு ஏன் அங்கு வைக்கவேண்டும்? கஃபாவில் இருந்த மற்றும் எல்லா சிலைகளையும் அகற்றிவிட்ட நபி ஏன் இந்த சிலையை



மட்டும் அகற்றவில்லை என்று தெரியவில்லை. இந்த நாள் வரைக்கும் எல்லோரும் அதை முத்தமிட்டுத்தான் வருகிறார்கள்.

இங்கு ஹிந்து மக்கள் கங்கா நதியின் தண்ணீர் புனிதமானது என்றும் அதில் முழுகுவதும், குடிப்பதும், வீட்டுக்கு எடுத்துச் செல்வதும் உண்டு. கங்கையை தேவி என்பார்கள். இதுபோல் ஹஜ்ஜுக்கு போகிறவர்கள் ஸம்ஸம் என்னும் ஊற்றிலிருந்து தண்ணீர்பருகி புனித நீராக வீட்டுக்கும் எடுத்து செல்கிறார்கள். கபரு எங்கு பார்த்தாலும் பாருங்கள் மாலைபோட்டு அதை சுற்றிவந்து அங்கு பிரார்த்தனை செய்பவர்களையும் பார்க்கலாம். ஹிந்துக்கள் தங்களுடைய கடவுளுக்குத் தேர் இழுத்து பவனிவருகிறார்கள். இஸ்லாமியர்கள் சந்தனக்கூடு எடுப்பதும் மரித்தவர்களுக்காக கந்தூரி என்ற பெயரில் பலி செலுத்துவதும் பார்க்கமுடியும். கஃபாவை சுற்றுவதும் கல் முத்தமிடுவதும், அங்குச் செல்லும் அத்தனை இஸ்லாமியர்களும் செய்யும் காரியமாகும். இவைகளெல்லாம் பார்க்கும்போது அவர்களுக்குள் சிலைவணக்கம் உண்டு என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் உண்மையான கிறிஸ்தவன் ஒரு போதும் சிலைவணக்கம் செய்யமாட்டான். கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் அப்படிச் செய்கிறார்கள். கிறிஸ்தவ சபையை சேர்ந்தவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். கிறிஸ்தவ மதத்திற்கும் கிறிஸ்தவ சபைக்கு வேறுபாடு புரிந்துகொள்ளவேண்டும்.

இஸ்லாமியர்களுடைய மசூதிகளிலும் வீடுகளிலும் சந்திரன் முக்கியமான இடம் பிடித்துள்ளதை நாம் பார்க்கலாம். இஸ்லாம் மதம் உருவாகுவதற்கு முன்னமே அங்கு வாழ்ந்திருந்த அரபிகள் சந்திரனை ஒரு தெய்வமாக ஆராதித்து வந்தார்கள். ஏமன் நாட்டில் சந்திரனை ஆம்ஹ் என்று அழைத்து வந்தார்கள். இதுவுமல்லாமல் அரபி தேசத்தில் வாழ்ந்து வந்த படுவியன் ஆடு மேய்த்து வந்த மலைவாழ் மக்கள் சந்திரனை தெய்வமாக ஆராதித்து வந்தார்கள் என்பதற்கு அநேக ஆதாரங்கள் உண்டு. (பார்க்க இஸ்லாமிய சரித்திரம் (State Institue of Languvages kerala 695003) இந்தியாவில் சந்திர பகவான் என்று சொல்லி சந்திரனை ஹிந்து மக்கள் வணங்குகிறார்கள். இதே சந்திரன் மசூதிகளின் உச்சியிலும் முஸ்லீமுகளுடைய வீடுகளிலும் எவ்வளவு முக்கியமான இடம் பிடித்துள்ளது என்பதைப் பாருங்கள்.


உலகின் பல பகுதிகளிலும் மரித்து அடக்கம்பண்ணப்பட்ட நபர்களிடம் அவர்களுடைய கபரிங்கல் போய் பிரார்த்தனை செய்கிறார்கள். தெய்வத்தால் என்னவெல்லாம் செய்யமுடியுமோ அவைளெல்லாம் மரித்துப்போன நபர்கள் செய்துதரவேண்டும் என்று இவர்கள் பிரார்த்தனை செய்கிறார்கள். இதில்

வேடிக்கையான விஷயம் என்னவென்றால் அப்துல் காதிர் ஜிவானி மரித்து அடக்கம்பண்ணப்பட்ட இடம் பாக்தாது. ஆனால் இந்தியாவிலும் உலகத்தின் பலபகுதிகளிலும் அவருடைய பெயரில் கபருகட்டி அங்கெல்லாம் பிரார்த்தனை நடப்பதுண்டு அவர் கடவுள் அல்லாமலிருக்க இத்தனை இடங்களில் ஜனங்கள் கூட்டமாக பிரார்த்தனை செய்வது எப்படி அவரால் கேட்கமுடியும். ஆதலால் முஸ்லீம்கள் ஒரு தெய்வத்தை ஆராதிக்கிறவர் என்பது பொய். பலதெய்வங்களை ஆராதிக்கிறவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.


சாதாரணமாக சன்னிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் சொல்லுவார்கள். நாங்கள் இப்படிப்பட்ட தர்கா வழிபாடு செல்வதில்லை. இதெல்லாம் ஷியா பிரிவைச் சேர்ந்தவர்கள்தான் செய்கிறார்கள் என்று, ஆனால் சமீபத்தில் காஸ்மீரில் போக நேரிட்டது அங்கு புகழ்பெற்ற ஷாலிமார் மசூதி பார்க்கும்படி அங்கு சென்றேன். சாதாரணமாக முஸ்லீம்கள் செய்துவரும் ஐந்து வேளை தொழுகையல்லாமல் வெகுவான ஜனங்கள் அங்கு அமர்ந்து ஆராதனை செய்துவந்தார்கள். அதைக்குறித்து விசாரித்தால் ஒரு அதிர்ச்சியான தகவல் கிடைத்து.

நபி முகம்மது அவர்களுடைய தாடிமுடி அங்கு ஒரு பேழையில் வைக்கப் பட்டுள்ளது. அங்கிருக்கும் ஜனங்கள் அதை ஆராதனை செய்கிறார்களாம். அது மட்டுமல்லாமல் இந்த முடி பலமுறை திருட்டுப்போனதுண்டு. ஆனால் அது முகம்மது அவர்களுடைய வல்லமையுள்ள முடியாக இருப்பதால் திருட்டுப்போனாலும் அது திருடனுக்குக் கொண்டுபோக முடியாமல் திரும்பக் கிடைத்துவிடுமாம் என்று பெருமையாக சொல்கிறார்கள். இங்கு குறிப்பிடத் தக்க விஷயம் என்னவென்றால் இந்த மசூதி சன்னிப் பிரிவைச் சேர்ந்தவர் களுடையது என்பதாகும். ஒவ்வொரு வெள்ளி கிழமைகளிலும் இங்கு லட்சக்கணக்கான மக்கள் கூடி வருகிறார்கள் என்பதும் கவனிக்க வேண்டிய தாகும். ஆதலால் ஷியா பிரிவினர்மேல் பழிப்போட்டு தப்பித்துக் கொள்ளும் சன்னிகளுடைய வேஷமும் கரைந்துபோயிற்று. கிறிஸ்தவ சபையில் இல்லாததும் கிறிஸ்தவ மதத்தினர் செய்வதுமான காரியங்களைச் சொல்லி கேளியும் கிண்டலுமாக நடக்கிறவர்கள் தங்களுக்குள்ளே நடக்கும். காரியங்கள் என்ன என்பதை மறக்கிறார்கள். இது யானை கால் நோயுடைய மனிதன் தன் காலை மணலில் மறைத்து வைத்துவிட்டு பாலுண்ணி உள்ள ஒருவனை கேளி செய்வதுபோலாகும். கிறிஸ்தவ சபை எங்கும் எந்த சிலை வணக்கமும் செய்வதில்லை. கிறிஸ்தவ மதத்தினர் செய்கிறார்கள். அவர்களுக்கு கிறிஸ்தவ சபைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இயேசுவும் அவர்களைத் தெரியாது என்றுச் சொல்லுவார் என்பது வேதத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.






சிவலிங்கமும் கஅஃபா கல்லும் ஒன்றுபோல் இருப்பதை பார்க்கலாம்.



கஅஃபா சுவரில் தொட்டு வணங்குகிறார்கள்





கஅஃபா கல்லைத் தொழுவதும், முத்தமிடுவதும் பார்க்கலாம்



அல்உஷ கல்லை சுற்றி வருகிறார்கள். இங்கு தலை மொட்டை அடிப்பார்கள்




கஅஃபா கல்லைத் தொட்டு வணங்குகிறார்கள்




மசூதியின் உச்சியில் சந்திரன்

***புகைப்படங்களுக்காக Dr. தயாலன் அவர்களுக்கு நன்றி***


***பார்க்க சிலையா சிறையா D.V.D***



யூபால் சந்திர கடவுள்
360 விக்கிரகங்களின்
தலைவி




யூபால் கடவுள்



ஹிந்துக்கள் தெய்வம்
என்று வணங்கும் கறுப்பு
கல்






இஸ்லாமிய நாடுகளின் கொடிகளில் சந்திரன்



சிவனுடைய தலையில்
சந்திரன் இருப்பதை
பார்க்கலாம்



சந்திர கடவுள்



கஅஃபா கல்லின் சில தோற்றங்கள்

***புகைப்படங்களுக்காக Dr. தயாலன் அவர்களுக்கு நன்றி***
***பார்க்க சிலையா சிறையா D.V.D***



உண்மையான கிறிஸ்தவர்கள் யார் என்பதை முதலாவது அறிந்து கொள்வது நல்லது. கிறிஸ்தவன் என்பவன் யார்?

அநேகர் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தாலும், மூன்று விதமான கிறிஸ்தவர்கள் இன்று உலகில் இருக்கிறார்கள்.

## 1. முதல் விதமான கிறிஸ்தவர்கள்

ஏற்கனவே தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் யாருக்காவது மகனாக மகளாக பிறப்பதால் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள். இவர்கள் தங்களை, நாங்கள் தான் ஆதியிலிருந்து கிறிஸ்தவர்கள் மற்றவர்களெல்லாம் பாதியில் வந்தவர்கள் என்று சொல்லுவார்கள். ஆனால் நாம் அறிந்துக்கொள்ளவேண்டிய உண்மை என்னவென்றால், யாராவது கிறிஸ்தவனுக்கு பிறக்கும் மகனோ, மகளோ பிறப்பினால் கிறிஸ்தவன் ஆகமுடியாது. ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை கவனியுங்கள். ‘‘மாமிசத்தினால் பிறப்பது மாமிசமாயிருக்கும். ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.’’ (யோவா.3:6) இங்கு ஆண்டவர் சொல்லும் காரியம் மாம்சத்திலிருந்து பிறப்பது மாமிசமாயிருக்கும். இதனுடைய சரியான விளக்கம். ஒருவர் இந்த பூமியில் பிறக்கும்போது யாருடைய மாமிசத்திலிருந்து பிறந்தார்களோ அவருக்குத்தான் மகன் அல்லது மகள் தேவனுடைய மகனாகவோ மகளாகவோ ஆகமுடியாது. ஆனால் உண்மையான கிறிஸ்தவன் மறுபடியும் பிறந்தவன் , மறுபடியும் பிறக்காதவன் எவனும் கிறிஸ்தவனாக முடியாது. இதைக்குறித்து மேலும் விளக்கத்தைத் தருகிறேன்.

## 2. இரண்டாவது விதமான கிறிஸ்தவர்கள்

இயேசுவிற்கு வல்லமையுண்டு, அவராலே நோய்கள் குணமாக்கமுடியும், பிசாசுகளைத் துரத்தமுடியும், உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை தரமுடியும் என்று விசுவாசிக்கின்றவர்கள் உண்டு. இவர்களில் சிலர் அநேக கடவுள்களில் இயேசுவும் ஒரு கடவுள் என்று விசுவாசிப்பார்கள். ஒரு சிலர் இயேசு மட்டும்தான் கடவுள் என்று விசுவாசிப்பார்கள். ஆனால் இரட்சிக்கப் பட்டிருக்கமாட்டார்கள். உலகப்பிரகாரமான தங்களுடைய தேவைகளுக்காக இயேசுவை விசுவாசிப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் கேட்டுக் கொள்ளும் ஜெபத்திற்குப் பதில் கிடைத்தால் அப்படிப்பட்ட ஜெபங்கள் நடக்கும் இடங்களுக்கு தவறாமல் போவார்கள். வேதம் வாசிப்பார்கள். ஒரு கிறிஸ்தவனுக்கு உலகத்தார் சொல்கிற எல்லா அறிகுறிகளும் இருக்கும்.

ஆனால் மறுபடியும் பிறந்த அனுபவம் இல்லாததினால். இவ்வுலக காரியங்களுக்காக கவலைப்பட்டு, இதற்காக வாழ்க்கையின் அதிகமான நேரத்தைச் செலவழித்து வாழ்வார்கள். இவ்வுலகத்திற்குரிய ஏதேனும் கிடைக்காமலோ அல்லது நஷ்டமடைந்தாலோ அதற்காக துக்கப்பட்டுக்கொண்டிருப்பார்கள். இவ்வுலக ஆசீர்வாதத்திற்காக இயேசுவை விசுவாசிக்கும் இப்படிப் பட்டவர்கள் கிறிஸ்தவசபை என்று சொல்லிக்கொள்ளும் ஏதேனும் ஒரு சபையில் இருந்தாலும், இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையில் அங்கத்தினர்களாக இருக்க முடியாது. காரணம் கர்த்தருடைய சபையில் ஒருவரை சேர்ப்பது என்பது எந்த மனிதனாலும் முடியாத காரியம். ஏனென்றால் அப்.2:47ல் வாசித்தால் இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார் என்றுள்ளது. இங்கு சபையில் ஒருவரை சேர்ப்பது கர்த்தர் என்றும் அதற்கான அடிப்படைத் தகுதி இரட்சிப்புதான் என்றும் தெளிவாக எழுதப்பட்டுள்ளதால், உலகப் பிரகாரமான ஏதேனும் ஒரு காரியம் பெற்றுக்கொள்வதற்காக இயேசுவிடம் வந்து, அது பெற்றுக்கொண்டதினால் யாரும் கிறிஸ்தவர்களாக முடியாது.

### 3. மூன்றாவது கூட்டத்தார்

இரட்சிக்கப்பட்டு மறுபடியும் பிறந்தவர்கள். உண்மையாக ஒருவர் இரட்சிக்கப்படும்போது, அல்லது மறுபடியும் பிறந்த அனுபவம் பெற்றுக் கொள்ளும்போது என்ன சம்பவிக்கின்றது என்று பார்ப்போம்.

a இரட்சிப்பின் அனுபவம் அல்லது மறுபடியும் பிறந்த அனுபவம் என்பது, முன்பு சாத்தானுடைய பிள்ளையாக இருந்த ஒருவர் தேவனுடைய பிள்ளையாக மாறுவதாகும். வசனத்தை கவனியுங்கள்: "அவருடைய நாமத்தில் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும் படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்" (யோவா.1:12).

b. தேவனுடைய ராஜ்ஜியத்தில் உட்பட்டவர்களாக மாறும் அனுபவமாகும். இருளின் அந்தகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்ஜியத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம் (கொலோ.1:13).

c. இருளில் இருந்து வெளிச்சத்திற்கு வருகிற அனுபவம். நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும் இருக்கிறீர்கள் அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் (1 பேது.2:9).



d. அசுத்த ஜாதியாயிருந்து இரட்சிப்பினால் பரிசுத்த ஜாதியாக்கப்பட்ட அனுபவம். (இந்தியாவில் பிராமணர்கள் மனுநீதி என்கிற நூலில் எழுதியிருக்கும் ஜாதியில்லை என்பதை உணர்ந்துகொள்க).

**வசனம்:** நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் (1 பேது.2:9).

e. மரணத்திலிருந்து ஜீவனுக்குள் பிரவேசிக்கும் அனுபவம்.

**வசனம்:** அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்பித்தார் (எபே.2:1).

f. சாத்தானுடைய வீட்டாராக இருந்தவர்கள் தேவனுடைய வீட்டாராக மாறும் அனுபவம்.

**வசனம்:** இனி நீங்கள் அன்னியரும், பரதேசிகளுமாயிராமல் பரிசுத்த வான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து (எபே.2:19).

g. மறுபடியும் பிறப்பதின்மூலம் குடியிருப்பு மாறிவிடும்.

**வசனம்:** நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது... (பிலி.3:20)

h. ஜீவ புஸ்தகத்தில் பேர் எழுதப்படும்.

**வசனம்:** உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காக சந்தோஷப்படுங்கள் என்றார் (லூக்.10:20).

N.B. ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவனாக காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலேத் தள்ளப்படுவான் (வெளி.20:15).

i. நீதிமான்களாக மாற்றப்படுகிறார்கள்.

**வசனம்:** (ரோம.5:1) இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.

j. ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்கிறோம்.

**வசனம்:** ஆனபடியால் கிறிஸ்து இயேசுவுக்குட்பட்ட வர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர் களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை (ரோம.8:1).

**k.** புது சிருஷ்டியாக மாறுகிறார்

**வசனம்:** இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின (2 கொரி.5:17).

**l.** தேவனிடத்தில் சேரும் சிலாக்கியம் பெற்றுக்கொள்கிறோம்.

**வசனம்:** ஆகையால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம் (எபி.4:16).

**m.** பரிசுத்த ஆவியால் முத்திரை போடப்படும்:

**வசனம்:** நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானபோது வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட பரிசுத்தாவியால் அவருக்குள் முத்திரைப் போடப்பட்டீர்கள் (எபே.1:13, 4:30).

**n.** பரிசுத்தாவி என்கிற அச்சாரத்தைப் பெற்றுக்கொள்கிறோம்.

**வசனம்:** அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவி யென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார் (2 கொரி.1:22, 5:5).

**o.** கிறிஸ்து உள்ளத்தில் வசிக்கும் அனுபவம்

**வசனம்:** புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்த வான்களுக்குத் தெரியப்படுத்த சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம் (கொலோ.1:27).

**p.** நித்திய ஜீவன் பெற்றுக்கொள்ளத் தகுதிப்பெறுவார்கள்.

**வசனம்:** உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும் தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும் தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதுகிறேன் (யோவா.5:24,1 யோவா.5:13) .



ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்டது உண்மையானால் அவனுடைய ஆராதனை மாறிவிடும். அது வரைக்கும் ஏதாவது ஒன்று கண்முன் வைத்து ஆராதனை செய்தவர் ஆவியிலும் உண்மையிலும் தேவனை ஆராதிக்க துவங்கும்.

இரட்சிக்கப்படும்போது ஒரு மனிதனில் நடக்கும் காரியங்கள் இன்னும் ஏராளம் எழுதிக்கொண்டே போகலாம். ஒருவன் கிறிஸ்தவனாக மாறுகிறான் என்று சொன்னால் இப்படிப்பட்ட மாற்றங்கள் அவனுக்குள் உண்டாகும். ஆனால் வெறுமனே மதம் மாறுகிறவனுக்குள் இந்த மாற்றங்கள் சம்பவிப்ப தில்லை. மதம் மாறுகிறவனுடைய உலகப்பெயர் சில நேரங்களில் மாற்றப்படும். இவ்வுலகில் தன்னை கிறிஸ்தவன் என்று சொல்லக்கூடும். ஆனால் தேவனுடைய பார்வையில் அவர் கிறிஸ்தவனாக இருப்பதில்லை. இதுபோலவே ஏற்கனவே தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்களுடைய பிள்ளைகளுக்குக் கிறிஸ்தவர்கள் பயன்படுத்தும் பெயர் இருக்கக்கூடும். இந்த பூமியில் ஏதேனும் ஒரு சபையில் ரெஜிஸ்டரில் அவருடைய பெயர் இருக்கக்கூடும். ஆனால் ஜீவபுஸ்தகத்தில் பெயர் இருக்காது. இப்படிப்பட்டவர்கள் பரலோகம் செல்லமுடியாது. இப்படியாக இரட்சிப்பின் அனுபவம் பெற்றுக்கொள்ளாதவர்கள் சிலைவழிபாடாகிய சிலுவையை தங்களுடைய பிரார்த்தனை ஸ்தலத்திலும், வீடுகளிலும், கழுத்திலும் மாட்டிக்கொள்வார்கள். சிலுவையை மட்டுமல்லாமல், மரியாள், இயேசு, சூசை என்று அநேக படங்களையும், சிலைகளையும் வைத்து அதற்கு மரியாதை செலுத்துவார்கள். இப்படிப்பட்டவர்கள் பரலோக நம்பிக்கை உள்ளவர்களல்ல. இவர்கள் இவ்வுலகப் பொருட்களுக்காக மற்றவர்களை ஏமாற்றுவதும், சண்டை போடுவதும், இவ்வுலக மக்களைப்போல தாங்களும் இருக்கவேண்டும் என்று தங்களை விலையுயர்ந்த வஸ்திரங்களினாலும், பலதரப்பட்ட பல்வேறு பொருட்களாலும் தங்களை அலங்கரித்துக் கொள்வார்கள். இவர்களுடைய எல்லா செயல்களும் இவ்வுலகில் தங்களை மேன்மைப்படுத்திக் காட்டுவதாகும்.

இரட்சிக்கப்பட்டவனுக்கு தேவனை ஆராதிப்பதற்கு எந்த ஒருப்பொருளும் தேவைப்படாது. மெய்யான தேவனை எங்கு வேண்டுமானாலும் ஆவியிலும் உண்மையிலும் ஆராதனைச் செய்கிறவனாக மாறிவிடும் (யோவா.4:23,24).

மற்றவர்கள் முன்னால் நாங்கள் சற்றாகிலும் குறைந்து போகக்கூடாது என்பதற்காக இரட்சிக்கப்படாதவர்கள் எதை வேண்டுமானாலும் செய்வார்கள். ஆனால் உண்மையாக இரட்சிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவன் அல்லது கிறிஸ்தவ

பெண் இவ்வுலகில் தங்களை அன்னியரும் பரதேசிகளும் என்று எண்ணிக் கொண்டு கிறிஸ்துவிற்காக எவ்வளவு அவமானம் நிந்தை நஷ்டங்கள் சந்திக்க வேண்டியதாக வந்தாலும் சந்தோஷத்தோடே சகித்து கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துவார்கள். இப்படியாக இரட்சிக்கப்பட்டவர்களுக்காக இயேசு கிறிஸ்து பரலோகில் இடத்தை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறார் (யோவா.14:2,3). இரட்சிக்கப்பட்டு பரிசுத்தமாக வாழ்ந்து அவருக்காகக் காத்திருக்கிறவர்களைச் சேர்த்துக்கொள்ள அவர் சீக்கிரமாக வரப் போகிறார் (பிலி.3:20,21; எபி.9:28).

அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்தஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்தது மாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலை யற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக் கொள்ளுவோம் (எபி.2:4).

உண்மையான கிறிஸ்தவம் என்ன என்பதை அறியாமல் கிறிஸ்தவ மதம் என்று சொல்லுகிற கும்பலில் உள்ளவர்கள் செய்யும் காரியங்களை வைத்துக் கொண்டு கிறிஸ்தவத்தைக் குறைசொல்லி திரியாமல் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வது எல்லா மனிதர்கள் மேலும் விழுந்த கடமையாகும்.

இதுவரையில் நாம் பார்த்த இந்த இரட்சிப்பின் அனுபவத்தைக்குறித்து சில காரியங்களை நாம் பார்ப்போம்.

இந்த இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு தேவனுக்கு நாம் என்ன கொடுக்க வேண்டும்.

இரட்சிக்கப்படுவதற்கு நாம் தேவனுக்கு ஒன்றும் கொடுக்க தேவை யில்லை. காரணம் இரட்சிப்பு இலவசம் என்று வேதம் தெளிவாக சொல்கிறது. "அது இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும். வித்தியாசமே இல்லை. எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்ற வர்களாகி இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்" (ரோம.3:22–24).

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல இது தேவனுடைய ஈவு ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல (எபே.2:8,9).



நாம் கொடுக்கும் ஏதேனும் பொருளினாலோ, நாம் செய்யும் ஏதேனும் கிரியையினாலோ இரட்சிப்பு கிடைக்காது. அது முற்றிலும் இலவசமானது என்பதை நாம் இங்கு பார்த்தோம். ஆதலால் எந்த ஒரு மனிதனும் செய்ய வேண்டிய காரியம் தான் பாவி என்பதை ஒத்துக்கொண்டு தன்னுடைய பாவத்திற்கு பரிகாரம் இயேசு கிறிஸ்துதான் என்பதை விசுவாசித்து இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தன்னுடைய வாழ்க்கையின் கர்த்தராய் இயேசுவை ஏற்றுக்கொண்டு கர்த்தருக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கவேண்டும் (ரோம.10:9,10).

அப்பொழுது, அழிவில்லாத கர்த்தராகிய தேவ வசனம் ஒருவனுக்குள் வந்து அவன் மறுபடியும் பிறப்பான் (1 பேது.1:23).

இப்படியாக அன்பும் நீதியுமுள்ள தேவன் மனுகுலத்திற்கு ஏற்படுத்தின இரட்சிப்பை அநேகர் தங்களுடைய இருமாப்பினால் புறக்கனித்துவிட்டு சொந்த நீதியைத் தேடுகிறார்கள். இப்படி செய்கிறவர்களுக்குத்தான் இரண்டாம் மரணமாகிய அக்கினி கடலில் தள்ளப்படும் அனுபவம் கிடைக்கும்.

**கேள்வி –19**

### அடுத்ததாக இயேசுதான் மனுகுலத்தின் பாவத்திற்கு பரிகாரி என்றால் இயேசு பிறப்பதற்கு முன்பே வாழ்ந்த மனிதர் களுடைய பாவங்கள் மன்னிக்கப் படுவதற்கு என்ன வழி?

இதற்கான பதிலைச் சுருக்கமாக எழுதுகிறேன்.

ஆண்டவர் இயேசு மனுகுலத்தின் பாவபரிகாரத்திற்காக மரிக்கவேண்டும் என்பது திடீரென்று தேவன் எடுத்த ஒரு முடிவல்ல என்பதை முன்பே பார்த்திருக்கிறோம். இந்த தீர்மானம் உலகத்தோற்றத்திற்கு முன்பே உள்ளதாகும். முதல் மனிதனாகிய ஆதாம் பாவம் செய்த அந்த நாளிலே கர்த்தர் அவனை சந்தித்து மனுகுலத்தின் பாவத்திற்காக தேவகுமாரன் மனிதனாக வந்து பாவபரிகாரம் செய்வார் என்று அவனுக்கு அறிவித்ததின் சுருக்கம் ஆதி.3:15ல் பார்க்கலாம். மட்டுமல்லாமல் தேவகுமாரன் மனிதனாக பூமியில் வந்து மனுகுலத்தின் பாவத்திற்காக மரிக்கும் அந்தநாள் வரைக்கும் அதை அறிக்கைசெய்யவும், மெய்யான பாவபரிகார பலி வெளிப்படும்வரை அதற்கு நிழலான பலி மக்கள் செலுத்தவேண்டும் என்று கர்த்தர் ஆதாமிற்கு கட்டளையிட்டும் இருக்கிறார். இப்போது உயிரோடிருக்கும் நாம் இயேசுவானவர் தன்னை பாவபரிகார பலியாக செலுத்தினபிறகு வாழ்பவர்களாக இருப்பதால் நாம் எந்த பலியும் பாவபரிகாரத்திற்காகச் செலுத்தவேண்டியதில்லை.

ஆனால் இயேசு தன்னை பலியாக ஒப்புக்கொடுப்பதற்கு முன்பே வாழ்ந்தவர்கள் நாங்கள் இதை விசுவாசிக்கிறோம் என்று சொல்லி தங்கள் விசுவாசத்திற்கு அடையாளமாக, காளை, ஆடு, புறா மற்றும் தானிய பலி முதலியவை செலுத்தவேண்டியதாக இருந்தது. இந்த காரியங்கள் நிழலாக இருந்ததால் மெய்யான தேவாட்டுக்குட்டி இயேசு தன்னை பலியாக செலுத்தினபின்பு நிழலான காரியங்கள் செய்யவேண்டியதில்லை.

ஆபேலும், காயீனும் செலுத்தின பலிகளும் அதின் விளைவுகளும் நாம் பார்த்தால் இந்த காரியத்தைப் புரிந்துகொள்ளமுடியும் (ஆதி.4:3–5, 7–8). இந்த வசனங்களில் முதலாவது பலி செலுத்தினது காயின்தான். ஆனாலும் அவனிலும் அவனுடைய காணிக்கையிலும் தேவன் பிரியப்படவில்லை. முதலாவது செய்தது யார், அதிகமாக செய்தது யார் என்பதைப் பார்த்து தேவன் பிரியப்படுபவரல்ல. அவருடைய நீதி மற்றும் கட்டளையின்படி விசுவாசத்தோடே செய்கிறார்களா என்றுதான் கர்த்தர் பார்க்கிறார். ஏன் காயீனையும் அவன் பலியையும் ஏற்றுக்கொள்ளவில்லை? சிலர் இதை தவறாக காயீன் எலிகடிச்சக் கிழங்கைக் கொண்டுவந்ததினால்தான் என்று சொல்வார்கள். உண்மை அப்படியல்ல (எபி.11:4)ல் வாசிக்கிறோம். விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்கு செலுத்தினான். அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிப் பெற்றான். அவனுடைய காணிக்கையைக் குறித்து தேவனே சாட்சிக் கொடுத்தார். அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான். இந்த வசனங்களில் நாம் புரிந்து கொள்ளும்படி தெளிவாக சொல்லப்பட்டுள்ள காரியம், ஆபேல் விசுவாசத்தோடே பலி செலுத்தினான். தகப்பனாகிய ஆதாம்மூலம் ஆபேலுக்கு அறிவிக்கப்பட்டபடி, மனுகுலத்தின் பாவங்களுக்காக தேவன் மனுஷனாக வந்து பாவபரிகாரம் செய்வார் என்பதை விசுவாசித்து கிரியை செய்தான். தேவன் அவனையும் அவன் பலியையும் ஏற்றுக்கொண்டார். ஆனால் காயீன் பலி செலுத்தினாலும் அதில் அவன் தேவனுடைய நீதியைத் தேடாமல் சுயநீதியைத் தேடினான். எனவேதான் தேவன் அவனையும், அவன் காணிக்கையையும் புறக்கனித்தார். இன்றைக்கு பெரும்பான்மை யானவர்கள் தங்கள் சுயநீதியைத் தேடி, தேவநீதியை புறக்கனிக்கிறார்கள். ஆகவே தேவ சமூகத்திலிருந்து தள்ளப்பட்டுப் போகிறார்கள்.

இப்படியாக ஆண்டவர் இயேசுகிறிஸ்து இந்த பூமியில் மனிதனாக வந்து மனுகுலத்தின் பாவபரிகாரத்திற்காக தன் ஜீவன் பலியாகக் கொடுத்தநாள் வரைக்கும் யாரெல்லாம் இதை விசுவாசித்து பலியின்மூலம் தேவனோடு உடன்படிக்கை செய்தார்களோ அவர்களெல்லாம் இரட்சிக்கப்பட்டவர்



கள்தான். ஆனால் இயேசுவின் மணவாட்டி சபையின் அங்கத்தினர்கள் அல்ல. இப்படியாக தேவனிடம் உடன்படிக்கை செய்தவர்களைக் குறித்துதான் சங்.50:5ல் பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார். இது இயேசு இந்த பூமியில் மனிதனாக வருவதற்கு முன்னமே பலிமூலம் தேவனிடம் உடன்படிக்கை பண்ணினவர்களை நியாயம் தீர்ப்பதற்குள்ள வசனம். சங்.50:4ல் அவர் தம்முடைய ஜனத்தை நியாயந் தீர்க்க உயர இருக்கும் வானங்களையும், பூமியையும் கூப்பிடுவார் என்றுள்ளது. நியாயத்தீர்ப்பு நாளில் தப்பித்துக்கொள்வதற்கு கிறிஸ்துவிற்கு முன் வாழ்ந்தவர்கள் தங்களுடைய பாவங்களை அறிக்கைசெய்து இயேசுவின் பலிக்கு நிழலான பலியைச் செலுத்தி தேவனோடே உடன் படிக்கை செய்யவேண்டியதாயிருந்தது. அதனால்தான் ஆபிரகாம் பலியைச் செலுத்தினார். ஆனால் இஸ்லாமியர்கள் இதின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் இன்று வரைக்கும் ஆடு, ஒட்டகம் போன்றவற்றை பலி செலுத்தி வருகிறார்கள். இஸ்லாமியர் மட்டுமல்ல மற்றும் பல மதத்தினரும் பலிவித பலிகளைச் செலுத்தி வருகின்றனர். ஏன் இவர்கள் இப்படி செய்கிறார்கள் என்று கேட்டால், அதற்கு ஒரே காரணம் எல்லோரும் ஆதாமின் சந்ததிகள். அதுபோல ஆதாமிடமிருந்தும் நோவாவிடமிருந்தும் எல்லா மக்களுக்கும் இந்த உண்மை பகிர்ந்தளிக்கப்பட்டாலும் காலப்போக்கில் மக்கள் இதன் உண்மையான கருத்தைப் புறக்கனித்துவிட்டு தங்கள் மனோ இச்சையின்படி செயல்பட்டு வருகிறார்கள்.

பொருள் வந்தபிறகு யாரும் நிழலை பின்பற்ற வேண்டியதில்லை. ஆண்டவர் இயேசுவின் வார்த்தையை கவனியுங்கள். போஜனம்பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து; இந்த பாத்திரம் உங்களுக்காக சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார் (லூக்.22:20). கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களை சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு... (எபி.9:28). வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத் தினாலே அல்ல. தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து நித்திய மீட்பை உண்டுபண்ணினார் (எபி.9:12). புதிய உடன்படிக்கையின் இரத்தம் சிந்தப்படும் வரையில் வாழ்ந்திருந்தவர்கள் யாரெல்லாம் அதை விசுவாசித்து பலியின்மூலம் தேவனோடு உடன்படிக்கை பண்ணினார்களோ அவர்களுடைய பாவங் களெல்லாம் நிச்சயமாக மன்னிக்கப்படும். ஆனால் புதிய உடன்படிக்கையின்

இரத்தம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிந்தின பிறகும், அதை ஏற்றுக் கொள்ளாமல், தங்கள் மனோ இச்சையின்படி நடக்கிறவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதில்லை. இதுதான் உண்மை. ஏற்றுக்கொள்ள மனதுள்ளவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். புறக்கனிக்கிறவர்கள் புறக்கனிக்கலாம். கர்த்தர் எவரையும் சங்கிலி போட்டுக் கட்டி இழுத்துக்கொண்டு போக மாட்டார் மனிதனுக்கு தானாகவே சிந்தித்து முடிவுக்குவரும் அதிகாரமும், சுதந்திரமும் கர்த்தர் கொடுத்திருக்கிறார். ஆமென்.

**கேள்விகள் –20**

## பழைய ஏற்பாட்டில் வெளிப்பட்ட யேகோவாவும் கிறிஸ்துவும் ஒருவர் தானா?

பழைய ஏற்பாட்டில் வெளிப்பட்ட யோகோவாவும் கிறிஸ்துவும் ஒருவர்தான்.

அதற்கான ஆதாரங்களை வேதத்திலிருந்து பார்ப்போம்.

**I தேவனுடைய பெயர் என்ன?**

(யாத்.3:13–14) அப்பொழுது மோசே தேவனை நோக்கி நான் இஸ்ரவேல் புத்திரர் இடத்தில்போய், உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்கு சொல்லும்போது, அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால் நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன் என்றான். அதற்கு தேவன் இருக்கிறவராகவே இருக்கின்றேன் என்று மோசேயுடன் சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரிடம் சொல்வாயாக (யாக்3:15). மேலும் தேவன் மோசேயை நோக்கி நான் யேகோவா சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் தரிசனமானார். ஆனால் யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்பட வில்லை (யாத்.6:2–3). இதுவே என் நாமம், தலைமுறை, தலைமுறை தோறும் இதுவே என்பெயர் பிரஸ்தாபம். இங்கு தேவனுடைய நாமம் யோகோவா என்று அவரே அறிமுகப்படுத்தினதை நாம் பார்க்கலாம். (யேகோவா என்னும் நாமம் முன்னமே இருந்ததுதான். ஆனால் முன் காலங்களில் அந்த பேரில் தான் அவரை அழைக்கவேண்டும் என்று அவர் சொல்லவில்லை. மோசேயை ஆண்டவர் அழைத்து பார்வோனிடம் அனுப்பும்போது மோசே கேள்வி கேட்டான் உன் பெயர் என்ன? என்று சொல்லவேண்டும். உண்மையை



சொல்லவேண்டுமானால் தேவனுக்கு எந்த பெயரும் தேவையில்லை. ஏனென்றால் அவர் ஒருவர் மட்டும் இருப்பதால், ஆனால் சாத்தானின் சதியில் விழுந்த மனிதர்கள் தங்களுக்கென்று அநேக தெய்வங்களை உருவாக்கினபடியால் மெய்யான தேவன் அவர் இருக்கிறவராக இருக்கிறார் என்பதை விளங்கச் செய்யும் வார்த்தையை அடிப்படையாகக் கொண்ட யாவே என்பது அவருடைய பெயர் என்று மோசேவுக்கு அறிவித்தார். இந்த பெயர் ஒரு சில நாட்களுக்கு மட்டும் அல்லாமல் என்றைக்கும் என்னுடைய பெயர் இதுதான் என்று கர்த்தர் மோசேயிடம் சொன்னதை யாத்.3:15 இல் பார்க்கலாம். ஆதலால் பழைய ஏற்பாடு நமக்கு அறிவிக்கும் காரியம் ஆபிராமுக்கு அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்று தரிசனமானார். அதே தேவன் மோசேக்கு யேகோவா என்று தரிசனமானார். இந்த யேகோவா தான் இயேசுகிறிஸ்து என்பதற்கு அநேக ஆதாரங்கள் உண்டு. அதில் சிலவற்றை இங்குப் பார்ப்போம். மோசேவுக்கு தேவன் தன்னுடைய பெயர் யேகோவா என்று வெளிப்படுத்தினபிறகு தேவனுடைய தாசர்களும் அவரை நம்பி வாழ்ந்த ஜனங்களும் அவர்களுடைய வாழ்க்கையில் கர்த்தர் ஏதாகிலும் செய்தால், கர்த்தர் இதைச் செய்தார் என்று யோகோவா என்ற நாமத்துடன் சேர்த்து கர்த்தர் செய்த காரியங்களும் இணைத்து அவரை அழைப்பது உண்டு. அவைகளில் சிலவற்றைப் பார்ப்போம்.

1. எகிப்திலிருந்து புறப்பட்டு வந்த இஸ்ரேவேல் ஜனம் தங்களுடைய வாக்குத்தத்த தேசத்தை நோக்கி போய்க்கொண்டிருக்கும்போது அவர்களை தடைசெய்ய முயற்சித்த அமலேக்கியருக்கு எதிராக கர்த்தர் அவர்களுக்கு ஜெயம் கொடுத்தபோது ஜெயம் கொடுக்கும் கர்த்தர் என்று யோகோவா நிசி என்று அவரை அழைத்ததை யாத்.17:15ல் பார்க்கலாம்.

யேகோவா நிசி என்பதற்கு ஜெயம் கொடுக்கின்ற கர்த்தர் என்று அர்த்தம். புதிய ஏற்பாட்டில் வரும்போது யோவா.16:33ல் நான் உலகத்தை ஜெயித்தேன் என்று ஆண்டவர் இயேசுகிறிஸ்து சொல்வதும் ரோம.8:36–37ல் கிறிஸ்து இயேசுவாலே ஜெயம் பெறுவதாக தெளிவாக சொல்லப் பட்டதைப் பார்க்கமுடியும்.

இங்கு ரோம.8:37ல் இவையெல்லாவற்றிலும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயம்கொள்ளுகிறவர்களாக இருக்கிறோமே என்பதை கவனிக்கவேண்டும். யார் நம்மில் அன்பு கூறுகிறவர் கலா.3:20– இலும், வெளி.1:6லும் மற்றும் அநேக வசனங்களிலும் நம்மில் அன்பு கூறுகிறவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்துதான் என்பதைப் பார்க்கலாம்.

ஆதலால் பழைய ஏற்பாட்டு காலத்தில் யேகோவா நிசியாக மோசேக்கு ஜெயம் கொடுத்த அதே தேவன்தான் ஆண்டவர் இயேசு கிறிஸ்து என்பது உறுதியாகின்றது.

2. யேகோ மெகாதீஸ் (லேவி.20:8) இதற்கு பரிசுத்தமாக்கும் கர்த்தர் என்று அர்த்தம் இந்த காரியம் மனிதர் யாரும் சொல்லவில்லை. தேவனே மோசேயிடம் சொல்லுவதை நாம் அங்கு பார்க்கலாம்.

புதிய ஏற்பாட்டில் வரும்போது யோவா.15:3ல் இயேசுவின் வார்த்தை யினால் பரிசுத்தமாகும் என்றும் எபே.5:26ல் இயேசுதான் பரிசுத்தப் படுத்துகின்றவர் என்றும் 1 யோவா.1:7ல் இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்றும் பார்க்கின்றோம். ஆதலால் இயேசுதான் பரிசுத்தமாக்கும் கர்த்தர். ஆதலால் யேகோவா மெகாதீஸ் இயேசுதான்.

3. தேவனாகிய யேகோவா (ஆதி.2:4). புதிய ஏற்பாட்டில் வரும்போது யூதா 4ல் தேவனும் கர்த்தருமாகிய இயேசு என்றுள்ளது. இங்கு தேவனாகிய யேகோவா யார்? அவர்தான் இயேசு என்பது தெளிவாகின்றது.

4. யேகோவா ஷம்மா? எசே.48:55ல் இதற்கு கூடவே இருக்கின்ற கர்த்தர் என்று அர்த்தம். கடைசி காலத்தில் சம்பவிக்கவேண்டிய காரியம் தீர்க்கதரிசியின்மூலம் முன்னுரைக்கப்பட்டதைதான் நாம் பார்த்தோம் மத்.28:20ல் இயேசுவின் வார்த்தையை கவனியுங்கள். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடன்கூட இருக்கின்றேன் என்றார். இந்த வசனத்திலிருந்து யேகோவா ஷம்மா கூடவே இருக்கின்ற கர்த்தர் இயேசுதான் என்பது விளங்குகின்றது.

5. யேகோவா ஓசேனு (ஏசா.45:11)ல் இதற்கு உருவாக்கும் கர்த்தர் (அ) உருவாக்கும் யேகோவா என்று அர்த்தம் யோவா.1:3ல் சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானது ஒன்றும் அவராலே அல்லாமல் உண்டாகவில்லை யோவா.1:10. அவர் உலகத்திலிருந்தார். உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று... 1 கொரி.8:6ல் இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தர் நமக்கு உண்டு. அவர்மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கின்றோம். இந்த வசனங்கள் எல்லாம் இயேசுதான் உருவாக்கும் கர்த்தர் என்று நமக்கு சொல்கிறது. ஆதலால் பழைய ஏற்பாட்டில் சொன்ன யேகோவா ஓசேனு. அவர்தான் இயேசு என்பது தெளிவாகின்றது.



6. யேகோவா சாலோம் நியா.6:24ல் சமாதான கர்த்தர் என்று அர்த்தம் மீகா 5:4–5ல் பார்க்கும்போது மேய்ப்பனாக வெளிப்படுபவர்தான் சமாதான காரணர் என்றுள்ளது. புதிய ஏற்பாட்டில் எபே.2:14ல் இயேசுவைக் குறித்து, எப்படியெனில் அவரே நம்முடைய சமாதானக் காரணராகி இருதிரத்தாரையும் ஒன்றாக்கி..'' என்றும் பார்க்கின்றோம். 15ஆம் வசனத்தில் இருத்திரத் தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாக(மனுஷியாக) சிருஷ்டித்து இப்படி சமாதானம்பண்ணி என்றுள்ளதை கவனியுங்கள். இங்கு எல்லாம் இயேசுதான் சமாதான கர்த்தர் என்பது விளங்குகிறது அல்லவா. ஆதலால் யேகோவா சாலோம் யார் அவர்தான் இயேசு.

7. யேகோவா ரஃபா (யாத்.15:26) சுகம் தரும் கர்த்தர் என்று அர்த்தம். சுகம்தரும் யேகோவா என்று மோசேக்கு தரிசனமானவர். அவர்தான் இயேசு என்று (1 பேது.2:24)ல் பார்க்கலாம்... அவரது தழும்புகளால் குணமானீர்கள் என்றுள்ளது (மத்.8:17). அவர்தாமே நம்முடைய பலவீனங்களை ஏற்றுக் கொண்டு, நம்முடைய நோய்களை சுமந்தார் என்று ஏசாயா தீர்க்க தரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது என்றுள்ளது. இந்த வார்த்தை யாரில் நிறைவேறிற்று இயேசுவில். ஆதலால் இயேசு யார் அவர் யேகோவா ரஃபா.

8. யேகோவா ரூவா (சங்.23:1) யேகோவா மேய்ப்பனாக இருக்கின்றார் என்று அர்த்தம் யோவா.10:11ல் நானே நல்லமேய்ப்பன். நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறார் என்று இயேசு சாட்சிக் கொடுக்கிறார் (எபி.13:20) நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பனான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை.... என்று அப்போஸ்தலர் சாட்சிக் கொடுக்கின்றார். ஆகவே யேகோவா ரூவா யார்? அவர்தான் இயேசு.

9. யேகோவா எலியோன் (சங்.7:17) உன்னதமான கர்த்தர் என்று அர்த்தம் எபே.1:21ல் அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுப் பாரிசத்தில் உட்காரும்படி செய்து என்றும், கொலோ.2:10ல் மேலும் சகல துரைத் தனங்களுக்கும் அதிகாரத்திற்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணம் உள்ளவராயிருக்கிறீர் என்றும் எபே.2:7ல் கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடுகூட எழுப்பி உன்னதங்களில் அவரோடுகூட உட்காரவும் செய்தார். இங்கெல்லாம் இயேசு உன்னதமான கர்த்தர் என்று சொல்லப் பட்டுள்ளதால் இயேசுதான் யேகோவா எலியோன்.

10. யேகோவா சிட்கேனு (எரே.23:6; 33:16) நீதியாய் இருக்கிற யேகோவா

என்று அர்த்தம். நம்முடைய நீதி யார் என்று புதிய ஏற்பாட்டில் பார்க்கும்போது (ரோம.3:21–22)ல் இப்படியிருக்க நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது. அதைக் குறித்து நியாப்பிரமாணமும் தீர்க்க தரிசனங்களும் சாட்சிக்கொடுக்கின்றது. அது இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கம் தேவநீதியே, விசுவாசிக்கின்ற எவர்களுக்கும் அது பலிக்கும் வித்தியாசமே இல்லை. இங்கு தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. நம்முடைய நீதி கர்த்தர் தான். ஆதலால் யேகோவா சிட்கேனு நீதியாயிருக்கிற கர்த்தர் இயேசுதான் என்று விளங்குகின்றது.

11. யேகோவா சேபாயேத் (1 சாமு.1:3) சேனைகளின் கர்த்தர் என்று அர்த்தம். வெளி.17:14ல் இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம் பண்ணுவார்கள். ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாய் இருக்கின்றபடியால் அவர்களை ஜெயிப்பார். அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் உண்மை உள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான். இங்கு இயேசுகிறிஸ்து சாத்தானின் சக்தியாகிய எதிர்கிறிஸ்துவோடும் அவனுடைய சேனையுடனும் யுத்தம் செய்து ஜெயிப்பதை நாம் பார்க்கமுடியும் இயேசுவுடன் ஒரு சேனை இருப்பதையும் பார்க்கலாம். ஆதலால் யேகோவா சேபாயேத் இயேசுதான் என்பதை அறிந்துகொள்ளலாம்.

12. யேகோவாயான ஆண்டவர் (ஆதி.15:2). இதே காரியம் இயேசுவைப் பார்த்து அவருடைய சீஷன் தோமா சொல்வது யோவா.20:28ல் பார்க்கலாம். யேகோவாயான ஆண்டவர் அவர்தான் இயேசு என்று இந்த வசனமும் நமக்கு உறுதியளிக்கிறது. இன்றும் அநேக வசனங்களைப் பார்க்கமுடியும். நாம் பார்த்த இந்த வசனங்களை பழைய ஏற்பாட்டில் யேகோவாதான் மனுஷனாக மனுகுலத்தை இரட்சிப்பவராக உலகத்தில் வந்த இயேசு. ஆதலால் தான் இரட்சிக்கும் யேகோவா என்கிற யேகோவாசுவா என்கிற பெயர் அவருக்கு வைக்கவேண்டும் என்று தேவதூதன் மரியாளிடம் சொன்னார். இயேசு என்பதற்கு எபிரேய மொழியில் யேகோஷீவா என்றுள்ளது.

இரட்சிக்கும் கர்த்தர் அவர்தான் இயேசு. பழைய ஏற்பாட்டில் சர்வ வல்லமையுள்ள தேவனாக ஆபிராமுக்கு வெளிப்பட்டவர் யேகோவாவாக மோசேவுக்கும் யேகோஷீவாக அல்லது இரட்சிக்கும் தேவனாக நமக்கும் வெளிப்பட்டார். ஆதலால் இயேசு கிறிஸ்து அவர்தான் மெய்யான தேவன் உலக இரட்சகர் என்பதை புத்திக்கு தெளிவாக ஆண்டவர் நமக்கு வெளிப்



படுத்தியிருக்கிறார். இன்னும் யாராவது அவரோடு எதிர்த்து நிற்பாரானால். அதற்கு பெயர்தான் இருதயகடினம் அதற்கொருநாள் நிச்சயம் பதில் சொல்லியே தீரவேண்டும். சத்தியத்தை அறியவேண்டும் என்று விரும்பு பவர்களுக்கு இந்த ஆதாரங்கள் தாராளமாக போதுமானதாக உள்ளது.

**கேள்வி –21**

## இயேசு கிறிஸ்துவை பவுல் தேவனாக்கினாரா?

இயேசு கிறிஸ்துவை தேவன் என்று அவரோடுகூட இருந்த சீஷர்கள் எவரும் கூறவில்லை. பிற்காலத்தில் வந்த பவுல் என்பவர்தான் இயேசு கிறிஸ்து மெய்யான தேவன் என்று அறிவித்தார் என்றும், பவுலின் இந்த கூற்றை இயேசுவோடு கூட இருந்த சீஷர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் இஸ்லாமியர்கள் பரவலாக எல்லா இடங்களிலும் பிரசங்கித்து வருவது மட்டும் அல்லாமல் அநேக புஸ்தகங்களும் எழுதி வருகிறார்கள்.

இஸ்லாமியர்கள் தங்களுடைய பெரிய பண்டிதர் என்று புகழ்ந்துவரும் அமீருத்தீன் என்பவர் எழுதின. இயேசுநாதர் மறைக்கப்பட்ட உண்மைகள் என்கிற புஸ்தகத்திலிருந்து சில பகுதி இங்கு எழுதுகிறேன். “இயேசு கிறிஸ்துவின் மறைவுக்குப்பின் கிறிஸ்தவர்கள் இருபெரும் பிரிவுகளாகப் பிரிந்தனர். இயேசுவின் சீடரல்லாத ஒருவர். அப்பிரிவினைக்கு வழி வகுத்தார். அவர்தான் சவுல் **(Saul)** என்னும் பெயருடைய பவுல் அடிகள் **(St.Paul)** ஆவார். அவர் ஒரு யூதர். ஆயினும் அவருடைய யூத விரோதப் போக்கினால் அவருக்கு ரோமப் பேரரசு குடியுரிமை வழங்கி இருந்தது. ஆகவே, யூதர்கள் அவரை ஒரு (சமூக விரோதி)” என்றே கருதினர்.

ஆரம்பத்தில் அவர் மற்ற யூதர்களுடன் சேர்ந்து இயேசுவின் கொள்கை வழி நின்றவர்களை கடுமையாக எதிர்த்து வந்தார். இயேசுவின் மறைவுக்குப் பின் ‘டமாஸ்கஸ்’ நகருக்குச் செல்லும் வீதியில் தமக்கு ஒரு அற்புதம் நிகழ்ந்ததாகக் கூறி கிறிஸ்தவர்களோடு இணைந்தார். ரோமக் கடவுள்களின் வழிபாடுகளிலும். மதச் சடங்குகளிலும் ஈடுபாடு கொண்டிருந்த பவுலை உண்மையான இயேசுவின் சீடர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் கிறிஸ்தவ மக்களிடையே அவரின் செல்வாக்கு மேலோங்கியது.

ரோமக் கடவுள்களின் பாணியில் இயேசுவையும் கடவுளாக பவுல் அடிகள் சித்தரித்தார். பிதா, சுதன், ஆவி **(Father Son Spirit)** என்னும் முக்கடவுள் கொள்கையை கிறிஸ்தவத்தில் புகுத்தினார். அதை ‘திரித்துவம்’ **(Trinity)** என்று அழைத்தார் தற்கால நடைமுறையில் இருந்து வரும் கிறிஸ்தவ

மதத்தின் ஸ்தாபகர் பவுல் அடிகள்தான் வரலாற்று ஆசிரியர்கள் அவரை இனம் காட்டுகின்றனர்.

பவுல் அடிகளின் திரித்துவ போதனையை ஏற்று அவர் பெயரில் அக்காலத்தில் இயங்கிவந்த தேவாலயத் தலைமையை **(Paulian Church)** ஏற்றுக்கொண்டவர்கள் பிற்காலத்தில் கத்தோலிக்கர்கள் என்று பெயர் பெற்றனர். அப்பிரிவினர் அக்கால பாலஸ்தீனம், ஜோர்தான், சிரியா, எகிப்து மற்றும் ரோம போன்ற நாடுகளில் பெரும்பான்மையாக வசித்து வந்தனர்.

மறு பிரிவினர் தங்களை ஏகத்துவ வாதிகள் **(Unitarians)** என்றே அழைத்துக்கொண்டனர். அவர்கள் இயேசுநாதரிடம் நேரிடையாக பாடம் கேட்டு பயிற்றுவிக்கப்பட்ட நேர்வழி சீடர்களின் வழிவந்தவர்கள். அவர்கள் ஒன்றைக்கொள்கையில் அசையா நம்பிக்கை கொண்டிருந்தனர். இயேசு நாதரை இறைவனின் தூதர் என்றே அவர்கள் போற்றி வந்தனர். அதற்கு ஆதாரமாக 'பர்னபாஸ்' **(Barnabos)** என்னும் இயேசுவின் சீடரால் தொகுக்கப் பட்ட நூலை தங்களின் வேதமாக மதித்து வந்தனர் அதற்கு 'பர்னபாஸ் சுவிசேஷம்' **(Gospel of Barnabos)** என்பது பெயர். ஏகத்துவ வாதிகள் வடக்கே மத்தியதரை கடலை ஒட்டிய லிபியா. துனிசியா, அல்ஜீயா மற்றும் மொரோக்கோ ஆகிய நாடுகளில் பெரும்பான்மையாக வசித்து வந்தனர்.''

பார்க்க இயேசு நாதர் மறைக்கப்பட்ட உண்மைகள் (பக்கம் 25–27வரை)

இங்கு மேலே எழுதப்பட்டது. அமிருதீன் மட்டும் பாடுகிற பாட்டல்ல என்பதை அறிந்துகொள்ளுங்கள். கிறிஸ்தவத்தை குறைகூறி நித்தித்துவரும் எல்லா இஸ்லாமியர்களும் இந்த பாட்டுதான் பாடி சுற்றித்திரிகிறார்கள். இப்படி பொய் சொல்லி திரிகிறவர்கள் கொஞ்சமாவது யோசிக்க வேண்டாமா!?

இவர் சொல்வதை கவனியுங்கள் பவுல் ஒரு யூத விரோதியாக இருந்ததால் யூதர்கள் அவரை ஒரு 'சமூக விரோதி' என்று ஒதுக்கினார்கள். ஆனால் அடுத்த பகுதியில் வரும்போது அமீகுதீனே சொல்கிறார் பவுல் யூதர்களுடன் சேர்த்து இயேசுவின் கொள்கை வழி நின்றவர்களைக் கடுமையாக எதிர்த்து வந்தார்.

இங்கு பவுலும் யூதர்களும் விரோதிகளாயிற்றே என்கிற கேள்வியெல்லாம் எவரும் கேட்கக்கூடாது. ஏன் என்றால் சொல்வது கேப்டன் அமீருதீனான தால் வாய்மூடி கேட்டால் போதும்.



இதாவது பரவாயில்லை அடுத்த பகுதியில் சொல்வதை கவனியுங்கள். முதலாவது இயேசுவையும் அவர் சீடர்களையும் கடுமையாக உபத்திரவப் படுத்தினவர் திடீரென்று ஒரு கதையை கூறி கிறிஸ்தவனாக மாறிவிட்டார். அதுமட்டுமல்லாமல் இயேசுவின் சீடர்கள் எவரும் சொல்லாத கருத்தை (இயேசு கடவுள் என்பதையும், பிதா, குமாரன், பரிசுத்தாவி என்கிற திரித்துவ கொள்கையும்) பரப்ப ஆரம்பித்தார் என்றும் உள்ளது. எதற்காக அவர் அப்படி செய்தார் என்றெல்லாம் எவரும் கேட்கக்கூடாது. அப்படி கேட்டால் அது பாவமாகிவிடும். இப்போது நாம் கேட்கவேண்டிய கேள்வி என்ன?

பவுல் அப்படி கிறிஸ்தவர்களோடு இணைத்துக் கொள்வதற்காக கிறிஸ்தவர்கள் அங்கு எதாவது செல்வாக்கு உடையவர்களாக மாறி விட்டார்களா? இல்லை கிறிஸ்தவர் தங்களுடைய விசுவாசத்தில் உறுதியாக இருந்து இயேசுவை பின்பற்றி வந்ததால் அவர்கள் தங்களுடைய உற்றார் உறவினர்களையும், தங்களுடைய பொருள்களையும், ஒவ்வொருவரும் இயேசுவிற்காக தங்கள் ஜீவனையும் நஷ்டமாக்கி வந்த காலம் அது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அமீருதீனின் கூற்றின்படி ரோமபேரரசின் எல்லாவித நன்மைகளும் பெற்று பெரிய செல்வாக்கில் வாழ்ந்த ஒருவர். தங்கள் சொந்த ஜனங்களாலும், அரசாங்கத்தாலும் கடினமான உபத்திரவங்கள் சகித்து வரும் ஒரு பிரிவினரோடு சேர்ந்து உபத்திரவப்படுவதற்கு தன்னை அர்ப்பணிப்பாரா?

இல்லை என்பதுதான் பதில்வரும். அப்படியானால் ஏன் பவுல் தன்னை கிறிஸ்தவத்தில் இணைத்துக்கொண்டார். ஒரு காரணம் மட்டும்தான் அதுதான் மெய்யான தேவன். மனுகுலத்தின் பாவ பரிகாரத்திற்காக மனுஷனாக பூமியில் வந்து மனுகுலத்தின் பாவ பரிகாரத்திற்காக சிலுவையில் மரித்து அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு பவுலுக்கு தரிசனமானார். ஜீவனுள்ள மெய்யான தேவனை பவுல் தரிசித்ததினால்தான், மனுஷனால் கற்பனைகூட செய்யமுடியாத உபத்திரவங்கள் அவருக்கு வந்தபோதிலும் அவருடைய ஜீவனை விடும் பவரைக்கும்அந்த விசுவாசத்தில் உறுதியாக இருந்தது ரோமன் பேரரசரான நீரோவால் கொலை செய்யப்பட்டார். பவுல் கிறிஸ்தவ சபையில் ஆரம்ப நாட்களில் சபையை துன்பப்படுத்தினவர் என்பது உண்மைதான். ஆனால் அப்படி துன்பப்படுத்தி வந்தவர் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டது நீ கிறிஸ்தவனாக மாறவேண்டும் இல்லாவிட்டால் உன்னை வெட்டி சாய்த்து விடுவோம் என்று கிறிஸ்தவர்கள் எவரும் சொன்னதினாலல்ல. மாறாக கிறிஸ்தவர்கள் வணங்கும் தெய்வம் இயேசு கிறிஸ்து ஒருவரே உண்மையுள்ள

தேவன் அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு நித்தியஜீவன் உண்டு என்பதை பவுல் அறிந்துகொண்டதினால்தான் அவ்வளவு நஷ்டங்களும் உபத்திரவங்களும் சகிக்கவேண்டியிருந்தபோதும். பவுல்தன்னை கிறிஸ்தவத்தில் இணைத்துக் கொண்டார். இது பவுலின் அனுபவம் மட்டுமல்ல. கோடிக்கணக்கான மக்களுடைய அனுபவம் என்பதை உலக வரலாற்றை படிக்கும் யாருக்கும் எளிதாக புரிந்துகொள்ளமுடியும். நாங்கள் இங்கு உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, பயந்துபோய் கிறிஸ்தவத்தில் எங்களை இணைத்துக் கொண்டவர்களல்ல. மாறாக கிறிஸ்துவிற்காக உயிரையும் கொடுக்க வேண்டும் என்று கிறிஸ்தவத்தில் எங்களை இணைத்துக்கொண்டவர்கள் என்பதை பவுலுடன் என்னையும் சேர்த்து சொல்லுகிறேன்.

இன்று வரைக்கும் எங்கு பார்த்தாலும் கிறிஸ்தவர்கள் மதவெறிபிடித்த வர்களால் கொல்லப்படுகிறார்கள். கேட்டால் அவர்களுடைய கடவுளுக்கு இப்படி கொலை செய்வதுதான் பிடிக்கும் என்று சொல்கிறார்கள். கிறிஸ்தவர்கள் இவ்வளவு உபத்திரவங்கள் மத்தியிலும் பழிவாங்காமல் இயேசு கிறிஸ்துவின் போதனையாகிய சத்துருக்களை நேசியுங்கள் என்கிற உபதேசத்தை கடைப்பிடித்து பிறரை நேசிப்பதிலிருந்து, கிறிஸ்தவம் எவ்வளவு உன்னதமானது என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.

இயேசுகிறிஸ்துவின் தெய்வத்துவம் என்பது பவுலில் கூற்றா அல்லது அவர் மெய்யான தேவன்தானா என்பதை பரிசுத்த வேதாகமத்தில் அடிபடையில் சற்று ஆராய்ந்து பார்ப்போம். முன்னமே இதைக்குறித்து எழுதியிருந்தாலும் இன்னும் கொஞ்சம் விளக்கம் தேவையென்பதால் ஒருசில காரியங்கள் இங்கு எழுதுகிறேன். மற்றவர்கள் சொல்வது என்ன என்பதை பார்ப்போம்.

1. யோவான்ஸ்நானகன் என்ன சொல்கிறார்.

(மத்.3:3) கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்: அவருக்கு பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடு கிறவனுடைய சத்தம் உண்டென்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப் பட்டவன் இவனே. இதே வசனம் ஏசாயா எப்படி சொல்கிறார் என்பதையும் பார்ப்போம்.

(ஏசா.40:3) கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவாந்தர வெளியிலே நம்முடைய தேவனுக்கு பாதையை செவ்வை பண்ணுங்கள் என்று,

இரண்டு இடத்திலும் நாம் பார்க்கும்போது ஒரு காரியம் தெளிவாக விளங்குது அது என்னவென்றால், கர்த்தருக்கு அல்லது தேவனுக்குதான்



வழியை ஆயத்தப்படுத்தவேண்டும், மத்.3:1–3 வரையிலான வசனம் படிக்கும்போது தெளிவாக சொல்லப்பட்டுள்ள காரியம் தேவனுக்கு வழியை ஆயத்தப்படுத்த வந்தவர் யோவான்ஸ்நானகன்தான். இதே காரியம் மற்ற சுவிசேஷங்களிலும் சொல்லப்பட்டுள்ளதை நாம் பார்க்கமுடியும்.

இப்பொழுது நாம் யோவான்ஸ்நானகனின் சாட்சிமொழி என்ன என்பதை யோவா.1:29–34வரையிலான வசனங்கள்மூலம் பார்ப்போம். மறுநாளிலே யோவான் இயேசுவை தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி எனக்குப்பின் ஒருவர் வருகிறார் அவர் எனக்கு முன் இருந்தபடியால் என்னிலும் மேன்மை யுள்ளவரென்று நான் சொன்னேனே, அவர் இவர்தான். நானும் இவரை அறியாதிருந்தேன்.

இவர் இஸ்ரவேலருக்கு வெளிப்படும் பொருட்டாக, நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்க வந்தேன் என்றான். பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப்போல வானத்தி லிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதை கண்டேன். நானும் அவரை அறியாதிருந்தேன்: ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங்கொடுக்கும்படி என்னை அனுப்பினவர். ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ அவரே பரிசுத்தாவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்கு சொல்லியிருந்தார். அந்தபடியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சிக்கொடுத்து வருகிறேன் என்றார்.

இங்கு என்ன விளங்குகிறது பிதாகுமாரன் என்கிற கூற்று பவுல் கொண்டு வந்ததல்ல. கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணுவதற்காகத் தான் யோவான் வந்தார் என்பதினால் இயேசுகிறிஸ்து மெய்யான தேவன் என்பது விளங்குகிறது மட்டுமல்லாமல், அந்த மெய்யான தேவன்தான் குமாரனாக வெளிப்பட்டார் என்பதற்கு யோவான்ஸ்நானகன் சாட்சி கொடுக்கிறார். இயேசு கடவுள் என்பதும், தேவகுமாரன் என்பதும் பவுலின் கருத்துமட்டுமல்ல. தீர்க்கதரிசிகள் வரிசையில் கடைசி மனிதனாகிய யோவான் யெகியா சொல்கிறார்.

2. இயேசுவின் சீஷர்களில் ஒருவனாகிய பேதுரு. இயேசு இந்த பூமியிலே ஊழியம் செய்த நாட்களில் ஆரம்பம் முதல் முடிவுவரை எப்போதும் கூடவே இருந்தவர் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். இவர் என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம். ‘‘அப்பொழுது அவர்; நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தர

மாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்'' (மத்.16:15,16).

இந்த வசனத்தில் பேதுரு தெளிவாக சொல்கிறார் இயேசுகிறிஸ்து தேவ குமாரன் என்று ஆதலால் இயேசு கிறிஸ்து தேவகுமாரன் என்பது பவுலின் கூற்றல்ல. இயேசுவோடுகூட இருந்த சீஷர்களில் முக்கியத்துவம் வாய்ந்த பேதுரு பிதா குமாரன் என்று இங்கு சாட்சிக்கொடுக்கிறார். இப்போது ஒரு கேள்வி எழும்பக்கூடும் இங்கு தேவகுமாரன் என்று தானே சொல்லப் பட்டுள்ளது. இயேசுகிறிஸ்துவை தேவன் என்று பேதுருசொல்லவில்லையே?

அடுத்த வசனம் பார்ப்போம் அப்பொழுது இயேசுகிறிஸ்து மெய்யான தேவன் என்பதை பேதுரு அறிந்திருந்தாரா. அவர் அதை போதித்தாரா என்பதை புரிந்துகொள்ளலாம்.

(2 பேது.1:1) ''நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய நீதியால் எங்களைப்போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ் தலனுமாகிய சீமோன் பேதுரு எழுதுகிறதாவது.''

இங்கு பேதுரு தெளிவாக சாட்சி கொடுக்கிறார். இயேசு கிறிஸ்து மெய்யான தேவன் என்பதை முதலாவது யோவான்ஸ்நானகன் சாட்சி கொடுக்கிறார். இங்கு நாம் பார்த்தோம். இயேசுவின் சீஷர்களில் ஒருவராகிய பேதுரு சாட்சி கொடுக்கிறார்.

பிதா, குமாரன் என்பதும் இயேசு தெய்வம் என்பதும் பவுலின் கூற்றல்ல. அந்த உண்மையை அவர் ஏற்றுக்கொண்டார். மற்றவர்களுக்கு அறிவித்தார் அவ்வளவுதான்.

3. இயேசுவின் சீஷர்களின் ஒருவரான யோவான் என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம்.

(யோவா.1:1) ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது.

(1 யோவா.5:20)

அன்றியும் நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்கு தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறார் என்றும் அறிவோம் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக் குள்ளும் இருக்கிறோம். இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமா



யிருக்கிறார். (யோவா.20:31) இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும் விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப் பட்டிருக்கிறது.

யோவான் சொன்ன இன்னும் பல வசனங்களும் எடுத்துக்காட்டமுடியும். ஆகிலும் இங்கு நிறுத்துகிறேன். இங்கு யோவான் என்ன சொல்கிறார். இயேசு மெய்யான தேவன். இயேசு தேவனுடைய குமாரன். பிதா குமாரன், என்பது பவுலின் கூற்றல்ல. அது உண்மையான காரியமாக இருந்ததால் இயேசுவே அதை சீஷர்களுக்கு கற்றுக்கொடுத்தார். சீஷர்கள் அதை பின் தலைமுறைக்காக எழுதி வைத்தார்கள்.

4. இயேசுவின் சீடர்களில் ஒருவரான தோமா.

(யோவா.20:28) தோமா அவருக்கு பிரதியுத்தரமா: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான். உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்டதாக மற்ற சீஷர்கள் சொன்னபோது அதை நம்பாமலிருந்த தோமா மகிமையின் தேவனை அவருடைய மகிமையின் சரீரத்தில் கண்டபோது தோமா அறிக்கை செய்கிறார். இயேசு, ஆண்டவரும் தெய்வமும்தான் என்பதை அவருக்குப் பவுல் சொல்லிக்கொடுத்ததல்ல என்பதை அறிந்துகொள்.

5. இயேசுகிறிஸ்துவின் சீஷனாக இருந்த மத்தேயு என்ன சொல்கிறார்.

(மத்.28:19) ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,

இங்கு பிதா, குமாரன், பரிசுத்தாவி மூன்று ஆள்தத்துவம் இருந்தாலும் ஒருவர்தான் என்பதை எவ்வளவு தெளிவாக எழுதப்பட்டுள்ளது என்பதை பாருங்கள். திரித்துவம் பவுலின் கண்டுபிடிப்பல்ல. பிதா, குமாரன், பரிசுத்தாவி ஆகிய மூன்று ஆள்தத்துவமுடைய ஒரு தேவன் என்று ஒருவாசகமாக சொல்வதற்கு பதிலாக திரித்துவம் என்கிற ஒரு வார்த்தையில் அதைச் சொல்லலாம் என்று பிற்காலத்தில் வந்தவர்கள் சொன்னார்கள்.

இப்பொழுது யாராகிலும் திருத்துவம் என்கிற வார்த்தை வேதாகமத்தில் இல்லாததினால் நாங்கள் அதை சொல்லமாட்டோம் என்போமானால், அதற்கு எந்த தடையும் இல்லை. பிதா, குமாரன், பரிசுத்தாவி ஆகியமூன்று ஆள் தத்துவமுடைய ஏக தேவன் என்ற வாசகமாக சொல்லுங்கள்.

இதுமட்டுமல்லாமல் இயேசுகிறிஸ்து மெய்யான தேவன் என்பதை மத்தேயுவும் நன்றாக புரிந்து கொண்டிருந்தார் என்பதை அந்த சுவிசேஷம் படிக்கும்போது புரிந்துகொள்ளலாம்.

இயேசுவைக்குறித்து பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட காரியங்கள் அநேக வார்த்தைகள் எடுத்துக்காட்டி அவர் மெய்யான தேவன்தான் என்பதை அறிவிக்கிறார். எடுத்துக்காட்டாக (மத்.22:41–46) வரையிலான வசனங்கள் பார்க்கும்போது குமாரனை பிதாவாகிய தேவன் தெய்வம் என்றழைக்கும் சம்பவத்தை இயேசுகிறிஸ்து எடுத்துரைத்ததை மிக முக்கியத்துவம் கொடுத்து மத்தேயு எழுதியிருக்கிறார். ஆதலால் இயேசுவின் சீஷனாகிய மத்தேயுவும் இயேசுவை தேவன் என்று அறிந்து மற்றவர்களுக்கு அந்தச் செய்தியை போதித்துவந்தார் என்பதை அறிந்துகொள்ளலாம்.

6. யூதா அப்போஸ்தலன் என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம்.

யூதா எழுதின நிருபம் 4ஆம் வசனத்தில் “ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்றவர்களாகிய சிலர்....”என்றுள்ளது. சரியாக மொழி பெயர்த்தால். “ஒன்றான ஆண்டவராகிய தேவனும் நம்முடைய கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவை மறுதலிக்கிற ...என்று தான் வரவேண்டும்.”

உலக வேதாகம மொழிப்பெயர்ப்பு மையம் வெளியிட்டுள்ளதை இங்கு எழுதுகிறேன்... “நமது ஒரே ஆண்டவரும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற இம்மக்கள் மறுக்கிறார்கள்...”

இதே வசனம் **Tamil Nadu Biblical, Catechetical & Liturgical Centre** மூலம் வெளியிட்டுள்ள வேதாகமத்தில், “நம், ஒரே தலைவரும் ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்துவை மறுதலிக்கின்றார்கள்” என்றுள்ளது.

**The Bible society of India** வெளியிட்டுள்ள **Good News Bible. Today's English Version**னில் உள்ளதும் இங்கு எழுதுகிறேன்**...and who reject Jesus Christ, our only Master and Lord.** அப்போஸ்தலனாகிய யூதாவும் இயேசு கிறிஸ்து மெய்யான தேவன் என்பதை அறிந்தவரும் அந்த உண்மையை மற்றவர்களுக்கு அறிவித்தவருமாக இருக்கிறார். ஆதலால் இயேசுவை பவுல் தெய்வமாக்க வில்லை. இயேசு தெய்வமாக இருந்ததினால் அந்த உண்மையை பவுல் மக்களுக்கு எடுத்துச் சொன்னார் என்பதுதான் உண்மை.

7. யாக்கோபு என்ன சொல்கிறார் என்பதை அவருடைய நிரூபத்தில் பார்ப்போம்.



(யாக்.1:1) தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் என்று ஆரம்பித்தவர் 5ஆம் வசனத்தில் வரும்போது தேவனிடத்தில் கேட்கக் கடவன் என்று சொல்கிறார். ஆனால் 7ஆம் வசனத்தில் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாம் என்று சொல்வதை கவனியுங்கள். இங்கு தேவனும் கர்த்தரும் முதல் வசனத்தில் இயேசுவை கர்த்தர் என்று கூறினதைப் பார்க்கலாம். 4:7ல் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் என்றவர் 4:10ல் வரும்போது கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள். அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார் என்றுள்ளதை கவனியுங்கள். இங்கு தேவனும் கர்த்தரும் ஒருவர். 5:4 அறுத்தவர்களுடைய குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது என்றும் 5:7 இப்படியிருக்க சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள்.... என்றும் 5:8ல் கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே. இந்த இடத்திலெல்லாம் சொல்லப்படுவது இயேசு கிறிஸ்துவின் வருகைதான். பழைய ஏற்பாட்டில் சேனைகளுடைய கர்த்தர்தான் புதிய ஏற்பாட்டில் வெளிப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பது உறுதிப்படுத்துகிறார். இந்த கர்த்தரின் நாமத்தில்தான் தீர்க்க தரிசிகள் பேசினார்கள் என்று 5:10ல் சொல்வதாலும் யோபின் வாழ்க்கையில் செயல்பட்டவர் கர்த்தர் என்று 5:11ல் சொல்லும் யாக்கோபு 5:14ல் கர்த்தருடைய நாமத்தில் அவனுக்கு எண்ணைப்பூசி அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவன் என்று சொல்லும்போது இயேசுகிறிஸ்துவைதான் சொல்லுகிறார். அதே கர்த்தர்தான் அவனை எழுப்புவார் என்று 5:15ல் சொல்கிறார். இதிலிருந்து என்ன விளங்குது என்றால் இயேசு மெய்யான தேவன் என்பதை யாக்கோபு அறிந்திருந்தார் ஆதலால் தேவன் செய்யும் காரியங்கள் கர்த்தர் அதாவது இயேசு செய்வதாக அறிவிக்கிறார். இன்னும் பவுல் அப்போஸ்தலர் இயேசுகிறிஸ்துவை தேவன் என்றும், மகிமையின் தேவன் என்றும், மகாதேவன் என்று சொல்லும் அநேக வசனங்கள் உண்டு. ஆனால் இயேசுகிறிஸ்துவை பவுல் தேவனாக ஆக்கவில்லை. அவர் மெய்யான தேவனாக இருந்ததால் பவுல் அதை ஏற்றுக்கொண்டார். பவுல் மனம் திரும்புவதற்கு முன்பே இயேசவின் சீஷர்கள் அந்த உண்மையை அறிவித்து வந்தார்கள் என்பதையும் நாம் பார்த்தோம். அதனால் பவுல்தான் இயேசு கிறிஸ்துவை தேவனாக்கினார் என்பது பொய்யான கருத்தாகும்.

**கேள்வி –22**

## இயேசு எப்பொழுதாவது நான் கடவுள் எல்லோரும் என்னை ஆராதிக்கவேண்டும் என்று சொன்னதுண்டா?

இயேசு கிறிஸ்து மெய்யான தேவன் என்பதற்கு அநேக ஆதாரங்கள் நாம்

பார்த்தோம். ஆதலால் இயேசு மெய்யான தேவன் என்று வேதாகம் கூற வில்லை என்று எவரும் சொல்லமுடியாது. அதனால்தான் இயேசு தன்னை தேவன் என்று சொல்லியிருக்கின்றாரா? என்கின்ற கேள்வி எழுப்புகிறார்கள். இதற்கான பதிலும் என்ன என்பதைப்பார்ப்போம். இந்த கேள்விக்கான சரியான பதில் எனக்குத் தெரிந்த வரைக்கும் நான்தான் கடவுள் நீங்கள் எல்லோரும் என்னை ஆராதிக்கவேண்டும் என்று இயேசு கிறிஸ்து நம்மைப் போல மனிதாக இந்த பூமியில் இருந்த நாட்களில் நேரடியாக சொன்னதாக எந்த வசனமும் நான் பார்க்கவில்லை.

ஆனால் யோவா.10:33ல் பார்க்கும்போது இயேசுகிறிஸ்துவினுடைய போதனைகள் கேட்டுக்கொண்டிருந்த யூதா ஜனங்கள் சொல்லுகின்ற காரியம் என்னவென்றால், நீ மனுஷனாகயிருக்க, உன்னை தேவன் என்று சொல்லி இவ்விதமாக தேவதூஷணம் சொல்கிறபடியினால் உன்மேல் கல் எரிகின்றோம் என்றார்கள். இங்கு நாம் புரிந்துகொள்வது என்ன, யூதர்கள் பார்வையில் இயேசுகிறிஸ்து மனிதன்தான். ஆனால் இயேசுவோ தன்னை தேவன் என்று சொல்லிக்கொண்டார் என்பதுதான் இயேசுவைக்குறித்து அவர்கள் சொல்லும் குற்றச்சாட்டு, ஆதலால் இயேசு தன்னை தேவன் என்று சொல்லியிருக்கிறார் என்பது நிருபணமாகிறது. ஆனால் அப்பொழுது அங்கிருந்தவர்கள் அதை விசுவாசிக்கவில்லை. அதுதான் உண்மை.

மேலும் தான் தேவன் என்பதை மனுஷருக்குக் காட்டுவதற்காக இயேசு கிறிஸ்து வரவில்லை. மனுகுலத்தின் பாவபரிகாரத்திற்காக மனிதனாக தான் அவர் வந்திருக்கிறார். ஆதலால் நான்தான் தெய்வம் நீங்கள் எல்லாரும் என்னை ஆராதிக்க வேண்டும் என்று அவர் சொல்லவில்லை. மெய்யான தேவனே மனுகுலத்தில் பாவ பரிகாரத்திற்காக மனிதனாக வந்து அவர் அடிக்கப்பட்டு அவருடைய இரத்தத்தினால் மனிதர்கள் மீட்கப் படுவார்கள் என்பதை இயேசுவின் வருகைக்கு அநேக வருஷங்களுக்கு முன்பே பல தீர்க்கதரிசிகளின்மூலம் தேவன் மனிதர்களுக்கு அறிவித் திருக்கிறார். ஆதலால் இரட்சகராக உலகத்தில் வருபவரை உலகத்திற்கு அறிமுகப்படுத்தும்படியாக பிதாவானவர் அநேகரை பயன்படுத்தினதை நாம் வேதத்தில் பார்க்கமுடியும். ஓசி.1:4ல் அப்பொழுது கர்த்தர் அவரைநோக்கி என்று ஆரம்பமாகி 7 வது வசனத்தில் வரும்போது வில்லினாலும், பட்டயத்தினாலும், யுத்தத்தினாலும், குதிரையினாலும், குதிரைவீரரினாலும் நான் அவர்களை இரட்சியாமல் அவர்களுடைய தேவனாகிய கர்த்தராலே அவர்களை இரட்சிப்பேன் என்றார். இங்கு பேசுபவர் கர்த்தர் அவர் சொல்லுகிறார். ஜனங்களுடைய இரட்சிப்புக்காக அவர்களுடைய தேவனாகிய



கர்த்தரை அனுப்புவேன் என்று, அதாவது எதாவது மனிதனையோ அல்லது தேவதூதர்களில் ஒருவரையோ, மனுகுலத்தின் இரட்சிப்புக்காக அனுப்பாமல் தேவனாகிய கர்த்தரே வந்து அவர்களை இரட்சிப்பார் என்று இரட்சகர் வருவதற்கு அநேக வருடங்களுக்கு முன்பே சொல்லியிருக்கிறார். இதே காரியம் எரேமியா தீர்க்கதரிசிமூலம் சொன்னதைப்பார்க்கலாம். (எரே.33:14:16)ல் இதோ நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது நான் இஸ்ரவேலின் குடும்பத்திற்கும் யூதாவின் குடும்பத்திற்கும் சொன்ன நல் வார்த்தையை நிறைவேற்றுவேன். அந்நாட்களிலும், அக்காலத்திலும், தாவீதுக்கு நீதியின் கிளையை முளைக்கப்பண்ணுவேன். அவர் பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.

அந்த நாட்களில் யூதா இரட்சிக்கப்பட்டு எருசலேம் சுகமாய் தங்கும் அவர் எங்கள் நீதியாய் இருக்கின்ற கர்த்தர் என்பது அவருடைய நாமம். ஓசியா மூலம் சொல்லும்போது ஜனங்களை பாவங்களிலிருந்து இரட்சிக்க கர்த்தர் வருவதையும் (மத்.1:21). எரேமியா சொல்லும்போது இராஜாவாக அரசாளுவதற்கு கர்த்தர் வருகிறதையும் சொல்லுகிறார்கள். இயேசுவினுடைய இரண்டு வருகையைக்குறித்தும் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டுள்ளதைப் பார்த்தோம். இங்கெல்லாம் தேவனாகிய கர்த்தர்தான் இரட்சகராக வருகிறார் என்று தெளிவாகச் சொல்லப் பட்டுள்ளது. இதைக்குறித்து ஏசாயா சொல்லும்போது (ஏசா.9:6) நமக்கொரு பாலகன் பிறந்தார். நமக்கொரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர். ஆலோசனை கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதானபிரபு எனப்படும். இங்கு இரட்சகராக வருபவர் ஒரு குழந்தையாக பிறப்பார் என்றும் அவர்தான் வல்லமையுள்ள தேவன் என்றும் சொல்லப்பட்டுள்ளதைப் பார்க்கலாம்.

ஆதலால் மெய்யான தேவன் இரட்சகராக வருவார் என்பதை நன்றாக அறிந்து அவருடைய வருகைக்காக காத்திருந்த ஒரு ஜனத்தின் நடுவில் அவர் வந்தபோது, நான் தான் கடவுள் நீங்கள் எல்லோரும் என்னை ஆராதிக்க வேண்டும் என்று அவர் சொல்லத் தேவை இல்லை. ஏனென்றால் இரட்சகரை அறிமுகப்படுத்துவதாற்காக தேவன் தேவ தூதர்களையும் தீர்க்கதரிசிகளையும் தேவ பயமுள்ள மனிதர்களையும் அதற்கென்று பயன் படுத்தி, உலகத்திற்கு வருகின்ற உலக இரட்சகர் இவர்தான் என்று அடையாளம் காட்டினார். அதை விசுவாசிக்கவேண்டியதுதான் மனிதனின் கடமை. அல்லாமல் இயேசு நான் கடவுள் என்று சொன்னாரா என்று கேட்டுக் கொண்டிருக்கத் தேவை இல்லை. உலகிற்கு வருகின்ற உலக

இரட்சகர் இயேசுதான் என்று அவரை அடையாளம் காட்டின சிலரை நாம் பார்ப்போம்.

1. இயேசுவின் வளர்ப்பு தகப்பனாகிய யோசேப்பு.

தேவதூதன் வந்து இயேசுவை அடையாளம் காட்டுகிறார் (மத்.1:21). அவள் ஒரு குமாரனை பெறுவாள் அவருக்கு இயேசு என்று பெயர் இடுவாயாக ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். இங்கு ஜனங்களின் பாவங்களை நீக்கி இரட்சிக்க வருகிறவர் இவர்தான். ஆதலால் இருவருக்கு யேகோசுவா (தமிழ் இயேசு) என்று பெயரிட்டார். யஹோ ஷீவா என்ற எபிரேய வார்த்தைக்கு இரட்சிக்கும் யகோவா என்று அர்த்தம் (மத்.1:22) பாருங்கள் தீர்க்கதரிசிகள்மூலம் சொன்னவைகள் நிறைவேறும்படி இப்படி ஆயிற்று என்று உள்ளது. மெய்யான தேவன் இரட்சகராக வருவார் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டதை நாம் பார்த்தோம். இயேசுதான் அந்த இரட்சகர் என்று தேவதூதனே அதற்கு சாட்சி கொடுத்ததையும் நாம் பார்த்தோம்.

2. இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு இயேசு யார் என்பதை தேவதூதன் அடையாளம் காட்டினார் (லூக்.1:31–32). இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாய் அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக, அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய குமாரன் எனப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். இதே காரியம் 35 வது வசனத்தில் அவர் தேவனுடைய குமாரன் என்பதை மிக தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. மனுகுலத்தின் இரட்சிப்பிற்காக வந்தவர் இயேசுதான் என்று தேவதூதர்கள் அடையாளம் காட்டினதை நாம் பார்த்தோம்.

3. கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் மூலம் இராஜாவாக பிறந்தவர் இயேசு தான் என்பதை உலகத்திற்கு தேவன் அடையாளம் காட்டினார் (மத்.2:1–2). எவரும் பிறக்கும்போது இராஜாவாக பிறப்பதில்லை. பிறந்து அநேக வருஷங்களுக்கு பிறகுதான் இராஜாவாகுவான். ஆனால் இயேசுகிறிஸ்து பிறக்கும்பொழுதே இராஜாவாக பிறந்தார். அந்த உண்மைமையை உலகிற்குச் சொல்லும்படியாக கர்த்தர் கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகளை நியமித்தார்.

4. லூக்.2:10–11; வாசிக்கும்போது இயேசுகிறிஸ்துதான் உலக இரட்சகர் என்பதை தேவ தூதர்கள் மேய்ப்பர்களுக்கும் அடையாளம் காட்டுவதை நாம்



பார்க்கிறோம். தேவதூதர்கள் அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள். எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். தேவனால் அனுப்பப்பட்ட தேவதூதர்கள் யோசேப்புக்கும் மரியாளுக்கும் ஏழை ஜனங்களாகிய மேய்ப்பர்களுக்கும் இயேசுதான் உலக இரட்சகர் என்பதை அடையாளம் காட்டினார்கள். இவ்வுலகத்தின் ஞானிகளுக்கும், இராஜாவுக்கும் தேவன் இந்த உண்மையை வெளிப்படுத்தினதை நாம் முன்னமே பார்த்தோம். அடுத்ததாக மத பக்தருக்கு இயேசுவை அடையாளம் காட்டினதை நாம் பார்ப்போம்.

5. தேவ பக்தியுள்ள மனிதனாகிய சீமோன் மூலமாக தன்னுடைய ஜனங்களுக்கு இயேசுதான். உலக இரட்சகர் என்பதனை அடையாளம் காட்டினதை லூக்.2:29–32 வரை வாசிக்கும் பொழுது பார்க்கிறோம். இங்குள்ள வார்த்தைகளை கவனியுங்கள். தேவரீர் சகல ஜனங்களுக்கு முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சண்யத்தை ....என்றுள்ளது. ஆதலால் உலக இரட்சகராக வருபவர் இயேசு என்பது இங்கும் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

6. தீர்க்கதரிசியாகிய அன்னாள் மூலம் பொதுமக்களுக்கும் பெற்றோருக்கும் அடையாளம் காட்டினதை (லூக்.2:35–38) பார்க்கவும்.

7. கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணுவதற்காக அவருக்கு முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானகன் அவரை அடையாளம் காட்டி யிருக்கிறார். (யோவா.1:29) மறுநாளில் யோவான் இயேசுவே தன்னிடம் வரக்கண்டு இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி என்று இயேசுவை உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

8. மனந்திரும்பின பாவிகளுடைய சாட்சி (யோவா.4:42)ல் அந்த ஸ்திரியை நோக்கி உன் சொல்லினிமித்தம் அல்ல. அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு அவர் மெய்யாய் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கின்றோம் என்றார்கள்.

9. இதற்கெல்லாம் மேலான சாட்சி பிதாவானவர் இயேசுவை அடையாளம் காட்டினது மாற்.9:7; மத்.3:17ல் பார்க்கலாம். இதுமட்டும் அல்லாமல் ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன சிறைப்பட்டவர்களை விடுவிக்கிறவர் நான்தான் என்றும் இன்று அந்த தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று என்றும் இயேசு கிறிஸ்து நேரடியாக சொன்னதை (லூக்.4:16–21) பார்க்கலாம். மேலும் பார்க்க

(யோவா.4:25–26, 9:35–37) இவ்வளவு தேவதூதர் மூலமாகவும் தீர்க்க தரிசிகள் மூலமாகவும் பக்தியுள்ள மனிதர்கள் மூலமாகவும் இயேசுதான் உலகஇரட்சகர் என்று எந்த சந்தேகத்திற்கும் இடமில்லாமல் கர்த்தரே அடையாளம் காட்டியுள்ளார். ஆதலால் நான் கடவுள் நீங்கள் என்னை ஆராதிக்கவேண்டும் என்று அவர் சொல்லவில்லை. சொல்ல தேவை யுமில்லை.

இயேசு தான் மனிதனாக வந்ததின் நோக்கம் அவர் தெய்வம் என்று காட்டுவதற்காக அல்ல. மாறாக மனிதன் இந்த பூமியில் வாழும்பொழுது அவனுக்கு எந்தெந்த சோதனைவருமோ அவைகளிலெல்லாம் வெற்றி பெற்றவராக வாழ்ந்து காட்டவேண்டும். இவ்விதமாக தேவநீதி வெளிப் படுத்தவேண்டும் என்பதற்காகதான் இதைக்குறித்து 1 கொரி.2:7–8ல் சொல்லப்பட்டுள்ளதை கவனியுங்கள். உலகத்தோற்றத்திற்குமுன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும் மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம். அதை இப்பிரபஞ்சத்தின் பிரப்புக்களில் ஒருவனும் அறியவில்லை. அறிந்தவர்களேயானால் மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே! இதிலிருந்து என்ன விளங்குகின்றது. நான்தான் தெய்வம் என்பதை இயேசு நிருபித்துவிட்டு நீங்கள் என்னைச் சிலுவையில் அறையுங்கள் என்று சொன்னால் ஒருவரும் அவரை சிலுவையில் அறையமாட்டார்கள். அதனால்தான் அவர் அதிகமாக தன்னை மனுஷகுமாரன் என்று அறிமுகப்படுத்தினார். மெய்யான தேவனை மனுகுலத்தின் பாவபரிகாரத்திற்காக மனிதாக வருவார் என்று முன்னமே அறிவிக்கப்பட்டாயிற்று. இயேசுதான் அந்த இரட்சகர் என்று தேவ தூதர்களும், தீர்க்கதரிசிகளும், மதிப்புக்குரிய மனிதர்களும் அடையாளம் காட்டினார்கள். மற்றும் அல்லாமல் பிதாவாகிய தேவனும் இவர் என் நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்கு செவி கொடுங்கள் என்று மக்களுக்குச் சொல்லியாயிற்று. இதற்குமேல் அப்படி சொல்ல வில்லையே, இப்படி சொல்லவில்லையே என்று சொல்லுவது மதிகேடான செயலாகும்.

எங்காவது ஒரு பிரதமரோ அல்லது ஜனாதிபதியோ ஒரு ஊருக்கு வருகிறார் என்று அறிவிக்கப்பட்டபிறகு அந்த ஜனாதிபதியோ, பிரதமரோ, அவர் செல்லுகின்ற ஊரில் பார்க்கிறவர்களிடமெல்லாம் நான்தான் பிரதமர், நான்தான் ஜனாதிபதி என்று சொல்லுவார்களா? இல்லையே! அப்படி சொல்வார்களேயானால் அவர்களுக்கு ஏதோ மூளை கோலாறு என்றுதான் எல்லோரும் சொல்வார்கள். ஏனென்றால் ஒரு ஊருக்கு பிரதமர் வருவதற்கு



முன்னமே அந்த தகவலை அரசு அதிகாரிகள் அந்த ஊருக்கு அறிவிப்பார்கள் அதுபோல ஆண்டவர் இயேசுவைக்குறித்து அவருடைய வருகைக்கு முன்னதாகவும் அவர் இவ்வுலகத்திற்கு வந்தபிறகும் பரலோக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள் அதை உலகத்திற்கு அறிவித்தார்கள். மெய்யான தேவனை தேவகுமாரனாகவும், மனுஷகுமாரனாகவும் பூமிக்கு வருவார் என்றும் அவர் எப்படி பிறப்பார், எங்கு பிறப்பார் அவருடைய பிறப்பில் என்ன சம்பவிக்கும் எப்படி வாழ்வார், எப்படி மரிப்பார், மூன்றாம் நாள் உயிர்ப்பார் இந்த காரியங்கள் எல்லாம் தீர்க்கதரிசனமாக முன்னமே அறிவித்ததாகும். இந்த தீர்க்கதரிசனங்கள் எல்லாம் இயேசு கிறிஸ்துவில் நிறைவேறினதும் நாம் பார்க்கமுடியும். இவ்வளவு ஆதாரங்களிருந்தும் அவரை மறுதலிப்பது சாத்தானுடைய யோசனைக்குக் கீழ்ப்படிகிறதாகி விடும். ஆதலால் சாத்தானுடைய வஞ்சனையில் எவரும் விழுந்துபோக வேண்டாம். நித்திய ஜீவனைப் பெற்று இயேசு கிறிஸ்துவே உங்கள் தெய்வமாகவும் இரட்சகராகவும் விசுவாசித்து இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**கேள்வி 23:**

## திரித்துவம் என்ற வார்த்தை வேதத்தில் இல்லையே, திரித்துவம் என்பது பிறமதசங்களிலிருந்து ஏற்றுக்கொண்டதல்லவா?

இது நியமான கேள்விதான் பரிசுத்த வேதாகமத்தில் திருத்துவம் என்ற வார்த்தை இல்லை. மட்டுமல்லாமல் பிறமதசங்களில் மூன்று கடவுள் ஒன்றாக இருப்பதுபோல பல நம்பிக்கைகளும் உண்டு அந்த மதங்கள் சில, பலவருடங்கள் முன்னமே உருவானவைகளும்தான் ஆதலால் திருத்துவம் என்பது அந்த மதங்களிலிருந்து கிறிஸ்தவத்தில் நுழைந்ததாக சிந்திக்கக் கூடும். எனவே அது உண்மைதானா என்பதைப் பார்ப்போம்.

1. திரித்துவம் என்ற வார்த்தை பரிசுத்த வேதாகமத்தில் இல்லையே அப்புறம் ஏன் அதை பயன்படுத்துகின்றீர்கள்?

இந்த கேள்வி கேட்கின்றவர்கள் கேள்வியோடுகூட ஒரு உண்மையும் ஒத்துக்கொள்கிறார்கள். அது என்னவென்றால் பரிசுத்த வேதாகமத்தில் திரித்துவமில்லை என்று அவர்கள் சொல்லவில்லை. திரித்துவம் என்ற வார்த்தை இல்லை என்பதுதான் அவர்களின் கூற்றாக உள்ளது. திரித்துவம் என்ற வார்த்தை ஏன் வேதத்தில் இல்லை என்று கேட்டால் திரித்துவ தேவனை அறியாத ஒரு ஜனங்களிடம் பரிசுத்த வேதாகமம் ஒப்படைக்கப்

படவில்லை. திரித்துவ தேவனை நன்கு அறிந்த ஒரு ஜனத்தாரிடம் தான் பரிசுத்த வேதாகமம் ஒப்படைக்கப்பட்டது என்பதினால் அந்த காலத்தில் அப்படி வார்த்தை தேவைப்படவில்லை. இந்த காரியம் உபா.6:4,5லிருந்து புரிந்துகொள்ளலாம். இஸ்ரவேலே கேள் நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் மேலும் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், உன் பெலத்தோடும் அன்பு கூர்வாயாக. இதில் 4ஆம் வசனமானது எபிரேய மொழியில் சேமா இஸ்ராயில், யோகோவா ஏலோஹிம், யோகோவா எக்காது, இதனுடைய அர்த்தம் இஸ்ரவேலே கேள் யோகோவா (கர்த்தர்) நம்முடைய ஏலோஹிம் (தெய்வம்) கர்த்தர் ஒருவரே. இங்கு ஆரம்பத்திலே யேகோவா = கர்த்தர் ஏலோயிம் – தெய்வம்.

யேகோவா = கர்த்தர் இரண்டுமுறை கர்த்தர் என்றும் ஒருமுறை தெய்வம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. தெய்வம் என்பதற்கான எபிரெய வார்த்தை ஏலோஹம் பண்மை சொல்லாகும். கர்த்தர் ஒருவரே என்பதற்கான யேகோவா எக்காது என்பதில் எக்காது என்பது பண்மையில் ஒருமையை குறிப்பதாகும். ஆதலால் திரித்துவம் என்பது கிறிஸ்தவர்களுடைய கண்டு பிடிப்பல்ல, தேவன் எப்பொழுதும் திரித்துவ தேவனாகத்தான் இருந்திருக்கிறார். இந்த தேவனை நன்கு அறிந்தவர்கள் இஸ்ரவேல் ஜனங்கள். ஆதலால்தான் உபா.6:4ல் வசனத்தைச் சொல்லும்போது எந்த சந்தேகமுமில்லாமல் அதை ஏற்றுக்கொண்டார்கள். இந்த வசனம் புதிய ஏற்பாட்டில் எப்படி ஒத்து வருகிறது என்பதைப்பார்ப்போம் .

உபா.6:4ல் முதலாவது யெகோவா என்றும் பின்னர் ஏலோஹிம் என்றும் பின்னர் யெகோவா என்றும் சொல்லப்பட்டுள்ளது மூன்று ஆள் தத்துவமுடைய ஏக தெய்வமாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவியை வெளிப்படுத்துவதாகும். புதிய ஏற்பாட்டின் ஆதார வசனங்களை கீழேப் பார்க்கலாம்.

1. பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட யெகோவா என்றவர்தான் புதிய ஏற்பாட்டில் கர்த்தர் என்றும், கர்த்தர் என்பவர்தான் இயேசு என்னும் 1 கொரி.8:6 வசனத்தின்மூலம் அறியலாம்.

இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தர் நமக்குண்டு என்பதைப் பார்க்கலாம்.

பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட ஏலோஹிம் புதிய ஏற்பாட்டில் தெய்வம் என்னும் பிதா என்றும் 1 கொரி.8:6ல் பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு. (எபே.4:6) எல்லோருக்கும் ஒரே தேவனும் ஒரே பிதாவும் உண்டு என்ற வசனத்தின்மூலம் அறியலாம்.



பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட யோகோவா, புதிய ஏற்பாட்டில் கர்த்தர் என்றும் பரிசுத்தஆவி என்றும் 2 கொரி.3:17ல் கர்த்தரே ஆவியானவர் என்ற வசனத்தின்மூலம் அறியலாம். இவ்விதமாக பழைய ஏற்பாட்டில் மூன்று ஆட்தத்துவமாக தேவன் அவர்களுக்கு வெளிப்பட்டிருக்கிறார். ஆதலால் ஏலோகிம் என்கிற பண்மையில் ஒருமையைக்குறிக்கும் வார்த்தையும் ஒன்று என்பதற்கான எக்காது என்கிற வார்த்தையும் அவர்களுக்கு சொல்லும் பொழுது, அவர்கள் அதை சரியாக புரிந்துகொண்டார்கள். ஏனென்றால் திரித்துவ தேவனை அவர்கள் அறிந்தவர்களாக இருந்தார்கள். சங்.110:1ல் தாவீது கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி என்று சொல்லும்போது இரண்டாவது சொல்லப்படும் ஆண்டவர் யார் என்பதை தாவீதும் அப்பொழுது வாழ்ந்த ஜனத்தாரும் நன்றாக அறிந்திருந்தார்கள் ஏசா.48:16ல் இப்பொழுது கர்த்தராகிய ஆண்டவரும் அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார் என்றுள்ளது. அதே 48ம் அதிகாரம் ஆரம்பத்திலிருந்து படிக்கும்போது பேசுகிறவர் கர்த்தர் அவரை அனுப்பினவர் கர்த்தர் என்று சொல்லப் பட்டுள்ளது. அதுமட்டும் அல்லாமல் கர்த்தருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார் என்றுள்ளது. இங்கு மூன்று ஆள்தத்துவம் பார்க்க முடியும். ஆனால் இந்த வசனங்கள் எல்லாம் அந்த காலத்தில் வாழ்ந்த இஸ்ரவேல் ஜனங்கள் கேட்கும்பொழுது அவர்களுக்கு எந்த சந்தேகமும் ஏற்படவில்லை. ஏனென்றால் அவர்கள் திருத்திவ தேவனை அறிந்தவர்களாக இருந்தார்கள்.

பிற்காலத்தில் இந்த அறிவு இல்லாதவர்கள் வேத புஸ்தகத்திலுள்ள இந்த உண்மையை ஏற்க மறுத்தார்கள் அப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் வேறு வேறாக மூன்று ஆள் தத்துவமுள்ள ஏகதேவன் என்று சொல்லுவதற்கு பதிலாக திரித்துவம் என்கின்ற உண்மையை வேதத்திலிருந்து புரிந்து கொண்டர்வர்கள் திரித்துவம் என்ற வார்த்தையை பயன்படுத்த ஆரம்பித்தார்கள் இப்பொழுதும், ஒருவரும் திரித்துவ தேவன் என்ற வார்த்தையை சொல்லவேண்டுமென்று எந்த கட்டாயமும் இல்லை.

ஏக சத்திய தேவன் பிதா குமாரன் பரிசுத்தஆவி என்று மூன்றாள் தத்துவம் உடையவர் என்பதை விசுவாசித்தால் போதும் திரித்துவம் என்ற வார்த்தைக்கு பதிலாக மூன்று ஆள் தத்துவமுடையவர் என்ற வாசகமாக தான் சொல்ல வேண்டுமானாலும் அப்படி சொல்வது எந்த தப்புமில்லை.

சில காரியங்களை குறிப்பதற்கு சரியான வார்த்தை பிற்காலத்தில் உருவாகுவது சாதாரணமான காரியம்தான் என்பதை எல்லா மொழி வல்லுநர்களும் ஒத்துக்கொள்கின்றனர். இப்பொழுது உலகமெங்கும் பயன்

பாட்டிலுள்ள ஒரு பொருள்தான் கைபேசி (அலைபேசி) ஆங்கிலத்தில் மொபைல் போன் என்றும் செல்போன் என்றும் சொல்லி வருகின்றார்கள். ஆனால் அந்த கருவிக்கு கைபேசி என்பதும், அலைபேசி என்பதும், மொபைல் போன் என்பதும், செல்போன் என்பதும் சரியான வார்த்தை இல்லை. எல்லா போனும் கையில் பிடித்துதான் பேசுகிறார்கள். இதைமட்டும் கையில் பிடித்தும், மற்றவைகள் காலில் பிடித்தும் பேசுவதில்லை அப்படியிருக்கும் போது இதற்கு மட்டும் கைபேசி என்றும் எப்படி சொல்லமுடியும். எல்லா போன்களும் செயற்கை கோளிலிருந்து வருகின்ற அலைகள்மூலம் சிக்னல் பெற்றுக்கொள்ளும். இப்பொழுது வீடுகளிலுள்ள லாண்ட் லைன் போன்களும் எடுத்துச் செல்லக்கூடியவைகள்தான் இப்பொழுது பயன்பாட்டிலுள்ள எல்லா போன்களும் பாட்டரிமூலம்தான் இயங்குகிறது. ஆதலால் இதற்குமட்டும் அலைபேசி என்றும் மொபைல்போன் என்னும் செல்போன் என்றும் சொல்லலாமா இதிலிருந்து என்ன விளங்குகிறது. இந்த கருவிக்கு ஏற்ற ஒருவார்த்தை இன்றும் உருவாகவில்லை. இப்படியாகப் பார்க்கும்போது இந்த கருவிக்கேற்ற ஒரு வார்த்தை வருங்காலத்தில் உருவாகவேண்டும். அப்படி ஒரு வார்த்தை உடனே உருவாகவில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். ஆயிரம் வருடங்கள் கழித்துதான் அப்படி ஒரு வார்த்தை உருவாகுவது என்றால் அப்பொழுது வாழ்கின்ற மக்கள் இந்த வார்த்தை இப்பொழுதுதானே உருவானது ஆயிரம் வருடங்களுக்கு முன்புள்ள அகராதியில் அப்படி ஒரு வார்த்தை இல்லாததினால் அப்படி ஒரு பொருள் இல்லாமல் இருந்தது என்று சொல்வார்களானால் அதை ஏற்றுக்கொள்வீர்களா? இப்பொழுது பயன் படுத்தும் போனில் ரேடியோ கேட்கிறார்கள். **T.V.** பார்க்கிறார்கள். கேம்ஸ் விளையாடுகிறார்கள் போட்டோ பிடிக்கிறார்கள். நேரம் பார்க்கிறார்கள். தேதி பார்க்கிறார்கள் டார்ச் லைட்டாக பயன்படுத்துகிறார்கள். கம்பியூட்டர் செய்யக்கூடிய எல்லாவேலைகளும் செய்கிறார்கள். இன்னும் அந்த போனைவைத்து அநேக காரியம் செய்கிறார்கள். கவனியுங்கள். ரேடியோ, கேமஸ், காமிரா, கடிகாரம், கால்குலேடர் நாட்காட்டி, டார்ச்லைட் கம்பியூடர், கையேடு, தொலைபேசி இவ்விதமாக அநேக செயல் பாடுகளுள்ள இந்த பொருளுக்கு என்னதான் பெயர் உண்டு. இப்பொழுது சொல்லப்படுகின்ற எந்த பெயரும் அதற்கு ஏற்றதாக இல்லை. ஆதலால் இந்த கருவியை குறிப்பதற்கு யாராவது ஒரு பெயர் முன் வைத்தால் அது ஏற்றுக்கொள்ளத் தக்கதாயிருந்தால் இப்பொழு துள்ளவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதும் சொல்லமுடியாது. அதுபோல தான் திரித்துவமும் ஆரம்பத்தில் இருந்ததுதான். ஆனால் அன்றைக்கிருந்த



ஜனங்களுக்கு அதைக்குறித்து எந்த சந்தேகமுமில்லாதிருந்ததினால் அதற்கென்று ஒரு தனிவார்த்தை தேவைப்படவில்லை திருத்துவத்தைக் குறித்து சரியான அறிவில்லாத தலைமுறைகள் எழும்பி கேள்விக் கேட்க ஆரம்பித்ததால், திரித்துவம் என்ற வார்த்தையைக்கொண்டு பிதா குமாரன் பரிசுத்தாவி என்பவர்கள் ஒன்றாக இருப்பதைக்குறிக்கும்படி சொல்ல ஆரம்பித்தார்கள். இதில் எந்த தவறுமில்லை. ஆங்கிலத்தில் பையோலஜி **(Biology)** என்கிற வார்த்தை பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரன்ஞ் நாட்டு விஞ்ஞானி லமாக்கர் என்பவர்தான் முதல் முதலில் உருவாக்கினார் என்று பிராட்டானிக்கா என்னசக்லோபிடியா சொல்கின்றது. பதினெட்டாம் நூற்றாண்டில் பையோலஜி என்ற வார்த்தை உருவானது என்பதினால் அதுவரைக்கும் உலகில் உயிரினமும் இல்லை. உயிரியலுமில்லை என்றும் சொன்னால் ஒத்துக்கொள்வீர்களா? ஆதலால் திரித்துவம் என்ற வார்த்தை பரிசுத்த வேதாகமத்தில் இல்லை என்பதால் திரித்துவம் என்ற ஒன்று இல்லை என்று சொல்வது தவறாகும்.

2. திரித்துவம் பிறமதங்களிலிருந்து, கிறிஸ்தவர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டதா?

பிறமதங்களிலும் திரித்துவம் (அல்லது) அதற்கு ஒப்பான கடவுள் வழிபாடு பார்க்கமுடியும். பரிசுத்த வேதாகமத்தில் கூறும் திரித்துவமும் பிற மதங்களில் உள்ள திரித்துவமும் ஒன்றானதல்ல என்பதை முதலாவது அறிந்துகொள்ள வேண்டும். பரிசுத்த வேதாகமம் கூறும் திரித்துவம் என்ன என்பதை இந்த நூலில் ஆரம்பத்தில் நாம் பார்த்துவிட்டோம். ஆதலால் பிறமத சங்களிலுள்ளதை நாம் பார்ப்போம்.

**(i)** இந்து மக்கள் சொல்லும் கடவுள் கொள்கைளைப் பார்ப்போம். அங்கு பிரம்மா, சிவன், விஷ்ணு என்று பார்க்கலாம். இதில் பிரம்மா படைக்கின்றவரும், சிவன் அழிக்கின்றவரும், விஷ்ணு காப்பாற்றுபவர் என்றும் அவர்கள் சொல்கின்றார்கள். இதுவும் வேதாகமம் கூறும் திரித்துவமும் ஒன்றானதல்ல என்பதை நன்றாக அறிந்துகொள்ளலாம். வேதாகமத்தில் பிதா, குமாரன், பரிசுத்தாவி மூவரும் ஒன்றாக செயல்படுவதும், ஒருவருக்கு விரோதமாக ஒருவர் செயல்படாமலிருப்பதும் பார்க்கலாம். இந்து மதவழிப்பாட்டிலுள்ள சிவன் என்பர் பார்வதியை மனைவியாகக் கொண்டு, பிள்ளைகுட்டிகளுடன் வாழ்ந்ததுமல்லாமல் மற்ற பல உறவுகள் இருந்ததைப் பார்க்கமுடியும். விஷ்ணு என்பவர் அநேக அவதாரம் எடுத்து பூமிக்கு வந்ததைப் பார்க்கமுடியும். ஆனால் ஒருபொழுதும் மனுகுலத்திற்கு பாவபரிகாரம் செய்வதற்காக அவர்

வந்ததாக எந்த ஆதாரமும் இல்லை. இன்னும் அநேக காரணங்களும் உண்டு. ஆதலால் பரிசுத்த வேதாகமம் கூறும் திரித்துவம் இந்து மதத்திலிருந்து எடுக்கப்பட்டதல்ல மாறாக உண்மையான திருத்துவத்தை இந்து மதம் தவறாக விளகுவதை நாம் பார்க்கலாம் அதனால்தான் சிவன், பார்வதி, பிள்ளைகள் என்று அவர்கள்கள் அறிவிக்கிறார்கள் என்பது தெளிவாகின்றது.

**(ii)** பாபிலோனியருக்கு இருந்த கடவுள் நம்பிக்கையை நாம் பார்த்தால் பால், செமிராமிஸ், நிமிரோத் என்று பார்க்கமுடியும். இது புருஷன் மனைவி, குமாரன் என்ற கருத்தில்தான் பண்டைய பாபிலோனியர்கள் கருதி வந்தார்கள். இப்படி ஒரு திரித்துவம் பரிசுத்த வேதாகமத்தில் இல்லை. ஆனால் இந்த திரித்துவத்தைக்குறித்து கற்றுக்கொண்டதினால்தான். முகமது அவர்கள் குர்–ஆனில் திருத்துவத்தைக் குறித்து எழும்பொழுது, பிதா, மரியா, இயேசு என்று சொல்வதைப் பார்க்கின்றோம். இப்பொழுதிருக்கும் ஈராக்கும் அதைச்சுற்றி சில பகுதிகளும் சேர்ந்ததுதான் பண்டைய பாபிலோன். அங்கிருந்த ஜனங்களுடைய நம்பிக்கைதான். புருஷன், மனைவி, பிள்ளை, புருஷன் = பால், செமிராமிஸ்= மனைவி, நிமிரோத் = மகன் ஒரு அரபியாக இருந்த முகம்மதுக்கு, இந்த கடவுள் வழிபாட்டைக்குறித்துக் கற்றுக் கொள்வதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். பரிசுத்த வேதாகமத்திலுள்ள திரித்துவம் என்ன என்பதை அவர் புரிந்துகொள்ள வில்லை. ஆதலால் பாபிலோனியர்களைப்போல் ஒரு திரித்துவம்தான் பரிசுத்த தேவதாகமத்திலுள்ளது என்று தவறாக புரிந்துகொண்டதன் விளைவுதான் திரித்துவத்திற்கு எதிராக சில கருத்துக்கள் முகமது அவர்கள் சொன்னதாகப் பார்க்கமுடியும் இன்றைக்கும் இயேசு தேவனுடைய குமாரன் என்று சொல்லும்போது, தேவனுக்கு திருமணமாகி தன் மனைவியின் மூலம் பிறந்தவரா இயேசு என்று கேட்கிறவர்களும் உண்டு. ஏன் இப்படிக் கேட்கிறார்கள் என்றால் மனைவியுடன் சேர்ந்து பிள்ளையை பெற்றெடுக்கின்ற அனுபவமட்டும்தான் இப்படிப்பட்டவர்களுக்குத் தெரியும். அதற்கு அப்புறம் சிந்திக்க அவர்களால் முடியவில்லை. புருஷன், மனைவி, பிள்ளை, அப்படி ஒரு திரித்துவத்தை பரிசுத்த வேதாகமம் அறிவிக்கவில்லை. ஆதலால், பரிசுத்த வேதாகமம் கூறும் திரித்துவம் பாபிலோனிய மதத்திலிருந்து எடுக்கப்பட்டது அல்ல என்று அறிந்துக்கொள்ளமுடியும்.

**(iii)** இதற்கு ஒப்பான கடவுள் நம்பிக்கை கிரேக்கரிடத்திலும் எகிப்திலும், உலகத்தில் பல இடங்களிலும் பார்க்கமுடியும் அவைகளை சரியாக ஆராய்ந்துப்பார்த்தால் ஒருவருக்கொருவர் விரோதமாக செயல்படுவதும் கடவுளுக்களுக்கிடையில் சண்டைகள் நடப்பதும் மற்றும் பல காரியங்களும்



பார்க்கமுடியும். கிரேக்கரும், எகிப்தியரும் கூறுகின்ற கடவுள்கள், ஏதாவது குறிப்பிட்ட ஒரு காரியத்திற்காக மட்டும் சக்தி உடையவர்களாக இருப்பதைப் பார்க்கமுடியும். ஆனால் பரிசுத்த வேதாகமம் கூறும் கடவுள் சர்வ வல்லவராயிருக்கின்றார். பரிசுத்த வேதாகமத்திலுள்ள திரித்துவம் பிறமதங்களிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டதல்ல என்பதையும் மாறாக மெய்யான தேவன் மூன்று ஆள்தத்துவம் உடைய ஒருவராக இருப்பதால் உலகில் பல பகுதிகளிலும், மெய் தேவனைக்குறித்த சரியான அறிவில்லாத வர்கள். உருவாக்கின திரித்துவம்தான் மற்ற இடங்களில் பார்க்கமுடியும்.

3. வேதாகமம் அறிவிக்கின்ற தெய்வம் எப்படிப்பட்டவர் என்பதை அறிந்துகொள்ள ஒருசில வசனங்கள் பார்ப்போம்.

1. சதாகாலங்களிலுமுள்ள தேவனாகிய கர்த்தர் ஆதி.21:31
2. சர்வ வல்லமையுள்ள தேவன் ஆதி.17:1
3. சர்வலோக நியாதிபதி ஆதி.18:25
4. வானத்திற்குத் தேவனும் பூமிக்குத் தேவனும் ஆதி.24:4
5. பரிசுத்தத்தில் மகத்துவமுள்ள தேவன் யாத்.15:11
6. ஒப்பற்றவர் யாத்.15:11
7. என்றென்றைக்கும் இராஜரீகம் பண்ணுகின்றார் யாத்.15:18
8. இருக்கிறவராய் இருக்கிறவர் யாத்.3:14
9. இல்லாததை உள்ளதுபோல் வரவைக்கும் தேவன் ரோம.4:17
10. சர்வலோகத்திற்கும் ஆண்டவர் சங்.4:14
11. அழிவில்லாத தேவன் ரோம.1:23
12. மாமிசமான யாவருடைய ஆவிக்கும் தேவன் எண்.16:20
13. மகிமையின் தேவன் அப்.7:2
14. உலகையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினவர் அப்.17:24
15. எல்லோருக்கும் ஜீவனும், சுவாசமும், சகலமும், கொடுக்கின்றவர் அப்.17:25
16. மனுஷர் கையில் பணிவிடைப் பெற்றுக்கொள்ளாதவர் அப்.17:25

17. நித்தியமானவர் 1 தீமோ.1:17

18. கர்த்தர் மெய்யான தேவன் எரே.10:11

19. மாறாதவர் மல்.3:6; யாக்.1:17

20. எல்லா ஜீவன்களுக்கும் ஆகாரம் கொடுப்பவர் சங்.136:25; 145:15

பரிசுத்த வேதாகமம் நமக்கு அறிவிக்கும் தேவனுக்கு இன்னும் அநேக சிறப்புகள் உண்டு. ஆனால் பிற மதங்களில் அறிவிக்கின்ற தேவர்கள் இதிலிருந்து அநேக வித்தியாசங்கள் உள்ளவர்களாகப் பார்க்கமுடியும். மற்ற மதங்களில் திரித்துவத்திற்கு ஒப்பான கடவுள் நம்பிக்கை வருவதற்கு காரணம் என்னவென்றால் மெய்யான தேவன் மூன்று ஆள் தத்துவமுள்ள ஒரு தெய்வமாகும். இந்த தெய்வத்தை ஆரம்ப நாட்களில் நேரடியாக அறிந்துகொள்ள மனிதர்களுக்கு பாக்கியம் கிடைத்தது. அவர்களிலிருந்து பின் தலைமுறைகளுக்கு இந்த உண்மை பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆனால் காலப்போக்கில் தேவனுடைய குமாரன் என்று சொன்னால் தேவனுக்கு மனைவி இருக்கவேண்டும் என்று மனிதர்கள் கருதினார்கள். அப்படி மனிதர்களாகவே, தேவனுக்கு மனைவியை ஏற்படுத்தினார்கள். இதுதான் உண்மை. ஆனால் பரிசுத்த வேதாகமம் ஒருபொழுதும் அப்படி ஒரு தெய்வத்தை அறிவிக்கவில்லை. மனிதர்கள் தங்கள் விருப்பத்தின்படி, கடவுளை கற்பனை செய்தபோது மெய்யான தேவனோடு சிலகாரியங்களில் ஒற்றுமை வந்தது உண்மைதான். ஆனால் அதுவும் இதுவும் ஒன்றல்ல என்பதை அறிந்துகொள்ளவேண்டும். தேவன் ஒரே, ஒருவர்தான் அந்த ஒருவரில் ஒன்றுக்கும் அதிகமான ஆள்தத்துவம் உண்டு என்பது உண்மையாக இருப்பதால்தான் பல மதங்களிலும் திரித்துவங்கள் பார்க்க முடிகின்றன. கடவுள் ஒருவராக இருந்தாலும் ஒன்றுக்கும் அதிகமான ஆள்தத்துவ மிருப்பதால் ஒரு சிலர் அநேக தேவர்கள் உண்டு என்றும் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார்கள். தெய்வம் ஒன்றுக்கும் அதிகமான ஆள் தத்துவம் உடையவர் என்பதை இஸ்லாமியர்கள் சொல்லும் தாவுஹித் என்ற வார்த்தை நமக்கு அறிவிக்கின்றன. ஏனென்றால் தவுஹித் என்கின்ற அரபிக் வார்த்தை வஹ்து என்றும் வேர் சொல்லிலிருந்து உருவானதாகும். வஹ்து என்னும் அரபிக் வார்த்தைக்கு ஒன்றாக எண்ணுவது (அல்லது) ஒன்றாக கருதுவது என்ற அர்த்தமாம். இது அரபிக் மொழி வல்லுநர்களுடைய கருத்தாகும். இங்கு நாம் கவனிக்கவேண்டிய அடிப்படை காரியம் என்னவென்றால் ஒரு வார்த்தையினுடைய சரியான அர்த்தம் புரிந்துகொள்வதற்கு அந்த வார்த்தை எந்த வார்த்தையிலிருந்து உருவானது என்றும் அந்த வேர் சொல் எந்தனை



ஆண்டுகளுக்குமுன் எந்த சூழ்நிலையில் பயன்படுத்தப்பட்டது என்றும் பார்க்கவேண்டும். இதன் அடிப்படையில் தவுஹித் என்கின்ற வார்த்தை ஒன்றாக எண்ணப்படுகிறது என்று அர்த்தமுள்ள வஹ்த் என்னும் சொல்லியிருந்து வந்திருப்பதால் ஒன்றுக்கும் அதிகாமனவர்களை, ஒன்றாக எண்ணுவதற்காகத்தான் வஹ்த் என்னும் வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது. இது என்னுடைய கருத்தல்ல இஸ்லாமியர்களாகிய அரபிக் மொழி வல்லுநர்கள் கருத்தாகும். இங்கு என்னுடைய கேள்வி ஒன்றே ஒன்று இருக்கும்போது எதற்காக ஒன்றாக கருதவேண்டும் (அல்லது) ஒன்றாக என்னவேண்டும் என்கின்ற வார்த்தை பயன்படுத்தவேண்டும். ஒன்றே ஒன்று இருக்குமானால் தவுஹித் என்ற வார்த்தை தேவையில்லை. அல்லாஹ் ஒருவர் என்பதற்கு குர்ஆனில் பயன்படுத்தப்பட்டிருக்கும் அரபிக் வார்த்தை அஹத் என்பதாகும் (சுறா.112:1) ஆனால் இந்த அஹத் என்கிற வார்த்தையைக் கொண்டு இறைவன் ஒருவன் என்று இஸ்லாமியர்கள் சொல்லாமல் தவுஹித் என்ற வார்த்தை பயன்படுத்துகிறார்கள். அஹத் என்கிற வார்த்தைக்கு, அநேகரில் ஒருவர் என்று அர்த்தமாம் தவுஹித் என்று சொல்லும்போது பண்மையில் ஒருமை **(un plural)** குறிப்பதாகும். அதாவது பரிசுத்த வேதாகமம் அறிவிக்கின்ற பண்மையின் ஒருமையுள்ள தெய்வம் அல்லாஹ் இல்லை. மாறாக அல்லாஹ் ஒருவர் என்பதற்கு அநேகரில் ஒருவர் என்று அர்த்தமுடைய அஹத் என்றும் வார்த்தையிருப்பதால் அல்லாஹ் அநேகரில் ஒருவர்தான். ஆனால் இப்பொழுது இஸ்லாமியர்கள் குர்ஆனில் சொல்லப்பட்டுள்ள அஹத் என்கிற வார்த்தைக்கொண்டு ஒரு இறைவன் என்று சொல்லாமல் குர்ஆனில் எங்குமில்லாததும், பண்மை ஆகிலும் ஒன்றாக வருவது என்ற அர்த்தம் உடையதான தவுஹித் என்னும் வார்த்தை ஓர் இறைவன் என்பதற்கு பயன்படுத்துகிறார்கள். ஆதலால் ஒரே மெய் தேவன் மூன்று ஆள்தத்துவம் உடையவர். ஆகிலும் அவர் ஒருவர்தான் என்கிற பரிசுத்த வேதாகமத்தின் கூற்றே எல்லா மதங்களும் பரிசுத்த வேதாகமத்தில் உள்ளவிதம் இல்லாவிட்டாலும் வேறுவிதத்தில் ஏற்றுக்கொள்கின்றார்கள்.

இதுவரையில் நாம் பார்த்ததிலிருந்து திரித்துவம் என்பது பரிசுத்த வேதாகமமும் கிறிஸ்தவர்களும் பிற மதங்களிலிருந்து எடுத்துக் கொண்டதல்ல என்பதையும் மாறாக உண்மையான திரித்துவத்தை புரிந்து கொள்ளாதவர்கள் பல பெயர்களில் திரித்துவத்தை அறிவித்திருக்கிறார்கள் என்று அறிந்தோம். எல்லோரும் தங்களுடைய தவறுகளைத் திருத்தி மெய்யான தேவனை அறிந்துகொள்வதற்காக தான் கர்த்தர் தம்முடைய தாசர்கள் மூலம் பரிசுத்த வேதாகமத்தைக் கொடுத்தார். அதில் திரித்துவத்தை

சரியாக விளங்கிக்கொள்ளமுடியும். திரித்துவம் என்கின்ற வார்த்தை இந்த உண்மையை குறிப்பதற்காக, மனிதர்கள் எளிதாக சொல்வதற்காக பிற்காலத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும். திரித்துவம் ஒருபுது கண்டுப் பிடிப்பல்ல. மெய்யான தேவன் எப்பொழுதும் நித்திய, நித்தியமாக, மூன்றாள் தத்துவமுள்ள ஒருவர்தான் இதுதான் உண்மை. இன்னும் இதை தேவனானவர் நேரடியாக வந்து காட்டினால்தான் நாங்கள் விசுவாசிப்போம் என்று சொல்ல வேண்டாம். இப்படிப்பட்டவர்களுக்காக கர்த்தர் சொன்ன சில வசனங்கள் இங்கு எழுதுகிறேன்.

(லூக்.16:27–31) வரை அதற்கு அவன் அப்படியானால் தகப்பனே எனக்கு ஐந்து சகோதரர்கள் உண்டு. அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்திற்கு வராதபடி அவன்போய் அவர்களுக்கு சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டிற்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக் கொள்கிறேன் என்றான். ஆபிரகாம் அவனை நோக்கி அவர்களுக்கு மோசேயும், தீர்க்க தரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும் என்றார். அதற்கு அவன் அப்படியல்ல. தகப்பனாகிய ஆபிரகாமே மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனம்திரும்புவார்கள் என்றான். அதற்கு அவன் அவர்கள் மோசேக்கு தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால் மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும் நம்ப மாட்டார்கள் என்று சொன்னான் என்றார். இங்க நாம் தெளிவாக புரிந்துகொள்ளவேண்டிய காரியம் மனிதர்களாகிய நாம் விசுவாசிக்கும்படி இப்படிசெய், அப்படிசெய் என்று சொன்னால் கர்த்தர் அப்படி செய்கிறவர் அல்ல. கர்த்தர் அவருடைய தாசர்கள்மூலம் அறிவித்ததை விசுவாசிக்கிறவர்கள் விசுவாசித்தால் போதும் அதற்காக ஏதாகிலும் நிபந்தனைகள் வைக்கின்ற மனுஷனுக்காக அவர் வந்து காட்சி அளிக்க மாட்டார். பரிசுத்த வேதம் நமக்கு கிடைத்தாயிற்று அதற்கு கீழ்ப்படிந்து வாழவேண்டும் என்பது மனிதனின் தலையாயக் கடமையாகும் அப்படியே செய்வோம்.

**கேள்வி –24**

### ஒரே இயேசுவை விசுவாசிக்கும் கிறிஸ்தவர்கள் ஒரே பைபிள் விசுவாசிக்கும் கிறிஸ்தவர்கள் ஏன் இத்தனை பிரிவுகளாக இருக்கிறார்கள்?

உண்மையை அறிந்துகொள்ளவேண்டும் என்று இந்த கேள்வி கேட்ட துண்டானால் இது நல்ல கேள்விதான். ஆதலால் இதற்கான பதில் என்ன என்பதைப் பார்ப்போம்.



வெளியிலிருந்து பார்க்கும்போது கிறிஸ்தவர்களுக்குள்ளே அநேக பிரிவுகள் இருப்பதாக தோன்றும். இதனுடைய காரணம் என்னவென்றால் கிறிஸ்தவசபை என்றால் என்ன என்பதை அறிந்துகொள்ளாததுதான். ஆதலால் கிறிஸ்தவ சபை என்ன, ஏது என்பதை சுருக்கமாக இங்கு நாம் பார்ப்போம்.

சபை என்னும் தமிழ் வார்த்தைக்கு கிரேக்க மொழியில் எக்லிஷியா என்று சொல்லப்பட்டுள்ளது. இதனுடைய அர்த்தம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அழைத்து சேர்க்கப்பட்டவர்களுடைய கூட்டம், அல்லது குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்ட கூட்டம் என்பதாகும். இந்த வார்த்தையிலிருந்து இந்தக் கூட்டம் ஒரு தனி தன்மையுள்ளது என்று அறிந்துகொள்ளலாம். மற்ற கூட்டங்களுக்கும் கிறிஸ்தவ கூட்டத்திற்கு (சபைக்கும்) அநேக காரியங்களில் வேறுபாடுகள் உண்டு. அது எல்லாம் நாம் இங்கு பார்க்க முடியாது ஆகிலும் சில முக்கியமானவைகள் மட்டும் கவனிப்போம்.

1. இந்த சபையை கூட்டுகிறவர் அல்லது கட்டி எழுப்புகிறவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதான். அவருடைய வார்த்தைகள் கவனியுங்கள். இந்த கல்லின்மேல் என் சபையை கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத்.16:18). இந்த வசனத்திலிருந்து தெளிவாக்கும் காரியம் என்ன சபை கட்டுவது மனுஷனுடைய வேலையல்ல. அது செய்பவர் கர்த்தர் ஒருவரே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த பூமியில் ஒருமதம் ஸ்தாபிக்கவில்லை. அவர் அவருடைய சபையை ஸ்தாபித்தார். ஆனால் பிற்காலத்தில் சாத்தான் கிறிஸ்தவ மதம் ஒன்று ஸ்தாபித்து அந்த மதம்தான் கிறிஸ்தவ சபை என்று எல்லோரும் தவறாக புரிந்துகொள்ளும்படி செய்தான். ஆதலால் இவை இரண்டும் தனி தனியாக உள்ளவைகள் என்று புரிந்துகொள்ளவேண்டும்.

**2. கிறிஸ்தவ சபையில் ஒருவரை சேர்ப்பவர் யார்?**

“... இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்” (அப்.2:47). சபையில் ஒருவரை சேர்ப்பவர் கர்த்தர் பூமியில் எந்த மனிதனாலும் எவரையும் சபையில் சேர்க்கமுடியாது. அது செய்கிறவர் கர்த்தர். மனிதர்களிடம் இந்த பொறுப்பு ஒப்புக் கொடுத்தால் இது நீதியாக நடக்காது என்று கர்த்தருக்கு தெரியும். ஆதலால் அந்த வேலையை அவரே செய்கிறார். இங்கு பொய்யான ஆவணங்கள் கொடுத்து வேலையிலும், கல்லூரியிலும் எல்லாம் சேருவதுபோல கர்த்தருடைய சபையில் சேரமுடியாது.

**3. இயேசுவினுடைய சபையின் சேருவதற்கான தகுதி என்ன?**

நாம் முன்னமே படித்த வசனத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது இரட்சிக்கப்படுகிறவர்கள் தான் சபையில் சேர்த்துக்கொள்ளப்படும். வேறு எந்த குறுக்கு வழியும் அதற்கில்லை. யாருக்காவது பிள்ளையாக பிறந்தாலோ, ஏதாவது பணம் பொருள் கொடுத்தோ, வேறு யாருடைய பரிந்துரை மூலமாகவோ சபையில் சேரமுடியாது ஒரே ஒரு தகுதி இரட்சிக்கப் பட்டவராக இருக்கவேண்டும்.

இரட்சிக்கப்படுவது என்பது பரலோக வித்தாகிய இயேசுகிறிஸ்து உள்ளத்தில் வந்து அதன்மூலமாக புதுமனுஷன் ஒருவனில் சிருஷ்டிக்கப்படும் அனுபவமாகும். “அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜனிப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள்” (1 பேது.1:23). இந்த ஜீவவசனம் ஒருவருடைய உள்ளத்தில் செலுத்தி அந்த வசனத்தின் மூலம் ஒருவரில் புது மனுஷனை சிருஷ்டிப்பது பரிசுத்தாவியானவர். அதனால் தான் (யோவா.3:5)ல் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன்” என்று இயேசு கிறிஸ்து சொன்னார். ஒரு மனுஷன் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை தன்னுடைய இரட்சகராகவும் தன் வாழ்க்கையின் கர்த்தராகவும் ஏற்றுக்கொள்ளும் அந்த நொடிப் பொழுதில் இந்த காரியங்கள் சம்பவிக்கும். இதைக்குறித்து பரிசுத்த வேதம் சொல்வதை பாருங்கள்.

“என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்” (ரோம.10:9,10). இரட்சிக்கப்பட்டவருக்கு வரும் மாற்றங்களைக் குறித்து முன்னமே எழுதினதை பாருங்கள்.

இந்த இரட்சிப்பு முற்றிலும் இலவசம் இதற்காக எந்த மலையும் ஏறவேண்டாம். எந்த ஆற்றிலும் இறங்கவேண்டாம். கடல் கடந்து பயணிக்க வேண்டாம். மனிதனுடைய எந்த கிரியையினாலும் இது கிடைக்காது விசுவாசிக்கவேண்டும் (எபே.2:8,9) விசுவாசித்து இரட்சிக்கப்பட்டவர் தன்னுடைய விசுவாசம் பகிரங்கமாக அறிக்கையிட்டு பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறவேண்டும் தொடர்ந்து



இயேசுவைபோலவும் பரிசுத்த வேதாகமத்திலுள்ள கட்டளைகள் கடை பிடித்தும் ஜீவிக்க வேண்டும்.

**4. கிறிஸ்தவ சபையின் தலைவர்**

“எல்லா துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்திற்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாக தந்தருளினார்” (எபே.1:20–23). கிறிஸ்தவ சபைக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வல்லாமல் வேறு ஒரு தலைவர் இல்லவே இல்லை. எங்காவது நான் கிறிஸ்தவ சபையுடைய தலைவர் என்று யாராவது ஒருவர் சொல்லுவார்களானால் அது பரிசுத்த வேதாகமத்திற்கும் ஆண்டவருடைய சத்திய உபதேசத்திற்கும் எதிரானதாகும். அதே சமயத்தில் அரசாங்கத்தில் பதிவு பண்ணியிருக்கும் சங்கங்களுக்கு மனுஷீகமான தலைவர்கள் உண்டு என்பதை நாம் மறந்திடக்கூடாது.

**5. கிறிஸ்தவ சபை எத்தனை உண்டு?**

கிறிஸ்தவ சபை ஒரே ஒரு சபைதான் உண்டு. கிறிஸ்தவ சபை பல இல்லை என்பதை முதலாவது அறிந்துகொள்ளவேண்டும். இதுபோன்று ஒரு கேள்வி எழக்கூடும். அப்படியானால் நாம் இங்குப் பார்க்கும் அநேகம் சபைகள் கிறிஸ்தவ சபையல்லவா? இதற்கானபதில் கட்டாயம் தரப்படும்.

கிறிஸ்தவ சபை ஒன்று மட்டும் தான் உண்டு பல சபைகள் இல்லை என்பதற்கான சில ஆதாரங்கள் இங்கு பார்ப்போம்.

**a...** “இந்த கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை” (மத்.16:18). இது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னதான வசனமாகும். இங்கு சபைகள் என்று சொல்லாமல் சபை என்று ஒருமைப்பாட்டில் சொல்லப்பட்டுள்ளதை கவனிக்க வேண்டும். ஆதலால் கிறிஸ்தவ சபை பல இல்லை ஒன்றுதான் உண்டு.

**b.** “எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிக்கு மேலான தலையாகத் தந்தருளினார்” (எபே.1:23). இங்கு சபைக்குத் தலை கிறிஸ்து என்று

சொல்லும்போது சபைகளுக்கு தலை என்று சொல்லாமல் சபைக்கு என்று ஒருமையில் சொல்லப்பட்டுள்ளதை கவனிக்கவேண்டும். பார்க்க (கொலோ.1:18; எபே.5:23).

இன்னும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள உறவை வெளிப்படும்படியாக சொல்லப்பட்டுள்ள சில காரியங்கள் பார்ப்போம்.

**i.** இயேசுகிறிஸ்து மேய்ப்பனும் சபை விசுவாசிகள் ஆடுகளும் (யோவா.10:1–16) இதில் 16ஆம் வசனத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ள காரியம் ஒரு மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும். ஆதலால் கிறிஸ்தவ சபை ஒன்று மட்டும்தான் உண்டு.

**ii.** இயேசுகிறிஸ்து தலை சபை சரீரம் (எபே.1:23).

எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார். இங்கு சரீரங்கள் என்று சொல்லாமல் சரீரம் என்று ஒரு சபையைக்குறித்து சொல்லப்பட்டுள்ளது கவனிக்கவேண்டும்.

**iii.** இயேசுகிறிஸ்து அடிஸ்தானமும் சபை கட்டிடமும் (எபே.2:19–22).

“ஆகையால், நீங்கள் இனி அன்னியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள். அதற்கு இயேசுகிறிஸ்துதாமே மூலைக்கல்லாயிருக்கிறார், அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்” இங்கு பரிசுத்த ஆலயமாக என்று ஒருமையில் சொல்வதைக் கவனிக்கவேண்டும்.

**iv.** இயேசுகிறிஸ்து மணவாளனும் சபை மணவாட்டியும் (2 கொரி.11:2)

நான் உங்களை கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராகக்கியங்கொண்டிருக்கிறேன். கற்புள்ள கன்னிகை என்பதை கவனியுங்கள். பார்க்க (எபே.5:25–33; வெளி.19:6–9).

கிறிஸ்தவ சபை ஒரேஒரு சபைதான் உண்டு. என்பதற்கு இன்னும் நிறைய ஆதாரங்கள் காண்பிக்கமுடியும். ஆகிலும் நாம் புரிந்துகொள்வதற்கு இந்த



வசனங்கள் போதுமானது. நாம் பார்த்த எந்த வசனமும் அநேக சபைகள் உண்டு என்றோ அந்த சபைகள் ஒன்றோடு ஒன்று பிரிந்திருப்பது என்றோ சொல்லப்படவில்லை. இப்படியிருக்க இங்கு நாம் அநேக சபைகளை பார்க்கிறோமே அதற்கு காரணம் என்ன?

இதைக்குறித்து பைபிளில் நாம் பார்க்கும்போது எபேசுசபை, கொரிந்து சபை, தெசலோனிக்கேய சபை, இவ்விதமாக பல சபைகள் பெயர் சொல்லப் பட்டுள்ளதை பார்க்கமுடியும். இவைகளெல்லாம் இயேசு கிறிஸ்துவின் உலகளாவிய சபையைக் குறிக்காமல் உள்ளூர் சபைகளை அடையாளம் காட்டுவதற்காக தனித்தனி பெயர்களில் சொல்லப்பட்டுள்ளது. ஆதலால் இயேசுகிறிஸ்துவின் சபை உலகளாவிய ஒரு சபையும். உள்ளூர் சபைகள் பலபெயர்களிலும் அறியப்படுவதுண்டு. இப்போது இன்னொரு கேள்வி எழும்பும் அப்படியானால் ஒரே ஊரில் கத்தோலிக்க சபை C.S.I. சபை பெந்தெகொஸ்தெ சபை என்றும், ஒரே ஊரில் பெந்தெகொஸ்தே சபை என்று பல சபைகளும் இருப்பது ஏன்?

இங்கு நாம் ஒரு உண்மையை புரிந்தும் கொள்ளவேண்டும். இங்கு மனிதர்கள் தங்கள்இஷ்டப்படி சபை சபை என்று சொல்லிக் கூடி வருவ தெல்லாம் இயேசுவின் சபை இல்லை. இயேசுகிறிஸ்துவின் சபை ஏது என்பதை அறிந்துகொள்ளுங்கள். முன்னமே இந்த காரியம் எழுதியுள்ளேன். ஆகிலும் மறுபடியும் சுருக்கமாக எழுதுகிறேன்.

பாவம் நிறைந்த இந்த உலகத்திலிருந்து இந்த உலகத்தையும் உலகத்திலுள்ளவைகளையும் வெறுத்து கர்த்தருக்கென்று தங்களை அர்ப்பணிக்கப்படுவதால் கர்த்தருக்காக வேறுபிரிக்கப்படும் கூட்டம்தான் கிறிஸ்தவ சபை இரட்சிக்கப்பட்டவர்களுடைய அந்தக் கூட்டம்தான் கிறிஸ்தவசபை அப்படிப்பட்ட பரிசுத்தவான் மட்டும்முள்ள ஒரு கூட்டத்தைக் கூட நாம் இந்த உலகத்தில் பார்க்கமுடியாது. ஏன் என்றால் இந்த பூமியில் சபையை நடத்திச்செல்வதற்கு கர்த்தர் மனிதர்களை நியமித்திருக்கிறார். அந்த மனிதர்கள் இரட்சிக்கப்படாதவர்களையும் உள்ளூர் சபைகளில் சேர்த்துவிடுகிறார்கள் உள்ளூர் சபைகளின் பதிவேட்டல் அப்படிப்பட்டவர் களுடைய பெயர்கள் மனிதர்கள் சேர்க்கமுடியும். ஆனால் இரட்சிக்கப் படாதவர்களுடைய பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்காது அவர்கள் இயேசுகிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களும் ஆயிருக்கமுடியாது.

இப்படியாக உள்ளூர் சபைகளில் இரட்சிக்கப்படாதவர்கள் நுழைவதை கர்த்தர் தடுப்பதில்லை. ஏன் என்றால் மனிதனுக்குச் சொல்லவேண்டிய

எல்லாகாரியங்களும் தன்னுடைய வேதம் மூலமாக கர்த்தர் சொல்லி ஆயிற்று. அதற்கு கீழ்ப்படியவேண்டியதுதான் மனிதனுடைய கடமை மனிதன் அதை செய்யாமல் தங்களுடைய இச்சைகளுக்கும் சாத்தானுடைய சதி வேலைகளுக்கும் அடிமைப்படும்போது இயேசுவின் சபையில் அவர்களும் அங்கத்தினர்கள் என்று நம்பிவாழ்கிறார்கள். ஆனால் கர்த்தர் தன்னுடைய சபையை சேர்த்துக்கொள்ளும்போது இவ்விதமானவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது. இவ்விதமான இரட்சிக்கப்படாதவர் தங்களுடைய இஷ்டப்படி பலபெயர்களிலும் கிறிஸ்தவ சபை என்று பெயர் வைத்து நடத்திவருவதும் உண்மைதான். ஆனால் யார் இரட்சிக்கப்பட்டவர். எது இயேசு கிறிஸ்துவின் சபை என்பது முன்னமே சொல்லப்பட்ட அடையாளங் களை வைத்து நாம் கண்டுபிடிக்கலாம். இரட்சிக்கப்பட்டவரெனில் சம்பவிக்கும் காரியங்கள் என்ன என்பதை இந்த புஸ்தகத்தில் யார் கிறிஸ்தவர்கள் என்னும் தலைப்பில் எழுதியுள்ளதை பாருங்கள். அந்த அனுபவமுள்ளவர்களோடு சேர்ந்துகொள்ளுங்கள். உங்கள் ஏரியாவில் அப்படிப்பட்டவர்கள் இல்லையென்றால் நீங்களும் உங்களுடன் இரட்சிப்பின் அனுபவம் உள்ளவர்களும் சேர்ந்து சபையாக கர்த்தரை ஆராதியுங்கள். ஆண்டவர் வருகையில் எடுத்துக்கொள்ளப்படும். மறுரூபமாக்கப்படும்.

இவ்வுலக காரியங்களுக்காக மட்டும் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவைகளைப் பெற்றுக்கொண்டு அதற்காக மட்டும் வாழ்கிறவர்கள் கிறிஸ்தவர்கள் இல்லை என்பதை முதலாவது அறிந்துகொள்ளவேண்டும் அப்படிப்பட்ட பொய்யர்கள் உங்களுடைய வியாதியைமாற்றுகிறேன். கடன் பிரச்சனைகளை மாற்றுகிறேன். இவ்வுலகில் நீங்கள் செல்வ செழிப்பாக வாழ வழி செய்கிறேன் என்று சொல்லி சுற்றித்திரிகிறார்கள். அவர்கள் நீங்கள் இரட்சிக்கப்படவேண்டியதையும், இவ்வுலகத்தில் உள்ளவைகளையும், இவ்வுலகத்தையும் வெறுத்து இயேசுகிறிஸ்துவை பின்பற்றவேண்டியதையும் குறித்து பேசமாட்டார்கள்.

அவர்களுடைய பிரசங்கமும் வாழ்க்கையும் இவ்வுலகத்திற்காக மட்டும் இருக்கும் இந்த கூட்டத்தார் கிறிஸ்தவ சபையைச் சேர்ந்தவர் இல்லை. ஆனால் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லுவார்கள். ஆதலால் கிறிஸ்தவ சபை ஒன்றுதான் உண்டு. அது உலகளாவிய ஒரு சபை உள்ளூர் சபைகள் தனித்தனி பெயர்களில் அறியப்படும். கிறிஸ்தவர்கள் அல்லாமல் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பெரிய கூட்டமும் உண்டு. உண்மையான கிறிஸ்தவ சபைகளிலும் இரட்சிக்கப்படாதவர்கள் அந்த உள்ளூர் சபை நடத்துகிறவர்களால் சேர்க்கப்படுவதற்கு வாய்ப்புண்டு.



ஆனால் அவர்கள் அந்த உள்ளூர் சபையில் மட்டும் அங்கத்தினராக இருக்கமுடியுமே தவிர கர்த்தருடைய சபையில் அங்கத்தினராக இருக்கமுடியாது. ஆதலால் மறுபடியும் சொல்லுகிறேன் கிறிஸ்தவ சபை ஒன்றுமட்டும்தான் உண்டு. அதற்கு எந்த பிரிவும் இல்லை.

**6. சபை அனுசரிக்கவேண்டிய ஆன்மீக ஆசாரங்கள்.**

**a,** ஆண்டவர் இயேசுகிறிஸ்தவை விசுவாசிக்கும் ஒவ்வொருவரும் தண்ணீரில் முழுகி, பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தில் ஞானஸ் நானம் பெறவேண்டும்.

**b,** ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பாடுகள் அவருடைய மரணம் உயிர்ப்பு நினைவு கூறும்படி திருவிருந்து ஆசரிப்பு இருக்கவேண்டும்.

**7. சபையில் கர்த்தர் ஏற்படுத்தின வேலையாட்கள்**

“மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியில் அளவுக்குத்தக்க பூர்ணபுருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும் சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்” (எபே.4:11–13). இங்கு வசனம் தெளிவாக சொல்லும் காரியம் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர் மேய்ப்பர்கள், போதகர்கள், இந்த ஐந்துவிதமான ஊழியங்கள் அல்லாமல் மற்றுபல பெயர் களில் செய்துவரும் ஊழியமெல்லாம் சாத்தானால் உருவாக்கப்பட்டதாகும்.

**8. சபை பூமியில் செய்யவேண்டிய கடமைகள்**

**a,** சகல சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்கவேண்டும். (மத்.28:18–20; அப்.1:8).

**b,** கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவில் குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்றபிள்ளைகளாக இருக்கவேண்டும் (பிலி.2:15).

**c,** ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னுடைய சபையை சேர்க்க வரும்போது அவருடன் செல்ல எப்பொழுதும் ஆயத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும் (லூக்.21:34–36).

இவ்விதமாக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிற்கு தங்களை ஒப்புக் கொடுத்து அவருடைய வருகைக்கு காத்திருக்கும் அவருடைய சபையை அவர் வந்து சேர்த்துக்கொள்வார். இந்த சபையில் அங்கத்தினரல்லாத வர்கள் ஒருவர்கூட அவருடைய வருகையில் அவரோடுகூட போகமுடியாது. இரட்சிக்கப்படாதவர்களும், எதிர் கிறிஸ்துவின் மணவாட்டியாக தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருப்பவர்களும் கூட்டம் கூட்டமாக அங்கு அங்கு காணப்படுவதால் அந்தக் கூட்டங்களும் கிறிஸ்தவ சபைதான் என்று தப்பாக புரிந்து கொள்வதால் கிறிஸ்தவ சபையில் பிரிவினை உள்ளதுபோல காட்சி அளிக்கின்றன. மற்றப்படி கிறிஸ்தவ சபையில் எந்த பிரிவினையும் இல்லை என்பதை அறிந்துகொள்க.

கிறிஸ்தவ சபையில் எந்த பிரிவினையும் இல்லை என்பதையும் கிறிஸ்தவ சபையில் பிரிவினை உண்டாகமுடியாது ஏன் என்றால் அது கட்டி எழுப்புகிறவர் கர்த்தர் என்பதையும் சுருக்கமாக பார்த்துவிட்டோம்.

இஸ்லாமியர்கள் அநேகர் தங்கள் மதத்தில் எந்தவிதமான பிரிவினையும் இல்லை என்றும் நாங்கள் எல்லோரும் ஒன்றாக இருக்கிறோம். ஆதலால் கிறிஸ்தவ மார்க்கத்தைவிட்டு எங்களிடம் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று என்னிடம் சொன்னவர்களும் உண்டு. கிறிஸ்துவர்கள் அநேகரிடம் இப்படியாக சொல்லுகிறார்கள் என்று பல கிறிஸ்தவர்களும் என்னிடம் சொன்னதுண்டு. ஆதலால் இஸ்லாமியர்களுடைய உண்மையான நிலவரம் என்ன என்பதை கிறிஸ்தவர்கள் அறிந்துகொள்ளும்படி ஒரு சில காரியங்களை மட்டும் இங்கு எழுதுகிறேன். தினமும் பத்திரிகை படிக்கிறவர்களுக்குத் தெரியும். பாகிஸ்தானில் சூஃபிகள் தாலிபான்கள் மூலம் கொல்லப்படுகிறார்கள் என்றும், இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்து போனபோது பாகிஸ்தானுக்கு சென்ற முஸ்லீம்கள் இன்று வரைக்கும் அங்கு துன்பப்படுகிறார்கள். அங்குள்ள மற்ற முஸ்லீம்களுக்குள்ள தகுதிகள் இவர்களுக்கில்லை என்பதும் நாம் பார்க்கிறோம். இராக்கில் ஷியாப் பிரிவைச் சேர்ந்தவர்களை சன்னிப் பிரிவைச் சேர்ந்தவர்களை கொலை செய்கிறார்கள் என்றும் ஈரானில் சன்னிப் பிரிவைச் சேர்த்தவர்களை ஷியாப் பிரிவைச் சேர்ந்தவர்கள் கொலைசெய்கிறார்கள் என்றும், செய்தித்தாளில் செய்தி வருவது மட்டுமல்லாமல் T.Vயில் இருபிரிவை சேர்ந்தவர்களும் கண்டனம் செய்வதும் நாம் அனுதினமும் பார்க்கிறோம்.

இஸ்லாமியர்களுக்குள் இருக்கும் அவல நிலையை பார்த்து வேதனை அடைந்த சில இஸ்லாமிய அறிஞர்கள் எழுதியுள்ள புஸ்தகங்களிலிருந்து சிலது மட்டும் இங்கு எழுதுகிறேன்.



மசூத் ஆலம் ஃபலாஹி என்பவர் கொல்கத்தாவிலிருந்து வெளியாகும் “ஃபிரான்டியர்” என்னும் ஆங்கில வார இதழுக்களித்த நேர்காணலில் இஸ்லாமியத்தில் காணப்படும் சாதி– தீண்டாமையைக்குறித்து பேசியுள்ளார். அவர் பேசினவைகள் கீழ்காற்று வெளியீட்டகம் புத்தகமாக வெளியிட்டுள்ளது யார்வேண்டுமானாலும் வாங்கிபடிக்கலாம்.

இந்த நபர் இதைக்குறித்து ஆராய்ச்சி செய்வதற்கு காரணத்தை அவர் சொல்வதைப் பாருங்கள். ஹக்கிம் அப்துல் ரவூஃப் என்ற மூத்த ஜமாத் தலைவர். பிலாரி யாகன்ஜ்–இல் உள்ள தலித்துகள் வாழும் சேரிப்பகுதிக்கு வந்தார். நான் படித்துக்கொண்டிருந்த மதராசாவும் இந்த ஊரில்தான் இருந்தது. இஸ்லாம் சமத்துவத்தைப் போதிக்கும் மதம் என்றும் சாதி, தீண்டாமை ஆகிய இழிவுகளுக்கு ஒரே தீர்வு இஸ்லாம்தான் என்றும் தலித்துக்களிடம் அவர் கூறினார். தலித்துகள் இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொண்டு மதம் மாறுவார்களானால், முஸ்லிம்கள் அவர்களைக் கட்டித் தழுவி வரவேற்பார்கள் என்றும் அவர் கூறினார்.

அவ்வாறு அவர் பேசிக்கொண்டிருந்தபோது, ஒரு தலித் இளைஞர் எழுந்து நின்று, அவரை நோக்கி “இஸ்லாம் என்பது சமத்துவத்தைப் போதிக்கும் மதம் என்று எங்களுக்குத் தெரியும். ஆனால் உங்களுடைய முஸ்லீம் சமுதாயம் சாதிகள் மலிந்ததாகவே இருக்கிறது.....” இந்த சம்பவம்தான். இஸ்லாத்திலுள்ள ஜாதி தீண்டமையைக் குறித்து இவர் ஆராய்ச்சி செய்வதற்கு காரணம் என்று அவரே சொல்கிறார். இந்த சம்பவத்தில் சில உண்மைகள் விளங்குவதை கவனியுங்கள். இஸ்லாத்தில் எந்தவிதமான ஏற்றதாழ்வும் இல்லை. சாதி பிரிவினை இல்லை. நீங்கள் எங்கள் மதத்தில் சேர்ந்தால் உங்களை கட்டித்தழுவி சேர்த்துக்கொள்ளும். ஆதலால் அதற்காக இஸ்லாமித்தில் உங்களை சேர்த்துக்கொள்ளுங்கள் என்றழைக்கிறார். இவர்கள் உலகமெங்கும் பயன்படுத்தும் வித்தைகளில் இது முக்கியமான ஒன்று என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

....இந்த உலக மக்களில் பலரும், பிறப்பு அடிப்படையிலான சாதிய மேன்மையைத் நடைமுறையில் ஆதரித்து வாதிடுவோராக இருப்பதைக் கண்டேன்.

இதன்படி அரபுத் தோற்றுவாயிலிருந்து வந்த முஸ்லீம்கள் (சையத்துக்கள் ஷேக்குகள்) அரபுத் தோற்றுவாய் அல்லாதவர்களைவிட. அதாவது அஜாமி முஸ்லீம்களைவிட உயர்வானவர்கள். அரபு தோற்றுவாயிலிருந்து வந்தவர் என உரிமை பாராட்டும் ஒரு ஆண், அஜாமி முஸ்லீம் பெண்ணை மண முடிக்கலாம்.

ஆனால் அஜாமி முஸ்லீமாக உள்ள ஒரு ஆண், அரபு வழித்தோன்றலான ஒரு முஸ்லீம் பெண்ணை மணமுடிக்க முடியாது. இதுபோலவே பத்தான் முஸ்லீம் ஆனொருவன், ஜீலாஹா (அன்சாரி), மன்சூரி (துனியா) ராயின் (குன்ரோ), குறைஷி (காஸி) இனப்பெண்ணை மனமுடிக்கலாம். ஆனால், அன்சாரி, ராயின், மன்சூரி, குறைஷி ஆகிய இனக்குழுவைச் சேர்ந்த எந்தவொரு முஸ்லீம் ஆணும், பத்தான் முஸ்லீம் பெண்ணை மணமுடிக்க முடியாது. ஏனென்றால் இந்தச் சாதிகள் அனைத்தும் பத்தான்களுக்குக் கீழானவை... இந்தியாவில் உள்ள பல உலேமாக்கள் ஜாதிய அமைப்புக்குத் தவறாக இஸ்லாமியத் தன்மை வழங்குவதன்மூலம் அல்லது மதரீதியில் இசைவாணை வழங்குவதன்மூலம் சாதியத்தை நியாயப்படுத்த முயற்சிக்கின்றனர். இதை அறிந்தபோது நான் மிகுந்த அதிர்ச்சிக் குள்ளானேன். இந்து மதத்தில் இன்னமும் நீடித்துவரும் சாதிய நடை முறையிலிருந்து இது வேறுபட்டதல்ல...

... இந்த முஸ்லீம் மன்னர்களுக்கும் மேட்டுக்குடி ஆளும் கும்பலும் கீழ்ச் சாதியினர் அல்லது ரஸில் சாதியினர் என்று சொல்லப்படுபவர்களை அவர்கள் இந்துக்களானாலும், முஸ்லீம்களானாலும், கல்வி கற்க அனுமதித்ததில்லை; தங்களது அரசவைகளில் நுழையக்கூட அனுமதித்த தில்லை. இவை இந்து மற்றும் முஸ்லீம்களில் உயர்சாதியினருக்கு மட்டுமே என்று ஏகபோக உரிமை கொண்டாடினார்.

உலேமாக்களும் – பராணி, ஃபரிஷ்டா இவர்களை போன்றவர்களும் இஸ்லாமிய அரசுகள் என்று சொல்லப்பட்ட அரசவைகளில் இருந்த எண்ணற்ற அறிஞர்களும் 'கீழ்'சாதி அல்லது ரஸில் சாதி முஸ்லீம்கள் மீதான சாதிய ஒடுக்கு முறைக்கு மத ரீதியாக இசைவாணை வழங்கவே முயற்சித்தனர். ரஸில் (கீழ்) சாதியினர் என்றழைக்கப்பட்டவர்கள். அஷ்ரஃப் (மேல்) சாதியினர் அழைக்கப்பட்டவர்களுக்குச் சேவை செய்வதற்கென்றே இறைவனால் படைக்கப்பட்டவர்கள் என்றுகூட பராணி வாதிட்டுள்ளார். கீழ் சாதிகளைச் சேர்ந்தவர்கள் என்றழைக்கப்பட்டவர்களின் குழந்தைகள் தமது முன்னோர்களின் பரம்பரைத் தொழிலை மட்டுமே செய்யவேண்டும் என்று அவர் கூறினார். இதற்கு மாறாக, தமது குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்க எவராவது துணிந்து செயல்பட்டால், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.... சையத், ஷேக், மொகல், பத்தான், ஆகிய நான்கு சாதிகள் மட்டும்தான் மதத்துக்குச் சேவை செய்யவேண்டும் என்று இறைவன் படைத்தாராம். அஷ்ரஃப் சாதியைச் சேர்ந்த ஒருவர் ரஸில் சாதியைச் சேர்ந்த ஒரு ஆண்மகனை திருமணம் செய்தால் அது திருமணம்



என்று ஏற்றுக்கொள்ளப்படாது அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைதவறான முறையில் பிறந்ததாக கருதப்படுமாம். உயர்ந்த சாதியினருக்கு இறைவன் தீர்ப்பில் தனி கருணைக் காட்டுவாராம். பலவிதமான பிரச்சனைகள் உருவாக காரணம் கீழ்சாதியினர் கல்வி கற்றதுதான், காரணம் என்று ஒரு பிரிவினர்கள் சொல்கிறார்கள். மது அருந்துபவர்கள், கந்து வட்டிக்காரர்கள், மட்டுமின்றி, நாவிதர்கள், பிணம் கழுபவர்கள், சாய்த் தொழிலில் ஈடுபடுபவர்கள், தோல் பதனிடுபவர்கள், செருப்பு தைப்பவர்கள், வில் செய்பவர்கள், சலவைதொழிலாளிகள், இன்னும் இவ்விதமானவர்களுடன் உணவருந்தக்கூடாது முஸ்லீம் அறிஞர்கள் வலியுறித்தியதாகவும் சொல்லுகிறார்கள். மிக பெரிய அரசர்கள் என்று பெயர் புகழ்பெற்றவர்கள் அக்பர், ஔரங்கசீப், பகதூர்ஷா, முதலிய அரசர்களும் சாதி வேறுபாட்டில் தான் மக்களை கண்டார்கள். இஸ்லாமிய மன்னர்கள் கீழ்சாதியினர் என்று சொல்பவர்களை தங்களுடைய அரசவையில் அடியெடுத்து வைக்க அனுமதித்ததில்லையாம். பண்டைய காலத்தில் தான் அப்படியெல்லாம் இருந்தது என்றால் அப்படியில்லை இப்போதும் நிலைமை அதிலும் மோசமாக உள்ளது என்று சொல்லி அந்த கலந்துரையாடலை முடிக்கிறார். பார்க்க இஸ்லாத்தில் மனுவாதிகள், கீழ்காற்று வெளியீட்டகம், இந்தியாவில் மட்டுமல்லாமல் இந்தியாவிற்கு வெளியிலும் இந்த நிலைமைதான் என்பதும் இவர் ஒத்துக்கொள்கிறார்.

எங்களுக்குள் எந்த ஏற்றதாழ்வும் இல்லை சாதிபிரிவினையும் இல்லை என்று மார்த்தட்டிக்கொள்ளும் இஸ்லாமியர்கள் அரசாங்கத்திடம் எல்லோருக்கும் ஒரே ஜாதி சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டியதுதானே. இந்தியாவிலுள்ள எல்லோரும் தேவையில்லை. தமிழ் நாட்டிலுள்ளவர்கள் மட்டும் ஒரே ஜாதி சான்றிதழ் வாங்கட்டுமே. அதுவும் தேவையில்லை ஒரு மாவட்டத்திலுள்ளவர்களாவது எல்லா முஸ்லீம்களும் ஒரே ஜாதி சான்றிதழ் வாங்கி காட்டட்டுமே. **(FC. BC. OBC. SC. ST)** ஆகிய ஏதாவது ஒன்றில் சேர்ந்தவர்கள் நாங்கள் என்று நிருபிக்கட்டுமே.

இஸ்லாத்தில் பிரிவினைகளும் ஜாதி ஏற்றத் தாழ்வுகளும் இருக்கிறதே என்னும் கேள்விக்குரி ஜைனுல் ஆபிதீன் என்பவர் அவர் எழுதினதான குற்றச் சாட்டுகளும் பதில்களும், என்னும் நூலிலும், அர்த்தமுள்ள கேள்விகளும் அறிவுபூர்வமான பதில்கள் என்னும் நூலிலும் பதில் எழுதியுள்ளார். என்னவென்றால் பலபிரிவைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்து கொள்கிறார்கள் என்றும் எல்லோரும் ஒரே பள்ளிவாசலில் தொழுதுக் கொள்கிறார்கள் என்றும் அது எவ்வளவு பெரிய பொய் என்பதை

இஸ்லாத்தில் மனுவாதிகள் என்னும் நூல் படிக்கும்போது தெரிந்துவிடும். இன்னும் எத்தனையோ பேர் எழுதியுள்ளதை எடுத்துக் காட்டமுடியும். அவைகளெல்லாம் பார்க்கப்போனால் அதற்காக மட்டும் ஒரு புஸ்தகத்தை எழுத நேரிடும். ஆதலால் இன்னும் இரண்டு புஸ்தகங்கள் மட்டும் பார்ப்போம்.

இஸ்லாத்தில் அநேக மத்ஹப்கள் உண்டு. இதில் முக்கியமானவைகள் மாலிக், ஹனஃபி, ஷஃபிஈ, ஹன்பலி, இன்றைக்கு உலகமெங்கும் வாழும் இஸ்லாமியர்களில் 99.99% முஸ்லீம்களும் ஏதாவது ஒரு மத்ஹபை பின்பற்றுகிறவர்கள்தான். நான் இதை எழுதுவதால் ஒரு குர்ஆன் படிக்கும் இஸ்லாமியர்களிடம் அநேக மத்ஹப்கள் வரக்கூடாது என்று சொல்லுவ தில்லை. ஏன் என்றால் ஒரு குர்ஆன் (குர்ஆன் ஒன்றல்ல பல உண்டு என்பது ஊரறிந்த உண்மை) படித்தாலும் அதைப்புரிந்துகொள்வதில் மாற்றங்கள் இருக்கக்கூடும். அது இயல்பான காரியம்தான். ஆனால் இவ்வளவு பிரிவினைகளும், விரோதங்களும் ஒருவரை ஒருவர் காஃபீர் என்றழைத்துக் கொள்ளும் நிலைமையும் இருந்தாலும் எங்களுக்குள்ளே எந்த பிரிவினையும் இல்லை நாங்கள் எல்லாம் ஒன்றாக இருக்கிறோம் என்றும் கொஞ்சம்கூட சளிக்காமல் மேடைகளில் பேசுவதும், புஸ்தகங்களில் எழுதுவதும் எப்படி என்றுத் தெரியவில்லை.

"ஷாஃபி மத்ஹபைச் சார்ந்த ஒரு பெண்ணை ஹனாஃபி மத்ஹபைச் சேர்ந்தவர் திருமணம் செய்யக்கூடாது காரணம், ஹனாஃபிக்ளின் பார்வையில் ஷாஃபி மத்ஹபைச் சேர்ந்தவர் காஃபிர் ஆவான்."

"மக்காவில் உள்ள கஅஃபாவில் ஒவ்வொரு மத்ஹபிற்கும் ஒரு மிஹ்ராப்" என நான்குமிஹ்ராபுகள் ஏற்படுத்தப்பட்டன ஒரே பள்ளிவாசலில் ஒரு நேரத் தொழுகை நான்கு ஜமா அத்களாக நடைபெற்றது. ஒரு மத்ஹபுடைய ஜமாஅத் முடியும் வரை மற்ற மத் ஹபைச் சாந்தவர்கள் காத்திருந்தார்கள்." பார்க்க மத்ஹபை பின்பற்றுவது அவசியமா? ஹிரா பப்ளிகேஷன்ஸ்.

இரண்டு மத்ஹபை சார்ந்தவர்கள் தொழுவதைக் கவனித்தால் இருபிரிவைச் சேர்ந்தவர்களும் செய்கிற காரியங்கள் வெவ்வேறாக இருக்கும் என்று ஒத்துக்கொள்கிறார் முஹம்மத் சுல்தான் அல்மாசூமி. பார்க்க பக்கம் 97,98.

இவர்கள் ஒருவரை ஒருவர் காஃபீர் என்று சொல்லி நரகவாசிகள் என்று சொல்லி பிரிந்திருப்பது மட்டுமல்லாமல் யாராவது ஒருவர் ஏதாகிலும் தப்புசெய்தால் அதற்குரிய சிட்சை என்ன என்கிற விஷயத்திலும் அநேக முரண்பாடுகள் பார்க்கமுடியும். ஒருவர், வற்புறுத்தி தலாக் வாங்கலாம் என்று



ஒருவர் அப்படி செய்யக்கூடாது என்றும் வாதிடுகிறார்கள். தொழுகை செய்யும் நேரம், நோம்பு நோக்குவது எல்லா விஷயங்களிலும் ஒவ்வொரு மத்ஹபும் முரண்பட்ட கருத்துக்கள் சொல்லுவதை நாம் பார்க்கமுடியும். உளுசெய்யும் தொட்டியுடைய அளவில் கூட வெவ்வேறு கருத்துக்களுண்டு பெண்கள் பள்ளிவாசலுக்கு வரலாம் என்கிறார்கள் வரக்கூடாது என்பார்கள்.

அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறினார்கள். யூதர்கள் எழுபத்து ஒரு பிரிவினராகவும், கிறிஸ்தவர்கள் எழுபத்து இரண்டு பிரிவினராகவும் பிரிந்தனர். எனது சமுதாயம் எழுபத்து மூன்று பிரிவுகளாகப் பிரியும்.

அறிவிப்பவர் அபூஹீனரரா, நூல் அபூதாவூத் எழுபத்தி மூன்று பிரிவுகளாக பிரிந்து விடுவார்கள் என்று முஹம்மத் அவர்கள் சொல்லி யிருக்கிறார். ஆனால் எதினால் என்று தெரியவில்லை. அதிலும் அதிகமான பிரிவுகளாக இஸ்லாம் காட்சியளித்து அதற்குள்ளும் அநேக உட் பிரிவுகளையும் பார்க்கமுடியும்.

பெரும்பாலானோர் மரித்தவர்கள் அடக்கம் பண்ணப்பட்டு கப்றுங்கல் போயி பிராத்தனைச் செய்கிறார்கள். அவர்களிடம் பிரார்த்தனை செய்வதும் மட்டுமல்லாமல் அவர்களுக்காக பலியிடுவதும், விழாக்கொண்டாடுவதும், சந்தனக்கூடு எடுப்பதும் அங்கு சுஜீத் செய்வதும் இன்னும் நிறைய காரியங்கள் செய்கிறார்கள். சிலர் இது கூடாது என்று சொல்பவர்களும் உண்டு. ஆனால் நபிமுஹம்மத் அவர்களுடைய கபரில் பிரார்த்தனை செய்த ஒரு ஏழை மனிதனுக்கு பதில் கிடைத்தது என்று இப்னு கஸீர் என்னும் இமாம் கூறியிருக்கிறார்.

ஒரே விதமான வாதம் செய்யும் இரண்டு அணிகள் அவர்களுக்கிடையில் சண்டையிட்டுக் கொண்டால்தான் மறுமை நாள் வரும் என்று முகம்மத் அளித்தச் செய்தியும் நாம் பார்க்கமுடியும்.

கடைசி காலத்தில் வெளிப்படும் மஹதி அவர் வந்து மறைந்து 1000த்திலதிகம் வருடங்களாயிற்று என்று ஒரு பிரிவினரும், அவர் இன்னும் வரவில்லை என்று ஒரு பிரிவினரும், மஹ்தி ஆயிற்று அவர் மரணமடைந்தார் என்று வேறொரு பிரிவும் இப்படியாக எதற்கெடுத்தாலும் ஒவ்வொரு விஷயத்திலும் பிரிந்திருப்பதை பார்க்கமுடியும்.

ஜஹ்மிய்யாகள் என்னும் பிரிவைச் சேர்ந்தவர்கள் குர்ஆன் படைக்கப் பட்டது என்று வாதிடுவதும் அதற்கான ஆதாரங்கள் முன் வைக்கின்றதும் பார்க்கிறோம்.

குர்ஆனும் ஹதீஸும் அநேக இடங்கள் முரண்படுவதால் ஹதீஸ் எதுவும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லும்போது, முரண்படுகின்ற ஹதீஸ்கள் மட்டும் தள்ளினால் போதும் என்று இன்னொரு பிரிவினர் ஆறு புஸ்தகங்கள் மட்டும் ஏற்றுக்கொள்வோம். அவைகளில் ஒத்துவராத்த ஹதீஸுகள் எல்லாம் அறிவிப்பாளர் சரியில்லை அல்லது காலாவதியாகி விட்டது என்று சொல்லி ஒதுக்கிவிடலாம் என்று ஒரு பிரிவினர். ஹதீஸுகள் ஏற்றுக்கொண்டால் குர் ஆனுக்கு முரண்படும் ஹதீஸுகளுக்கு பதில் சொல்லவேண்டும். ஹதீஸ்களை புறக்கணித்தால் அது நபி மொழிகள் என்பதால் குர் ஆன் எப்படி நம்ப முடியும் என்னும் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும். ஆதலால் இவ்விதமான பிரிவினை ஹதீஸ் ஏற்றுக் கொள்வதிலும் புறக்கணிப்பதிலும் காணப்படுகிறது.

கப்றுங்கல் வேதனையுண்டு என்று சிலரும் கப்றுங்கல் விசாரணையோ வேதனையோ கிடையாது என்று சிலரும், பாவங்கள் மன்னிக்கப்படுவதில் உள்ள கருத்து வேறுபாடுகளும் உண்டு.

முஹம்மத் அவர்களுக்குப் பிறகு அலி அடுத்த கலிஃபாவாக வரவேண்டும் என்று அல்லாஹ் ஆயத்து இறக்கியிருந்தாராம். ஆனால் அந்த விஷயங்கள் எழுதியிருந்த அத்தியாயங்களான அல்லீவாயா, அந்நூரைன், என்னும் இரண்டு அத்தியாயங்கள் அழிக்கப்பட்டது என்று ஒரு பிரிவினர் சொல்லுகிறார்கள். அலி ஆட்சி வரக்கூடாது என்று சிலர் திட்டம் தீட்டியதாக சந்தேகப்படுவதற்கு வாய்ப்புண்டு ஏன் என்றால் அலீ ஆட்சியில் வந்தபோது முஆலியா என்பவர் அலீ அவர்களுக்கு அதை ஏற்றுக்கொள்ளாமல் இருந்ததினால் தான் அப்போதைய பிரிவினைக்கு காரணம் என்று வரலாற்றாசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

இன்றுள்ள குர்ஆன் சரியானதல்ல குர் ஆனில் 17,000 வசனங்கள் உண்டு. அதுதான் அல்லாஹ் இறக்கிக்கொடுத்த குர்ஆன் என்று வாதிடுவோரும் உண்டு. இன்னும் கொடுமை என்னவென்றால் தவாஃப் (கஅஃபா சுற்றுதல்) செய்யும்போது ஒரு பிரிவினருக்கு முன்னால் வேறொரு பிரிவானவர் பட்டுவிட்டால் உளு செய்யவேண்டுமாம். உளு செய்வது என்பது தொழுகைக்காகவும் இவ்விதமான சடங்களுக்காகவும் தங்களை சுத்தம் செய்வதுதான் அப்படியானால் இதிலிருந்து என்னபுரிவது வேறு பிரிவைச் சேர்ந்தவரை பார்த்தால் அசுத்தமாயிவிடுமாம். இது பண்டைய காலத்தில் இந்தியாவில் இருந்த சாதி கொடுமை போலிருக்கிறதல்லவா. அந்த காலத்தில் பிராமினர்கள் சாலையில் வரும்போது கீழ்ஜாதியினர் என்று



அவர்களால் குறிக்கப்பட்டவர்கள் சாலையிலிருந்து ஓடி மறைந்து கொள்ள வேண்டுமாம்.

ஒருசிலர் அல்லாஹ் இஸ்லாமியரிலிருந்து பின்னர் உருவானவர் என்று ஒத்துக்கொள்கிறார்கள். அதைக் கற்றுக்கொடுக்கிறார்கள். ஒரு பிரிவினர் அல்லாஹ்வை விசுவாசித்தால் மட்டும் போதும் எந்த அமலும் (செயலும்) தேவையில்லை என்று சொல்கிறார்கள். ஒரு பிரிவினர் கத்ரை (விதியை) நம்புவதில்லையென்றால் இன்னொரு பிரிவினர் எல்லாம் அல்லாஹ் முன் விதித்துவிட்டார். அதனால் மனிதன் எதையும் செய்ய தேவையில்லை என்கிறார்கள். ஆனால் சிலர் அல்லாஹ் விதித்திருந்தாலும் நாம் செயல்பட வேண்டும் என்பார்கள்.

அல்லாஹ் எல்லா இடத்திலும் இருக்கிறான் என்று ஒரு பிரிவினர் சொல்லும்போது அப்படியில்லை அல்லாஹ் அர்ஷின்மீது அமர்ந்திருக்கிறார் என்று இன்னொரு பிரிவினர், அல்லாஹ் மனிதனுக்கு இருப்பதுபோல் அன்பு, இரக்கம் முதலிய பண்புகள் இருக்கிறது என்று ஒரு பிரிவினர் என்றால் அப்படியில்லை அல்லாஹ்விற்கும் எந்த விதமான பண்புகளும் இல்லை என்று இன்னொரு பிரிவினர் சொல்கிறார்கள். அல்லாஹ்வை இங்குமட்டுமல்ல மறுமையிலும் எவரும் பார்க்கமுடியாது என்று ஒரு சிலர் சொல்லும்போது வேறுசிலர் பார்க்கலாம் என்கிறார்கள். பலஜாதிகளும் பலமத்ஹபுகளும், பல தரீக்காகளும், பல அகீதாக்களுமாக எண்ணிமுடியாத பேதங்கள் இஸ்லாத்தில் இருந்தாலும் எங்களுக்குள் எந்த பிரிவினையும் கிடையாது நாங்கள் எல்லாம் ஒன்றாக இருக்கிறோம் என்று அறியாத ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். சன்னி பிரிவைச் சேர்ந்த ஒரு அறிஞரிடம் இதைக்குறித்து கேட்டபோது நாங்கள் மட்டும்தான் முஸ்லீம்கள் மற்றவர்களெல்லாம் முஸ்லீம்கள் கிடையாது என்கிறார். அதுவுமல்லாமல் கிறிஸ்தவர்களுக் குள்ளும் அநேக பிரிவுகள் இருக்கின்றதே என்றும் கேட்கிறார். கிறிஸ்தவர்கள் என்று சொல்லும்போது இந்த மதத்திற்கும் கிறிஸ்தவ சபைக்கும் இருக்கும் வித்தியாசம் என்ன என்பதை முன்னே எழுதியுள்ளேன். இங்கு நாம் பார்க்கும் பலபிரிவுகளல்ல கிறிஸ்தவ சபை அது ஒன்று மட்டும்தான் உண்டு என்பதை வசன விளக்கங்களோடுகூட எழுதியுள்ளேன்.

ஆனால் ஒருவன் முஸ்லீமாகும்போது அவனுக்குள் மறுபடியும் பிறந்த அனுபவமோ அல்லது முஸ்லீமாவதற்கு வெளியில் செய்யப்படும் கலீமா சொல்லுகின்ற கிரியையும் தொடர்ந்து சரீரத்தில் செய்கின்ற கிரியைகளும் தான் உண்டு. ஒரு முஸ்லீமிக்கு பிறக்கின்ற ஒருவன் முஸ்லீமாவான் என்று

நபி அவர்கள் சொல்லியிருக்கிறார். தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் இயற்கையின் மார்க்கத்தில்தான் பிறக்கிறான். அவனுடைய பெற்றோர்கள்தான் பின்னர் அவனை யூதனாகவோ கிறிஸ்தவனாகவோ அக்கினி ஆராதனையாளனாகவோ ஆக்கிவிடு கின்றனர். அவர்கள் இருவரும் முஸ்லீமுகளாயிருந்தால் அவனும் முஸ்லீ மாகிவிடுகிறான். தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு குழந்தையின் விலாபுறத்திலும் ஷைத்தான் குத்துகிறான்; மரியமையும் அவருடைய புதல்வர்(ஈசா) அவர்களையும் தவிர.

அறிவிப்பவர், அபுஹீரா, நூல் முஸ்லீம்

இங்கு நாம் கவனிக்க வேண்டிய விஷயம் மற்ற மதத்தினர் அவர்களுடையப் பெற்றோர்கள் அவர்களை அந்த மதத்தினர்களாக மாற்றும்போது முஸ்லீமுகளுக்கு பிறந்தவர்கள் பிறப்பிலே முஸ்லீமுகளாகிவிடுகிறார்கள். இது என்னுடைய கருத்தில்லை முகம்மது நபி அவர்கள் சொன்னதுதான் நாம் பார்த்தோம். அதுவுமல்லாமல் கலீமா சொன்னால் ஒருவன் முஸ்லீமாகி விடுகிறான் என்பதற்கு அநேக குரான் வசனங்களும், ஹதீஸுகளும் பார்க்கமுடியும். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகையால் அவைகளெல்லாம் எடுத்து எழுதுவதில்லை.

‘‘ஒருவன் ஆவியினாலும் ஜலத்தினாலும் பிறவாவிட்டால் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று’’ ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தெளிவாக சொல்லியிருக்கிறார். அதனால்தான் 2 கொரி.5:17ல் இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியா யிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின, கலா.6:15 கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்த சேதனமும் ஒன்றுமில்லை. விருத்த சேதனமில்லாமையும் ஒன்றுமில்லை. புது சிருஷ்டியே காரியம்.

யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை. அடிமையென்றும் சுயாதீனன் என்றுமில்லை, ஆணொன்றும் பெண்ணென்றும் இல்லை. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் (கலா.3:28).

தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே. அதிலே கிரேக்கனென்றும், யூதனென்றுமில்லை, விருத்த சேதனமுள்ளவனென்றும் விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீன னென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமாயிருக்கிறார், (கொலோ. 3:10,11) இன்னும் எவ்வளவோ வசனங்களை காட்டமுடியும். ஆகிலும் இங்கு



முடிக்கிறேன் கிறிஸ்தவ சபை ஒன்று மட்டும்தான் உண்டு. ஆனால் கிறிஸ்தவ மதம் ஒன்று உண்டு. இதுவல்லாமல் உள்ளூர் சபைகள் பல பெயர்களில் அறியப்படுவது. கர்த்தர் சபையில் சேர்க்காதவர்களையும் உள்ளூர் சபைகளில் அந்த சபை நடத்துகிறவர்களால் சேர்க்கமுடியும். அப்படிப்பட்டவர்கள் இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கமாக இருக்காது. அவர்களுடைய பெயர் ஜீவபுஸ்தகத்திலும் இருக்காது அவர்கள் பரலோகம் போகவும் முடியாது. இது வேதம் சொல்லும் உண்மையாகும்.

இஸ்லாத்தில் உள்ள பிரிவுகளை குறித்து மேலும் அறிந்து கொள்ள *இஸ்லாத்தின் பெயரால் தோன்றின பிரிவுகள்.* சாஜிதா புக்ஸ் சென்டர், சென்னை, பார்க்க.

**கேள்வி –25**

## ஒருவாதத்திற்காக இயேசுதான் மெய்யான தெய்வம் என்றும் இரட்சகர் என்றும் ஏற்றுக்கொண்டாலும் அவர் இஸ்ர வேலருக்காக மட்டும் வந்தவர் என்று அவர் சொல்லியிருக்கி றாரே. ஆதலால் அவரை மற்றவர்கள் ஏன் நம்ப வேண்டும்?

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, நான் காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் ஜனங்களிடத்திற்குத்தான் வந்தேன் என்று சொன்னதும், கானானிய ஸ்திரீயைப் பார்த்துப் பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்களுக்குக் கொடுப்பது நல்லதல்ல என்று அவர் சொன்னதும் உண்மைதான். அவர் ஏன் அப்படிச் சொன்னார் என்பதை வேதத்திலிருந்து அறிந்துகொள்ளவேண்டும். அதை நாம் பார்ப்போம்.

ஒரே மெய்யான தேவன் மனிதனுக்குத் தன்னை வெளிப்படுத்தி மனிதனோடு நல்ல உறவில் இருந்தார் என்பதை ஆதியாகம புஸ்தகத்தில் முதல் மூன்று அதிகாரத்தில் பார்க்கமுடியும். ஆனால் முதல் மனிதனாகிய ஆதாமும், அவர் மனைவி ஏவாளும் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்து தேவனைவிட்டு அகன்று போனதையும் நாம் அங்கு பார்க்கமுடியும்.

ஆனால் பிறகுவரும் அதிகாரம் பார்த்தால் மனிதனோடு எப்பொழுதும் உறவு வைத்திருந்த கர்த்தர். மனிதனுக்குச் சில நேரங்களில் மட்டும் தரிசனமாகி அவர்களிடம் பேசினதை நாம் பார்க்கமுடியும். இந்த காலத்தில் யார் யார் உண்மையாக கடவுளைத் தேடினார்களோ அவர்களிடம் ஆண்டவர் தரிசனமாகி பேசுவதைப் பார்க்கலாம். இப்படியாக கர்த்தரைத் தேடின உண்மையுள்ள மனிதர்களிடம் தன்னுடைய காரியங்களைப் பேசி,

பகிர்ந்துவந்தார். காலம் செல்ல செல்ல உண்மையாய் அவரை தேடுகிறவர்களும், குறைந்து போயிற்று, எல்லோரும் தங்களுக்கு என்று தெய்வங்களை உருவாக்கி வணங்கிக்கொண்டு வந்தார்கள். இப்படி ஒரு சூழ்நிலையில் எல்லோருக்கும் பாடம் கர்ப்பிக்கும்படியாகவும், தமக்கென்று பிரித்தெடுக்கப் பட்ட ஒரு ஜனம் வேண்டும் என்பதற்காக கர்த்தர் ஆபிரகாமை தெரிந் தெடுத்தார்.

இங்கு ஒரு காரியம் நாம் புரிந்துகொள்ள வேண்டும் அது என்ன வென்றால், ஆபிரகாம் நல்லவனாக இருந்ததால் அவனை தெரிந்தெடுக்க வில்லை ஏன் என்றால் அவனும் விக்கிரகஆராதனை செய்துகொண்டிருந்த வன்தான். கர்த்தர் அவனை தேர்ந்தெடுக்கும்போது அவனுக்கு இருந்த ஒரே ஒரு தகுதி என்னவென்றால், ஒரு குழந்தைக்கு தகப்பனாகக்கூடிய எந்த சாத்தியக்கூறும் இல்லை என்பது மட்டும்தான். ஆண்டவர் ஏன் அப்படி செய்தார் என்று கேட்டால் அதற்குக் காரணம் உண்டு.

முழு உலகமக்களும் மெய்யான தேவனை விட்டுவிலகி மனிதர்களுடைய கைவேலைகளையும், தேவன் சிருஷ்டித்த சிருஷ்டிகளையும் தெய்வம் என்று ஒவ்வொருவரும் பலதெய்வங்களை வணங்கி வந்தார்கள். இப்படி ஒரு சூழ்நிலையில் மெய்யான தேவன் யார்? என்பதை இந்த உலகமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காக தமக்காக ஒரு ஜனத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக ஆபிரகாமை தெரிந்தெடுத்தார். இப்படி ஆபிரகாமை தமக்கென்று பிரித்தெடுத்த அந்த நொடிப்பொழுதிலிருந்து உலகமக்கள் இரண்டாக பிரிக்கப்பட்டு ஆயிற்று.

அந்நிய தெய்வங்களை வணங்குகிறவர்களுக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் மெய்யான தேவன் யார் என்பதை விளங்கச்செய்யும்படி இஸ்ரவேல் மக்களிடம் கர்த்தர் கிரியைசெய்ய ஆரம்பித்தார்.

கர்த்தர் ஆபிராகாமின் தலைமுறைக்கு சொந்தமாக ஒரு தேசத்தை கொடுத்தார். ஆனால் தமக்கென்று தெரிந்தெடுத்த ஜனத்திற்காக யாரையாவது துரத்திவிடுவது நீதிமானாகிய தேவனுக்கு ஏற்றதாக இருக்காது. ஆதலால் முதலாவது ஆபிரகாமை மொசாபட்டோ மியாவிலிருந்து கானான் தேசத்துக்குக் கொண்டுவந்து அங்கு அந்நிய தெய்வங்களை வணங்கி வந்த கானானியர்களுக்கு, மெய்யான தேவன் யார் என்பதை அறிந்துகொள்ளும்படி செய்தார். மெய்யான தேவனை எப்படி ஆராதிக்க வேண்டும். தேவனுடைய திட்டங்கள் என்ன என்பதையெல்லாம் கானானியர் களுக்கு அறிவித்தார். அன்னிய தெய்வங்களை விட்டுவிலகி மெய்யான



தெய்வத்தை பின்பற்றும்படி ஒரு சந்தர்ப்பம் கொடுத்தார்.

அடுத்ததாக கானான் நாட்டில் ஒரு பஞ்சம் வரவைத்து ஆபிரகாமை எகிப்துக்கு கொண்டு சென்றார். அங்கு ஆபிரகாமின்மூலம் மனைவியும் மெய்யான தேவன் யார் என்பதை பார்வோனுக்கும் அவன் ஜனத்திற்கும் விளங்கச் செய்தார். இதே ஆபிரகாமை மறுபடியும் கானான் தேசத்துக்கு கொண்டுவந்தார். இந்த நாட்களிலெல்லாம் அங்கு விக்கிரக ஆராதனை செய்திருந்த கானானியரை துரத்திவிடவில்லை.

நீதிமானாகிய கர்த்தர் தமக்கென்று தெரிந்தெடுத்த தன்னுடைய சொந்த ஜனத்தை ஏறக்குறைய 430, வருடங்கள் எகிப்தில் அடிமைகளாக வைத்தார். தேவன் நீதி செய்வதில் எவ்வளவு பெரியவர் என்பதைப் பாருங்கள்.

கானானியர்களுக்கு மனந்திரும்புவதற்கு 430 வருடங்கள் கொடுக்கப் பட்டது. ஆனால் ஆபிரகாம் மூலமாக அறிவிக்கப்பட்ட சத்திய தெய்வத்தைப் பின்பற்றுவதற்கு பதில் அந்த ஜனம் தங்களுடைய சிலைவணக்கம் தொடர்ந்தார்கள். அவர்களுடைய பாவ உச்சக்கட்டம் அடைந்தபோது கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து விடுவித்து வந்தார். முன்னமே ஆபிரகாம் மூலம் மெய்யான தேவன் யார் என்பதை விளங்கச் செய்தவர் இப்போது மோசேமூலம் எகிப்தியர் வணங்கி வந்த அத்தனை தெய்வங்களையும் நியாயம் விதித்து அவைகள் ஒன்றும் கடவுள் இல்லை என்பதை அங்கு வந்த 10 வாதைகள் மூலம் பார்வோனுக்கும், அவனுடைய ஜனத்திற்கும் வெளிப்படுத்தினார். ஆனால் அவர்கள் எவரும் மெய்யான தேவனை ஏற்றுக்கொள்ளவில்லை. கர்த்தருடைய ஜனங்களை பின் தொடர்ந்து செங்கடலில் மாண்டுபோனார்கள். இந்த காலத்திலும் இவ்விதமாக அநேகர் அழிந்துபோகிறார்கள்.

தாம் தெரிந்தெடுத்த ஜனங்கள் தாங்கள் எவ்வளவு பலவீனமானவர்கள் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளும்படி 40 வருடங்கள் அவர்களை வனாந்தரத்தில் வழிநடத்தி கானான் தேசத்தில் கொண்டுவந்தார். கானானிலே ஜனங்கள் இன்னும் அன்னியதெய்வ ஆராதனை செய்து வந்ததால் அந்த ஜனங்களை அங்கிருந்து துரத்திவிட கர்த்தர் இஸ்ரவேலருக்கு உதவிசெய்தார். ஏன் அப்படி செய்தார் என்று கேட்டால் அதனுடைய காரணம் இஸ்ரவேலர்கள் வணங்கும் தெய்வம்தான் மெய்யானதேவன் என்பதை அவர்கள் அறியும்படி அப்படி செய்தார். ஆனால் கனானியர் அப்பொழுதும் மெய்யான தேவனை புறக்கணித்தார்கள்.

அதுமட்டுமல்லாமல் கர்த்தர் தமக்கென்று தெரிந்தெடுத்த ஜனமும் ஒரு கட்டத்தில் புறஜாதிகளோடு கலந்து அவர்களுடைய செய்கைகளைக் கற்றுக்கொண்டு அந்நிய தேவர்களை வணங்க ஆரம்பித்தார்கள்.

இவ்விதமாக இஸ்ரவேலர்கள் கர்த்தரை புறக்கணித்தபோதெல்லாம் கர்த்தர் அவர்களை புறஜாதிகளிடம் ஒப்புக்கொடுத்தார். அங்கு அவர்கள் மனம் திரும்பி கர்த்தரை நோக்கி பார்க்கும்போதெல்லாம். கர்த்தர் அவர்களுக்கு உதவிசெய்தார். அவர்களை விடுதலையாக்கினார். இங்கெல்லாம் கர்த்தர் எவ்வளவு நீதிமானாக செயல்படுகிறார் என்பதை கவனிக்கவேண்டும். கர்த்தர் ஒருபோதும் அநீதியான காரியம் செய்வதில்லை.

தங்களுடைய பாவங்கள் மூலமாக ரோமருக்கு சிறைப்பட்டுப்போன இஸ்ரவேலரிடத்தில் இயேசுகிறிஸ்து வந்தார். இதில் எந்த சந்தேகமும் இல்லை. இப்பொழுது அவர் வந்தது மனுகுலத்தின் பாவத்திற்குப் பரிகாரம் செய்வதற்காகத்தான். இப்பொழுது அவருடைய ஊழியம் பாலஸ்தீன் நாட்டில் மட்டும்தான். ஆதலால் நான் இஸ்ரவேலரிடத்திற்கே அல்லாமல் வரவில்லை என்றுச் சொன்னார். ஏன் என்றால் இப்பொழுது மனுகுலத்தின் பாவத்திற்கு பரிகாரமாக தன் ஜீவனைக்கொடுக்கத்தான் அவர் வந்தார். ஆனால் தன் ஜீவன் பலியாக கொடுக்கும் காரியம் சொல்லும்போது, மாற்.10:45ல் ‘‘அப்படியே மனுஷகுமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்’’ மீண்டும் யோவா.3:17ல் அவர் சொல்லும்போது ‘‘உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரே அனுப்பினார்.’’ இதிலிருந்து என்ன விளங்குவது என்றால் சரீரப்பிரகாரமான உதவிகள் இப்பொழுது இஸ்ரவேலருக்குச் செய்கிறேன். ஆனால் ஆத்தும மீட்பிற்கான பாவபரிகாரபலி என்பது இஸ்ரவேலருக்கு மட்டுமல்லாமல் முழு உலகத்திற்காகவும் உள்ளது. மனிதனாக அவர் பூமியில் பிறந்தார், வாழ்ந்தார். அந்த நாட்களில் உலகமெங்கும்போவது என்னுடைய நோக்கமல்ல என்றுதான் அவர் சொன்னார். மத்.20:28லும் நாம் இதைப் பார்க்கலாம். இதுவுமல்லாமல் இயேசுகிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தினால் கிடைக்கும் இரட்சிப்பு முழு உலகத்திற்கும், எல்லா ஜாதிகளுக்கும் உள்ளதுதான் என்று அவர் ஆரம்பகாலத்திலே சொல்லியிருந்தது மத்.24:14ல் பார்க்கலாம். ‘‘இராஜ்ஜியத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்முகுள்ள சகல ஜாதிகளுக்கும் சாஷியமாக பிரசங்கிக்கப்படும் அப்போது முடிவுவரும்,’’



என்றுள்ளது. மட்டுமல்லாமல், மத்.26:13ல் ‘‘இந்த சுவிசேஷம் உலகில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கெல்லாம்.....’’ என்று சொல்வதால் இயேசுகிறிஸ்துவின் சரீரபிரகாரமான ஊழியம் பாலஸ்தீனம் நாட்டில் மட்டும்தான் என்று சொன்னார். ஆனால் அவர்மூலம் மனுகுலத்திற்குக் கிடைக்கும் இரட்சிப்பு என்பது முழு உலகத்திற்கு உள்ளதென்பது தெளிவாகிறது. இயேசுவே இந்த காரியம் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார். இதுவும்மல்லாமல் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து சீஷர்களுக்கு கட்டளைக்கொடுக்கும்போது என்னசொல்வது என்று பாருங்கள். ‘‘ஆகையால் நீங்கள் புறப்பட்டு சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்’’ (மத். 28:19). ‘‘நீங்கள் உலகமெங்கும்போயி சகல சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷம் பிரசங்கியுங்கள்....’’ (மாற்.16:15)லும் ‘‘அன்றியும் மனம் திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது என்றும்’’ அப்.1:8ல் பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பலனடைந்து எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்’’.... என்றும் இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவை உலகிற்கு அறிமுகப்படுத்தின யோவான் ஸ்நானன் சொல்லும்போது ‘‘இதோ உலகத்தின் பாவங்கள் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக் குட்டி என்று ’’ யோவா.1:29ல் பார்க்கலாம். முழுமனுகுலத்திற்கும் பாவ பரிகாரமாக தன் உயிர்கொடுத்து மரித்து உயிர்த்தபிறகு இயேசுவின் மரணம் மூலம் கிடைக்கும் இரட்சிப்பு இஸ்ரவேலருக்கு மட்டுமல்லாமல் முழு உலகிற்கும் உள்ளதுதான் என்று யோவா.12:32லிருந்து அறியலாம். ‘‘நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன்’’ என்று இயேசுவே சொல்லியிருக்கிறார்.

இதுவும்மல்லாமல் இயேசுவிடம் கற்றுக்கொண்ட சீஷர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப்பார்ப்போம்.

(1 யோவா.2:2) ‘‘நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே, நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.’’ இது அப்போஸ்தல னாகிய யோவானின் கருத்து, பேதுரு சொல்வதைப் பார்ப்போம். அப்.2:39 வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது.............எபி.9:28ல் ‘‘கிறிஸ்துவும் அநேகருடைய

பாவங்களை சுமந்துதீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு... என்றுள்ளது.'' பவுல் சொல்வதைப் பார்ப்போம் (ரோம.1:16). கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்புண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது.''

தேவ தூதர்கள் சொன்ன செய்தியைப் பாருங்கள் (லூக்.2:10–11) தேவ தூதன் அவர்களை நோக்கி, பயப்படாதிருங்கள். இதோ எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலேப் பிறந்திருக்கிறார். இதுவுமல்லாமல் இன்னும் சிலர் சொல்வதைப் பார்ப்போம். லூக்.2:29–32 வரையில் நாம் பார்க்கும்போது 30ஆம், வசனத்தில் புறஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும் என்றுள்ளதை கவனியுங்கள். 31 ஆம் வசனத்தில் தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியம் என்றுள்ளது.

ஆதலால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துமூலம் கிடைக்கும் இரட்சிப்பு என்பது இஸ்ரவேலருக்கு மட்டுமல்லாமல் முழு உலகத்திற்கு உள்ளதாகும். இயேசுகிறிஸ்து மனிதனாக உலகில் வாழ்ந்த அந்த நாட்களில் அவர் இஸ்ரவேலர்களிடம் மட்டும் ஊழியம் செய்தாலும், அவருடைய மரணம்மூலம் அதுவரைக்கும் சத்துருக்களாக இருந்த இஸ்ரவேலரையும் புறஜாதிகளையும் ஒன்றாக்கினார் என்று தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளதை நாம் எபே.2:13–19 வரைக்கும் பார்க்கலாம். முன்னமே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்துஇயேசுவுக்குள் கிறிஸ்துவின் ரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப்படியெனில் அவரே நம்முடைய சமாதானக் காரணராகி இருதிறத்தாரையும் ஒன்றாக்கி பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரை தகர்த்து சட்டத்திட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை தம்முடைய மாம்சத்தாலே ஒழித்து இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார். அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும் சமீபமாயிருந்த அவர்களுக்கும் சமாதானத்தை சுவிசேஷமாக அறிவித்தார். அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர்மூலமாய்ப் பெற்றிருக்கிறோம். ஆகையால் நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாரு மாயிருந்து''.... என்றுள்ளது. இந்த வசனம் தெளிவாக சொல்லும் காரியம் முன்னமே பிள்ளைகள் நாய்குட்டிகள்



என்னும் நிலைமை இருந்தது உண்மைதான். ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய மரணத்தினாலே எல்லோரையும் ஒன்றாக்கினார். ''அதிலே கிரேக்கனென்றும், யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவன் என்றும், விருத்தசேதனமில்லாதவன் என்றுமில்லை, புறஜாதியானென்றும், புறதேசத்தானென்றுமில்லை கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமாயிருக்கிறார்'' (கொலோ.3:11) கிறிஸ்துவின் அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் எவ்வளவு என்று பாருங்கள். இயேசுவின் மரணத்திற்கு முன் புறஜாதிகள் உண்மையாகவே வெறுத்து தள்ளப்பட்டவர்கள்தான். ஏன் என்றால் ஆளுக்கு ஒரு தெய்வத்தை செய்து சத்திய தெய்வத்தை அவர்கள் புறக்கணித்தார்கள். இதுவுமல்லாமல் கானானியர்கள் எல்லாவித ஆசீர்வாதங்களும் அனுபவித்துச் செல்வச்செழிப்பாக வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் கர்த்தரை மதிக்க வில்லை. ஆனால் இஸ்ரவேலர்கள் 430, வருடங்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தார்கள். எந்த வித ஆசீர்வாதமும் இல்லாமல் அடிமைகளாக வாழ்ந்துவந்த இஸ்ரவேலர்கள் புறப்பட்டுவா என்னும் ஆண்டவருடைய வார்த்தை கேட்டதும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து புறப்பட்டுவந்தார்கள். ஆண்டவர் இயேசுவின் பாவபரிகார பலிக்கு நிழலான பெசகா அனுசரித்தார்கள். அடிமைகளாக இருந்தவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப் படிகிறார்கள். எல்லா ஆசீர்வாதமும் அனுபவித்து வாழ்ந்து வந்த கானானியர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் சாத்தானுக்குப் பிரியமானவைகள் செய்கிறார்கள். ஆதலால்தான் அவர்களை நாய்களுக்கு ஒப்பாகச் சொன்னார். அப்போதிலிருந்து கானானியஸ்திரீ இயேசுவை விசுவாசித்த தினால் அவளுடைய மகளுக்கு நொடிப்பொழுதில் சுகம் கிடைத்ததைப் பாருங்கள்.

எப்பேர்ப்பட்ட பாவியாக இருந்தாலும் விசுவாசிக்கிறவனுக்கு இயேசுவிடம் மன்னிப்பும் இரட்சிப்பும் உண்டு என்பது தான் அந்த சம்பவம் காட்டுகின்றது. இயேசுகிறிஸ்துவின் கல்வாரி பலிக்குப் பிறகு தேவன் யாரையும், பிரித்து பார்ப்பதில்லை. ஒவ்வொருவரும் கிறிஸ்து இயேசுவிலுள்ள விசுவாசத்தில் புதுமனிதனாக வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும். ஆதலால் ஆண்டவர் இயேசுகிறிஸ்து தன் ஜீவனைக் கொடுத்தது இஸ்ரவேலருக்காக மட்டுமல்ல முழு உலகத்தார் அவரை ஏற்றுக்கொண்டு இரட்சிப்படைய எல்லோரையும் பட்சயமாய் அழைக்கிறார்.

ஆண்டவர் இயேசுவை பிதா அனுப்பினது முழு உலகத்திற்காகதான் என்று வேதத்தில் அநேக ஆதாரங்களை நாம் பார்த்தோம். ஆனால் முகம்மது

நபியை அல்லாஹ் அனுப்பினது அரபி தேசத்தாருக்கு மட்டும்தான் என்று குர்ஆன் தெளிவாகச் சொல்வதை நாம் பார்க்கலாம். சில வசனங்களை கவனியுங்கள்.

(நபியே) இவ்வாறே இந்தக் குர்ஆனை அரபி மொழியில் நாம் வஹ்யிமூலம் உங்களுக்கு அறிவித்தோம் (இதனைக் கொண்டு அரபி மொழி பேசும் மக்காவாசிகளாகிய தாய்நாட்டாரையும் அதைச் சூழ்ந்த கிராமங்களில் வசிப்பவர்களையும், நீங்கள் எச்சரிக்கை செய்து அனைவரும் (விசாரனைக் காக) ஒன்று சேரக்கூடிய நாளைப்பற்றி அச்சமூட்டுங்கள்!... அஷ்ஷீறா–42:7.

அன்றி (தூர் ஸீனாய் என்னும் மலைக்கு மூசாவை) நாம் அழைத்த பொழுது (அந்த தூர் என்னும்) மலையின் சார்பிலும் நீங்கள் இருக்கவில்லை. எனினும் உங்களுக்கு முன்னர் நம்முடைய யாதொரு தூதருமே வராத (இந்த) மக்களுக்கு நீங்கள் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் பொருட்டே உங்கள் இறைவனின் அருளால் (இவ்விஷயம் உங்களுக்கு அறிவிக்கப்பட்டது) அவர்கள் (இதைக்கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவார்களாக! (நபியே! உங்களுடைய மக்களாகிய) இவர்களின் கைகள் செய்த (தீய) செயலின் காரணமாக இவர்களை யாதொரு வேதனை வந்தடையும் சமயத்தில் “எங்கள் இறைவனே! எங்களிடம் உன்னுடைய ஒரு தூதரை அனுப்பி வைக்க வேண்டாமா? (அவ்வாறு நீ அனுப்பியிருந்ததால்) உன்னுடைய வசனங்களை நாங்கள் பின்பற்றி உன்னை நம்பிக்கைக் கொண்டிருப்போமே” என்று கூறாதிருக்கும் பொருட்டே (உங்களை நம்முடைய தூதராக இவர்களிடம் அனுப்பி வைத்தோம்). பார்க்க (6:92, 26:214)

அல்கஸஸ் 28:46–47 இன்னும்பல வசனங்களும் ஹதீஸுகளும் உண்டு அவையெல்லாம் எழுதுமானால் இடம் பத்தாது. இங்கு எல்லாம் அல்லாஹ் சொல்கிறார் அரபிதேசத்துக்குமட்டும் தான் உன்னை அனுப்பியுள்ளேன் என்று முதலில் இப்படிச் சொன்னவர் பிறகு மாற்றிச் சொல்லியிருக்கிறார் என்றால் அதற்கான நியாயமான காரணமும் காட்டவேண்டும். ஆனால் அப்படி எந்த காரணமும் காட்டுவதற்கில்லை. அதுவுமல்லாமல் இப்பிராஹீம் மூஸா, யாகூபு, யூனுஸ், தாவீது, இன்னும் பரிசுத்த வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் பெயர்ச் சொல்லப்பட்டுள்ள எல்லோரும் இவர்களுடைய நபிமார்கள் என்றும் சொல்லி வருகிறார்கள். ஆனால் இந்த கூற்று இந்த வசனங்கள் மூலம் தவிடுபொடியாகிவிட்டது. ஏன் என்றால் இவர்களுக்கு முகம்மதுக்கு முன் எந்த ஒரு தூதனையும் அல்லாஹ் அனுப்பவில்லை என்று



தெளிவாகச் சொல்லப்படுவதை கவனியுங்கள். ஆதலால் முழு உகலத்திற்கும் இரட்சகராக வந்தவர் ஆண்டவராகிய இயேசு மட்டும்தான் அவரை நம்பி மீட்படைவதேயல்லாமல் வேறு எந்த வழியும் மனிதனுக்கில்லை.

**கேள்வி –26**

**நல்லபோதகரே என்று இயேசுகிறிஸ்துவே அழைத்தப்போது தேவன் ஒருவர் மட்டும்தான் நல்லவர் என்று இயேசு சொன்னது ஏன்?**

இந்த கேள்விக்கு ஆதாரமான வசனம் மாற்.10:17–18 ஆகும். “பின்பு அவர் புறப்பட்டு வழியிலே போகையில் ஒருவர் ஓடிவந்து அவருக்குமுன்பாக முழங்கால்படியிட்டு நல்ல போதகரே, நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு இயேசு, நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன் தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே,”

இங்கு நாம் பார்ப்பது என்னவென்றால் இயேசுகிறிஸ்துவை ஒருவர் நல்ல போதகரே என்று அழைக்கிறார். அந்த மனிதனுடைய அழைப்பிலிருந்து அவர் இயேசுவை மெய்யான தேவன் என்று அறிந்தவனில்லை என்பதை அறிந்து கொள்ளலாம். இயேசு சொன்ன பதிலை கவனியுங்கள். “தேவன் ஒருவன் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே”ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மெய்யான தேவன் என்று அறிந்தவராக அவரை நல்லவர் என்று அழைத்திருந்தால் நிச்சயமாக இயேசு அதை ஏற்றுக்கொண்டிருப்பார். ஆனால் அந்த மனிதன் இயேசுவை ஒரு மனிதனாக மட்டும் அறிந்தவனாக இருந்தான். மனிதன் மனிதனை பார்த்துநல்லவன் கெட்டவன் என்று சொல்வதுண்டு. அந்த மனப்பான்மையில் இயேசுவை நல்லவன் என்று சொன்னதை இயேசு தடுத்திருக்கிறார். ஏனென்றால் தேவன் ஒருவர் அல்லாமல் வேறு எவரும் நல்லவர் இல்லை.

மனிதர்கள் யாராக இருந்தாலும் சில நேரங்களில் நல்லதை செய்கிறான் சில நேரங்களில் கெட்டதும் செய்கிறான். மனிதன் ஒருவருக்கு நல்லவராக இருப்பவர் வேறொருவருக்கு கெட்டவனாக இருக்கிறான். அப்படியிருந்தும் மனிதன் மனிதனை நல்லவன் என்று சொல்லுகிறான். இந்த சூழ்நிலையில் இயேசுகிறிஸ்துவை ஒரு மனிதன் என்று மட்டும் அறிந்தவர் அவரை நல்லவர் என்று அழைத்தபோது இயேசு அதை திருத்துகிறார். ஏன் அப்படி செய்தார்? இயேசுவை பார்த்து நல்லவரே என்று அழைத்த அதே மனிதன் வேறு

பலரையும் நல்லவர் என்று சொன்னவர்தான். இன்னும் அநேகரை நல்லவர் என்று அவன் சொல்லக்கூடும். ஆதலால் இயேசு அவனை திருத்துகிறார். இப்பொழுது அந்த மனிதன் சொன்னதை இயேசு கிறிஸ்து ஏற்றுக் கொண்டால் மனிதன் மனிதனை நல்லவன் என்று சொல்லிவரும் கருத்து சரி என்று ஏற்றுக்கொண்டதாகும் மனிதர்கள் மனிதர்களைப் பார்த்து அவர் நல்லவர், இவர் நல்லவர் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் அது சரியானதல்ல ஒவ்வொருவருக்கும் உண்டாகும் அனுபவங்களை வைத்து அப்படி சொல்லுகிறார்கள்.

இன்னொருத்தருடைய அனுபவத்தில் அந்த மனிதன் கெட்டவனாக இருக்கக்கூடும். ஆதலால் தேவன் ஒருவர் தவிர எவரும் நல்லவர் இல்லை என்கிற கருத்து சரியானதுதான்.

ஆனால் அந்த வேதபகுதியில் தான் கெட்டவன் என்று இயேசு சொல்லவில்லை. அதே அதிகாரம் தொடர்ந்து படிக்கும்போது இயேசு அந்த நபரிடம் தெளிவாக சொல்லுவது என்னவென்றால் நீ எல்லாவற்றையும் விட்டுப்பிரிந்து என்னை பின்பற்றிவா என்பதாகும். இந்த வசனத்தில் இயேசு யார் என்பதையும் அவரை ஏன் பின்பற்றவேண்டும் என்பதையும் எப்படி பின்பற்றவேண்டும் என்பதையும் இயேசு வெளிப்படுத்தியிருக்கிறார். ஆதலால் மனிதனை மனிதன் நல்லவன் என்று சொல்லி புகழுவதை இயேசு தடுத்ததில் எந்த தப்பும் இல்லை. இயேசுகிறிஸ்துவை மெய்யான தேவன் என்று அறிந்து அவரை நல்லவர் என்று அழைத்திருந்தால் இயேசு அதை தடுத்திருக்க மாட்டார்.

**கேள்வி –27**

**இயேசு என்னும் பெயரில் அநேகர் இருந்தார்களே?**

ஆண்டவராகிய இயேசு இந்த பூமியில் வாழ்ந்த நாட்களிலும் அதற்கு முன்னும், அதற்குப் பின்னும் இயேசு என்னும் பெயர் உடையவர்கள் இருந்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் கர்த்தராகிய இயேசுவை மட்டும் வணங்குவதின் காரணம், வர இருக்கும் வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட மேசியா இவர்தான் என்பதற்கு அவருடையப் பிறப்புக்கு முன்னும், அவருடைய பிறப்புக்குப் பின்னும் மேசியா யார் என்பதை தேவதூதர்களும் தேவமனிதர்களும், பிதாவாகிய தேவனும், அடையாளம் காட்டினதை நாம் முன்னமேப் பார்த்தோம். அதுமட்டும்மல்லாமல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் செயல்களும் ஆதாரமாக இருக்கின்றன.

இயேசு என்னும் பெயர் உடையவர்கள் அநேகர் வருவதற்குக் காரணம்



என்ன? என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். முதல் மனிதனாகிய ஆதாம் பாவம் செய்த அந்த நாளிலே ஸ்திரீயின் சந்ததியாக தேவன் வருவார் அவர் சர்ப்பத்தின் (சாத்தானின்) தலையை நசுக்கும் என்றும் வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டது. கர்த்தர் ஆபிரகாமை தமக்காகப் பிரித்தெடுத்ததும் ஆபிரகாமின் சந்ததியான ஈசாக்கின் பரம்பரையில் மேசியா வருவார் என்று அறிவித்துவிட்டார். ஆதலால் இஸ்ரவேல் ஸ்திரீகளில் அதிகமானவர்களும் மேசியா என் வயிற்றில் பிறக்கவேண்டும் என்று ஆசைப்பட்டார்கள் மட்டுமல்லாமல் அநேகப் பெற்றோர்கள் தங்களுக்கு பிறக்கும் குழந்தைதான் மேசியா என்று அவர்களுக்குப் பிறகும் பிள்ளைக்கும் மேசியாவுக்குரிய பெயர்கள் வைத்தார்கள். அதினால்தான் மேசியாவுக்குரிய பெயர் உடையவர்கள் அநேகர் இருந்தார்கள்.

ஆனால் மரியாமிற்கு பிறந்த குழந்தைதான் மேசிய அபிஷேகம் பண்ணப்பட்ட உலக இரட்சகர் என்பதை நாம் முன்னமே பார்த்தோம் மத்.1:21ல் நாம் இப்படியாகப் பார்க்கலாம். “அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்கள் நீக்கி இரட்சிப்பார் என்றார்.”

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் குழந்தைகளுக்கு இட்ட பெயர் நாம் ஆராய்ந்துப் பார்த்தால் இந்த உண்மை புரிந்துகொள்ளலாம். மெய்யான தேவன் மனிதனாக பிறப்பார் என்னும் தீர்க்கதரிசனம் வந்தபிறகு அநேக தீர்க்கதரிசிகள் மூலம் வரப்போகும் மேசியா எப்படிப்பட்டவராக இருப்பார் என்று மக்கள் அறிந்துகொண்டார்கள். ஆதலால் எனக்குப் பிறந்த இந்தக் குழந்தை மேசியாவாக இருக்கும் என்னும் நம்பிக்கையில் குழந்தைகளுக்கு மேசியாவுக்குரிய பெயர்களும் வைத்தார்கள். அதை புரிந்துகொள்ளத் தக்கதாக அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வைத்த சில பெயர்கள் இங்கு ஆராய்ந்துப்பார்ப்போம்.

1. நேரியா (தேரியா) = ஒளியாக இருக்கிற யெகோவா (எரே.32:12).
2. எஸ்றா (எசர்யா) = உதவிசெய்கிற யெகோவா (எஸ்றா 7:1)
3. நெகேமியா (நெகேம் யாஹ) = ஆறுதலளிக்கும் யெகோவா (எஸ்றா 2:2)
4. யெகமியா = கர்த்தர் உதிக்கிறார் (1 நாளா.3:18)
5. பெராயா = சிருஷ்டிக்கும் யெகோவா (1 நாளா.8:21)
6. மல்கியா (மல்கீ யா) = இராஜாவாகிய யெகோவா (1 நாளா.6:40)
7. ஏசாயா (ஏசா யாஹீ) = விடுவிக்கும் யெகோவா (2 இரா.19:2)

8. யோயாக்கீன் (யெகோ யாக்கீன்) = உறுதிப்படுத்தும் யெகோவா (2 நாளா.36:8)
9. யோனதாப் (யெகோ நாதாப்) = உன்னதராகிய யெகோவா (எரே.35:6)
10. யோவாப் (யோஆப்) = தகப்பனாகிய யெகோவா (1 சாமு.26:6)
11. யோவா = சகோதரராக்கப்பட்ட கர்த்தர் (1 நாளா.6:21)
12. யோசுவா (யோசுஅ) = இரட்சிக்கும் யெகோவா (யாத்.17:9,10)
13. யோசேப்பு (யெகோசேப்பு) = ஒன்று சேர்க்கும் யெகோவா (ஆதி.30:24)
14. யோவான் (யெகோ நான்) = இறங்குகிற யெகோவா (லூக்.1:13)
15. யோராம் (யெகோராம்) = உன்னதராகிய யெகோவா (2 நாளா.21:1)
16. செகனியா (செகன்யாஹீ) = வசிக்கின்ற யெகோவா (நெகே.6:18)
17. செகரியா = தேடிவரும் கர்த்தர் (1 நாளா.8:38)
18. செபத்தியா (செபத்யா) நியாயத்தீர்ப்பளிக்கும் யெகோவா (எஸ்றா 2:4)
19. சகரியா (செகர்யாஹீ) = நினைப்பூட்டுகின்ற யெகோவா (2 இரா.14:29)
20. அனனியா (அனன்யா) ஆசீர்வதிக்கும் யெகோவா (எரே.36:12)
21. ஒதாவியா (ஹோதியாஹீ) = அலங்காரமாகும் யெகோவா (1 நாளா.9:7)
22. ஆசாப்நெயா = சிந்தனையின் யெகோவா (நெகே.3:10)
23. உரியா = யெகோவாவின் ஜீவாலை (2 சாமு.11:3).
24. ஊசியா = யொகோவாவின் பெலன் (1 நாளா.6:24)
25. எகோனியா = நிலை நாட்டுகின்ற யெகோவா (1 நாளா.3:16)
26. எஷாயா = காப்பாற்றுகிற யெகோவா (1 நாளா.25:3)
27. எஷயா = கொடுத்து உதவுகிற யெகோவா (1 நாளா.12:6)
28. எரேமியா = உயர்த்துகிற யெகோவா (2 இரா.23:31)
29. எலியா = யெகோவா என்னும் தேவன் (1 இரா.17:1)
30. எலியாதா = தேவன் வந்திருக்கிறார் (2 சாமு.5:16)
31. எலியாபு = தகப்பனாகிய தேவன் (எண்.1:9)



32. எலியேல் = தேவாதிதேவன் (2 நாளா.6:34)
33. எலிஷமா = செவிகொடுக்கும் தேவன் (எண்.1:10)
34. எலிசா = செல்வங்களின் தேவன் (1 நாளா.19:16)
35. எலிஷாபாத் = நியாயத்தீர்ப்பின் தேவன் (2 நாளா.23:1)
36. எலிசாப்பான் = பாதுகாவலின் தேவன் (எண்.34:25)
37. எலிதாது = யெகோவாவின் அன்பின் தேவன் (எண்.34:21)
38. எலிப்பேலேத் = விடுதலையின் தேவன் (1 நாளா.3:6)
39. எலிப்பெலேகு = தனித்தன்மையின் தேவன் (1 நாளா.15:18,21)
40. எலியாக்கீம் = உயர்த்தும் தேவன் (2 இரா.18:18)
41. எலியா சாப் = சேகறிப்பின் தேவன் (எண்.1:14)
42. எலியாம் = ஜனங்களின் தேவன் (2 சாமு.11:4)
43. எல்தகா = அறிகிற அறிவின் தேவன் (1 நாளா.1:33)
44. எல்பேவேத் = விடுதலையின் தேவன் (1 நாளா.14:5)
45. கெதாலியா = மகா பெரியவராயிருக்கிற யெகோவா (2 இரா.25:52)
46. கெலாயா = யெகோவாவின் குரல் (நெகே.11:7)
47. செராகியா = கர்த்தர் உதயமாயினார் (எஸ்றா 7:4)
48. பானுவேல் = தேவனின் முகம் (லூக்.2:36)
49. பெசலெயேல் = தேவனின் நிழல் (யாத்.31:2)
50. எலியேசர் = உதவியின் தேவன் (1 நாளா.23:15)

இஸ்ரவேலர் தங்கள் பிள்ளைகளுக்கு சூட்டின பெயர்களில் சிலது மட்டும் தான் இங்குப் பார்த்தோம். இன்னும் நூற்றுக்கணக்கான பெயர்கள் பார்க்க முடியும். இதிலிருந்து அவர்கள் எந்த அளவிற்கு மேசியாவின் வருகைக்காக நம்பிக்கையோடே காத்திருந்தார்கள் என்று அறியலாம். இந்த பெயர் எல்லாம் இயேசுவிற்கு பொருந்தும் ஆகிலும் அவர் செய்கிற மிகமிக முக்கியமானகாரியம் ஜனங்களை அவர்கள் பாவங்களிலிருந்து நீக்கி இரட்சிப்பதாகும். ஆதலால் தேவன் தன் தூதனை அனுப்பி அவருக்கு இயேசு என்னும் பெயர் சூட்டும்படிக் கட்டளையிட்டார் . அதுதான் உண்மை. இயேசு என்னும் பெயர் வேறுயாரும் பயன்படுத்தக்கூடாது என்று அந்த பெயர்

எங்கும் பதிவுபண்ணவில்லை என்பதினால் அந்த பெயர் அநேகர் தங்கள் குழந்தைகளுக்கு வைத்தார்கள் என்பது உண்மைதான். ஆகிலும் அவர்கள் எவரும் இரட்சகராக முடியாது அது மெய்யான தேவன் மனிதனாக வந்த அவரால் மட்டும்தான் முடியும்.



## அதிகாரம் 4

# இஸ்லாத்தில் பாவ பரிகாரம்

கிறிஸ்தவர்களுக்கு இரட்சிப்புக்கு ஒரேவழி இஸ்லாத்தில் தங்களை இணைத்துக் கொள்ளுவதுதான் வேறு வழியில்லை. இஸ்லாத்தில் எங்களை இணைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டுள்ளீர்கள். இஸ்லாம் ஒரு மார்க்கம் என்று சொல்லுகிறார்கள். மார்க்கம் என்று சொன்னால் எனக்குத் தெரிந்த வரையில் வழி என்று அர்த்தம், ஒரு வழி என்று சொல்லும்போது, எங்கிருந்து எங்குச் செல்லும் வழி என்று கேட்க வேண்டும். இதற்கான பதில் பூமியிலிருந்து பரலோகம் செல்லும்வழி என்பதாகும். அப்படியானால் பரலோகம் செல்லும் வழியைக் குறித்து குர்ஆன் சொல்வது என்ன? யார் அந்த வழியை உண்டாக்கினார்? அந்த வழியில் பிரவேசிப்பதற்கான தகுதி என்ன? இதைக் குறித்து குர்ஆன் சொல்வது என்ன?

பரலோகம் செல்வதற்கு பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும் எனறு பொதுவாக எல்லா மதத்தினரும் சொல்லுகிறார்கள். ஆதலால் மனிதனுடைய பாவத்திற்கு பரிகாரம் என்ன என்று குர்ஆனும் ஹதீஸும் சொல்வது என்பைதப் பார்ப்போம். குர்ஆனும் ஹதீஸும் சொல்லும் எல்லா காரியங்களும் இங்கு பார்ப்பதில்லை. சுருக்கமாக மிகமுக்கியமானதாக சொல்லப்பட்டுள்ள காரியங்கள் மட்டும் பார்ப்போம். அல்லாஹ் நியாயத்தீர்ப்பு வழங்குவது எதின் அடிப்படையில் என்று பார்த்தால் எல்லாம் ஒன்றுக்கு ஒன்று முரண்படுவதைப் பார்க்கலாம். மட்டுமல்லாமல் பாவபரிகாரத்திற்குச் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகள் குறித்து சிந்திக்க தூண்டுவதாக உள்ளது. ஆதலால் அவைகளில் சில தொடர்ந்து பார்ப்போம்.

### இஸ்லாத்தில் பாவபரிகாரமும், கடைசி நியாயத்தீர்ப்பும்

### I. குர்ஆன் ஹதீஸ் அடிப்படையில் பாவபரிகாரம்

தமிழ் மொழியில் குர்ஆன் பல மொழிபெயர்ப்புகள் உண்டு. அவை எல்லாம் இங்கு எழுத முடியாது. ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி மொழிபெயர்த்து தாருல் ஹீதா வெளியிட்டார்கள் வெளியிட்டுள்ள மொழிபெயர்ப்பிலிருந்து உள்ள வசனங்களை இங்கு எழுதுகிறேன். தேவைப்பட்டால் மற்ற மொழிபெயர்ப்புகளிலிருந்தும் எடுத்து எழுதுகிறேன்.

## 1. தான தர்மங்கள் செய்வதினால் பாவங்கள் மன்னிக்கப்படும்

குர் ஆன் 2:271 (நீங்கள் செய்யும்) தர்மங்களை நீங்கள் வெளிப்படையாக செய்தால் அதுவும் நன்றே. (ஏனெனில் அது பிறரையும் தர்மம் செய்யும்படி தூண்டக்கூடும்) ஆயினும் அதனை நீங்கள் மறைத்தேக்கொடுப்பது. அதுவும் அதனை ஏழைகளுக்குக் கொடுப்பது உங்களுக்கு மிகவும் நன்மை (பயக்கும்) அது (அதாவது இருவகை தர்மமும்) உங்களுடைய பாவங்களுக்குப் பரிகாரமாகவும் ஆகும். நீங்கள் செய்யும் (வெளிப்படையான மற்றும்) மறைவான அனைத்தையும் அல்லாஹ் மிகவும் நன்கறிவான்.

இந்த வசனத்தில் பாவபரிகாரத்திற்கு நாம் ஏதேனும் தானதர்மங்கள் செய்தால் போதும் என்றுள்ளதை கவனிக்கவேண்டும். இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன ஒவ்வொரு மனிதனும் தன் பாவங்களுக்கு பரிகாரமாக ஏதாகிலும் தானம் செய்து அவனே பரிகாரத்தை உண்டாக்க வேண்டும்.

கிறிஸ்தவர்களை அநேக கேள்விகள் கேட்டு நூற்றுக்கணக்கான புஸ்தகங்கள் இஸ்லாமியர்கள் எழுதியுள்ளது படிக்க நேரிட்டதால் நான் சில கேள்விகள் கேட்பதில் தவறில்லை என்று நினைக்கிறேன். யாருடைய மனதையும் புண்படுத்தவோ அல்லது குர்–ஆன், ஹதீஸ் ஆகிய புஸ்தகங்களை விமர்சிக்கவோ அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அநேக கேள்விகள் என்னிடம் கேட்கப்பட்டதால் நான் கேள்விகள் கேட்கவேண்டிய சூழ்நிலை நேரிட்டது. ஏன் என்றால் இஸ்லாத்தில் வந்து சேருமாறு அறை கூவல் விடுக்கப்பட்டதல்லவா? அந்த இஸ்லாத்தில் மனிதனுக்கு இரட்சிப்பு என்று ஒன்று உண்டா என்பதை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும்.

நாம் படித்த குர்–ஆன் வசனத்திற்கு வருவோம். யாருடைய விளக்கமும் தேவையில்லாதவாறு தெளிவாக அங்கு எழுதப்பட்டுள்ளது. தானதர்மங்கள் பாவபரிகாரம் உண்டாக்கும் என்று முதல் கேள்வி பாவியாகிய மனிதன் செய்கிற ஒரு கிரியையானது எப்படி பரிசுத்தமுள்ளதாகும்? பாவச்செயல் மூலம் சம்பாதித்த பணத்தில் தானம் தர்மம் செய்தால் பாவங்கள் மன்னிக்கப்படும் என்றால் எல்லோரும் பாவம் செய்யும்படி தூண்டுவதாக அது அமையுமல்லவா? இப்படி தானம் செய்யக்கூடிய வசதியில்லாதவர்களுக்கு இந்த பாவபரிகாரம் ஏதும் இல்லாமல் போய்விடுமல்லவா? எல்லோருக்கும் சமமாக கிடைக்காத இந்த பாவமன்னிப்பு தானம் செய்யக்கூடிய சக்தி உள்ளவர்களுக்கு மட்டுமே கிடைக்குமல்லவா? நீதிமானாகிய இறைவன் இப்படிச் சொல்லியிருப்பாரா?



## 2. தொழுகை (நன்மைகள்) பாவங்களை போக்கிவிடும்

குர்–ஆன் 11:114 பகலில் இருமுனை(களாகிய காலை, மாலை) களிலும், இரவில் ஒரு பாகத்திலும், நீங்கள் (தவறாது) தொழுது வாருங்கள் **நிச்சயமாக நன்மைகள், பாவங்களை போக்கிவிடும்** இறைவனை துதிசெய்து புகழ்பவர்களுக்கு இது ஒரு நினைவூட்டுதலாகும்.

இங்கு நன்மைகள் பாவங்களை போக்கிவிடும் என்பதை கவனிக்க வேண்டும். இங்கு நன்மைகள் என்று சொல்லப்பட்டுள்ளது என்ன என்பதை நாம் புரிந்துகொள்ளுமாறு ஹதீஸிலிருந்து சில பகுதிகளை பார்ப்போம். திர்மிதி என்கிற நூலிலிருந்து, ஒரு நாள் ஒரு பெண் பேரீட்சம்பழம் வாங்க என்னிடம் வந்தாள். நான் அவளைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தேன் பிறகு நான் முஹம்மது நபியை சந்தித்து நடந்தவைகளை அறிவித்தேன். அவர் தலையைக்குனிந்து வெகுநேரம் தியானத்திலிருந்த பிறகு என்னைப் பார்த்து சொன்னார். பகலின் இரு முனைகளிலும், இரவின் முதல் பகுதியிலும் தொழுகை செய்துவாருங்கள். நிச்சயமாக நல்ல செயல்கள் பாவங்களை எடுத்துப்போடும். இது அபி அல்யு அறிவித்த செய்தியாகும். இதிலிருந்து குர்–ஆன் 11:114ல் சொல்லப்பட்ட நன்மை என்பது தொழுகையைக் குறிக்கும் என்பதை உணர்ந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட சம்பவம் அபு அபுதுள்ள அறிவித்தாக முஸ்லீம் என்கிற நூலில் பார்க்கமுடியும் இப்படி செய்கிறவர் களுக்கு பாவங்கள் மன்னிக்கப்படும் என்று முஹம்மது நபி சொன்னதாக அபுபக்கரும் அறிவித்துள்ளார். இதுவும் மனிதனுடைய செயல்மூலம் கிடைக்கும் பாவமன்னிப்பாகும். பாவம் செய்யவேண்டியது மூன்று வேளையும் தொழுகை நிறைவேற்ற வேண்டியது. பாவம் மன்னிக்கப்படும். இது ஒரு நீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய காரியம்தானா?

தொழுகை பாவபரிகாரமாக நிச்சயமாக இருக்கமுடியாது. காரணம் ஒருசில மதத்தினர் தங்கள் இறைவன் மேல் உள்ள நம்பிக்கையினால், மிகவும் கடினமாகத் தங்களையே வதைத்துக்கொள்ளக்கூடிய காரியங்களை செய்து வருகிறார்கள். அப்படியானால் அவர்களுடைய பாவங்களும் மன்னிக்கப்படும் என்று ஏற்றுக்கொள்ளவேண்டியதுதானே. இப்படிப்பட்ட செயல்கள் எல்லாம் மனிதனுக்கு பாவ பரிகாரம், அவனுடைய கிரியைகள் மூலம் என்றல்லவா அமைந்திருக்கிறது.

3. நற்கிரியைகள் செய்வது பாவத்திற்கு பரிகாரமாகும் குர்–ஆன் 7:8,9 (ஒவ்வொருவருடைய நன்மை தீமைகளையும்) அன்றைதினம் எடை போடுவது சத்தியம், ஆகவே எவர்களுடைய (நன்மையின்) எடை கனத்ததோ அவர்கள்

தான் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள். எவர்களுடைய (நன்மையின்) எடை (கனம் குறைந்து) இலேசாக இருக்கிறதோ அவர்கள் நம்முடைய வசனங் களுக்கு மாறு செய்து தங்களுக்கு தாமே நஷ்டத்தை உண்டுபண்ணிக் கொண்டவர்கள். குர்–ஆன் 32:19 எவர்கள் நம்பிக்கைக்கொண்டு நற்செயல்களைச் செய்கிறார்களோ அவர்களுக்கு அவர்கள் செய்யும் (நற்)செயல்களின் காரணமாக சுவனபதி தங்கும் இடமாகி அதில் விருந்தாளியாக உபசரிக்கப்படுவார்கள்.

நன்மை செய்தவர்களுக்கு சொர்க்கம் கிடைக்கும் என்கிற இந்த வசனங்கள் நற்செயல்கள் தங்களுடைய பாவங்கள் நீக்கி தங்களை சொர்க்கம் கொண்டு செல்லும் என்றுள்ளது. ஏற்கனவே பாவியாக உள்ளவன் செய்யும் செயல் எப்படிதான் நற்செயலாகும் என்பதுதான் புரிந்துகொள்ள முடியாதப் புதிராக உள்ளது. இங்கு பரிசுத்தவேதத்திலிருந்து ஒரு வசனத்தைக் காண்பிக்க விரும்புகிறேன்.

''தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே அக்கிரமங்களில் மரித்தவர்களாய் இருந்த நம்மை கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப் பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடுகூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடு உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாத படிக்கு, இது கிரியைகளினால் உண்டானதல்ல. ஏனெனில் நற்கிரியைகளை செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்'' (எபே.2:4–10).

பரிசுத்த வேதம் கூறுவது என்ன, விசுவாசத்தினால் கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டவர்கள் செய்வதுதான் நற்செயலாகும். நற்செயல்களினால் இரட்சிக்கப்படுவதல்ல. பாவியானவனுடைய பாவம் மன்னிக்கப்பட்ட பிறகு அவன் செயல் நற்செயல் என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் பாவியாயிருக்கும் ஒருவனின் செயல் எப்பேற்பட்டதாக இருந்தாலும் அதை எப்படி நற்செயல் என்றும் அந்த செயல் அவன் பாவத்திற்கு பரிகாரம் என்றும் சொல்லமுடியும்.

**4.** பொருட்கள் அல்லாவிற்கு கொடுப்பதால் பாவங்கள் மன்னிக்கப்படும்

குர்–ஆன் 9:103,104



(நபியே) அவர்கள் தங்கள் குற்றத்திற்கு பரிகாரமாகக்கொண்டு வந்திருக்கும் அவர்களுடைய பெருட்களிலிருந்து தானத்தை நீங்கள் எடுத்துக்கொண்டு அவர்களை (உள்ளும்புறமும்) பரிசுத்தமாக்கி வைத்து (பாக்கியவான்களாக்கும்படி) அவர்களுக்காக (துஆ) பிரார்த்தனை செய்யுங்கள். உங்களுடைய (துஆ) பிரார்த்தனை நிச்சயமாக அவர்களுக்கு ஆறுதலளிக்கும். அல்லாஹ் செவியுறுபவனும் மிக அறிபவனாகவும் இருக்கின்றான். நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களின் மன்னிப்புக் கோருதலை அங்கீகரிக்கின்றான் என்பதையும், தானங்களை அவனே எடுத்துக் கொள்கிறான் என்பதையும் நிச்சயமாக அல்லாஹ் பாவங்களை மன்னித்து கிருபை செய்பவன் என்பதையும் அவர்கள் அறியவில்லையா?

இங்கு அல்லாஹ்விற்கு சில பொருட்கள் கொடுத்தால் பாவங்கள் மன்னிக்கப்படும் என்றுள்ளதைக் கவனிக்கவேண்டும். அழிந்து போகக்கூடிய இவ்வுலக பொருட்கள் எப்படி பாவத்திற்கு பரிகாரமாகும் என்பதையும், இந்த பொருட்கள் எங்கிருந்து வந்தது என்பதையும் சிந்திக்கவேண்டாமா?

வேதம் சொல்வது என்ன ''ஈவாக கிடைத்ததல்லாமல் உங்களுடையது என்ன உண்டு'' (1 கொரி.4:7).

**5.** பாவத்திற்கு வருத்தப்பட்டு அதிலிருந்து விலகினால் போதும் அல்லாஹ் பாவத்தை மன்னிப்பார் (குர்–ஆன் 4:17)

எவர்கள் தங்கள் அறியாமையினால் பாவத்தை செய்து (அதனை பாவமென்றறிந்து) பின்னர் வருத்தப்பட்டு அதிசீக்கிரத்தில் (அதிலிருந்து) நீங்கி விடுகின்றார்களோ அத்தகையவர்களை மன்னிப்பதுதான் அல்லாஹ் வின் மீது கடமையாகும். ஆகவே அல்லாஹ் அவர்களை மன்னித்து விடுகின்றான். அல்லாஹ் நன்கறிந்தவனும் ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.

இங்கு பாவ மன்னிப்பிற்கு பாவத்தைக்குறித்து வருத்தப்படுவதே பரிகாரமாக மாறுகிறது. அல்லாஹ் பாவத்தை மன்னிக்கவேண்டும். மன்னிக்காவிட்டால் எந்த மனிதனும் சொர்க்கம் செல்லமுடியாது. ஆனால் பாவங்கள் மன்னிக்க பரிகாரமாக அல்லாஹ் என்னதான் செய்தார் என்பதை அறிந்துகொள்ள ஆவலாக உள்ளேன். நீதிமானாகிய இறைவன் நீதி நடத்தவேண்டாமா?

**6.** பெரும் பாவங்களிலிருந்து தங்களை விலக்கிக்கொண்டால் அது மற்ற பாவங்களுக்கு பரிகாரமாகிக்கொள்ளும் (குர்–ஆன் 4:31).

உங்களுக்கு விலக்கப்பட்ட பெரும் பாவமான காரியங்களில் இருந்து நீங்கள் விலகிக்கொண்டால் உங்களுடைய (மற்ற) சிறிய பாவங்களுக்கு (அதனை) நாம் பரிகாரமாக்கி உங்களை மிக கன்னியமான இடங்களில் நுழைவிப்போம்.

இது எதைக் காண்பிக்கிறதென்றால் பெரிய பாவம் செய்யாமலிருந்தால் போதும், சிறிய பாவம் எவ்வளவு வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்று கூறுகூதுபோல் உள்ளதல்லவா. இரண்டாவது காரியம், பெரிய பாவங்கள் எவை என்பதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்து சொல்கிறார்கள். எது பெரிய பாவம், எது சிறிய பாவம் என்பதற்கு சரியான வரையறை இல்லை என்பதையும் உணரவேண்டும். பெரிய பாவங்களிலிருந்து விலகுவது எப்படி சிறிய பாவங்களுக்கு பரிகாரமாகி விடும் என்பது புரிந்துகொள்ள முடியவில்லை. அது மாத்திரமல்லாமல் குர்–ஆன் 99:8 ன்படி எவன் ஓர் அனுவளவு தீமை செய்திருந்தானோஅதனை அவன் (அங்கு) கொண்டு வருவான் என்றுள்ளது. முன்னே வசனத்தில் சிறிய பாவம் மன்னிப்பான் என்றும், பிந்தின வசனத்தில் அனுவளவு பாவத்திற்கு தண்டனையுண்டு என்பதையும் முரண்பாடாக தெரியவில்லையா. இதில் எதை நம்புவது எதின்படி வாழ்வது?

7. கொலைபாதகம் செய்தவன் இரண்டு மாதங்கள் நோன்பு நோக்க வேண்டும் அவனுக்கு அது, பாவத்தின் பரிகாரமாகிவிடும் (குர்–ஆன் 4:92).

தவறுதலாகவே தவிர, யாதொரு இறை நம்பிக்கையாளரை (முஃமினை) கொலை செய்வது எந்த இறை நம்பிக்கையாளருக்கும் ஆகுமானதல்ல (உங்களில்) எவரேனும் யாதொரு இறை நம்பிக்கையாளரை தவறுதலாகக் கொலை செய்துவிட்டால் (அதற்கு பரிகாரமாக) இறை நம்பிக்கையாளராகிய ஓர் அடிமையை விடுதலை செய்யவேண்டும். அத்துடன் இறந்தவருடைய வாரிசுகள் (மன்னித்து) தானமாக விட்டாலே தவிர, அதற்குரிய நஷ்ட ஈட்டையும் அவர்களிடம் செலுத்தவேண்டும். (இறந்த) அவன் உங்கள் எதிரி இனத்தவனாக இருந்து நம்பிக்கையாளராகவும் இருந்தால், நம்பிக்கை யாளராகிய ஓர் அடிமையை விடுதலை செய்தால்போதும். (நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியதில்லை இறந்த) அவன் உங்களுடன் உடன்படிக்கை செய்து கொண்ட வகுப்பாரில் உள்ளவராக இருந்தால் அவருடைய வாரிசுகளுக்கு நஷ்ட ஈட்டை செலுத்துவதுடன், நம்பிக்கையாளரான ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும் (இவ்வாறு பரிகாரம் செய்வதற்குரிய பொருளை) எவரேனும் அடையாவிட்டால் அவன் அல்லாஹ்விடம் (தன்



குற்றத்தை) மன்னிக்க கோரி இரண்டு மாதம் தொடர்ச்சியாக நோன்பு நோக்கவேண்டும். அல்லாஹ் நன்கறிந்தவனும் ஞானமுடையவனாகவும் இருக்கிறான்.

இதில் நோன்பு நோர்பதல்லாமல் மற்றும் பல பரிகாரங்களும் சொல்லப் படுகிறது. ஆனால் அதற்கு வழியில்லாதவன் இரண்டு மாதங்கள் நோன்பு நோக்குவது அவனுடைய பாவத்திற்கு பரிகாரமாகும் என்றுள்ளது. சத்தியம் பண்ணி அதை நிறைவேற்றாதவன் மூன்று நாட்கள் நோன்பு நோக்குவது அவனுக்கு பரிகாரமாகிவிடும் என்று 5:89ல் சொல்லப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்கிறவர்களுக்கும் விசுவாசம் மூலமாக மக்காவிலிருந்து ஓடிப்போனவர்களுக்கும் அல்லாஹ்வின் கருணை கிடைக்கும் என்று 2:218ல் உள்ளது. இவைகளிலெல்லாம் சற்றாகிலும் நீதி உண்டா என்று பாருங்கள்.

8. எந்த காரணமும் இல்லாமலே அல்லாஹ் விரும்புகிறவர்களை மன்னிப்பார். விரும்புகிறவர்களை தண்டிப்பார் என்று 3:129ல் பார்க்கலாம். இந்த வசனத்திற்கு விளக்கம் அளித்திருக்கிறவர்கள் பலரும் சொல்லும் விளக்கம் என்னவென்றால் நல்லவனை நரகத்திலனுப்புவதும் கெட்டவனை சொர்க்கத்தில் சேர்ப்பதும் அல்லாஹ்வின் செயலாகும். இதை யாரும் கேள்வி கேட்கக் கூடாது. இந்த விளக்கத்தின் அடிப்படையில் நாம் நல்லது செய்தாலும் பயன் இல்லை. தீமை செய்தாலும் பயப்படத் தேவையில்லை. கடைசி நேரத்தில் அல்லாஹ்வின் மனதில் என்ன நினைக்கிறாரோ அதற்கேற்றபடி நரகமோ சொர்க்கமோ கிடைக்கும். இது என்ன நீதி என்று எவரும் கேள்வி கேட்கக் கூடாது.

9. சொந்த ஊரைவிட்டு துரத்தப்பட்டவர்களுக்கும், போரில் கொல்லப் பட்டவர்களுக்கும் அதுவே பாவ பரிகாரமாகிவிடும் (குர்–ஆன் 3:195)

ஆதலால் அவர்களுடைய இறைவன் அவர்களுடைய பிரார்த்தனையை அங்கீகரித்துக் கொண்டதுடன் உங்களில் ஆண், பெண் (இரு பாலரிலும்) எவர்கள் நன்மை செய்தபோதிலும் நிச்சயமாக நான் அதை வீணாக்கிவிட மாட்டேன் (ஏனென்றால்) உங்களில் (ஆணோ பெண்ணோ) ஒருவர் மற்றொருவரில் உள்ளவர்தான் (ஆகவே கூலி கொடுப்பதில் ஆண், பெண் என்ற பாகுபாடில்லை. உங்களில்) எவர்கள் தங்கள் ஊரிலிருந்த வெளியேறியும் (பிறரால்) வெளியேற்றப்பட்டும் என்னுடைய பாதையில் துன்புறுத்தப்பட்டும் போர் செய்து அதில் கொல்லப்பட்டும் (இறந்து) விடுகின்றனரோ அவர்களுடைய பாவங்களை அவர்களைவிட்டு நிச்சயமாக

நாம் அகற்றி விடுவோம் தொடர்ந்து நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனபதியிலும் நிச்சயமாக நாம் அவர்களை நுழைய வைப்போம் (என்று கூறுவான் இது) அல்லாஹ்வினால் (அவர்களுக்கு) கொடுக்கப்படும். நன்மையாகும். அல்லாஹ்விடத்தில் (இன்னும் அதைவிட) மிக்க அழகான வெகுமதியும் இருக்கின்றது.

இங்கு பாவங்கள் போக்கிவிடுவதற்கு போர்செய்வது தகுதியாக சொல்லப்பட்டுள்ளது. வாழ்க்கை எப்படிவேண்டுமானாலும் வாழ்ந்துவிட்டு போரில் கொல்லப்பட்டால்போதும் யாராகிலும் சொந்த ஊர் விட்டு துரத்தப்பட்டாலும் அல்லாஹ் பாவங்களை நீக்கிவிடுகிறார். இதைப்போன்ற வசனங்கள் இன்னும் அநேகம் உள்ளன. இது யுத்தம் செய்வதற்கு மக்களைத் தூண்டுவதாக இல்லையா?

**II. பாவ பரிகாரத்திற்கு ஹதீஸ் கூறும் வழிகள் என்ன?**

1. தீமைக்கு பதிலாக நன்மை செய்தால்போதும், அதாவது எவ்வளவு தீமை (பாவம்) செய்கிறோமோ அதோடே கொஞ்சம் அதிகமாக நன்மை செய்தால் போதும்.

கியாமத் நாளில் ஒரு மனிதன் கொண்டு வரப்படுவான், ‘‘இவனது சிறு குற்றங்களை இவனிடம் எடுத்துக்காட்டுங்கள். பெருங்குற்றங்களை காட்டாதீர்கள்’’ என்று வானவர்களுக்குக் கூறப்படும். ‘‘இன்னின்ன நாளில் இன்னின்ன குற்றத்தை நீ செய்தாயா என்று கேட்கப்படும். மறுக்கமுடியாமல் அவன் ஆம்! என்னுடைய பெரும் பாவங்கள் எடுத்துக்காட்டப்பட்டால் என்னவாகும்’’ என்று அஞ்சிக்கொண்டிருப்பான். இப்போது அவனிடம் ‘‘உனது ஒவ்வொரு தீமைக்கு பதிலாக ஒரு நன்மை உனக்கு உண்டு’’ என்று கூறப்படும் அதற்கு அம்மனிதன் ‘‘இறைவா! இன்னும் எத்தனையோ குற்றங்கள் செய்துள்ளேன் அவற்றை இங்கே நான் காணவில்லையே?’’ என்பான், இதை நபி (ஸல்) அவர்கள் கூறிவிட்டு தம் கடவாய் பற்கள் தெரியுமளவிற்கு சிரித்தார்கள். அறிவிப்பவர் அபூதர் நூல்கள், முஸ்லீம் திர்மிதி.

இங்கு ஒவ்வொரு பாவத்திற்கும் ஒவ்வொரு நன்மை என்பதை கவனிக்க வேண்டும். பாவம் செய்துவிட்டு ஏதேனும் ஒரு நன்மை செய்தால் போதும் அது பாவத்திற்கு பரிகாரமாகிவிடும். பாவியுடைய செயல்கள் எப்படி நன்மையாகும். தான் செய்யும் கிரியை எப்படி பாவத்திற்கு பரிகாரமாகும் என்கிற கேள்வி இங்கும் எழுகின்றன. அறிவுடைய மனிதன் சிந்திக்க வேண்டாமா?



2. ஒரு பேரீச்சம் பழத்தின் துண்டு அல்லது ஒரு நல்ல வார்த்தை பாவத்திற்குப் பரிகாரமாகிவிடும்.

அதி இப்னு ஹத்தாம் என்பவர் முஹம்மது சொன்னதாக அறிவிக்கும் செய்தி புகாரி என்கிற நூலில் எழுதப்பட்டுள்ளது. இங்கு பார்ப்போம். உங்களில் ஒருவன் அல்லாஹ்வின் முன்னிலையில் நிற்பான். அவனுக்கும் அல்லாஹ்வுக்குமிடையே திரையுமிருக்காது. மொழி பெயர்ப்பாளனும் இருக்கமாட்டான். அப்போது (அல்லாஹ்) நான் உனக்கு பொருளை தரவில்லையா? என கேட்க அவன் ஆம் என்பான். பிறகு உன்னிடம் ஒரு தூதரை நான் அனுப்பவில்லையா? எனக்கேட்டதும், அவன் ஆம் என்று கூறிவிட்டு தனது வலப்பக்கம் பார்ப்பான். அங்கும் நரகமே காட்சியளிக்கும். பின்னர் இடப்பக்கம் பார்ப்பான். அங்கும் நரகமே காட்சியளிக்கும். எனவே பேரீச்சம் பழத்தின் ஒரு சிறிய துண்டை தர்மம் செய்தாவது அதுவும் கிடைக்கவில்லையானால் ஒரு நல்ல வார்த்தையின் மூலமாவது அந்த நரகத்திலிருந்து உங்களை காத்துக்கொள்ளுங்கள் என்று நபி அவர்கள் கூறினார்கள்.

இந்த ஹதீஸின் அடிப்படையில் ஒரு பேரீச்சம் பழத்தின் ஒரு துண்டு அல்லது ஒரு நல்ல வார்த்தை பாவத்திற்கு பரிகாரமாகிவிடும் என்றும் நரகத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வழி செய்யும் என்றுள்ளதை பார்க்கலாம். ஒரு பேரீச்சம் பழத்தின் துண்டு எப்படிதான் பாவத்திற்கு பரிகாரமாகிவிடும் என்று சிந்திக்க வேண்டாமா?

3. ஒரு மனிதன் நபி அவர்களிடம் எனது தந்தை இறந்துவிட்டார். அவர் சில பொருளைவிட்டு சென்றுள்ளார். ஆனால் அதை (என்ன செய்ய வேண்டுமென) வஸ்ஸியத் செய்யவில்லை. இந்நிலையில் அவர் சார்பாக நான் தர்மம் செய்தால் அவருடைய (பாவம்) அழிக்கப்படுமா? என்று கேட்டார். ஆம் என்று நபி அவர்கள் கூறினார்கள் அறிவிப்பவர், அபூஹீரை, நூல் முஸ்லீம்,.

இங்கு இறந்து போனவர்களுக்கு அவர்கள் பிள்ளைகள் செய்யும் தர்மம் பாவ பரிகாரமாகிவிடுவதை பார்க்கலாம். இதின் அடிப்படையில் ஒவ்வொருவரும் பிள்ளைகளிடம் தர்மம் செய்ய சொல்லிவிட்டு இங்கு எப்பேற்பட்ட பாவத்தையும் செய்யலாம் அல்லவா?

4. ஸீரத்துல் பகரா குர்–ஆனின் திமிலாகும்.

மேலும் குர்–ஆனில் உயர்வானதுமாகும். இந்த சுறாவின் ஒவ்வொரு ஆயத்துகளும் சுமந்துகொண்டு என்பது வானவர்கள் இறங்கினார்கள்.

அல்லாஹ் ஹீத்தா ஆவா அர்ஷின் கீழிலிருந்து அல்லாஹீ லாயிலாஹ இல்லா ஹீவ அல் ஹய்யூல் கய்யூம் (என்ற ஆயத்துல் குர்ஸிய்யை) வெளியாக்கி ஸீரத்துல் பகராவுடன் இணைத்தான். யாஸீன் (என்ற சூரா) குர்–ஆனின் இதயமாகும். அல்லாஹ்வையும் மறுமை நாளில் (நன்மையையும்) நாடி எந்த மனிதராவது இதை ஓதினால் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படும். எனவே இதை உங்களில் இறக்கும் நிலையில் உள்ளவர்க்கும் ஓதுங்கள்! என்று நபி அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் மஃகல் இப்னுயஸார், நூல் அஹ்மத்.

இங்கு குர்–ஆன் ஓதினால் பாவமன்னிப்பு கிடைக்கும் என்று தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. குர்–ஆன் ஓதுவதினால் எப்படி பாவம் பரிகாரமாகி விடும் என்பது இதை படிப்பவர்கள்தான் சொல்லவேண்டும்.

5. உளுச் செய்வதால் பாவங்கள் போகும்.

ஒரு முஸ்லிமான அல்லது 'முஃமினான' (இறை நம்பிக்கை கொண்ட) அடியார் அங்க தூய்மை (உளு) செய்யும்போது முகத்தை கழுவினால் கண்களால் பார்த்துச் செய்த பாவங்கள் அனைத்தும் (முகத்தை கழுவிய) 'நீருடன்' அல்லது 'நீரின் கடைசித்துளியுடன்' முகத்திலிருந்து வெளியேறு கின்றன. அவர் கைகளை கழுவும்போது கைகளால் பற்றிச் செய்திருந்த பாவங்கள் அனைத்தும் (கைகளைக் கழுவிய) 'தண்ணீருடன்' அல்லது 'தண்ணீரின் கடைசி துளியுடன்' வெளியேறுகின்றன. அவர் கால்களை கழுவும்போது கால்களால் நடந்து செய்த பாவங்கள் அனைத்தும் (கால்களைக் கழுவிய) 'நீரோடு' அல்லது 'நீரின் கடைசித் துளியோடு' வெளியேறுகின்றன. இறுதியில், அவர் பாவங்களிலிருந்து தூய்மை அடைந்தவராக (அந்த இடத்திலிருந்து) செல்கிறார். அறிவிப்பவர். அபூஹீரைரா, நூல் முஸ்லீம்.

ஒருவர் முறையாக அங்க தூய்மை செய்யும்போது (அவர் செய்திருந்த) அவருடைய (சிறு) பாவங்கள் அவரது உடலிலிருந்து வெளியேறுகின்றன. முடிவில் அவருடைய நகங்களுக்குக் கீழேயிருந்தும் (அவருடைய பாவங்கள்) வெளியேறிவிடுகின்றன. அறிவிப்பவர் உஸ்மான்பின் அஃப்பான் நூல் முஸ்லிம். இவ்விதமான இன்னும் அநேகச் செய்திகள் பார்க்கலாம்.

6. தொழுகைமூலம் பாவமன்னிப்பு

ஒரு அடியான் ஒரு தொழுகையை அதன் ஆரம்ப நேரத்திலேயே தொழுது முடித்தால், அத்தொழுகை உயரச்சென்று பிரகாசத்துடன் அர்ஷீ வரை சேருகிறது. பின் அத்தொழுகை அவருக்காக மறுமை நாள்வரை பாவ



மன்னிப்பு கேட்கும். அப்பொழுது என்னை நீ பாதுகாத்ததைப் போன்று அல்லாஹ் உன்னை பாதுகாப்பானாக என்று பிரார்த்திக்கும்.

**அறிவிப்பவர்: உபாதாபின் ராமித் நூல் முஸ்னத் தயாவஸீ (இந்த ஹதீஸ் சில முஸ்லீமுகள் ஏற்றும் கொள்வதில்லை)**

7. பெற்றோருக்கு நன்மை செய்தால் சொர்க்கம் செல்லலாம்

''ஒருவன் சொர்க்கம் செல்லக்கூடாது'' என்று எண்ணினால் அவன் தாய் தந்தைக்கு மாறு செய்யட்டும். ஒருவன் நரகம் செல்லக்கூடாது என எண்ணினால், அவன் முடிந்தவரை பெற்றோருக்கு நன்மை செய்யட்டும் என்று நபி அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் ஹீசைன் இப்னுஅலி, நூல் தைலமீ. (இந்த ஹதீஸ் எல்லா முஸ்லீமுகளும் ஏற்றுக்கொள்வதில்லை).

8. மனிதர்களில் எவரிடமும் யாசிக்காதவர்களை முஹமது நபி அவர்கள் சொர்க்கம் கொண்டுசெல்வார் என்று உத்தரவாதம் அளித்துள்ளார்.

மனிதர்களில் எவரிடமும் கேட்பதில்லை என்று எவர் உறுதி எடுத்துக் கொள்கிறாரோ, அவருக்கு சொர்க்கத்திற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்வேன் என்று நபி அவர்கள் கூறியதும், 'நான்' என்று நான் கூறினேன். அறிவிப்பவர் ஸல்பான் நூல் அஹமது, இப்னுமாஜா, நஸமி.

பாவ மன்னிப்பு பெற்றுக்கொண்டவன் தானே சொர்க்கம் செல்லமுடியும், இந்த ஹதீஸின் அடிப்படையில் மனிதர்கள் யாரிடமும் யாசிக்க மாட்டேன் என்கிற உறுதிமொழி எடுத்துக்கொண்டாலே அது அவனுக்கு பாவ பரிகாரமாகி விடுகிறதல்லவா?

இந்த ஹதீஸின்படி முகம்மத் அவர்கள் தேவனுக்கு இணையானவராக கருதவேண்டுமே

9. பத்ருப்போரில் கலந்து கொண்டவர்களுக்கு பாவமன்னிப்பு உண்டு.

அப்போது நபி அவர்கள் இவர் பத்ருப்போரில் கலந்துகொண்டவர் அல்லவா? பத்ரில் கலந்துகொண்டவர்களை நோக்கி அல்லாஹ், நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள் உங்களுக்கு சொர்க்கம் உறுதியாகி விட்டது'' அல்லது உங்கள் பாவங்களை நான் மன்னித்துவிட்டேன் என்று கூறி விட்டிருக்கலாம் அல்லவா? என்று சொன்னார்கள் இதைக் கேட்ட உமர் அவர்கள் தமது கண்கள் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்க அல்லாஹ்வும் அவனது தூதருமே நன்கறிந்தவர்கள்'' என்று கூறினார்கள். அறிவிப்பவர் அலீ, நூல் புகாரி, முஸ்லீம்.

இங்கு பத்ரு போரில் கலந்துகொண்டவன் பாவங்கள் முன்கூட்டியே மன்னிக்கப்பட்டுவிட்டதாகவும், பத்ருபோரில் கலந்து கொண்டது பாவத்திற்கு பரிகாரமாகிவிட்டதால் அவனுக்கு சொர்க்கம் உறுதியாகி விட்டதும் பார்க்கமுடியும். இது இறைவனுக்கு நீதி ஆகுமா. இப்பொழுது உயிருடன் இருப்பவர்களக்கு இதினால் பிரயோஜனம் என்ன?

**10.** முஹம்மத் அவர்கள் மக்காவை நோக்கி உம்ரா செய்வதற்காக போய்க் கொண்டிருந்தபோது, மரணம் வந்தாலும் பின்வாங்கமாட்டோம் என்று உறுதிமொழி எடுத்தவர்கள் யாவரும் நரகத்திற்கு போவதில்லை என்று அவர் சொன்னார்.

(ஒரு முறை) நபி அவர்கள் (தம் துணைவியார்) ஹஃப்ஸா அவர்களிடம் அல்லாஹ் நாடினால் அந்த மரத்தின் கீழ் வாக்குப் பிரமாணம் அளித்தவர் களில் யாரும் நரகத்தில் நுழைவிடமாட்டார்கள் என்று கூறினார்கள். அறிவிப்பவர்: உம்மு முபஷ்ஷீர் நூல் முஸ்லீம்.

ஒரு மரத்தின் கீழ் செய்துகொண்ட உடன்படிக்கை இது. என்ன வந்தாலும் யுத்தத்திலிருந்து பின்வாங்கமாட்டேன் என்பது. பை அத்தூர் ரிழ்வான் ஒப்பந்தம் என்று இதற்குபேர். இது நீதியாகத் தெரியவுமில்லை, இதனால் நமக்கு எந்த பிரயோஜனமும் இல்லை.

**11.** அல்லாஹ்விற்கு எதையும் இணை வைக்காதவர்கள் எந்த பாவம் செய்தாலும் அவர்களுக்கு மன்னிக்கப்படும்.

ஜீப்ரில் (அலை) என்னிடம் வந்து அல்லாஹ்வுக்கு எதையும் இணை வைக்காமல் மரனித்தவர் சொர்க்கத்தில் நுழைவார் என்று நற்செய்தி கூறினார் என நபி அவர்கள் கூறினார்கள். விபச்சாரம் செய்தாலும், திருடினாலும்? என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள் ஆம் என்றான். அறிவிப்பவர்: அபுநாதா, நூல்கள் –புகாரி, முஸ்லீம்.

அல்லாஹ்வை மட்டும் இறைவனாக ஏற்றுக்கொண்டவர்கள் எந்த பாவம் செய்தாலும் அவர்களை நரகத்தில்விடாமல் காப்பது அல்லாஹ்வின் கடமை என்று பார்க்கிறோம். இதே கருத்துடைய அநேக ஹதீஸ்கள் பார்க்கமுடியும். இதிலிருந்து என்ன அறிந்துகொள்ள முடிகிறது என்றால் மனிதன் என்ன பாவங்கள் செய்தாலும் பரவாயில்லை அல்லாஹ் மட்டும்தான் இறைவன் என்று சொன்னால் போதும். இது படிக்கும்போது இஸ்லாமியர்களில் அநேகருடைய வாழ்க்கை இந்த நபி மொழிக்கு ஏற்றபடி இருக்குதே என்று சந்தேகத்தோடு பார்க்கும்படி செய்கிறது. உலகத்தையே சீர்கேட்டுக் குள்ளாக்கும் காரியமாக தெரியவில்லையா?



**12.** ஒரு சிலரை நரகத்தில் போட்டுவிட்டு அவர்கள் செய்த பாவங்களுக்கு தண்டனை அனுபவித்தபிறகு சொர்க்கத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏகத்துவ கொள்கையைநம்பிய சிலர் வேறு பாவங்களுக்காக நரகில் வேதனை செய்யப்படுவார்கள். அவர்கள் அடுப்பு கரிபோல் ஆவார்கள் பின்னர் (இறை) அருள் அவர்களுக்கு கிட்டும் நரகிலிருந்து வெளியேற்றப் பட்டு சொர்க்கத்தின் வாசல்களில் போடப்படுவார்கள்.

சொர்க்க வாசிகள் அவர்கள் மீது தண்ணீரை தெளிப்பார்கள். வெள்ளத்தில் அடித்து வரப்படும் (இலை, தழை, போன்றவை) பசுமையடைவதுபோல் இவர்கள் பசுமையடைவார்கள். பின்னர் சொர்க்கத்தில் நுழைவார்கள் என்று நபி அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர் நூல் திர்மிதி.

இது முன் சொல்லப்பட்ட ஹதீஸிர்க்கு முரண்பாடாக உள்ளது. அதில் எந்த பாவம் செய்தாலும் சொர்க்கம் செல்லலாம் என்று மாத்திரமல்ல. நரகத்தில்விடாமல் காப்பது அல்லாஹ்வின் கடமை என்றும் பார்க்கிறோம். ஆனால் அல்லாஹ்வின் கடமையை மீறியும் இங்கு சிலர் நரகில் தள்ளப் படுகிறார்கள். அல்லாஹ் கடமையில் தவறிவிட்டார் என்று சொல்லலாமா? இரண்டாவது காரியம் எந்த பாவம் செய்தாலும் பரவாயில்லை கடைசியாக சொர்க்கம்போய் சேரலாம். இந்த ஹதீஸின் பிரகாரம் தங்களுடைய பாவங்களுக்கான தண்டனை அவர்கள் அனுபவித்து தீர்த்தபிறகு அல்லாஹ் அவர்களை சொர்க்கத்தில் ஏற்றுக்கொள்கிறார். ஆதலால் சொர்க்கம் அல்லாஹ் கொடுத்தான் என்று சொல்லமுடியாது. காரணம் ஒவ்வொருவரும் தங்கள் பாவங்களுக்கு தண்டனையைப்பெற்று அனுபவித்துவிட்டுதான் சொர்க்கத்திற்கு வந்துள்ளார்கள். எனவே பாவத்திற்கு தண்டனை பெற்றபிறகு அல்லாஹ் கருணை காட்டினார் என்று எப்படி சொல்லமுடியும்?

இதுவரையில் நாம் பார்த்த காரியத்திலிருந்து இஸ்லாத்தில் பாவபரிகாரம் என்பது **1.** தாங்கள் செய்யும் கிரியைகள் **2.** தாங்கள் செய்யும் தர்மங்கள். **3.** பெரிய பாவங்களிலிருந்து விலகுவது **4.** அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்டு பெற்றுக்கொள்வது **5.** அல்லாஹ்வுக்கு தங்களுடைய பொருட்களை கொடுத்துப் பெற்றுக்கொள்வது. **6.** தொழுகை மூலம் பெற்றுக்கொள்வது **7.** நோன்பு நோக்குவது **8.** ஒரு சில போர்களில் கலந்து கொள்வது **9.** எவ்வளவு தீமை செய்கிறோமோ அதைக்காட்டிலும் அதிகமாக நன்மை செய்வது **10.** பெற்றோருக்கு நன்மை செய்வது **11.** மனிதர்களிடம் யாசியாமலிருப்பது **12.** அல்லாஹ்விற்கு இணையாக வேறு எதையும் வைக்காமலிருப்பது **13.**

சிலருக்கு நரகதண்டனை கொடுத்து பாவத்திற்கான தண்டனை அனுபவிப்பது போன்றவை அவர்களுக்கு பாவ மன்னிப்பிற்கு காரணமாகி விடுகிறது. இன்னும் சிலரை எந்த காரணமும் இல்லாமலேயே அல்லாஹ் விரும்பினால் மன்னித்துவிடுவார். இதுவுமல்லாமல் ஹிஜ்ரத்தும், ஹஜ்ஜும் பாவத்தை அழித்துவிடும் என்று முஸ்லீம், 192–ல் பார்க்கலாம்.

இங்கு நாம் கவனிக்கவேண்டிய ஒரு காரியம் மனிதனுடைய பாவ பரிகாரத்திற்கு அல்லாஹ் எதையுமே செய்ததில்லை. மனிதர்கள்தான் தங்களுடைய முயற்சியினால் ஒவ்வொரு காரியமும் செய்துகொள்ள வேண்டும். ஆனால் ஒரு பேரீச்சம் பழத்தின் துண்டு எப்படிதான் பாவத்திற்குப் பரிகாரம் ஆகும் என்று கேட்டால் அதற்குப் பதில் கிடையாது. மனிதனுடைய பாவங்கள் நீதிமானாகிய அல்லாஹ் மன்னிக்க வேண்டுமானால் அதற்காக அவர் என்னதான் செய்தார் என்று சொல்லவேண்டாமா. முழு குர்–ஆனையும் அங்கீகரிக்கப்பட்ட ஹதீஸிகளும் அங்கீகரிக்கப்படாத ஹதீஸிக்கும் படித்துப் பார்த்தாலும், மனிதனுடைய பாவங்கள் மன்னிக்கப் படுவதற்காக அல்லாஹ் ஏதாகிலும் செய்ததாக பார்க்க முடியவில்லை. இப்போதுதான் பரிசுத்த வேதாகமம் கூறும் வசனத்தினுடைய பாவ மன்னிப்பின் மகிமை விளங்குகிறது.

“அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப் பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு தம்முடைய குமாரனைப்பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தை போக்கும் பலியாகவும் அனுப்பி மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்” (ரோம.8:3).

உளு செய்யும்போது பாவங்கள் கழுவப்படும்.

அல்லாஹீவின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஒரு முஸ்லீமான அல்லது முஃமினான (இறை நம்பிக்கை கொண்ட) அடியார் அங்க தூய்மை (உளு) செய்யும்போது முகத்தை கழுவினால் கண்களால் பார்த்து செய்த பாவங்கள் அனைத்தும் (முகத்தை கழுவிய) நீருடன் அல்லது நீரின் கடைசி துளியுடன் முகத்திலிருந்து வெளியேறுகின்றன. அவர் கைகளைக் கழுவும்போது கைகளால் பற்றிச்செய்திருந்த பாவங்கள் அனைத்தும் (கைகளைக் கழுவிய) தண்ணீருடன் அல்லது தண்ணீரின் துளியுடன் வெளியேறுகின்றன. அவர் கால்களைக் கழுவும்போது கால்களால் நடந்து செய்த பாவங்கள் அனைத்தும் (கால்களைக் கழுவிய) நீருடன் அல்லது நீரின் கடைசி துளியோடு வெளியேறுகின்றன. இறுதியில் அவர் பாவங்களிலிருந்து தூய்மை அடைந்தவராக (அந்த இடத்திலிருந்து) செல்கிறார். இதை அபூஹீரைரா (ரல்) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் நூல் – முஸ்லீம்.



இவ்விதமாகிய அநேக காரியங்களை இன்னும் பார்க்கமுடியும்.

ஆண்டவராகிய இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்று 1 யோவா.1:7ல் பரிசுத்த வேதத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இதை ஏற்றுக்கொள்ளாதவர்கள். தொட்டியில் நிரப்பி வைத்திருக்கிற தண்ணீரால் கழுவினால் பாவங்கள் போய்விடும் என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட அநேக காரியங்கள் உண்டு சிந்திக்கும் திறன் உள்ள மனிதனுக்கு இதுவே போதுமானதாகும்.

இதுவரையில் மரணத்திற்குமுன்பு பாவபரிகாரம் என்ன என்று பார்த்தோம். அடுத்தபடியாக மரணத்திற்கு பிறகு பாவ பரிகாரம் உண்டா அதைக்குறித்து இஸ்லாம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

## III. இஸ்லாத்தில் மரணத்திற்குப் பிறகு மனிதனுடைய நிலைமை என்ன?

மரணத்திற்குப் பிறகு கப்ருவில் மனிதன் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறான் என்பது இஸ்லாமியர்களின் நம்பிக்கையாகும். ஒரு சில ஆதாரங்கள் மட்டும் இங்கு காண்பிக்கிறேன்.

1. மய்யத்து அடக்கம் பண்ணப்பட்டதும் விசாரனை நடக்கும். உஸ்மான் அறிவித்ததை அபூதாவுத்த என்கிற நூலில் எழுதப்பட்டுள்ளதை பார்ப்போம்.

மய்யித்தை அடக்கம் செய்தபின் நபி அவர்கள் அங்கு (சிறிது நேரம்) இருப்பார்கள். அப்போது “உங்கள் சகோதரருக்காக பாவ மன்னிப்பு தேடுங்கள். அவருக்கு உறுதியைத் தரும்படி கேளுங்கள். ஏனெனில் இப்போதுஅவர் விசாரிக்கப்படுகிறார்” என்பார்கள்.

இந்த ஹதீஸின் அடிப்படையில் கப்ருவில் மனிதன் விசாரிக்கப்படுகிறான் என்றுள்ளது. இரண்டாவது காரியம் மரித்துப்போன மனிதனுக்காக உயிரோடு இருப்பவர்கள் பாவமன்னிப்பு கேட்க வேண்டும் என்றுள்ளது மரிக்கும்போது அவர் பாவியாகதான் மரித்திருக்கிறான் பாவ மன்னிப்பின் நிச்சயம் பெறவில்லை. இதற்கு ஆதாரமாக இன்னும் அநேக ஹதீஸ்கள் பார்க்கமுடியும் அதில் சிலது மட்டும் இங்குப் பார்க்கலாம்.

ஆயிஷா அறிவித்ததை முஸ்லீம் என்கிற நூலில் எழுதப்பட்டுள்ளதைப் பார்ப்போம்.

ஒரு முறை நபி அவர்களுக்கு என்னிடம் தங்கும் முறை வந்தபோது நபி அவர்கள் பகீஃ (என்ற கபரஸ்தானு)க்கு இரவின் கடைசி நேரம் சென்று (இந்த) வீட்டிலுள்ள முஃமினான கூட்டத்தினர்களே உங்கள்மீது சாந்தி உண்டாகட்டும்! உங்களுக்கு வாக்களிக்கப்பட்டது (மரணம்) உங்களிடம் வந்துவிட்டது. குறிப்பிட்ட காலத்தில் நாளை (பிரதிபலனை) பெற்றுக் கொள்வீர்கள். அல்லாஹ் நாடினால் நாங்கள் உங்களைச் சந்திக்கக் கூடியவர்களே! அல்லாஹ் பகீஃ கர்கத் வாசிகளை மன்னிப்பாயாக'' என்று கூறினார்கள். இங்கு நபி அவர்களே மரித்தவர்களுக்காக பாவமன்னிப்பு கேட்டுப் பிரார்த்தனை செய்வதை பார்க்கமுடியும். மரித்தவர்கள் முஃமினுகள் என்பதை கவனிக்கவேண்டும். ஆனால் அவர்கள் மரிக்கும்போது அவர்களுடைய பாவங்களில் மரித்துள்ளார்கள். அவர்களுடைய பாவங்கள் முன்பே நாம் பார்த்த ஏதேனும் விதத்தில் மன்னிக்கப்பட்டிருந்தால் நபி அவர்கள் இப்பொழுது ராத்திரியில் அவர்களுடைய கப்ருங்கல் போய் அவர்களுடைய பாவமன்னிப்புக்காக ஜெபிக்கவேண்டியதில்லை. மரித்தவர் களுக்காக பிரார்த்தனை செய் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப் படவேண்டுமென்று நபி அவர்கள் சொல்லியிருக்கிறார். மாத்திரமல்லாமல் அவரும் பாவமன்னிப்புக்காக பிரார்த்தனை செய்துள்ளார். இதிலிருந்து ஒரு காரியம் விளங்குகிறது. என்னதான் அல்லாஹ்வை நம்பியிருந்தாலும் என்னதான் நல்லறம் செய்திருந்தாலும் மரிக்கும்போது பாவியாகத்தான் மரிக்கிறான். மனிதன் உயிரோடிருக்கையில் பாவங்கள் மன்னிக்கப்பட வில்லை. இது ஹதீஸில் சொல்லப்பட்டுள்ளது. குர்–ஆனில் இதற்கு ஆதாரம் கிடையாது என்று யாராகிலும் சொல்லக்கூடும் என்பதால் குர்–ஆனிலிருந்து சில வசனங்களை ஆதாரமாக பார்ப்போம்.

குர்–ஆன் 59:10 மேலும் இந்த முன்னோடிகளுக்குப் பிறகு வருகின்ற மக்களுக்கு (உரியதாகும் அந்த செல்வம்) அவர்கள் கூறுவார்கள் எங்கள் அதிபதியே! எங்களையும் எங்களைவிட முந்தி நம்பிக்கை கொண்டுவிட்ட எங்கள் சகோதரர்களையும் மன்னித்தருள்வாயாக! மேலும் எங்கள் உள்ளங்களில் நம்பிக்கையாளர்களின் பேரில் எந்தக் குரோதத்தையும் உண்டாக்காதே! எங்கள் அதிபதியே! நிச்சயமாக நீ மிகவும் பரிவுடையவ னாகவும் பெரும் கிருபையாளனாகவும் இருக்கின்றாய் **I.F.T.**யில் இந்த வசனத்திற்குக் கொடுத்திருக்கும் விளக்கம் இங்கு எழுதுகிறேன். பக்கம் 952,



இந்த வசனத்தில் முஸ்லீம்களுக்கு முக்கியமான ஒழுக்கபோதனை வழங்கப்பட்டுள்ளது. அதாவது, ஒரு முஸ்லீம் எந்த ஒரு முஸ்லீமின் மீதும் தம் உள்ளத்தில் குரோதம் கொள்ளக்கூடாது. தமக்கு முன்னர் சென்றுவிட்ட முஸ்லீமுகளுக்காக பாவமன்னிப்பு கோரி வேண்டுதல் செய்துகொண்டே இருக்கவேண்டும். அவர்கள் மீது சாபமிடுவதோ. குற்றம் சாட்டுவதோ கூடாது. ஆக மொத்தத்தில் இந்த உலகில் எப்படி வேண்டுமானாலும் வாழலாம். மரணத்திற்குப் பிறகு யாராவது அவர்களுக்காக வேண்டுதல் செய்தால் போதும். பாவமன்னிப்பு கோரிகொண்டே இருக்கவேண்டும் என்பதால் எந்த முஸ்லீமும் பாவியாகதான் மரிக்கிறான் என்று சொல்லவேண்டும்.

இறந்து விட்டவர்களுக்காக பிரார்த்தனை செய்வது மட்டுமல்லாமல், அவர்களுக்காக தர்மம் செய்தால் இறந்தவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்.

அபு ஹீரைரா அறிவித்ததாக, முஸ்லீம் மற்றும் இப்னுமாஜா ஆகிய நூல்களில் எழுதியுள்ளதைப் பார்க்கலாம்.

ஒரு மனிதர் நபி அவர்களிடம் எனது தந்தை இறந்துவிட்டார். அவர் (சில) பொருளைவிட்டுச் சென்றுள்ளார். ஆனால் அதை (என்ன செய்ய வேண்டுமென) வஸிய்யத் செய்யவில்லை. எனவே அவர் சார்பாக நான் தர்மம் செய்தால் அவருடைய (பாவம்) அழிக்கப்படுமா? என்று கேட்டார். ஆம் என்று நபி அவர்கள் கூறினார்கள். இப்படியாக இறந்தவர்களுக்காக நோபு, ஹஜ் தொழுகை என பல செய்தால் அவர்களுக்கு பாவமன்னிப்பும் நன்மையும் கிடைக்கும் என்று மற்றும் பல ஹதீஸிலும் கூறப்பட்டுள்ளது. இதையெல்லாம் பார்க்கும்போது, இறந்தவர்களுக்காக உயிரோடிருக்கிறவர்கள் செய்கின்ற கிரியைகளினால் பலன் கிடைக்கும் என்பதால்தான் இன்று அநேகர் பாவ செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்லலாம் அல்லவா? யாஸின் என்கிற குர்–ஆனிலே அதிகாரம் படித்தால் இறந்தவர்களுக்கு நன்மை கிடைக்கும் என்று முஹம்மது சொன்னதாக, பல ஹதீஸிலும் பார்க்கமுடியும்.

ஆனால் பரிசுத்த வேதம் தெளிவாக சொல்வதைக் கவனியுங்கள்.

''அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே...'' (எபி.9:27). மனிதன் இறந்துவிட்டபிறகு அவனுக்காகச் செய்யும் எந்த கிரியையும் அவனுக்கு உதவாது. அப்படி உயிரோடிருக்கிறவர்கள் செய்வதற்கான பலன் மரித்தவர்களுக்குக் கிடைக்கும் என்றால் அது தேவ நீதியும் ஆகாது.

**IV. இஸ்லாத்தில் மரித்தவர்களின் நிலை**

1. மய்யித் அடக்கம் பண்ணும் கபரில் அவர்கள் தங்கியிருப்பார்கள் என்றும் ஒருவன் கலிமா சொல்லிவந்தவனாக இருந்தால் அவனுடைய கப்ர் 70X70 முழமாக விரிவுப்படுத்தப்பட்டு அதில் ஒளியும் ஏற்படுத்தி தூங்கிக் கொண்டிருக்க சொல்வாராம் இந்த கலீமா (அல்லாஹ்தான் வணக்கத்திற் குரியவர், முஹம்மது அல்லாஹ்வின் தூதர்) சொல்லாதவர்களுடைய கப்ருவில் போய் மலக்குகள் கேட்பார்கள். அதற்கு அவர்கள் சொல்லும் பதில் அல்லாஹ்வை ஏற்றுக்கொள்ளும் கலீமா நாங்கள் சொல்லவில்லை என்று சொல்வார்கள். அப்பொழுது அந்த மலக்குகள் பூமியைப்பார்த்து அந்த கப்ருவை நெருக்கும்படி சொல்வார்கள். உடனடியாக பூமி அந்த கப்ருவை நெருக்கிவிடும். அதன்மூலமாக அவர்களுடைய விலா எலும்பும் இடம்மாறி அதில் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் என்று முஹம்மத் அவர்கள் சொன்னதாக அபுஹீரைரா அறிவிக்கும் செய்தி திர்மிதி என்கிற நூலில் பார்க்கமுடியும்.

2. ''கப்ரில் முனாஃபிக்) இரும்புச் சம்மட்டியால் கடுமையாக அடிக்கப் படுவான் அப்போது அவன் எழுப்புகின்ற ஓசையை மனிதர்களையும் ஜீன்களையும் தவிர மற்ற அனைத்து உயிரினங்களும் செவிமடுக்கும்'' என்று முஹம்மது அவர்கள் சொன்னதாக அனஸ் என்பவர் அறிவிக்கும் செய்த புகாரி மற்றும் முஸ்லீம் ஆகிய நூல்களில் பார்க்கலாம்.

3. பொய் சொன்னவனுக்கு கொக்கியினால் வாயில் குத்திக் கிழிக்கும் தண்டனையும் தாடையை சிதைக்கும் தண்டனையும் குர்–ஆன் கற்று கொண்டபிறகும் இரவில் தூங்கிவிட்டு அதை கடைப்பிடிக்காதவனுக்குத் தலை உடைக்கும் தண்டனையும், விபசாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு நெருப்பில் வேதனைப்படும் தண்டனையும், வட்டி வாங்கினவர்களுக்கு இரத்த ஆற்றில் கற்களால் அடிக்கப்படும் தண்டனையும் கொடுக்கப்படும் என்று முஹம்மத் அவர்கள் சொன்னதாக ஹமுராபின் ஜீன்துப் அறிவிக்கும் செய்தி புகாரி என்கிற நூலில் பார்க்கமுடியும் (பெரிய ஹதீஸ் என்பதால் அப்படியே எடுத்தெழுதவில்லை).

4. வேதனை செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் இருவருடைய கப்ருகளைக் கடந்து நபி அவர்கள் சென்றபோது இவ்விருவரும் வேதனை செய்யப் படுகிறார்கள். ஆனால் மிகப்பெரும் பாவத்திற்காக வேதனை செய்யப் படவில்லை. ஒருவர் சிறுநீர் கழித்தப்பின் சுத்தம் செய்யாதவர். இன்னொருவர் கோள் சொல்லி திரிந்தவர்'' என்று நபி அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் இப்னு அப்பாஸ் நூல் புகாரி.



இன்னும் அநேக காரியங்களைக் காணமுடியும். ஆனால் ஒரு மனிதன் சிந்திக்கிறவனாக இருந்தால் இதுவரை எழுதினதே போதுமானதாகும். இதுவரையில் உலகில் எங்கும் யாருடைய கப்ருவும் விரிவடைந்ததாகவோ அல்லது நெருக்கப்பட்டதாகவோ எந்த ஆதாரமும் இல்லை. ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான ஹதீசுகளும், குர்–ஆன் வசனங்களும் தான் இதுவரையில் நாம் பார்த்தது. பரலோகம் செல்வதற்கு என்னவழிஎன்று கேட்டால் உறுதியான ஒரு பதில் இஸ்லாத்தில் இல்லை. இல்லவே இல்லை என்பதை நன்கு புரிந்துகொண்டிருப்பீர்கள்.

**V. இஸ்லாத்தில் நியாயத்தீர்ப்பு எப்படி?**

நியாயத்தீர்ப்பைக் குறித்து குர்–ஆன் மற்றும் ஹதீஸில் சொல்லப் பட்டுள்ள சில வசனங்களை இங்குப் பார்ப்போம்.

1. அபு ஹீரைரா அறிவித்ததாக புகாரி மற்றும் முஸ்லீம் ஆகிய நூல்களில் எழுதப்பட்ட ஒரு செய்தி இங்குப் பார்ப்போம்.

அல்லாஹ் மனிதர்களை (மறுமை மன்றத்தில்) ஒன்று கூட்டி (உலகத்தில்) யார் எதை வணங்கிக்கொண்டிருந்தார்களோ அதைப்பின் தொடர்ந்து செல்லட்டும் என்பான். ஆகவே சூரியனை வணங்கி கொண்டிருந்தவர்கள் (சூரியனைப் பின் தொடர்ந்து செல்வார்கள். சந்திரனை வணங்கி கொண்டிருந்தவர்கள் (அதைப்) பின் தொடர்ந்து செல்வார்கள். ஸைத்தான்களை வணங்கிக்கொண்டிருந்தவர்கள் (அவற்றை) பின்பற்றி செல்வார்கள். இறுதியில் இந்த சமுதாயத்தார் மட்டும் எஞ்சியிருப்பார்கள். அவர்களிடம் நயவஞ்சகர்களும் இருப்பார்கள். அப்போது இறைவன் அவர்கள் அறியாத தோற்றத்தில் அவர்களிடம் வந்து நான்தான் உங்கள் இறைவன்'' என்பான். அப்போது அவர்கள் உன்னிடமிருந்து அல்லாஹ்விடம் எங்கள் இறைவன் நாங்கள் பாதுகாப்பு கோருகிறோம். எங்கள் இறைவன் எங்களிடம் வரும் வரை நாங்கள் இங்கேயே இருப்போம். எங்கள் இறைவன் எங்களிடம் வந்தால் அவர்கள் அறிந்த தோற்றத்தில் அவர்களிடம் வந்து அவனை நாங்கள் அறிந்து கொள்வோம் என்பர். இங்கு இறைவனை இவர்கள் எல்லோரும் இதற்குமுன் நேரில் பார்த்திருக்கிறார்கள் என்பதை கவனிக்க வேண்டும். அப்போது இறைவன் ''நானே உங்கள் இறைவன்'' என்பான். அதற்கு அவர்கள் ''நீயே எங்கள் இறைவன்'' என்று கூறிவிட்டு அவனை பின்தொடர்ந்து செல்வார்கள். அங்கு நரகத்தின் மீது பாலம் அமைக்கப்படும்.

நபி அவர்கள் கூறினார்கள்; நானே (அந்த பாலத்தைக்) கடப்பவர்களில் முதல் ஆளாக இருப்பேன். அப்போதைய நிலையில் இறை தூதர்கள் அனைவரின் பிரார்த்தனையும் "அல்லாஹ்வே காப்பாற்று காப்பாற்று" என்பதாகவே இருக்கும். அந்தப் பாலத்தில் கொக்கிகள் மாட்டப்பட்டிருக்கும். அவை கருவேல மரத்தின் முட்களைப் போன்றிருக்கும் "கருவேல மர முள்ளை நீங்கள் பார்த்ததில்லயைா? என்று கேட்டார்கள்." ஆம் (பார்த்திருக்கிறோம்) "அல்லாஹ்வின் தூதரே" என்று பதிலளித்தார்கள். (தொடர்ந்து) நபி அவர்கள் கூறினார்கள்; அந்த கொக்கிகள் கருவேல மரத்தின் முள்ளை போன்று இருக்கும். ஆயினும் அதன் பருமனை அல்லாஹ்வே தவிர வேறொருவரும் அறியமாட்டார்கள். அப்போது அந்த கொக்கிகள் மக்களை அவர்களின் செயல்களுக்கேற்ப கவ்விப்பிடிக்கும்.

அவர்களில் (இறை மறுப்பு உள்ளிட்ட) தன் தீய செயல்களால் அழிந்துபோனவரும் இருப்பார். இறை நம்பிக்கை இருந்தாலும் பாவம் செய்த காரணத்தினால் மூர்ச்சையாகிய பிறகு பிழைத்துக்கொள்பவரும் இருப்பர். இறுதியாக இறைவன் தன் அடியார்களிடையே தீர்ப்பு வழங்கி முடித்தபின் வணக்கத்திற்குரியவர்கள் அல்லாஹ்வைத் தவிர வேறொருவரும் இல்லை என்று உறுதி கூறியவர்களில் தான் நாடிய சிலரை நரகத்திலிருந்து வெளியேற்ற விரும்புவான். அப்போது அவர்களை வெளியேற்றுமாறு வானவர்களுக்கு ஆனையிடுவான். வானவர்கள் அவர்களை சஜ்தாவின் (சிரவணக்கத்தில்) அடையாளங்களை வைத்து இனம் கண்டுக் கொள்வார்கள். (ஏனெனில்) அல்லாஹ் நரகத்திற்கு மனிதனை அவனிலுள்ள சஜ்தாவின் அடையாளத்தில் தீண்டகூடாததெனத் தடை விதித்துள்ளான். ஆகவே வானவர்கள் அவர்களை (நரகத்திலிருந்து) வெளியேறுற்றுவார்கள்.

இந்த ஹதீஸ் என்ன சொல்கிறதென்றால், இறை நம்பிக்கை கொண்ட அனைவரும் நரகத்திற்கு மேல் உள்ள ஒரு பாலம் வழி கடந்து செல்ல வேண்டும். அப்போது அவர்களில் பாவம் செய்தவர்கள் அழிந்துபோவார்கள் தப்பித்துக்கொள்பவர்கள் நபியும்கூட தூதர்களுடைய பிரார்த்தனை மூலம்தான் தப்பித்துக்கொள்கிறார்கள். இங்கு நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான காரியம் என்னவென்றால் இறை நம்பிக்கை இல்லாதவர்கள் நரகம் போவதில்லை, அவர்கள் தாங்கள் வணங்கிக்கொண்டிருந்த பொருட்கள், சூரியன், சந்திரனிடம்போய் சேருவார்கள். சூரியனும், சந்திரனுமெல்லாம் நரகம் போகும் என்று எங்கும் சொல்லப்படவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். இறை நம்பிக்கை கொண்டவர்கள் நரகம் போகும்போது கடவுள் உண்டாக்கினதான சில பொருட்களை வணங்கியவர்கள்.



அந்த நரகத்திலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள். மாத்திரமல்லாமல், கடவுள் இல்லை என்று சொல்லி எந்த பொருளையும் வணங்காதவர்களும் இந்த பாலம் கடக்கத் தேவையில்லை. நரகம் போக வேண்டியதில்லை. இது எப்படி நீதியாகும் என்று தெரியவில்லை.

நியாயத்தீர்ப்பு எப்படி என்று அநேக இடங்களில் சொல்லப்பட்டுள்ளது. மற்றும் ஒரு காரியத்தையும் பாருங்கள்.

**2.** குர்–ஆன் **56**ஆம் அதிகாரம் தொடங்குவதே முடிவில் நடக்கப்போகும் காரியங்கள் என்றுதான் (அந்நாளில்) நீங்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிந்துவிடுவீர்கள் (முதலாவது) வலது பக்கத்திலுள்ள இவர்கள் யார்? (என்பதை அறிவீர்களா? அவர்கள் மிக பாக்கியவான்கள்) (இரண்டாவது) இடப்பக்கத்திலுள்ளவர்கள் இடப்பக்கத்திலுள்ள இவர்கள் யார்? (என்பதை அறிவீர்களா? இவர்கள் மிகவும் துரதிஷ்டசாலிகள்) (மூன்றாவது) முன் சென்றுவிட்டவர்கள் (இவர்கள் நன்மையான காரியங்களில் மற்ற யாவரையும் விட)முன் சென்றுவிட்டவர்கள். இவர்கள் தங்கள் (இறைவனுக்கு) மிக்க நெருங்கியவர்கள். இவர்கள் இம்பம் தரும் சுவனபதியில் இருப்பார்கள். (இவர்களுடன்) முதலாவது வகுப்பாரில் ஒரு பெருங்கூட்டத்தாரும். பின்னுள்ளோரில் ஒரு சொர்ப்பத் தொகையினரும் இருப்பார்கள்.

குர்–ஆனிலே இந்த வசனங்கள் முன்பே நாம் பார்த்த ஹதீஸிற்கு முரண்படுவதை இங்குப் பார்க்கமுடியும். முஹம்மத் அவர்கள் கூறினது உண்மையா, குர்–ஆனில் உள்ளது உண்மையா? இது இரண்டும் முஹம்மது அவர்கள்மூலம் அவருடைய தோழர்களுக்கு கிடைத்ததாகும். முதலாவது நாம் பார்த்த ஹதீஸில் இஸ்லாமிர்கள் அல்லாதவர்கள் அவர்கள் வணங்கி வந்த தெய்வங்கள் என்று சொல்லக்கூடிய பொருட்களிடம் அனுப்பி வைத்தபிறகு, இஸ்லாமியர்கள் அனைவரையும் ஸ்ராத்து பாலம் வழி கடக்கச் செய்கிறார்கள். இதில் அநேகர் பாலத்தில் உள்ள கொக்கிகளில் மாட்டி நரகத்தில் விழுவதும், அதிலும் ஒரு சிலர் அல்லாஹ்வின் கட்டளைமூலம் சொர்க்கம் செல்வதும் பார்க்கமுடியும்.

ஆனால் குர்–ஆனில் நாம் படித்த வசனங்களில் இஸ்லாமியர்கள் அனைவரையும் ஒரிடத்தில் சேர்த்தபிறகு அவர்களை மூன்று பிரிவுகளாக பிரித்துவிடுகிறார்கள். இதில் முன் சென்றுவிட்டவர்கள். சொர்க்கம் செல்ல தகுதியுடையவர்கள் என்பதைத் தெளிவாக புரிந்துகொள்ளமுடியும். இவர்களுடன் பாக்கியவான்கள் என்கிற கூட்டத்தில் சிலர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் (பாக்கியசாலிகள் எல்லோருக்கும் சொர்க்கம்

கிடைக்கவில்லை என்பதை அறிந்துகொள்ள வேண்டும்). அதுமட்டுமல்லாமல் துரதிஷ்டசாலிகள் என்கிற கூட்டத்திலும் சிலர் சேர்த்துக்கொள்ளப்பட்டு சுவனபதி (சொர்க்கம்) செல்கிறார்கள். இதிலிருந்து நாம் புரிந்துகொள்வது என்ன, முழு நம்பிக்கையாளர்களையும் ஒன்று சேர்த்து மூன்றாக பிரித்துவிடும். ஒவ்வொரு கூட்டத்தினருக்கும் அடிப்படை தகுதி என்று ஏதும் கிடையாது. இருக்கின்ற கூட்டத்தினரை மூன்றாக பிரித்துவிடும். இதில் யார் யார், எந்த எந்தக் கூட்டத்தில் சேருவதோ அது அவர்களுடைய பாக்கியம். என்றும் துரதிஷ்டம் என்றும் சொல்லவேண்டியதுதான். இப்படி ஒரு நியாயத் தீர்ப்பு நீதியுள்ளதா என்று சிந்தித்து பாாக்கவேண்டும்.

தொடர்ந்து மூன்றாவதாக ஒரு நியாயத்தீர்ப்பை காண்பிக்கிறேன் கவனியுங்கள்.

3. அபுஸயீதுக குத்ரி என்பவர் அறிவித்ததாக புகாரி என்னும் நூலில் உள்ள ஒரு செய்தி.

அல்லாஹ் (மறுமைநாளில்) ஆதம் அவர்களை அழைப்பான். இதோ வந்து விட்டேன். கட்டளையிடக் காத்திருக்கிறேன். நல்லது அனைத்தும் உன் கரங்களில் என்று அவர் பதில் கூறுவார். அப்போது அல்லாஹ் நீங்கள் நரகத்திற்குச் செல்ல விரும்புபவர்களை (மற்றவர்களிலிருந்து) தனியாக பிரித்திடுங்கள் என்று கூறுவான். எத்தனை நரகவாசிகளை? என்று அவர் கேட்பார். அதற்கு அவன் ஒவ்வொரு ஆயிரம் பேரிலிருந்தும், தொள்ளாயிரத்து தொன்னூற்றொன்பது பேரை (நகரத்திற்குப் பிரித்தெடுங்கள்) என்று பதிலளிப்பார் என்று நபி அவர்கள் கூறினார்கள்.

இதன் அடிப்படையில் யார் என்னதான் செய்தாலும், எப்படிதான் வாழ்ந்தாலும் ஆயிரத்தில் ஒருவர்தான் சொர்க்கம் செல்லமுடியும். மீதி 999 பேரும் நரகத்தில் போக வேண்டியதுதான். மட்டுமல்லாமல் இந்த ஒருவர் யார் என்பதை முடிவு செய்யும் பொருப்பு ஆதாமிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாம் அல்லாஹ்வை நம்பி என்ன பிரயோஜனம் இதைப் படிக்கிற இஸ்லாமியர்கள் தான் பதில் சொல்லவேண்டும்.

நியாயத்தீர்ப்பின் அடுத்தவழிமுறை என்ன என்பதையும் பாருங்கள்.

4. யாரேனும் தம் சகோதரர்களுக்கு மானம் அல்லது பொருட்கள் சம்மந்தமாக அநீதி இழைத்திருந்தால், தங்க காசுகளோ, வெள்ளிக் காசுகளோ பயனளிக்காத நாள் வரும் முன் இன்றே பாதிக்கப்பட்டவரிடம் பரிகாரம் தேடிக்கொள்ளட்டும். இவரிடம் ஏதேனும் நல்லறம் இருந்தால், இவர் செய்த அநீதியின் அளவுக்கு நல்லறம் எடுக்கப்படும் (பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்படும்) இவரிடம் நன்மைகள் ஏதுமில்லாவிட்டால் இவரால் பாதிக்கப்பட்டவரின் தீமைகள் எடுக்கப்பட்டு இவர்மேல் வைக்கப்படும்என்று நபி அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்; அபுஹுரைரா, நூல் புகாரி.



அடுத்த ஒரு செய்தி பார்ப்போம்:

''(அனைத்தையும்) இழந்தவன் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா? என்று நபி கேட்டனர்'' ''யாரிடம் காசோ, ஏனைய சொத்துக்களோ இல்லையோ அவர்தான்'' என்று நபி தோழர்கள் கூறினார்கள். அப்போது நபி அவர்கள் ''இழந்தவன் யாரெனில் தொழுகை, நோன்பு, ஜகாத், ஆகிய கடமைகளை நிறைவேற்றிவிட்டு ஒருவனைத் திட்டியவனாகவோ, மற்றவரின் பொருளை சாப்பிட்டவனாக, வேறொருவரின் இரத்தத்தை ஒட்டியவனாக இன்னொருவனை அடித்தவனாக மறுமைநாளில் வருவான். பாதிக்கப்பட்ட ஒவ்வொருவனுக்கும் இவனது நன்மைகள் வழங்கப்படும். கணக்குத் தீர்வதற்கு முன்னால் இவனது நன்மைகள் முடிந்துவிட்டால் பாதிக்கப் பட்டவர்களின் பாவங்கள் எடுக்கப்பட்டு இவன்மேல் வீசப்படும். பின்னர் நரகத்தில் இவன் வீசப்படுவான் என்று விளக்கினார்கள்.'' அறிவிப்பவர் அபுஹுரைரா நூல்கள் முஸ்லீம், திர்தி.

இந்த இரண்டு செய்திகளிலிருந்து நாம் புரிந்துகொள்வது என்ன? ஒருவர் எவ்வளவு வேண்டுமானாலும் தீமை செய்யலாம். ஆனால் அதற்கு அதிகமாக நன்மைகள் செய்திருக்கவேண்டும். இது ஒரு பக்கம் இருக்க மற்றொருபக்கம் என்ன சொல்கிறது. ஒருவர் எவ்வளவு பாவங்கள் வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் யாராவது நல்லறம் செய்தோர்மூலம் உபத்திரவப் பட்டால் போதும் அதின் மூலமாக எதிர்தரப்பினர் செய்த நன்மைகள் இந்த பாவிக்குக் கிடைத்துவிடும்.

இங்கு நாம் இரண்டு காரியங்கள் கவனிக்கவேண்டும்.

முதல் காரியம்: ஒரு பாவியான மனிதனுக்கு ஒரு நல்லவன் செய்த உபத்திரவங்கள் அவனுக்கு பாவபரிகாரமாகி விடுகின்றன.

இரண்டாவது காரியம்: ஒரு நல்லவன் ஒரு பாவியானவனுக்கு ஏதேனும் தீமை செய்துவிட்டால், அந்த பாவியினுடைய பாவங்கள் இவன் சுமக்க வேண்டும். முன்பே நாம் பார்த்த மூன்று விதமான நியாயத்தீர்ப்பிலிருந்து இது மாறுபட்டதாக உள்ளது. முன்பே பார்த்த நியாயத்தீர்ப்பெல்லாம் எப்படி நியாயம் என்று சொல்லமுடியாமலிருந்ததோ அதைப்போலவே இதையும்

நியாயத்தீர்ப்பு என்று பகுத்தறிவு உள்ள ஒருவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அடுத்து மற்றொரு நியாயத்தீர்ப்பைப் பார்ப்போம்.

**5.** மறுமை நாளில் மக்கள் முன்னிலையில் அல்லாஹ் மனிதனை விடுதலை செய்வான். அவனது குற்றங்கள் பதிவு செய்யப்பட்ட தொன்னூற்றொன்பது ஏடுகள் விரிக்கப்படும். ஒவ்வொரு ஏடும் பார்வை எட்டும் தொலைவுடையதாக இருக்கும். இவற்றில் எதையாகிலும் நீ மறுக்கிறாயா? நம்பகமான எனது எழுத்தார்கள் உனக்கு அநியாயம் செய்துவிட்டார்களா? என்று இறைவன் கேட்டான். இல்லை இறைவா என்று அவன் கூறுவான். அப்போது இறைவன் நிச்சயமாக உனக்கு என்னிடத்தில் நல்லதே கிடைக்கும். இன்று எந்த அநீதியும் கிடையாது என்று கூறுவான். பிறகு சிறிய துண்டுச் சீட்டு ஒன்று வெளிப்படுத்தப்படும். அதில் அஷஹது அன்லாயீலாஹ இல்லல்லாஹு என்று எழுதப்பட்டிருக்கும். உனது எடையை பார் என்று இறைவன் கூறுவான். அதற்கு அம்மனிதன், இறைவா அந்த துண்டு சீட்டு அந்த ஏடுகளுக்கு எப்படி நிகராகும்? என்று கேட்டான். உனக்கு எந்த அநியாயமும் செய்யப்படாது என்று இறைவன் கூறுவான். அந்த ஏடுகள் அனைத்தும் ஒரு தட்டிலும் அந்த துண்டுச் சீட்டு இன்னொரு தட்டிலும் வைக்கப்படும். ஏடுகள் உயர்ந்து துண்டுச் சீட்டு வைக்கப்பட்டத் தட்டு கீழிறங்கும். அல்லாஹ்வின் திருநாமத்திற்கு நிகராக எதுவும் ஆகாது என்று நபி கூறினார்கள். அறிவிப்பவர் அப்துல்லாஹ் பின் அம்ருபின் ஆஸ், நூல் திர்மிதி.

இந்த செய்தியில் ஒருவனுடைய பாவங்களுக்கு பதிலாக அல்லாஹ்வின் நாமம் எழுதப்பட்ட ஒரு ஏடு மறுதட்டில் வைப்பதுமூலம் மனிதனுடைய பாவங்கள் இலேசாக்கப்பட்டு உயர்ந்து போவதைப் பார்க்கமுடியும். ஆனால் அல்லாஹ் மனிதனுடைய பாவங்களுக்காக என்னதான் செய்தார் என்று பார்த்தால் முழு குர்–ஆனிலும், முழு ஹதீசிலும் ஒன்றுமே பார்க்க முடியவில்லை. எந்த அடிப்படைத் தகுதியும் பாராமல் ஒருவருடைய பாவங்கள் அல்லாஹ் மன்னிக்கிறார். இது எப்படி நியாயமாகும். என்பது நாம் யோசிக்க வேண்டும்.

இதே கருத்துடைய ஒரு செய்தியைப் பார்ப்போம்.

முஃமின் இறைவனுக்கு அருகில் கொண்டுசெல்லப்படுவான். இறைவன் தனது நிழலை அவன்மேல் போடுவான். முஃமின் செய்தக் குற்றங்களை குறிப்பிட்டு ‘‘இன்ன இன்ன பாவங்கள் செய்ததை நீ அறிவாயா நான் அறிவேன், நான் அறிவேன் என்று முன்மின் கூறுவான். அப்போது



இறைவன் அக்குற்றங்களை உலகில் நான் மறைத்தேன் இன்று அவற்றை மன்னித்துவிட்டேன் எனக்கூறுவான்’’ என்று நபி கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர், நூல்கள் புகாரி, முஸ்லீம்.

அல்லாஹ் ஒரு நேர்மையான நியாயாதிபதியல்லவா, பாவத்திற்குத் தண்டனை அளிக்காமலிருக்கலாமா. ஒன்று பாவத்திற்கு தண்டனை வழங்கவேண்டும் அல்லது பாவத்திற்கு பரிகாரம் செய்யவேண்டும். இவை இரண்டும் இங்கு நடக்கவில்லை என்பதை சிந்தித்துப்பாருங்கள். இப்படி அநேக செய்திகளும், குர்–ஆன் வசனங்களும் பார்க்கமுடியும். ஆனாலும் ஒரு சில செய்திகளைப் பார்ப்போம்.

**6.** ஒவ்வொருவருக்கும் அவர்கள் பூமியில் செய்த காரியங்கள் எழுதப்பட்ட பதிவேடுக் கொடுக்கப்படும். வலது கையில் பதிவேடு கொடுக்கப்பட்டவன் சொர்க்கத்திற்கும் இடது கையிலும், முதுகுக்குப் பின்னால் பதிவேடு கொடுக்கப்பட்டவர்கள் நரகத்திற்கு போக வேண்டியதுதான். இதைக் குறித்து பின்வரும் குர்–ஆன் வசனங்கள் விளக்குவதைப் பார்க்கலாம். **17:71, 69:19–22, 69:25, 84:10–12, 18:49, 50:16–18.**

இப்போது நாம் பார்த்ததான வசனங்களுக்கு இஸ்லாமிய அறிஞர்கள் விளக்கம் அளிக்கும்போது எப்படி விளக்கம் கொடுக்கிறார்கள் என்றால் யார் யார் சொர்க்கம் செல்லக்கூடியவர்களோ அவர்களுக்கு வலது கையிலும், மற்றவர்களுக்கு இடது கையிலும் பதிவேடு கொடுக்கப்படும். ஆனால் நாம் படித்த குர்–ஆன் வசனங்கள் எதிலும் அப்படி சொல்லப்படவில்லை. அங்கு சொல்லப்பட்டுள்ள காரியம் வலது கையில் பதிவேடு கொடுக்கப்பட்டவர்கள் சுவனபதியிலும் இடது கையிலும் முதுக்கு பின்னாலும் கொடுக்கப்பட்டவர்கள் நரகத்திலும் போவார்கள் என்றுதான், அறிஞர்கள் சொல்லும் விளக்கம் சரியாக வேண்டுமானால், சொர்க்கம் செல்லக்கூடியவர் களுக்கு வலது கையிலும், மற்றவர்களுக்கு இடதுகையிலும், முதுகுக்குப் பின்னாலும் பதிவேடு கொடுக்கப்பட்டதாக எழுதியிருக்கவேண்டும். மட்டுமல்லாமல் இதற்கு ஐந்தாவதாக நாம் பார்த்த செய்தியில் பாவங்கள் எழுதின பதிவேடு **99**, இருக்கும் என்றும் அது யாருடைய கையிலும் கொடுப்பதில்லை. திறந்து காட்டப்படும் கேள்வி எழுப்பப்படும் என்றுள்ளது. அந்த செய்தியின் அடிப்படையில் அது காட்டப்படுகின்ற மனிதன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு சொர்க்கம் செல்வதைப் பார்க்கிறோம். இரண்டும் முஹம்மத் அவர்கள் சொன்னதுதான் ஒன்று குர்–ஆன் என்றபேரிலும் ஒன்று ஹதீஸ் என்ற பேரிலும் அறியப்படுகிறது. ஆனால் இரண்டும் இரண்டு விதமாக காணப்படுகிறது.

நியாயத்தீர்ப்பு எப்படி என்பதில் ஒரு உறுதியில்லை என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். முன்பு நாம் பார்த்த பாவ பரிகாரம் என்கிற விஷயத்திலும் எதுதான் பாவமன்னிப்புக்கு வழி என்று உறுதியாக இல்லாமல் அநேக காரியங்கள் சொல்வதைப் பார்த்தோம்.

நியாயத்தீர்ப்பைக் குறித்து முஹம்மத் அவர்கள் கூறின மற்றொரு செய்தியைப் பார்ப்போம்.

7. சொர்க்கத்திற்கு சென்றுவிட்ட முஸ்லீம்கள் நரகத்தில் இருக்கின்ற முஸ்லீமுக்காக "எங்கள் இறைவா இவர்கள் எங்களுடன் நோன்பு நோற்றனர், தொழுதனர், ஹஜ் செய்தனர்," (அவர்களின் தவறுகளை மன்னித்து சொர்க்கத்தில் சேர்ப்பாயாக) என்று பரிந்துரைப்பார்கள். "உங்களுக்குத் தெரிந்தவர்களை (நரகத்திலிருந்து) வெளியேற்றிக் கொள்ளுங்கள்" என்று கூறப்படும். நரகிற்கு அவர்கள் ஹராமாக்கப் படுவார்கள். பெரும் எண்ணிக்கையிலான மக்களை வெளியேற்றி விடுவார்கள்.

பிறகு "இறைவா நீ சொன்ன தகுதியில் உள்ள எவரும் நரகில் மிச்சமாக இல்லை" என்று அவர்கள் கூறுவார்கள். அப்போது இறைவன் "ஒரு தினார் அளவு எவருடைய உள்ளத்தில் நல்லவை இருக்கின்றதோ அவர்களையும் நீங்கள் வெளியேற்றிக் கொள்ளுங்கள்" என்று கூறுவான். அவ்ர்கள் பெரும் எண்ணிக்கையிலான மக்களை நரகிலிருந்து வெளியேற்றுவார்கள். பிறகு இறைவன் யாருடைய உள்ளத்தில் அரைதினார் அளவுக்கு நன்மை உண்டோ அவர்களையும் வெளியேற்றுங்கள் என்பார். அவர்கள் சென்று பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வெளியேற்றுவார்கள்.

பிறகு "இறைவா எஞ்சியிருப்பவர்களில் சிறிதளவும் நன்மை இல்லை" என்பார்கள். அப்போது இறைவன் மலக்குகள் பரிந்துரைத்து விட்டார்கள். நபிமார்கள் பரிந்துரைத்துவிட்டார்கள் (நல்ல முன்மின்களும் பரிந்துரைத்து விட்டார்கள், "கருணையாளர்களுக்கு எல்லாம் மிகப்பெரும் கருணை யாளனாகிய என்னைத்தவிர யாரும் மிச்சமில்லை" என்று கூறிவிட்டு நரகத்திலிருந்து ஒரு பிடி அள்ளுவான். அறவே நன்மை செய்யாத மக்களையும் வெளியேற்றுவான். அவர்கள் அடுப்புக்கரியாக மாரியிருப்பார்கள். ஜீவநதி எனும் பெயருடைய நதியில் அவர்களைப் போடுவான். முத்துக்கள் போல் அவர்கள் வெளிப்படுவார்கள். அப்போது சுவனவாசிகள் "இவர்கள் இறைவனால் விடுதலை செய்யப்பட்டவர்கள். ஒரு நன்மையும் செய்யாத இவர்களை அல்லாஹ் சொர்க்கத்தில் நுழைத்துவிட்டானே என்பார்கள்.



அப்போது, உங்களுக்கு, இவர்களுக்குக் கிடைத்ததுபோல இன்னொரு மடங்கு உண்டு என்று கூறுவான். அறிவிப்பவர்: அபுஸயீத், நூல்கள் புகாரி, முஸ்லீம்.

இந்த செய்தி என்ன கூறுகின்றது என்று பாருங்கள். எந்த நன்மையும் செய்யாதவர்களைக் கூட அல்லாஹ் அள்ளியெடுத்து சொர்க்கவாசிகளாக மாற்றிவிடுகிறார். அடுத்த செய்தியைப் பாருங்கள் ஜீப்ரில் (அலே) என்னிடம் வந்து அல்லாஹ்வுக்கு எதனையும் இணைவைக்காமல் மரனித்தவர் சொர்க்கத்தில் நுழைவர் என்று நற்செய்தி கூறினார் என நபி அவர்கள் கூறினார்கள். விபச்சாரம் செய்தாலும், திருடினாலுமா? என்று நான் கேட்டேன் அதற்கு அவர்கள் 'ஆம்' என்றார்.

அறிவிப்பவர்: அபூதர்தா, நூல்கள் புகாரி, முஸ்லீம்.

இப்படி இன்னும் அநேக செய்திகளைப் பார்க்கமுடியும். குர்—ஆனும் சொல்வதை கவனியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை வைப்பதை மன்னிக்கமாட்டான். இதைத் தவிர ஏனைய குற்றங்கள் செய்தவர்களை மன்னிப்பார் 4:48. யார் எப்படி வேண்டுமானாலும் வாழலாம். எப்படியாவது அல்லாஹ் சொர்க்கம் கொண்டுபோய் சேர்த்துவிடுவார் என்பதுதானே இதன் கருத்து.

நியாயத்தீர்ப்பு நாளில் நடக்கும் மற்றொரு வழிமுறை பாருங்கள்.

8. எந்தவிதமான விசாரணையும் இல்லாமல் ஒரு கூட்டம் சொர்க்கம் செல்வார்கள்:

மந்திரிக்க செல்லாமலும், சகுனம் பார்க்காமலும் தங்கள் இறைவன் மீது உறுதியான நம்பிக்கை வைத்த எழுபதாயிரம்பேர் எனது சமுதாயத்தில் விசாரணையின்றி சொர்க்கம் செல்வார்கள் என்று நபி அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் இப்னு அப்பாஸ் நூல் புகாரி.

இந்த செய்தியை கவனியுங்கள். மாந்திரீகம், சகுனம் செய்யாமல் இறைவன்மீது நம்பிக்கை, இந்த மூன்று தகுதியுள்ளவர்கள் உலக முடிவு வரைக்கும் 70,000 பேர்தான் இருப்பார்கள் என்று முடிவாகிவிட்டது. அப்படி யில்லாவிட்டாலும் இன்னும்அதிகமானபேர் இருந்தாலும் எல்லாருக்கும் இந்த பாக்கியம் கிடைக்காது. இவர்கள் இங்கு சொல்லப்பட்ட பாவங்க ளெல்லாம் மற்ற பாவங்கள் செய்திருந்தாலும் இவர்களுக்கு நேரே சொர்க்கம் தான்.

அடுத்த செய்தியை பாருங்கள்:

முஹம்மதே உங்கள் தலையை உயர்த்துங்கள், கேளுங்கள், கேளுங்கள் அது உங்களுக்குத் தரப்படும். பரிந்துரையுங்கள், உங்கள் பரிந்துரை ஏற்கப்படும் என்று சொல்லப்படும் அப்போது நான் என் தலையை உயர்த்தி "இறைவா என் சமுதாயம், இறைவா என் சமுதாயம் என்பேன். அதற்கு முஹம்மதே சொர்க்கத்தின் வாசல்களில் வலப்பக்க வாசல் வழியாக எந்தவித கேள்வி கணக்கும் இல்லாமல் உங்கள் சமுதாயத்தார் சிலரை நுழையச் செய்யுங்கள். அவர்கள் மற்ற வாசல்களிலும் மக்களுடன் இணைந்து நுழைந்துகொள்ளலாம் என்று கூறப்படும்."

அறிவிப்பவர்: அபூஹுரைரா நூல் புகாரி.

இங்கு எந்த விசாரனையும் இல்லாமல் சிலர் சொர்க்கம் செல்கிறார்கள். இதற்கு முஹம்மத் அவர்களின் பரிந்துரை தேவைப்படுகிறது.

அடுத்த செய்தியைப் பாருங்கள்:

நான் ஸஜ்தாவில் விழுவேன் எவ்வளவு நேரம் என்னை (அந்த நிலையில் கிடக்க) அல்லாஹ் நாடினானோ அவ்வளவு நேரம் விட்டுவிடுவான். பிறகு முஹம்மதே (தலையை) உயர்த்துவீராக, கூறு அது கேட்கப்படும். பரிந்துரை செய் அது ஏற்கப்படும். கேள் கொடுக்கப்படும் என்று இறைவன் கூறுவான். நான் தலையை உயர்த்தி என் இறைவனை அவன் கற்றுத்தந்த விதமாக புகழ்ந்துரைத்து விட்டு பரிந்துரை செய்வேன். அந்தப் பரிந்துரைக்கும் இறைவன் சில வரம்புகளை ஏறப்டுத்துவான். (அதாவது குறிப்பிட்ட சில தகுதியுடையவர்கள் விஷயத்தில் மட்டும் பரிந்துரைக்க அனுமதிப்பான்) நான் அதற்குத் தகுதி உள்ளவர்களை நரகிலிருந்து வெளியேற்றி சொர்க்கத்தில் சேர்பிப்பேன். இப்படியே பலமுறை நடக்கும். ஒவ்வொரு முறையும் ஸஜ்தாவிலிருந்து எழுந்தபின் பரிந்துரைக்கும் வரம்பு ஏற்படுத்துவான். யாரை குர்–ஆன் தடுத்துவிட்டதோ அவர்களைத் தவிர அதாவது, யாருக்கு நிரந்தர நரகம் என்று கூறிவிட்டதோ அவர்களைத் தவிர மற்றவர்களை நரகத்திலிருந்து வெளியேற்றுவேன் என்று நபி அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ் நூல் முஸ்லீம்.

முஹம்மது அவர்களின் பரிந்துரை, மலக்குகளின் பரிந்துரை, சொர்க்கம் சென்ற முஸ்லீம்களின் பரிந்துரை, இவர்களெல்லாம் பரிந்துரை செய்து யாரை வேண்டுமானாலும் சொர்க்கம் சேர்ப்பார்களாம். இது ஒரு பக்கம் இருக்க குர்–ஆனில் உள்ள ஒரு சில வசனங்களையும் கவனியுங்கள்.



நீங்கள் ஒரு நாளைப் பற்றியும் பயந்து கொள்ளுங்கள் (அந்நாளில்) எந்த ஆத்மாவும் எந்த ஆத்மாவிற்கும் யாதொன்றையும் (கொடுத்து அதன் கஷ்டத்தைத் தீர்க்கமாட்டாது. அதற்காக (எவருடைய) பரிந்துரையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது அதற்காக யாதொரு பரிந்துரையும் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அன்றியும் அவர்கள் (எவராலும் எவ்வித) உதவியும் செய்யப்படமாட்டார்கள். குர்–ஆன் 2:48.

அன்றியும் ஒரு நாளை பற்றியும் பயந்துகொள்ளுங்கள். அந்நாளில் ஓர் ஆத்மா மற்றொரு ஆத்மாவுக்கு எவ்வித பயனுமளிக்காது. அதனிடமிருந்து யாதொரு பரிகாரமும் ஏற்கப்படமாட்டாது. எவ்வித பரிந்துரையும் அதற்கு பயன் தராது அன்றி அவர்கள் (யாராலும் எவ்வித) உதவியும் செய்யப்படமாட்டார்கள். குர்–ஆன் 2:123.

மேலும் 2:254; 6:51,70,94; 26:100; 32:4; 74:48 ஆகிய வசனங்களில் எல்லாம் நியாயத்தீர்ப்பு நாளில் யாருடைய பரிந்துரையும் ஏற்கப்படமாட்டாது என்று தெளிவாக உள்ளது. ஆகமொத்தத்தில் முரண்பாடுகளும் உறுதியின்மையும் தான் பார்க்க முடிகிறது. பகுத்தறிவுள்ளவர்கள் சிந்தியுங்கள்.

அடுத்த செய்தியைப் பார்ப்போம்:

**9.** கியாமத் நாளில் ஒரு மனிதன் கொண்டுவரப்படுவான் "இவனது சிறுபெருங்குற்றங்களைக் காட்டாதீர்கள்" என்று வானவர்களுக்கு கூறப்படும். "இன்னின்ன நாளில் இன்னின்ன குற்றத்தை நீ செய்தாயா? என்று கேட்கப்படும். மறுக்கமுடியாமல், அவன் ஆம் என்னுடைய பெரும் பாவங்கள் எடுத்துக்காட்டப்பட்டால் என்னவாகும்? என்று அஞ்சிக் கொண்டிருப்பான். அப்போது அவனிடம் உனது ஒவ்வொரு தீமைக்குப் பதிலாக ஒரு நன்மை உனக்கு உண்டு" என்று கூறப்படும் அதற்கு அம்மனிதன் "இறைவா இன்னும் எத்தனையோ குற்றங்கள் செய்துள்ளேன் அவற்றை நான் இங்கு காணவில்லையே? என்பான் இதை நபி அவர்கள் கூறிவிட்டு கடவாய் பற்கள் தெரியுமளவிற்கு சிரித்தார்கள். அறிவிப்பவர் அபூதர் நூல்கள் முஸ்லீம், திர்மிதி, இங்கு என்ன சொல்லப்படுகிறது. உன்னுடைய ஒவ்வொரு பாவத்திற்கும் உன்னில் ஒரு நன்மையுண்டு. இதிலிருந்து என்ன புரிகிறது. ஒரு பாவம் செய்தவன் ஒரு நன்மை செய்துவிட்டால் போதுமானது."

**10.** (ஒவ்வொருவரின் நன்மை தீமைகளையும்) அன்றைய தினம் எடை போடுவது சத்தியம், ஆகவே எவர்களின் (நன்மையின்) எடை கனத்ததோ அவர்கள்தான் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள். குர்–ஆன் 7:8.

இதின் அடிப்படையில் அதிக எடையுள்ள நன்மைகள் செய்தால் போதும் சொர்க்கம் செல்லலாம்.

11. குர்–ஆன் 7:46ன்படி நன்மைகளும் தீமைகளும் சம அளவில் செய்தவர்கள் சொர்க்கத்திற்கும், நரகத்திற்கும் நடுவில் ஒரு சுவரில் இருப்பார்களாம். I.F.T.மொழிபெயர்ப்பில் இதற்குக் கொடுக்கும் விளக்கத்தை கவனியுங்கள்.

அதாவது அஸ்ஹாபுல் அஃராஃப் உச்சியில் இருப்பவர்கள் என்போர் இத்தகையவர்களாய் இருக்கக்கூடும். அதாவது அவர்களுடைய வாழ்க்கையின் நல்ல அம்சம் சுவனத்தில் அவர்களை நுழைவிக்கும் அளவுக்கு வலுமிக்கதாக இருக்காது; அவர்களுடைய வாழ்வின் தீய அம்சம் நரகத்தில் எறியப்படும் அளவுக்கு மோசமாக இருக்காது. எனவே அவர்கள் சுவனத்திற்கும், நரகத்திற்கும் இடைப்பட்ட ஓர் உச்சியில் இருப்பார்கள். மேலும் அல்லாஹ்வின் அருளாக சொர்க்கம் கிடைத்துவிடும் என்று நம்பியவாறு இருப்பார்கள். இதை இரண்டும் கெட்டான் நிலை என்று கூறலாம்.

இப்படி மேலும் அநேக காரியங்களை பார்க்கமுடியும். ஆனால் எல்லாம் ஒன்றொடொன்று முரன்படுவதும், ஏற்றுக்கொள்ளப்பட முடியாததுமாக உள்ளது. குர்–ஆனில் சொல்லும் ஒரு வசனத்தை பார்த்துவிட்டு, இந்தப் பகுதியை முடிக்கிறேன்.

நீங்கள் செய்த நன்மைகளின் காரணமாகவே இச்சுவனபதிக்கு நீங்கள் வாரிசாக ஆனீர்கள் குர்–ஆன் 43:72.

தெளிவாக சொல்லப்படும் காரியம் பூமியில் மனிதன் செய்த செயல்களுக்குப் பலனாக சொர்க்கம் என்றுள்ளது. இதில் இறைவனுக்கு எந்த பங்கும் இல்லை என்பதை கவனியுங்கள். பங்கில்லை என்று சொன்னால் மனிதனை சொர்க்கம் கொண்டு செல்வதற்காக அல்லாஹ் எதையும் செய்யவில்லை. ஒருவர் வேலை செய்ததற்காக கூலி கொடுப்பதுபோல இது அமைந்துள்ளது. வேலை செய்தவனுக்கு கூலி கொடுப்பது கருணை என்று எப்படி சொல்லமுடியும். இங்கு பரிசுத்த வேதாகமம் கூறும் சத்தியம் எல்லாவற்றிற்கும் மேலானதாக உயர்ந்திருப்பதாக கவனியுங்கள்.

''கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாத படிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல'' (எபே.2:8,9).

குர்–ஆன் ஹதீஸ் அடிப்படையில் பாவபரிகாரம் மனிதன் செய்யவேண்டும்



என்பதைப் பார்த்தோம். இதே அடிப்படையில் நியாயத்தீர்ப்பு எப்படி என்று பாாத்தோம். மனிதன் தன் செயல்கள்மூலம் அநீதியுள்ளவர்களாக இருந்தாலும் சொர்க்கம் செல்லலாம் என்றும் செயல்களில் நீதியுள்ளவர்களாக இருந்தாலும் நரகம் போகவேண்டும் என்கிற தெளிவில்லாத பல காரியங்களைப் பார்த்தோம்.

மேலும் யார் யார் சொர்க்கம் செல்வார்கள், யார் யார் நரகம் செல்வார்கள் என்பதை அல்லாஹ் ஏற்கனவே தீர்மானம் செய்துவிட்டார் என்பதைக் குறித்து தொடர்ந்து பார்ப்போம்.

### VI. குர்-ஆன், ஹதீசில் முன்விதி

### 1. மனிதன் எந்த வழியில் போகவேண்டும் என்று அல்லாஹ் முன்குறித்தார்:

.... அவன் விரும்புகிறவர்களை நேரான வழியில் செலுத்துவான் குர்–ஆன் 2:142.

அல்லாஹ் எவர்களை நேரான வழியில் செலுத்துகிறானோ அவர்களே. நேரான வழியை அடைந்தவர்கள், எவர்களை தவறான வழியில் விட்டு விட்டானோ அவர்கள் முற்றிலும் நஷ்டமடைந்தவர்களே. குர்–ஆன் 7:178.

இந்த வசனங்கள் என்ன காண்பிக்கின்றன. யாராவது ஒருவர் நேரான வழியில் இருப்பாரனால் அது அல்லாஹ் அவனை அந்த வழியில் செலுத்தினால்தான். அதுமட்டுமல்ல யாராவது ஒருவர் தறவான பாதையில் நடந்தால் அதற்குக் காரணம் அல்லாஹ்தான் அல்லாஹ் அவனை அந்த பாதையில் செலுத்துகின்றான். அதிலிருந்து அவன் நேரான பாதையில் வரமுடியாது. இவ்விதமான வசனங்கள் மேலும் பல பார்க்கமுடியும். இந்த வசனங்களின் அடிப்படையில் மனிதனுக்கும் அவன் தீர்மானத்திற்கும் எந்த பங்களிப்பும் இல்லை. ஒருவன் தவறான பாதையில் போவதும் நேரான பாதையில் போவதும் அல்லாஹ் தீர்மானித்துவிட்ட காரியம்தான். அதை யாராலும் மாற்றமுடியாது. மனிதன் தவறு செய்வதற்கு அவன் பொறுப்பல்ல. அல்லாஹ்தான் அவனை அந்த வழியில் செலுத்தினான்.

### 2. மனிதர்கள் நரகத்திற்காகவே சிருஷ்டித்திருக்கிறார்.

நிச்சயமாக மனிதர்களிலும், ஜீன்களிலும் பலரை நரகத்திற்காகவே நாம் படைத்திருக்கிறோம். குர்–ஆன் 7:179 (IFT மொழிபெயர்ப்பைப் பார்ப்போம். உண்மை யாதெனில் ஜின் மற்றும் மனிதர்வர்க்கத்தில் பெரும்பாலோரை நரகத்திற்காகவே நாம் படைந்திருக்கின்றோம்).

“ஜின்களைக்கொண்டும், மனிதர்களைக்கொண்டும் நிச்சயமாக நான் நரகத்தை நிரப்புவேன்” என்ற உங்கள் இறைவனின் வாக்கு நிறைவேற்றியே தீரும். குர்–ஆன் 11:119.

நரகத்தை நிரப்பும்படியாக மனிதர்களையும், ஜின்களையும் அல்லாஹ் சிருஷ்டித்திருக்கிறார். யார்தான் இதிலிருந்து தப்பித்துக்கொள்ளமுடியும். நரகம் நிரம்பவேண்டுமானால் முழு மனுகுலத்தையும் அதில் போட்டாலும் அது நிறம்பாது.... படைக்கும்போதே இப்படியாக படைத்துவிட்டதாலும், மனிதர்களைக் கொண்டு நரகம் நிரப்பப்படவேண்டும் என்கிற அல்லாஹ்வின் தீர்மானம் நிறைவேறியே தீரவேண்டும் என்பதினாலும் மனிதர்கள் என்னதான் செய்யமுடியும்?

**3. ஒரு மனிதனுக்கு வரக்கூடிய நல்லதும் கெட்டதும் முன்கூட்டியே தீர்மானித்து எழுதி வைக்கப்பட்டுள்ளது.**

(பொதுவாக) பூமியிலோ அல்லது (சொந்தமாக) உங்களுக்கோ ஏற்படக்கூடிய எந்த கஷ்டமும் (நஷ்டமும்) அது ஏற்படுவதற்கு முன்னதாகவே (லவ்ஹல் மஹ்ஃபூள் என்னும்) பதிவு புத்தகத்தில் பதிவு செய்யப்படாமல் இல்லை. நிச்சயமாகவே இது அல்லாஹ்விற்கு மிக எளிதானதே. குர்–ஆன். 57:22.

....(நன்மையோ, தீமையோ) அல்லாஹ் எங்களுக்காக விதித்து வைத்திருப்பவற்றைத் தவிர எதுவும் எங்களை அடையாது... குர்–ஆன் 9:51.

இந்த வசனம் சொல்வது என்ன, ஒரு மனிதன் என்னென்ன கஷ்டங்கள், நஷ்டங்கள் நல்லவை, கெட்டவை செய்யவேண்டும் என்பதை அல்லாஹ் முன்கூட்டியே தீர்மானித்து எழுதியும் வைத்துவிட்டார். இனி அதை ஒருவராலும் மாற்றமுடியாது. ஒருவன் நல்லதை செய்தாலும், கெட்டதை செய்தாலும் அவன்பேரில் எழுதப்பட்டது எதுவோ அதுதான் அவனுக்கு நடக்கும். ஆதலால் மனிதன் பிரார்த்தனை செய்வதோ, நல்லறம் செய்வதோ வீண் மேலும் அது தேவையுமில்லை.

**4. அல்லாஹ் மனிதர்களை வழிதவற செய்கிறார்:**

.... அல்லாஹ் தான் நாடுகின்றவர்களை வழி பிறழச் செய்கின்றான். நாடுகின்றவர்களுக்கு நேர்வழி காட்டுகின்றான். அவன் யாவையும் மிகைத்தவனும், நுண்ணறிவாவாளனுமாவான். குர்–ஆன் 14:4 (IFT) அல்லாஹ் மனிதனை வழிதவறசெய்தால் அதற்கு மனிதன் எப்படி பொறுப் பெடுக்க முடியும். மனிதனை நேரான வழியில் நடத்தவேண்டிய அல்லாஹ்வே அவனை தவறான வழியில் நடத்துகிறாராம்.



**5. அல்லாஹ்விற்கு விருப்பமுள்ளவர்களை அவருடைய அருளில் புகுத்திவிடுவான்:**

(ஆகவே உங்களில்) அவன் விரும்பியவர்களைத் தன்னுடைய அருளில் புகுத்திவிடுகின்றான். குர்–ஆன் 76:31).

**6. மனிதர்கள் யாருக்கெல்லாம் யாரெல்லாம் பிள்ளைகளாக பிறப்பார்கள் என்பதை அல்லாஹ் முன் கூட்டியே தீர்மானம் செய்துவிட்டார்.**

(நபியே) உங்களது இறைவன் ஆதாமுடைய மக்களை அவர்களுடைய (தந்தைகளின்) முதுகுகளிலிருந்து அவர்களுடைய சந்ததிகளாக வெளியாக்கி, அவர்களையே அவர்களுக்கு சாட்சியாகவும் வைத்து (அவர்களை நோக்கி) “நான் உங்கள் இறைவனாக இல்லையா?” என்று கேட்டதற்கு “ஏன் இல்லை (நீங்கள் எங்கள் இறைவன் என்று) நாங்கள் சாடசியம் கூறுகிறோம்” என்று அவர்கள் கூறியதை (நீங்கள் அவர்களுக்கு) ஞாபக மூட்டுங்கள். ஏனென்றால் (இதனை ஒருவரும் எங்களுக்கு ஞாபக மூட்டாததினால்) நிச்சயமாக நாங்கள் இதனை (மறந்து) விட்டு பாராமுகமாகி இருந்தோம்! என்று மறுமைநாளில் சொல்லாமல் இருப்பதற்காகவும் குர்–ஆன் 7:172.

இந்த வசனம் சொல்வது என்னவென்றால், யாருக்கு யார் யார் பிறப்பார்கள் என்பதை அல்லாஹ் முன்கூட்டியே தீர்மானம் செய்து இந்த பூமியில் அவர்கள் வரிசையாய் பிறப்பதற்கு முன் ஆதாமுடைய முதுகிலிருந்து தந்தைகளையும், பிள்ளைகளையும், பிறக்கவைத்து, நான்தான் உங்கள் இறைவன் இல்லையா என்று அல்லாஹ் கேள்வி கேட்டதற்கு மனிதர்கள் எல்லோரும் ஆமாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். மனிதன் இங்கு பிறப்பதற்கு முன்பே அவர்களைப் படைத்தது அல்லாஹ்தான் இவர்களுடைய இறைவன் என்கிற வாக்குறுதிப் பெற்றிருக்கிறான். மட்டுமல்லாமல் யார் யாருக்கு எத்தனை பிள்ளைகள் என்று முடிவும் செய்துவிட்டார்கள். இப்படியாக ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் அவன் நரகம் செல்வானா, சொர்க்கம் செல்வானா என்பதையும் அவனுக்கு என்னனென்ன கஷ்ட நஷ்டங்கள் வரும் என்பதையும், அவனுக்கு என்ன கிடைக்கும் என்பதையும் அல்லாஹ் தீர்மானம் செய்துவிட்டார். இதை யாராலும் மாற்றமுடியாது. என்னதான் முயற்சி செய்தாலும் அல்லாஹ் தவறான பாதையில் ஒருவனை செலுத்தினால் அவனால் நேரான பாதையில் வரவேமுடியாது. நேரான பாதையில் செலுத்தின ஒருவன் தவறான பாதையில் போகவும் முடியாது. மனிதன் அல்லாஹ்வின் கையில் ஒரு இயந்திரம்போல் செயல்பட வேண்டியது

தான். ஒருசில பாவங்களை யார் யார் எந்தளவிற்கு செய்வார்கள். என்கிற காரியம் கூட அல்லாஹ் முன்பே தீர்மானம் செய்திருக்கிறார் என்று அறிவிக்கும்.

ஹகீஸ்கள் பல உண்டு. பார்க்க புகாரி 6243,6612,

## முன்விதி சிலஹதீஸ்கள்

உண்மையே பேசியவரும் உண்மையே அறிவிக்கப்பட்டவருமான அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறினார்கள்.

உங்களில் ஒருவர் தம் தாயின் வயிற்றில் நாற்பது நாட்கள் (கருவாக) சேமிக்கப்படுகிறார். பிறகு வயிற்றிலேயே அதைப்போன்றே (நாற்பது நாட்கள்) அதற்கு கரு (அட்டை போன்று கருப்பையின் சுவரைப் பற்றிப் பிடித்துத் தொங்கும்) ஒருகருக்கட்டியாக மாறுகிறது. பிறகு வயிற்றில் அதைப் போன்றே (மேலும் நாற்பது நாட்கள் மெல்லப்பட்ட சக்கை போன்ற) ஒரு சதைப்பிண்டமாக மாறிவிடுகிறது. பிறகு அதனிடம் ஒரு வானவர் அனுப்பப்படுகிறார். அவர் அதில் உயிரை ஊதுகிறார் (அதற்கு முன்பே) அந்த மனிதனின் வாழ்வாதாரம், வாழ்நாள், செயல்பாடு, அவன் நற்பேறற்றவனா அல்லது நற்பேறு பெற்றவனா ஆகிய நான்கு விஷயங்களை எழுதுமாறு அவர் பணிக்கப்படுகிறார். எவனைத் தவிர வேறு இறைவன் இல்லையோ அ(ந்த ஒரிறை)வன் மீதாணையாக! உங்களில் சொர்க்கவாசிகளின்(நற்) செயலைச் செய்துகொண்டே செல்வார். அவருக்கும் சொர்க்கத்துக்கு மிடையே ஒருமுழம் இடைவெளிதான் இருக்கும்; அதற்குள் விதி அவரை முந்திக்கொள்ள, அவர் நரகவாசிகளின் செயலைச் செய்து அதன் காரணத்தால் நரகத்தில் புகுந்துவிடுவார்.

(இதைப்போன்றே) உங்களில் ஒருவர் நரகவாசிகளின் (தீய) செயலைச் செய்துகொண்டே செல்வார். அவருக்கும் நரகத்துக்குமிடையே ஒருமுழம் இடைவெளிதான் இருக்கும். அதற்குள் அவரது விதி, அவரை முந்திக் கொள்ள, அவர் சொர்க்கவாசிகளின் செயலைச்செய்து அதன் விளைவாகச் சொர்க்கத்தில் புகுந்துவிடுவார்.

அறிவிப்பவர் அப்துல்லாவின் மஸ்ஊத், நூல் முஸ்லீம்.

இங்கு யாருடைய விளக்கமும் தேவையில்லை. அல்லாஹ் சிருஷ்டிப்பதற்கு முன்னமே ஒரு மனிதனுடைய வாழ்வாதாரம், வாழ்நாள், செயல்பாடு, அவன் சொர்க்கவாசியா நரகவாசியா என்பவைகளெல்லாம் விதித்துவிடுகிறார். அந்த மனிதன் எப்படிப்பட்ட வாழ்க்கை இந்த பூமியில் வாழ்ந்தாலும்



கடைசிநேரம் வரும்போது தானாகவே அவனைக்குறித்து அல்லாஹ் என்னதான் முன்விதித்திருக்கிறாரோ அது நிறைவேறுபடி, நல்லவனாக வாழ்ந்தவன் நரகத்திற்கும், கெட்டவனாக வாழ்ந்தவன் சொர்க்கத்திற்கும் போய் விடுவான். இதைக்குறித்து முகம்மது நபி சொன்னதான நூற்றுக் கணக்கான ஹதீஸ்கள் உண்டு. ஆகிலும் சிலதுமட்டும் இங்கு எழுதுகிறேன். இஸ்லாம் ஒரு மனிதனுக்கு எந்த நம்பிக்கையும் (எதிர்பார்ப்பும்) அளிப்பதில்லை என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

நாங்கள் பிரேத நல்லடக்கம் (ஜனாஸா) ஒன்றில் கலந்துகொள்வதற்காக "பகீஉல்ஃகர்கத்" பொது மையவாடியில் இருந்தோம். அப்போது அல்லாஹ்வின் தூதர் அவர் எங்களிடம் வந்து அமர்ந்தார்கள். நாங்களும் அவர்களைச் சுற்றி அமர்ந்தோம். நபி அவர்களிடம் ஓர் ஊன்றுகோல் இருந்தது. அப்போது அவர்கள் (தமது தலையைக்) கவிழ்த்தவாறு ஊன்று கோலை தரையில் குத்திகீறியபடி (ஆழ்ந்த கவலையிலும் யோசனையிலும்) இருக்கலானார். பிறகு "உங்களில் யாவரும் பிறந்துவிட்ட எந்த உயிரும் தமது இருப்பிடம் சொர்க்கத்திலா, அல்லது நரகத்திலா என்று அல்லஹ்வால் எழுதப்படாமல் இருப்பதில்லை; அது நற்பேரற்றதா, அல்லது நற்பேறு பெற்றதா என்று எழுதப்பட்டிராமல் இல்லை" என்று சொன்னார்கள்.

அப்போது ஒரு மனிதர் "அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் நல்லறங்கள் செய்யாமல், எங்கள் (தலை) எழுத்தின் மீது (பாரத்தை போட்டுவிட்டு) இருந்துவிடமாட்டோமா" என்று கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் அவர்கள். யார் (விதியில்) நற்பேறு பெற்றவராக இருப்பாரோ அவர் நற்பேறு பெற்றவர்களின் செயலுக்கு மாறுவார். யார் (விதியில்) நற்பேரற்றவராக இருப்பரோ அவர் நற்பேரற்றவர்களின் செயலுக்கு மாறுவார்" என்று கூறினார்.

மேலும் அவர்கள் நீங்கள் செயலாற்றுங்கள் (நல்லார் பொல்லார்) எல்லாருக்கும் (அவர்கள் செல்லும் வழி) எளிதாக்கப்பட்டுள்ளது. நல்லவர்க்கு நல்லவர்களின் செயலைச் செய்ய வகை செய்யப்படும். கெட்டவருக்கு கெட்டவர்களின் செயலைச் செய்ய வகை செய்யப்படும் என்று கூறினார்...

அறிவிப்பவர் அலீ நூல் முஸ்லீம்.

இங்கு நபிதோழர்களில் ஒருவரே கேட்கிறார் நீங்க சொல்வது உண்மையானால் நாங்கள் சும்மாஇருந்து விடுமே என்று அதற்கு நபி பதிலளிக்கிறார். அதில் என்னசெய்வது என்ற கவனியுங்கள். அப்படி சும்மா இருக்கமுடியாது எவர் நல்லவர் என்று அல்லாஹ் முன் குறித்தாரோ அவர்களை அல்லாஹ் நல்லறம் செய்யும் வழியில் நடத்தும், கெட்டவன் என்று

யாரை முன்குறித்தாரோ அவர்களை கேடான வழியில் அல்லாஹ்வே வழி எளிதாக்கி நடத்திச் செல்லுமாம்.

அதாவது மனிதன் என்ன நினைத்தாலும் நடக்காது என்று தானே அர்த்தம். முஸ்லீம் 5150,ன் அடி குறிப்பில் எழுதியிருப்பதை கவனியுங்கள்.

விதியின்படி நடக்கட்டும் என்று அலட்சியமாக அமர்ந்துவிடக்கூடாது என்பதை இங்கு நபி அவர்கள் உணர்த்துகிறார்கள். மாறாக மார்க்கம் நமக்கு கட்டளையிட்டுள்ள கடைமைகளை முனைப்போடு நிறைவேற்ற வேண்டும். அதற்கான வாய்ப்பை அல்லாஹ் வழங்குவான். ''இதுதான் என் தலைவிதி'' என்று சொல்லிக்கொண்டு உழைக்காமலும் நல்லறம் புரியாமலும் ஒருவர் அமர்ந்துகொள்ள அனுமதிகிடையாது. ஏனெனில், அவரது தலைவிதி இது தான் என்பது நடந்துமுடிந்த பிறகே அவருக்குத் தெரியுமே. அதற்குமுன் அது ஓர் ரகசியம். அல்லாஹ்வுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். எனவே ஒவ்வொருவரும் தமக்கு முன்னுள்ள வாய்ப்பை பயன்படுத்தி, உழைத்து நன்மை புரிந்துமுன்னேற முயல வேண்டும். அதைலிருந்து விதியின் மீது பழியைப் போட்டுத் தப்பிக்கவோ கடமை தவறவோ யாருக்கும் உரிமை கிடையாது.

இது எப்படி இருக்கிறது ஒரு பக்கத்தில் அல்லாஹ் ஒருவருடைய வாழ்க்கையில் சம்பவிக்கும் எல்லா காரியங்களும் விதித்துவிட்டார் நீங்கள் என்னதான் செய்தாலும் அல்லா விதித்ததுதான் நடக்கும் என்று முகம்மத் நபி அவர்களே சொல்கிறார். இன்னொரு பக்கம் என்னடானா நீங்கள் சொர்கவாசிகளா, நரகவாசிகளா என்பதை உங்களுக்கு தெரியாதல்லவா ஆதலால் செயலாற்றுங்கள் என்று சொல்லுகிறார். இது எப்படி இருக்கிறது. அல்ஹ் விதித்தது தானாகவே நடந்துவிடும். அதை எவராலும் மாற்ற முடியாது என்றுள்ளபோது மனிதன் ஏன் செயலாற்றவேண்டும். இதைக் குறித்து P. ஜைனுல் ஆபிதிடம் ஒருவர் கேட்டதற்கு அவர் கொடுத்த பதில் விதியை நம்புவதுமூலம் தன் வாழ்க்கையின் நேரிடும் துன்பங்களிலும், துயரங்களிலும் இது என் விதி என்று ஆறுதலடையலாமாம். அதாவது பாவசெயலில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒருவர் தன்பாவ வழிகளிலிருந்து வெளியில் வராமல் இது என் தலைவிதி என்று சொல்லிக்கொண்டும். வாழ்க்கையில் வேறு துறைகளில் தோல்வி அடைந்தாலும் இது என் தலை விதி என்று ஆறுதலைடைந்திடவேண்டியது என்று இவர் சொல்கிறார். இன்னும் சில ஹதீஸ்கள் என்ன சொல்வது என்பதைப் பார்ப்போம்.



ஒருவர் குழந்தை பருவத்தில் மரித்தாலும் சில குழந்தைகள் நரகத்திற்கும் சில குழந்தைகள் சொக்கத்திற்கும் போகும்.

(அல்லாஹ்வின் தூதர் அவர்களின் காலத்தில்) ஒரு குழந்தை இறந்து போனது,

அப்போது நான் ''அதற்கு நல்வாழ்த்துக்கள்! அது சொர்க்கத்தின் சிட்டுக்குருவிகளில் ஒரு சிட்டுக்குருவி'' என்று சொன்னேன். அப்போது அல்லாஹ்வின் தூதர் அவர்கள் உனக்குத் தெரியுமா? ''அல்லாஹ் சொர்க்கத்தையும் நரகத்தையும் படைத்தபோதே, அதற்கெனச் சிலரையும் இதற்கென சிலரையும் படைத்துவிட்டான்'' என்று சொன்னார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா நூல் முஸ்லீம் பார்க்க 5769, 5170,5175.

ஒரு முறை நபி அவர்கள் துணைவியார் உம்மு ஹமீபா அவர்கள். இறைவா! என் கணவர் அல்லாஹ்வின் தூதர் அவர்கள். என் தந்தை அபு சுஃப்யான் என் சகோரர் துஆவியா ஆகியோர் (நீண்ட நாட்கள் வாழ்வதன்) மூலம் எனக்கு பயனளிப்பாயாக!'' என்று பிரார்த்தித்தார்கள்.

அப்போது நபி அவர்கள் ''நீ (ஏற்கெனவே) நிர்ணயிக்கப்பட்டுவிட்ட ஆயுளையும் குறிக்கப்பட்டுவிட்ட (வாழ்) நாட்களையும் பங்கிடப்பட்டுவிட்ட வாழ்வாதாரத்தையும் அல்லாஹ்விடம் கேட்டிருக்கிறாய். அல்லாஹ் அவற்றில் எதையும், அதற்குரிய நேரத்திற்கு முன்பே ஒருபோதும் கொண்டுவந்து விடவுமாட்டான். அவற்றில் எதையும் அதற்குரிய நேரத்தைவிட்டுத் தாமதப்படுத்தவுமாட்டான். நரக நெருப்பின் வேதனையிலிருந்தோ, அல்லது மண்ணறையின் வேதனையிலிருந்தோ உன்னை காக்கும்படி நீ அல்லாஹ் விடம் வேண்டியிருந்தால் நன்றாகவும் சிறந்ததாகவும் இருந்திருக்கும் என்று சொன்னார்கள்...

அறிவிப்பவர்: அப்துல்லஹ் பின் மஸ்ஹத் நூல் முஸ்லீம்.

உலகத்தில் எதாவது காரியத்திற்காக பிரார்த்திப்பதும் வேய்ஸ்ட் எந்த பலனும் இல்லை. ஏன் என்றால் அல்லாஹ் எல்லாம் முன் விதித்துவிட்டார் என்று இங்கு நபி அவர்கள் விளக்கமளிக்கிறார். ஒரு எந்திரம் எப்படி இயங்கவேண்டும் என்று அதினுடைய வடிவமைப்பாளர் தீர்மானித்து வடிவமைக்கிறாரோ அதுபோல் அல்லாஹ்வும் மனிதனுடைய வாழ்க்கையில் என்னவெல்லாம் எப்போதெல்லாம் நடக்கவேண்டும் என்று முன் விதித்துவிட்டார். ஆதலால் மனிதனுடைய எந்த ஓரு செயலும் அவனுக்கு நன்மையும் அளிப்பதில்லை, தீமையும் அளிப்பதில்லை என்று சொல்வது

இஸ்லாம். ஆனால் பகுத்தறிவுள்ள இஸ்லாமியர்கள் என்று தங்களை சொல்லிக்கொள்ளும் இஸ்லாமிய பிரிவுகள் முன் விதியை நம்புவதில்லை அவர்களுடைய கூற்றின்படி பார்த்தால் அநேக குர் ஆன் வசனங்களும் அநேக ஹதீஸுகளும் தவறானவைகள் என்று ஒத்துக்கொள்ளவேண்டும்

ஹதீஸிலிருந்து எழுதவேண்டுமானால் அதுவே பெரிய புத்தகமாயிவிடும். அவ்வளவு அறிவிப்புகள் எல்லா காரியங்களும் அல்லாஹ் முன் தீர்மானித்து விட்டார் என்பதற்கு ஆதாரமாக இருக்கின்றன. ஆதாமுடைய வலது தோளிலிருந்து சொர்க்கம் செல்லக்கூடியவர்களையும், இடது தோளிலிருந்து நரகம் செல்லக் கூடியவர்களையும் சிருஷ்டித்து ஆதாமுக்கு வெளிப் படுத்தினார் என்று முஹம்மத் சொன்னதாக செய்தி அபுஹீரைரா அறிவிப்பதை திர்மிதி என்னும் நூலில் பார்க்கலாம். ஒவ்வொரு குழந்தை பிறப்பதும் அல்லாஹ் முன்குறித்த விதம்தான் நடக்கும் என்கிற செய்தி ஜாபிர் அறிவிப்பது புகாரி. முஸ்லீம், ஆகிய நூல்களில் பார்க்கமுடியும். ஆதலால் மனிதனைக்குறித்த எல்லாக்காரியங்களும் அல்லாஹ் தீர்மானித்துவிட்டார். இனி மனிதன் என்னசெய்தும் எந்த பிரயோஜனமும் இல்லை.

இன்னும் அநேக காரியங்கள் பார்க்கவேண்டியதாக இருந்தாலும் ஒரு காரியம் மட்டும் பார்ப்போம். எவராவது தப்பிதவறி குர்ஆன் ஹதீஸ் கூறும் சொர்க்கத்தில் சென்றுவிட்டால் அங்கு நடப்பது என்ன? என்பதையும் அந்த சொர்க்கத்தின் தன்மை எப்படியிருக்கும் என்பதையும் பார்ப்போம்.

### குர்ஆன் ஹதீஸ் அறிவிக்கும் சொர்க்கத்தின் தன்மை

1. சொர்க்கத்தில் மது ஆறாக ஓடும். குர்ஆன்.83:25–28; 47:15; 56:18; இங்கு மனிதர்கள் மதுபானம் செய்வது தவறு. முஸ்லீம்களுக்கு அது ஹறாம். ஆனால் சொர்க்கத்தில் மது ஆறாக ஓடும் எவ்வளவு வேண்டுமானாலும் குடிக்கலாம்.

2. இந்த சொர்க்கத்தில் இன்னொரு சிறப்பு என்னவென்றால் நல்ல அழகிய பெண்கள் அங்கு தாராளமாக கிடைக்கும். இங்கு ஒருவருக்கு 4 மனைவி அதோடு நின்றுவிடவில்லை. சொர்க்கத்தில் ஏராளமான பெண்களிடம் உல்லாசமாக இருக்கலாம்.

**a.** அங்கே அவர்களுக்கு தூய்மையான துணைவிகளும் உள்ளன... குர்ஆன்.2:25;

**b.** அவற்றில் பார்வைகள் தாழ்த்திய கன்னியர் இருப்பார்கள். இவர் களுக்கு முன்னர் அவர்களை எந்த மனிதனும் ஜின்னும் தீண்டியதில்லை. குர்ஆன்.55:56.



**c.** அவர்களுடன் தாழ்ந்த பார்வையுடைய கண்ணழகிகள் மறைத்து வைக்கப்பட்ட முட்டைகளைப்போல் இருப்பார்கள். குர்ஆன்.37:48,49.

**d.** இறையச்சமுடையோருக்கு வெற்றிதரும், தோட்டங்களும், திராட்சைகளும் சமவயதுடைய கட்டழகியரும், நிறைந்த கிண்ணங்களும் உண்டு. குர்ஆன்.78:31–34.

**e.** அவர்களை கன்னியராகவும் ஒத்த வயதினராகவும், நேசமிக் கோராகவும் ஆக்கினேன். குர்ஆன் 56:36,37.

**f.** அவர்கள் வெண்முத்தையும், பவளத்தையும் போலிருப்பார்கள். குர்ஆன்.55:58.

**g.** (அப்பெண்களை) நாமே அழகுறப் படைத்தோம். அவர்களைக் கன்னியராகவும் ஒத்த வயதினராகவும், நேசம் மிக்கோராகவும் ஆக்கினோம் 56:36,37.

**h.** தூய மனைவியர் உண்டு. குர்ஆன்.3:15.

**i.** அணி அணியாகப் போடப்பட்ட மஞ்சங்களின் மீது சாய்ந்தவர்களாக அவர்கள் இருப்பார்கள். மேலும் நாம் அவர்களுக்கு (ஹீருல்ஈன் என்னும்) கண்ணபூகிகளாகிய கன்னிப்பெண்களை திருமணம் செய்து வைப்போம். குர்.ஆன்.52:20.

**j.** ஹீர் (என்னும் அழகிய கன்னியர்) கூடாரங்களில் மறைக்கப்பட்டிருப்பர். குர்ஆன் 55:72.

**k.** அவர்களை இவர்களுக்கு முன் எந்த மனிதனும் எந்த ஜின்னும் தீண்டியதில்லை. குர்ஆன்.55:74.

**l.** (அங்கு அவர்களுக்கு) ஹீருல் ஈன் (என்னும் நீண்ட கண்கள் உடைய) கன்னியர் இருப்பர். (அவர்கள்) மறைக்கப்பட்ட முத்துக்களைப்போல் (மிக அழகாக) இருப்பார்கள். குர்ஆன்.56:22,23.

**m.** மேலும் அவர்களுக்கு ஹீரும் ஈன்களை மணமுடித்து வைப்போம் குர்ஆன்.44:54.

**n.** சொர்க்கத்து மங்கையரில் ஒருவர் பூமியில் தோன்றினால் வானத்துக்கும் பூமிக்கும் இடையே உள்ள பகுதிகளெல்லாம் ஒளிரும். மேலும் அப்பகுதிகள் அனைத்திலும் நறுமணம் கமழும். அந்த மங்கையரின் முகத்திரை (மட்டுமே) இந்த உலகத்தையும் அதிலுள்ள செல்வங்களையும்விட மேலானதாகும் என்று நபி அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் அனஸ். நூல் புகாரி.

**o.** சுவனத்தில் முஃமினுக்கு உடலுறவு கொள்வதற்கு இன்னின்ன அளவு ஆற்றல் வழங்கப்படும் என்று நபி அவர்கள் கூறியபோது 'அல்லாஹ்வின் தூதரே' அதன் அளவு என்ன என்று கேட்கப்பட்டது, ''நூறு (பேரின்) அளவு ஆற்றல் கொடுக்கப்படும் என்று கூறினார்கள்.'' அறிவிப்பவர் அனஸ் நூல் திர்மிதி.

**p.** சொர்க்கத்தில் ஒரு மனிதன் எழுபது திட்டுகளில் சாய்ந்திருப்பான். பிறகு ஒரு பெண்மணி அவனிடத்தில் வந்து, அவனுடைய இரண்டு தோள் புஜங்களிலும் தட்டும். அப்போது அம்மனிதன் அப்பெண்ணின் கண்ணத்தில் தன்னுடைய முகத்தை கண்ணாடியில் பார்ப்பதைவிட தெளிவாகப் பார்ப்பான். அப்பெண்மணி இடத்திலிருக்கும் குறைந்த மதிப்புள்ள முத்துக்கள். கிழக்கு மேற்கு திசைகளுக்கு இடைப்பட்ட இடத்தை பிரகாசிக்கும் அப்பெண்மணி அவனுக்கு ஸலாம் கூறும். அதற்கு பதிலளித்துவிட்டு நீ யார்? என்று கேட்பான். அதற்கு அப்பெண்மணி நான் மேலதிகமான (உன்னுடைய அருட் கொண்ட) என்று கூறுவாள்.

அப்பெண்மணி எழுபது ஆடைகள் அணிந்திருப்பாள் (இருப்பினும்) அவனுடைய பார்வை ஊடுறுவிச் செல்லும், எதுவரை என்றால் அவளுடைய தொடையின் உட்பகுதியில் உள்ள மஜ்ஜைப் பார்ப்பான். மேலும் அவளுடைய தலையில் கிரீடம் இருக்கும். அதில் (பதிக்கப்பட்ட) குறைந்த மதிப்பிலுள்ள முத்துக்கள் கிழக்கு, மேற்குக்கு இடைப்பட்ட இடத்தை பிரகாசிக்கச் செய்யும் என்று நபி அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் அபூஸயீத் நூல் அஹ்மத்.

**q.** சொர்க்கத்தின் உட்புறம் விசாலமான முத்தாலான கூடாரம் உள்ளது. அதன் அகலம் அறுபது மைல்களாகும். அதன் ஒவ்வொரு மூலையிலும் முஃமினுக்குரிய மனைவியர் இருப்பார்கள். ஒரு மூலையில் இருப்பவர்கள் மற்றவர்களைக் காணமுடியாது. (அந்த அளவுக்கு நீளமானதாக இருக்கும்) முஃமின் அவர்களுடன் இன்பம் அனுபவித்தவராக சுற்றிவருவார் என்று நபி அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு கைஸ் நூல் திர்மிதி.

**r.** முன்னமே சொல்லப்பட்ட பெண்கள் மட்டுமல்லாமல் இங்கு இருக்கின்ற மனைவிமார்களோடுதான் சொர்க்கம் செல்லவேண்டும்.

நீங்களும் உங்கள் மனைவியரும் மகிழ்ந்தவர்களாக சொர்க்கத்தில் நுழையுங்கள் (என்று சொல்லப்பட்டும்) குர்ஆன்.43:70.



**3. சொர்க்கத்தில் வேலையாட்களும் உண்டு.**

**a.** இளமை மாறாச் சிறுவர்கள் அவர்களைச் சுற்றி வருவார்கள். அவர்களை நீர் பார்த்தால் உதிர்க்கப்பட்ட முத்துக்களாகக் கருதுவீர். குர்ஆன் 76:19.

**b.** இளமை மாறாத சிறுவர்கள் தெளிவான பானம்கொண்ட கின்னத்துடனும், குவளைகளுடனும், தட்டுகளுடனும் அவர்களைச் சுற்றி வருவார்கள். குர்ஆன்.56:17–19.

**c.** அவர்களுக்கு பணி செய்ய எந்நேரமும் சிறுவர்கள் பலர் சுற்றிக் கொண்ட இருப்பார்கள். அவர்கள் பதித்த முத்துக்களைப்போல் (பிரகாசமாகத் தோற்றமளிப்பார்கள்) குர்ஆன்.52:24.

இந்த பூமியில் பொல்லாதவர்கள் என்று சொல்லக்கூடிய மனிதர்கள்கூட குழந்தை வேலையாட்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது என்று வாதிடு கிறார்கள். ஆனால் குர்அன் அறிவிக்கிற தேவன் வேலைக்காக குழந்தைகளை படைத்து கொடுக்கிறது.

மேலே நாம் படித்த குர்ஆன் வசனங்களும், ஹதீஸ்களும் அல்லாமல் இன்னும் அநேகம் பார்க்கலாம். ஆனால் அவை எல்லாம் இங்கு எழுது வதில்லை. இங்கு நாம் பார்த்த வசனங்கள் எல்லாம் என்ன சொல்கிறது என்று பாருங்கள். முழுக்கமுழுக்க மனிதனுடைய மாம்ச இச்சைகள் பூர்த்தி செய்யத்தக்கவைகள் இங்கு ஒரு வேதவசனம் நினைவில் வருகிறது ''மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்'' கலா.5:19. அநேக மனைவிகள் அவர்களிடம் இன்பமாக இருக்க ஒவ்வொருவருக்கும் 100 ஆள் பலம், குடிப்பதற்கு மது வேலை செய்வதற்கு குழந்தைகள். அதுமட்டு மல்லாமல் ஒவ்வொருவனும் விரும்பியவைகள் எல்லாம் கூட கிடைக்கும் என்று (குர்ஆன் 16:31லும்) நினைத்தவைகள் கிடைக்கும் என்று (குர்ஆன் 25:16லும்) ஆசைப்படுபவைக் கிடைக்கும் என்று (குர்ஆன் 41:31,32லும்) உள்ளது.

அதாவது மனிதனுடைய மாம்ச இச்சைகள் நிறைவேற்றுவதற்கு தகுந்த இடமாக காட்சியளிக்கப்பட்ட ஒரு சொர்க்கம் வாக்குறுதி செய்பவர் யாராக இருக்கும்? இஸ்லாத்தில் உங்களை இணைத்துக்கொள் என்று **p.** ஜைனுல் ஆபிதீன் சொன்னது இப்படிப்பட்ட ஒரு சொர்க்கத்திற்காகதானே! அது சொர்க்கமா? அதுவும் கிடைக்கும் என்று எந்த உத்திரவாதமும் கிடையாது.

ஒன்றுக்கொன்று முரன்பட்ட பாவபரிகார கிரியைகளும், ஒன்றுக்கொன்று முரண்பட்ட நியாயத்தீர்ப்புகளும் நாம் பார்த்தோம். இங்குதான் பரிசுத்த வேதாகம வசனத்தினுடைய அன்பின் ஆழம் விளங்குகிறது. ''தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். யோவா.3:16. நீ இதைச் செய்தால், நீ அதைச் செய்தால் உனக்கு பாவமன்னிப்பு என்று மதங்கள் சொல்லும் போது, கிறிஸ்தவம் மட்டும், மீண்டும் சொல்கிறேன் கிறிஸ்தவம் மட்டும் சொல்கிறது, இறைவன் இயேசு உனக்காக எல்லாம் செய்து முடித்தார். நீ அதை விசுவாசித்தால் போதும். பள்ளத்தில் விழுந்தவனை அதிலிருந்து காப்பாற்றி வெளியே கொண்டுவருவதற்கு அவனுக்கு ஆலோசனை மட்டும் சொல்பவன் இரட்கனாக இருக்கமுடியுமா? அல்லது அந்த பள்ளத்தில் இறங்கி வந்து அவனை தூக்கி மேலே கொண்டுவருபவன் இரட்சகராக இருக்கமுடியுமா? இதை வாசிக்கும் அன்பு சகோதரரே, சகோதரிகளே சிந்தியுங்கள். தீர்மானியுங்கள். எந்தவழி நல்வழி என்று முடிவெடுங்கள். பரிசுத்தமான உண்மையான வழியை பின்பற்ற உங்களை வாழ்த்துகிறேன்.''

எல்லா காரியமும் அல்லாஹ் முன்குறித்துவிட்டார். அது யாராலும் மாற்ற முடியாது என்பது இஸ்லாமியர்கள் நம்பும் காரியங்களாகும். குர்ஆனும் ஹதீஸும் நம்புகின்ற எந்த ஒரு மனிதனும் தான் சொர்க்கம் செல்லுவேன் என்று தைரியமாகச் சொல்லமுடியாது. ஏன் என்றால் அல்லாஹ் விதித்தது போல் எல்லாம் நடக்கும்.

இதுவரையில் நாம் பாவபரிகாரம், நியாயத்தீர்ப்பு, மனிதனுடைய கடமை, சொர்க்கத்தின் தன்மை என்று ஒரு சில காரியங்களைப் பார்த்தோம். மனிதன் எதைச் செய்தாலும், செய்யாவிட்டாலும், அதினால் எந்தபலனும் இல்லை என்றும், அதே நேரத்தில் மனிதன்தான் பாவபரிகாரத்திற்காக பல கிரியைகள் செய்யவேண்டும் என்றும் பார்த்தோம். இதுவே ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட கருத்தாகும். ஆக மொத்தத்தில் இஸ்லாத்தில் இரட்சிப்புக்கு வழி இல்லை என்பதையும் மனிதன் ஒரு இயந்திரம்போல் அல்லாஹ்வின் கையில் இருக்கிறான் என்பதையும் நாம் பார்த்தோம். ஆதலால் அன்பார்ந்த இஸ்லாமிய சகோதரர்களே நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள். ஆனால் அந்த கட்டாயமும் இல்லை அவனவனுக்க சயமாக தீர்மானிக்க கர்த்தர் சுதந்திரம் அளிக்கிறார். இவ்வுலக வாழ்க்கை முடிந்தபிறகு நீங்கள் எங்கு இருக்க வேண்டும் என்பது நீங்கள் இங்கு எடுக்கும் தீர்மானத்தைப் பொறுத்து அமையும் எந்த



மனிதனையும் கர்த்தர் வலுகட்டாயமாக சொர்க்கத்திற்கோ அல்லது நரகத்திற்கோ அனுப்புவதில்லை. எதுவேண்டும் என்று தெரிந்தெடுப்பதற் காகதான் இந்து பூமியிலே வாழ்க்கை, இப்பொழுது எடுக்கும் முடிவுகேற்றபடி நியாயத்தீர்ப்பு நாளில் உனக்கு அமையும்.

''அவராலேயன்றி (இயேசு) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை: நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய (இயேசுவின்) நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளை யிடப்படவும் இல்லை என்றான்'' (அப்.4:12).

''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி,அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.....'' (அப்.16:31).

''விசுவாசிக்கிற எவனுக்கும் நீதியுண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்'' (ரோம.10:4).

தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புக்கூர்ந்தார்.... அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படான்; விசுவாசியாத வனோ தேவனுடைய ஒரே பேரான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ள வனாய் இராத படியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டாயிற்று (யோவா.3:16,18).

சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாக பாவம் செய்கிறவர்களாக இருந்தால், பாவங்களின் நிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல் நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர் பார்க்குதலும் விரோதிகளை பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும் (எபி.10:26,27).

''உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும், உன் சமாதானத்திற்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும்'' (லூக்.19:42).

சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமா யிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது (1 கொரி.1:18).

உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளிளெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார். நீ உன்னை

ஞானியென்று எண்ணாதே; கர்த்தருக்கு பயந்து தீமையைவிட்டு விலகு. (நீதி.3:5–7).

மனுஷனுக்கும் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு, அதின் முடிவோ மரணவழிகள் (நீதி.14:12).

அனுக்கிரக காலத்திலே நான் உமக்குச் செவிகொடுத்து, இரட்சணிய நாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ இப்பொழுதே அனுக்கிரக காலம் இப்பொழுதே இரட்சணியநாள் (2 கொரி.6:2).

இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங் களைக் கடினப்படுத்தாதிருங்கள் (எபி.4:7).

இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசு வாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டுள்ளது (யோவா.20:31).

இதோ ஜீவனையும் நன்மையையும், மரணத்தையும், தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன் (உபா.30:15).

நாங்கள் அதைக்கேட்டு அதின்படி செய்யும்பொருட்டு எங்கள் நிமித்தம் வானத்திற்கு ஏறி அதை எங்களுக்குக்கொண்டு வருகிறவன் யாரென்று நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுமல்ல; நாங்கள் அதைக்கேட்டு அதின்படி செய்யும்பொருட்டு எங்கள் நிமித்தம் சமுத்திரத்தைக் கடந்து, அதைக்கொண்டு வருகிறவன் யார் என்று நீ சொல்லத்தக்கதாக அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல. நீ அந்த வார்த்தையின்படியே செய்யும் பொருட்டு அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும், உன் இருதயத்திலும் இருக்கிறது (உபா.30:12–14).

இனி நீங்கள் போக்கு சொல்லமுடியாதவாறு வேத வசனங்களை உங்கள் முன் வைத்திருக்கிறேன். தீர்மானித்து கடைசி முடிவெடுக்க வேண்டியது உங்களிடத்தில் இருக்கிறது.

மாரநாதா இயேசுவே வாரும் ஆமென்.